# பகுதி III

## பகுதி III

# ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச் சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்


| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| | **வங்கி மேற்பார்வை** | | |
| 1 | 2017இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | | 1 |
| 2 | 2017இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட சுற்றறிக்கை : வங்கித்தொழில் பணிகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் | | 2 |
| 3 | 2017இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 3 |
| 4 | 2017இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் : உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளுக்கான திருத்தம் | | 4 |
| 5 | 2017இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட சுற்றறிக்கை : கடன் உற்பத்திகள் மீதான வட்டி வீதங்கள் | | 5 |
| 6 | 2017இன் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட சுற்றறிக்கை : வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பிலான சலுகைகள் | | 5 |
| 7 | 2017இன் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 6 |
| 8 | 2017இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் : உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம் | | 7 |
| 9 | 2017இன் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் | | 7 |
| 10 | 2017இன் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் | | 9 |
| 11 | 2017இன் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் | | 14 |
| | **வெளிநாட்டு செலாவணி** | | |
| 12 | செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் 2017இன் 1ஆம் இலக்கம் : வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள் | | 16 |
| 13 | செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் 2017இன் 2ஆம் இலக்கம் : வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள் | | 17 |
| 14 | செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் 2017இன் 7ஆம் இலக்கம் : பன்னாட்டு பணிகள் வழங்குநர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களிற்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் | | 18 |
| 15 | இலங்கைச்சனநாயக சோசலிசக்குடியரசு வர்த்தமானப்பத்திரிகை (அதி விசேஷமானது) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2043/31 | 18 |
| 16 | இலங்கைச்சனநாயக சோசலிசக்குடியரசு வர்த்தமானப்பத்திரிகை (அதி விசேஷமானது) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2045/56 | 18 |
| 17 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேஷமானது) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள் | 2046/08 | 47 |

| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| 18 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 47 |
| 19 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் : இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 55 |
| 20 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் : தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 58 |
| 21 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 59 |
| 22 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் : இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 62 |
| 23 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வதியும் விருந்தினர் திட்டம் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 62 |
| 24 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள் : மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 65 |
| 25 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள் : மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 67 |
| 26 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள் | 1970/8 | 72 |
| 27 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள் | 1970/49 | 73 |
| 28 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள் | 1970/50 | 74 |
| 29 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள் : இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான பணிப்புரைகள் | | 76 |
| 30 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள் : உள்முக முதலீட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 77 |
| 31 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 1986/42 | 79 |
| 32 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள் : வங்கி உத்தாரவாதம் அல்லது முறிகள், கொடுகடனின் துணைநில் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 1986/43 | 83 |
| 33 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள் : இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 1951/13 | 84 |

| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| | **நிதியியல் உளவறிதல் பிரிவு** | | |
| 34 | சுற்றறிக்கை - 01/17 : இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை நியதிகளில் தலத்திலான பரீட்சிப்புக்கள் - 2017 பரீட்சிப்புத் திட்டம் | 37/06/001/0001/016 | 85 |
| 35 | சுற்றறிக்கை - 02/17 : 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணப் பெறுமதி மாற்றல் பணி வழங்குவோருக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக் கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் | | 85 |
| | **கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு** | | |
| 36 | சுற்றறிக்கை எண் 01/2017 : 2017 சனவரி 20ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | 34/07/029/0001/002 | 91 |
| 37 | சுற்றறிக்கை எண் 02/2017 : லங்கா செட்டில் முறைமை 2017 சனவரி 26 மற்றும் 27ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/07/029/0001/002 | 91 |
| 38 | சுற்றறிக்கை எண் 04/2017 : லங்கா செட்டில் முறைமை 2017 பெப்புருவரி 02 மற்றும் 03ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/07/029/0001/002 | 92 |
| 39 | சுற்றறிக்கை எண் 05/2017 : 2017 பெப்புருவரி 17ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | 34/07/029/0001/002 | 92 |
| 40 | சுற்றறிக்கை எண் 06/2017 : வியாபார நேரத்திற்குப் பின்பும் லங்கா செட்டில் முறைமையினை நீடிப்பதற்கான கோரிக்கை | 34/07/029/0001/002 | 93 |
| 41 | சுற்றறிக்கை எண் 07/2017 : லங்கா செட்டில் முறைமையில் பேர்ப்பெட்ஜுவல் ரெசறீஸ் லிமிடெட்டின் வியாபாரத்தினை மட்டுப்படுத்தல் | 34/07/029/0001/002 | 93 |
| 42 | சுற்றறிக்கை எண் 08/2017 : பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீதான உயர்ந்தபட்ச வரையறைகளும் கட்டணமும் | | 94 |
| 43 | சுற்றறிக்கை எண் 09/2017 : லங்கா செட்டில் முறைமையின் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்குத் திருத்தம் | 34/07/029/0001/002 | 94 |
| 44 | சுற்றறிக்கை எண் 10/2017 : வாடிக்கையாளர்களில் அரசாங்கப் பிணையங்களை மத்திய வங்கியிலிருந்து ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைப் பெறுவதற்கான பிணையமொன்றாகப் பயன்படுத்துவதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் | 34/07/029/0001/002 | 96 |
| 45 | சுற்றறிக்கை எண் 11/2017 : லங்கா செட்டில் முறைமை 2017 நவெம்பர் 10ஆம் நாளில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/07/029/0001/002 | 97 |
| | **பொது படுகடன்** | | |
| 46 | அரச பிணையங்களின் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களைக் கட்டாயமாக அறிக்கையிடுதல் | 08/21/005/035/001 | 97 |
| 47 | திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல் மீதான பணிப்புரைகள் | 08/21/005/012/001 | 98 |
| | **பிரதேச அபிவிருத்தி** | | |
| 48 | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம் | ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01 (ஏ-04) | 106 |
| 49 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: "சுவசக்தி - பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நோக்கி" நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் உருவாக்கத்திற்கான கடன் திட்டம் | ஆர்டிடி/சுவசக்தி/2017/01 | 107 |
| 50 | சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம் கட்டம் II இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/எஸ்ஈபீஜ/2016/01 (திருத்தம்) | 122 |
| 51 | வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் | ஆர்டிடி/பிசிஜி/2017 | 123 |
| 52 | தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற "தருண திரிய" இளைஞர் வலுவூட்டல் மற்றும் தொழில்வாய்ப்புச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/என்ஏடிஈபி/ யுத்2016/01 (திருத்தம்) | 133 |
| 53 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்படுத்தப்படும் "அனர்த்தத்திற்குப் பின்னைய பொருளாதார மீட்புக் கடன் திட்டம்" | ஆர்டிடி/என்ஏடிஈபி/பேர்ள்/ 2017/01 | 134 |
| 54 | தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற "தருண திரிய" இளைஞர் வலுவூட்டல் மற்றும் தொழில்வாய்ப்புச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம் | ஆர்டிடி/என்ஏடிஈபி/ யுத்2016/01 (திருத்தம்) | 139 |

| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| 55 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - "அத்வெல்ல" அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான கடன் திட்டம் | ஆர்டிடி/ஆர்ஈஏடி/2017/01 | 140 |
| 56 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் "சுவசக்தி - பத்து இலட்சம் வேலை வாய்ப்புக்களை நோக்கி": கடன் திட்டத்திற்கான திருத்தங்கள் | ஆர்டிடி/சுவசக்தி/2017/01 (ஏ-01) | 147 |


## நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வை


| | | | |
|---|---|---|---|
| 57 | 2017இன் 01ஆம் இலக்க நுண்பாகநிதிச் சட்ட பணிப்புரைகள் : வியாபாரத் தலங்களைத் திறத்தல், மூடிவிடுதல் மற்றும் இடம்மாற்றுதல் | | 148 |
| 58 | 2017இன் 02ஆம் இலக்க நுண்பாகநிதிச் சட்ட பணிப்புரைகள் : அமைப்பியல் மாற்றங்கள் | | 153 |


## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை


| | | | |
|---|---|---|---|
| 59 | 2017இன் 1ஆம் இலக்கம் நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கு வழங்கப்படும் பெறுமதிக்கான கடன் விகிதம் | | 154 |
| 60 | 2017இன் 2ஆம் இலக்கம் நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : குறைந்தபட்ச மைய மூலதனம் | | 155 |
| 61 | நிதித்தொழில் சட்ட பணிப்புரைகள் 2017இன் 03ஆம் இலக்கம் : உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 156 |
| 62 | 2017இன் 4ஆம் இலக்கம் நிதித்தொழில் சட்ட பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 157 |
| 63 | 2017இன் 1ஆம் இலக்கம் சுற்றறிக்கை : வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பான சலுகைகள் | | 158 |
| 64 | 2017இன் 01ஆம் இலக்கம் நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரை : உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | | 159 |
| 65 | 2017இன் 02ஆம் இலக்கம் நிதி குத்தகைக்குவிடல் சட்ட பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 160 |
| 66 | 2017இன் 3ஆம் இலக்கம் நிதி குத்தகைக்குவிடல் சட்ட பணிப்புரைகள் : உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 161 |

**2017இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2017 சனவரி 13

## உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட்டது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தும் நோக்கங்களுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் வழங்கப்படும் கடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நாணயச் சபை பின்வருமாறு பணிப்புரைகளை வழங்குகின்றது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரளித்தல்

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1)ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கமைய வங்கித்தொழில் முறைமையின் ஆற்றலினை உறுதிசெய்யும் பொருட்டு அத்தகைய வங்கிகளின் வியாபாரத்தின் ஏதேனும் அம்சம் கொண்டு நடாத்தப்பட வேண்டிய முறை தொடர்பில் முறையே அனைத்து அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அத்துடன் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம்

2.1 2017 சனவரி 16ஆம் திகதி தொடக்கம், ஊர்திகளைக் கொள்வனவு செய்தல் அல்லது பயன்படுத்தல் நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியினாலும் வழங்கப்படுகின்ற கொடுகடன் வசதிகளானவை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதத்தினை விஞ்ஞாதிருத்தல் வேண்டும்.

(i) பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் முதற்பதிவின் பின்னர் ஒரு ஆண்டினை விடவும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள்;

(அ) வர்த்தக ரீதியான ஊர்திகளுக்கு 90 சதவீதம் (சரக்கு மற்றும் பார ஊர்திகள்);

(ஆ) உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்களுக்கு 50 சதவீதம்;

(இ) முச்சில்லு வண்டிகளுக்கு 25 சதவீதம்;

(ஈ) வேறு ஏதேனும் ஊர்திகளுக்கு 70 சதவீதம்.

(ii) முதற்பதிவின் பின்னர் ஒரு ஆண்டிற்குக் மேற்பட்டு இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்

3. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்திற்கான விலக்களிப்புக்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் தமது மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கென ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்காக சுற்றுலாத் துறையில் அத்துடன்/ அல்லது போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைதாகாது. எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டினுள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது.

3.2 உரிமம் பெற்ற வங்கியொன்று இவ்வகை ஊர்திகளுக்குக் கொடுகடன் வசதி வழங்குகையில் உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் போதிய இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

4. ஊர்திகளுக்கான வேறு கடன் வசதிகள்

4.1 மேலே 2 மற்றும் 3 பணிப்புரைகளுக்கு அமைவாக வழங்கப்படும் கொடுகடன் வசதிகள் தவிர உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வங்கியொன்று கொடுகடன் வசதிகளை வழங்கலாகாது.

5. விளக்கங்கள்

5.1 இப்பணிப்புரைகளில்:

(i) கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகளை அத்துடன் ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகள் எனப் பொருள்பட வேண்டும்.

(ii) ஊர்தியின் பெறுமதியானது கொடுகடன் வசதிகளை வழங்குகின்ற நேரத்தில் நிலவுகின்ற நடைமுறைகமைவாக, தொழில்சார் விலை மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற சந்தைப் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்

6.1 பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) உந்து ஊர்திகள் தொடர்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2015இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை.

(ii) உந்து ஊர்திகள் தொடர்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2015இன் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும்**

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட சுற்றறிக்கை** **2017 பெப்புருவரி 01**

## வங்கித்தொழில் பணிகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்

நாட்டின் வங்கித்தொழில் பணிகள் தேவைப்பாடுகளின் பின்வரும் வகைகள் தொடர்பில் வரவு செலவுத்திட்டம் 2017ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய கொள்கையின்பால் தங்கள் கவனத்தை ஈர்க்க நாம் விரும்புவதுடன் இதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளையும் கோருகின்றோம்.

1. இனங்காணப்பட்ட துறைகளுக்கான கடன் பகிர்ந்தளிப்பு

1.1 உரிமம் பெற்ற வங்கிகளின் மூலம் வழங்கப்படும் கடன்கள் மொத்தக் கடன்களின் பின்வரும் சதவீதத்தினைவிட குறைவாக இருத்தலாகாது:

(i) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், ஏற்றுமதிகள் மற்றும் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகள் ஆகிய ஒவ்வொன்றுக்கும் 10 சதவீதம்

(ii) தற்போதுள்ள சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வேளாண்மைக்காக 10 சதவீதம்

(iii) இளைஞர்கள் மற்றும் மகளிரின் கடன் தேவைகளுக்காக அவை ஒவ்வொன்றுக்கும் 5 சதவீதம்

2. வங்கித்தொழில் பணிகளை அதிகரித்தல்

2.1 தொடர்புடைய பிரதேசங்களில் தொழில் அபிவிருத்திக்காக வங்கிக் கிளைகளினால் வழங்கப்படும் கடன்களானது அதே பிரதேசத்தினுள் ஒவ்வொரு கிளையினாலும் திரட்டப்படுகின்ற வைப்புக்களின் 15 சதவீதத்தினைவிட குறைவாகவிருத்தலாகாது.

2.2 ரூ.5 மில்லியனுக்கு குறைவான பெறுமதியுடைய கடன் வழங்குதலினை 1 மாதத்தினைவிடவும் குறைவான காலத்தில் விரைவுபடுத்துவதற்கு வங்கிகள் தற்போதுள்ள செயன்முறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

2.3 ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஓர் கிளையாவது சமய ரீதியான விடுமுறை நாட்கள் தவிர்ந்த அனைத்து 7 நாட்களிலும் திறக்கப்படலாம்.

3. வரைவிலக்கணம்

3.1 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான அதன் தேசிய கொள்கைக் கட்டமைப்பில் கைத்தொழில் மற்றும் வணிகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பற்றிய வரைவிலக்கணத்திற்கு அமைவாக இச்சுற்றறிக்கையின் நோக்கத்திற்காக ரூ.750 மில்லியனை விஞ்சாத வருடாந்தப் புரள்வொன்றுடன் கூடிய தொழில்முயற்சிகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளாகக் கருதப்படும்.

3.2 வேளாண்மைக்காக வழங்கப்படும் கடன்களானவை, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன்வழங்கல் மீதான சுற்றிக்கைகளின் நியதிகளுக்கமைவாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும்.

3.3 இச்சுற்றிக்கையுடனான இணங்குவித்தல் நோக்கத்திற்காக மேற்குறித்த துறைகளுக்கான கடன் வகைப்படுத்தலின் போது, மேலே விடயம் 1இல் உள்ள துறைகளின் சில கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கடனானது இனங்காணப்பட்ட துறைகள் ஒன்றின் மேல் ஒன்று கவிந்து காணப்படுவதன் விளைவாக ஒரு துறையினைவிட பல துறைகளுக்கு கீழ் வரலாம்.

4. அறிக்கையிடுதல்

4.1 2017 யூலை 1 தொடக்கம், அனைத்து வங்கிகளும் தேசிய கொள்கைக்கு இணங்கியொழுகுவதனை கண்காணிக்கும் பொருட்டு, இணைக்கப்பட்டுள்ள வடிவத்தில் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலிருந்தும் 30 நாட்களினுள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு மேலே விடயம் 1இன் விபரங்களை அறிக்கையிடுதல் வேண்டும்.

ஏ.ஏ.எம்.தாஸிம்

**வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்**

**இணைப்பு I**

### வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு 2017இன் கீழ் துறைவாரியான கடன் பகிர்ந்தளிப்பு

| | | | |
|---|---|---|---|
| வங்கியின் பெயர் | | | |
| **..................... இல் உள்ளவாறு நிலைமை** | | | |
| **துறை** | | **வெளிநின்ற கடன் (ரூபா. மில்)** | **வழங்கப்பட்ட மொத்தக் கடனின் % ஆக** |
| 1. | வேளாண்மை | | |
| 2. | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் | | |
| 3. | ஏற்றுமதிகள் | | |
| 4. | சுற்றுலாத் துறை | | |
| 5. | இளைஞர் | | |
| 6. | மகளிர் | | |

குறிப்பு 1: வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் 2017 பெப்புருவரி 01ஆம் திகதியிடப்பட்ட 2017இன் 01ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் தொடர்புடையது.

குறிப்பு 2: மேற்குறித்த தகவல்கள், ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலிருந்தும் 30 நாட்களினுள் banksup@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யப்பட வேண்டும்.

திகதி: .................................. ..................................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி

**2017இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2017 பெப்புருவரி 15**

**உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5ஆம் பணிப்புரையிலுள்ள விளக்கங்கள் பின்வருவனவற்றை பதிலிடுவதன் மூலம் திருத்தப்படுகின்றன.

5. விளக்கங்கள்

5.1. கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஏனைய கொடுகடன் வசதிகள் எனப் பொருள்படும்.

5.2 ஊர்தியின் பெறுமதியானது சந்தைப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும். ஊர்திகளின் விலை மதிப்பீட்டு நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வங்கிகள் பின்வருவனவற்றை பயன்படுத்தலாம்.

i) புத்தம் புதிய ஊர்திகள் - அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களால் வழங்கப்படும் பெறுமதி

ii) மறுசீரமைப்புச் செய்யப்பட்ட ஊர்திகள் - சுங்கத்தில் பரிசீலனையில் கொள்ளப்பட்ட பெறுமதி அல்லது விநியோகத்தரினால் வழங்கப்படும் விலைப்பட்டியல்

iii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் - தொழில்சார் விலை மதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படும் பெறுமதி.

5.3 விலை மதிப்பீடானது கடன் வசதி வழங்கப்படுகின்ற நேரத்தில் பெறப்பட்டுள்ளது என்பதனையும் அது உண்மையானதும் நியாயமானதுமான பெறுமதியினைத் தருகிறது என்பதனையும் உரிமம் பெற்ற வங்கிகள் உறுதி செய்தல் வேண்டும்.

5.4 உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகள் வகுப்புக்களை பணிப்புரையின் நோக்கத்திற்காக அட்டவணை Iஇல் உள்ளவாறு வகைப்படுத்தலாம்.

**அட்டவணை 1 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்புக்களின் வகைப்படுத்தல்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | பெறுமதிக்கான கடன் விகிதம் |
|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் (சரக்கு மற்றும் பார ஊர்திகள்) | சி1, சி, சிஇ, டிஇ, ஜி1, ஜி, ஜே | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பி, டி1, டி | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பி1 | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ | 70% |

5.5 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊர்தித் தொகுதிகள் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்திகள் எனப்பொருள்படுதல் வேண்டும்.

5.6 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது சுற்றுலாத் துறைக்கான பணியினை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது ஏதேனும் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனி எனப் பொருள்படுதல் வேண்டும்.

5.7 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது பொருள் அல்லது பணிகள் போக்குவரத்து தொழில் நோக்கத்திற்காக ஏதேனும் அரச அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தொழில் நிறுவனம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

5.8 2017 சனவரி 16ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளவிடத்து அல்லது உரிமம் பெற்ற வங்கிகளினால் கடன் வசதிகள் அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து அனைத்து ஊர்திகள் தொடர்பிலும் கடனுக்காக 70 சதவீதப் பெறுமதிக்கான கடன் அனுமதிக்கப்படலாம்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம்** 2017 மாச்சு 22

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளுக்கான திருத்தம்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 83(அ)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 83(அ)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, நாணயச் சபையானது, 1998 செத்தெம்பர் 07ஆம் திகதியன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக வழங்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளை திருத்துகின்ற விதத்தில் பின்வரும் நிபந்தனைகளை இத்தால் வெளியிடுகின்றது.

2. பின்வரும் புதிய நிபந்தனைகள் 1998 செத்தெம்பர் 07ஆம் திகதிய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக வெளியிடப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளின் 15(8)ஆம் நிபந்தனைக்குப் பின்னர் உடனடுத்து உள்ளடக்கப்படல் வேண்டும்.

அடகுப் பொருட்களின் விற்பனை

15. (9) அடகு வைக்கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனைகளின் மொத்தப் பெறுமதி ரூ.500,000 அல்லது அதற்குக் கூடுதலாக இருக்குமிடத்து அடகுபிடிப்பவர் பொருட்களின் கொள்வனவு விபரங்களை ஒவ்வொரு மாதமும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இங்கே இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 8இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் அறிக்கையிடல் வேண்டும்.

15. (10) பெருமளவு தங்கத்தினைக் கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் இரண்டு அல்லது கூடுதலான தரப்பினர்களிடையே சதித்திட்டமானது காணப்படுவதாக சந்தேகப்படுவதற்கான காரணங்கள் காணப்படுமாயின் அடகுபிடிப்பவர் அதனை அறிவித்தல் வேண்டும்.

15. (11) அடகுபிடிக்கப்பட்ட பொருட்களின் ஏலங்களிலிருந்து தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்வதிலிருந்து எழுகின்ற சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களின் ஏதேனும் கொள்வனவுகளை அடகுபிடிப்பவர் அடையாளங்கண்டு, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் பதவி குறித்துரைக்கப்பட்ட வங்கியின் இணங்குவிப்பு அலுவலரூடாக நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் என்பது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகள், மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2012 மாச்சு 22ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை 03/12 என்பனவற்றிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

[பந்தி 15 (9)] **8ஆம் அட்டவணை**

அடகுபிடிக்கப்பட்ட பொருட்களின் அடிப்படை அளவொன்றுக்கு மேல் மொத்தக் கொள்வனவுகள் பற்றிய விபரங்களை அறிக்கையிடுதல்

வங்கியின் பெயர்: ..........................................................................................................................................

.......................... ஆண்டின் .............................. மாதத்திற்கானது

| ஏலத் திகதி | கொள்வனவாளர் விபரங்கள் | | | கிளை/ இடம் | எடை | பெறுகைகளின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| | பெயர் | தே.அ.அ.இல. | முகவரி | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

வங்கியானது ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் banksup@cbsl.lk மூலம் இவ்விபரங்களை அனுப்புதல் வேண்டும்.

திகதி: .................................. ..................................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி

**2017இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட சுற்றறிக்கை** **2017 மே 26**

## கடன் உற்பத்திகள் மீதான வட்டி வீதங்கள்

கடன் அட்டைகள் மற்றும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் தவணை கடந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது அறவிடப்படுகின்ற தண்ட வட்டி வீதங்கள் மீதான நாணயச் சபையின் அறிவுறுத்தல்கள் 2017 யூலை 01 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இத்தால் வெளியிடப்படுகின்றது.

1. வட்டி வீதங்கள்

1.1 2017 யூலை 01 தொடக்கம் உரிமம் பெற்ற வங்கிகள் தமது கொள்கைகளுக்கு அமைவாக கடன் உற்பத்திகள் மீது வட்டி வீதங்களை வழங்கலாம் அல்லது அறவிடலாம்.

2. போதிய வெளிப்படுத்தல்கள்

2.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வருவனவற்றை வெளியிட வேண்டும்.

(i) ஏதேனும் ஊடகத்தில் கடன் உற்பத்திகளை ஊக்குவிக்கின்ற போது, அனைத்து வேளைகளிலும் எளிதில் விளங்கி கொள்ளக்கூடிய விதத்தில் கடன் உற்பத்திகள் மீதான ஏற்புடைய ஆண்டு வட்டி வீதம்.

(ii) பொதுமக்களின் தகவல்களுக்காக ஆண்டுக்கான ஏற்புடைய தண்ட வட்டி வீதம், ஏதுமிருப்பின், மற்றும் கணிப்பு அடிப்படை என்பன குறித்துக் குறைந்தபட்சம் வங்கியின் வெப்தளத்திலாவது வெளியிடப்பட வேண்டியதுடன் நடைமுறை வீதங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் கிரமமாக இற்றைப்படுத்தப்படவேண்டும்.

2.2 உரிமம் பெற்ற வங்கிகள் கடன் பெறுகின்ற வாடிக்கையாளர்களுக்குப் பின்வருவனவற்றைத் தெரியப்படுத்தல் வேண்டும்.

(i) தொடர்புடைய கடன் பெறுநர்களுடன் கடன் ஆவணங்களைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் கடன் உற்பத்திகள் மீது ஏற்புடைய வட்டி வீதங்கள்.

(ii) தற்போதுள்ள கடன்களுக்கான வட்டி வீதங்களில் பின்னர் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படுமாயின் அத்தகைய திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

(iii) ஏற்புடைய தண்ட வட்டி வீதங்கள், ஏதுமிருப்பின், மற்றும் அத்தகைய தவணை கடந்த கடன் நிலையில் தண்ட வட்டியினை விதிப்பதற்கு முன்னர் அத்தகைய வீதங்கள் கணிக்கப்படும் அடிப்படை.

3. தண்ட வட்டியினைக் கணிக்கும் அடிப்படை

3.1 தண்ட வட்டியானது, ஏதுமிருப்பின், தவணை கடந்த காலத்தின் போதுள்ள நிலுவைத் தொகைக்கு மாத்திரம் அறவிடப்படுதல் வேண்டும்.

4. வாராந்த அறிக்கையிடல்

41. உரிமம் பெற்ற வங்கிகள் அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களையும் அத்துடன் தண்ட வட்டி வீதங்களையும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைமையின் BSD-WF-13-IR-வட்டி வீதங்கள் கூற்றினூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. முன்னைய சுற்றறிக்கைகளை இரத்துச் செய்தல்

5.1 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட வட்டி வீதங்களுக்கு ஏற்புடைய பின்வரும் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) வட்டி வீதங்களைக் குறைத்தல் மீதான 2016 செத்தெம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட 02/17/600/002/001 தொடர்பு இலக்க சுற்றறிக்கை.

(ii) கடன் அட்டைகள் மற்றும் வீடமைப்புக் கடன்கள் மீதான 2012 ஏப்பிறல் 17ஆம் திகதியிடப்பட்ட 02/17/600/002/001 தொடர்பு இலக்கச் சுற்றறிக்கை.

(iii) கடன் அட்டைகள் மற்றும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள் பற்றிய 2013 யூன் 07ஆம் திகதியிடப்பட்ட 02/17/600/002/001 தொடர்பு இலக்கச் சுற்றறிக்கை.

(iv) கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது உரிமம் பெற்ற வங்கிகளினால் அறவிடப்படும் தண்ட வட்டி வீதங்கள் மீதான உச்சளவு பற்றிய 2013 யூலை 26ஆம் திகதியிடப்பட்ட 02/17/600/002/001 தொடர்பு இலக்கச் சுற்றிக்கை

ஏ.ஏ.எம்.தாஸிம்
**வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்**

**2017இன் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட சுற்றறிக்கை** **2017 மே 29**

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பிலான சலுகைகள்

உரிமம் பெற்ற வங்கிகள் அண்மைய வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் இணைந்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட அவற்றின் கடன்பெறுநர்களுக்கு, தேசிய நலனைக் கருத்திற்கொண்டு, அத்தகைய கடன்பெறுநர்களின் வியாபாரம் மற்றும் வழமையான நடவடிக்கைகளை மீளமைப்பதை வசதிப்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட்ட தேசிய கொள்கையின் நியதிகளில், ஒவ்வொரு விடயத்தையும் பொறுத்து, பின்வரும் சலுகைகளை வழங்கலாம்.

1. கால அவகாசம்

1.1 வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் இணைந்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களின் 2017 மே 25இல் உள்ளவாறான அனைத்துச் செயற்படும் கொடுகடன் வசதிகள் தொடர்பிலும், இன்றிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 3 மாதங்களை விஞ்சாத கால அவகாசத்தை வழங்குதல்.

| | | | |
|---|---|---|---|
| 2. | தண்ட வட்டி | 2.1 | மேலுள்ள கால அவகாசத்தின் கீழுள்ள கடன்பெறுநர்களினதும் மேலுள்ள விடயங்களினால் பாதிக்கப்பட்டு அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும்/ மீள்சீரமைக்கும் பொருட்டு வங்கிகளுடன் உடன்பட்டவாறு மீள்அட்டவணையிடப்பட்ட நியதிகளில் அவர்களின் கடன்களைத் தீர்ப்பதற்கு விரும்புகின்ற செயற்பாடாக் கடன்பெறுநர்களினதும் காலங்கடந்த கடன்கள் மீதான தண்ட வட்டியை நீக்குதல். |
| 3. | அறிக்கையிடல் | 3.1 | உரிமம் பெற்ற வங்கிகள் அத்தகைய சலுகைகள் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆவணங்களைப் பேண வேண்டும். |
| | | 3.2 | உரிமம் பெற்ற வங்கிகள் அத்தகைய கடன்பெறுநர்களின் விபரத்தை இங்கு இணைக்கப்பட்டுள்ள வடிவத்தில் 2017 யூன் 30ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையிட வேண்டும். |

வங்கி மேற்பார்வையின் பதில் பணிப்பாளர்

**2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சுற்றறிக்கை** **இணைப்பு**

**வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பிலான சலுகைகள்**

**அண்மைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களின் விபரங்கள்**

வங்கியின் பெயர்:

| தொடர் இல. | கடன்பெறுநரின் பெயர் | வங்கிக் கிளையின் பெயர் | பிரதேச செயலகம் | கடனின் நோக்கம் | நிலுவையிலுள்ள தொகை ரூ.'000 (25.05.2017இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மேலுள்ள கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எனது அறிவிற்கெட்டிய வரையிலும் நம்பிக்கையைப் பொறுத்தவரையிலும் சரியானதென உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி

2017 யூன் 30 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் dbsd@cbsl.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

**2017இன் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்** 2017 மே 31

**உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிகளுக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5.1 மற்றும் 5.4 ஆம் பணிப்புரைகள் பின்வருவனவற்றை பதிலிடுவதன் மூலம் திருத்தப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 5. | விளக்கங்கள் | 5.1. | கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் இறுதிப் பயன்பாட்டாளர் உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்கென அல்லது பயன்படுத்துவதற்கென வழங்கப்படும் ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகளையும் குறிக்கும். |
| | | 5.2 | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகள் வகுப்புக்களைப் பணிப்புரையின் நோக்கத்திற்காக அட்டவணை Iஇல் உள்ளவாறு வகைப்படுத்தலாம். |

| அட்டவணை 1 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்புக்களின் வகைப்படுத்தல் | | |
|---|---|---|
| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | பெறுமதிக்கான கடன் விகிதம் |
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஇ, ஜி1, ஜி, ஜே | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 70% |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம்** 2017 செத்தெம்பர் 19

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 76(டி)6இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 76டி(6)இன் நியதிகளில் நாணயச் சபையானது ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் 2018 கலண்டர் ஆண்டு தொடர்பான உரிமக் கட்டணத்தினைக் கீழேயுள்ள அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2017ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறான அத்தகைய வங்கிகளின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில், 2018 சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தல் வேண்டும்.

| 2017 இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்.) | உரிமக் கட்டணம் (ரூ.மில்.) |
|---|---|
| 750 இற்கு மேல் | 30.0 |
| 500 இற்கு மேல் 750 வரை | 25.0 |
| 200 இற்கு மேல் 500 வரை | 22.0 |
| 125 இற்கு மேல் 200 வரை | 16.5 |
| 75 இற்கு மேல் 125 வரை | 11.0 |
| 25 இலிருந்து 75 வரை | 5.5 |
| 25 இற்கு கீழ் | 2.2 |

1989.01.01 இலிருந்து செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் தொடர்பில் வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8 தொடர்பாக விடுக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டத் தீர்மானத்தின் 01ஆம் பந்தி இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017இன் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2017 ஒத்தோபர் 26

**வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(3) மற்றும் 76ஜி உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் நியதிகளில் முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை அமைச்சரின் சம்மதத்துடன் அதிகரிப்பதற்கு நாணயச் சபை தீர்மானித்தது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதாவதொரு வங்கிக்குப் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(3) மற்றும் 76ஜி இன் ஏற்பாடுகளின் நியதிகளில், நாணயச் சபை வங்கித்தொழில் முறைமையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் உறுதிப்பாடு தொடர்பிலும் தேசிய பொருளாதாரத்தின் நலன்களைப் பற்றியும் கருத்திற் கொண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் பேணப்பட வேண்டும் எனக் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச மூலதனத் தொகையினை மாற்றிக் கொள்ளலாம்.

2. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்

2.1 2020.12.31 தொடக்கம் தற்போதுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

**அட்டவணை 1: வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்**

| வங்கியின் வகை | தொகை (ரூ.பில்) |
|---|---|
| உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 20.0 |
| இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகள் | |
| - ரூ.100 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களுடன் | 10.0 |
| - ரூ.100 பில்லியன் வரையிலான சொத்துக்களுடன் | 5.0 |
| உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 7.5 |

3. விளக்கம்

3.1 இந்நோக்கத்திற்காக மூலதனம் என்பது பாசல் IIIஇன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான தேவைப்பாடுகள் தொடர்பில் 2016 திசெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்னிணைப்பு Iஇன் அட்டவணை Iஇல் பின்வரும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீட்டின் கூட்டுத்தொகை எனப் பொருள்படும்.

| வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட குறியீடு | விடயம் |
|---|---|
| 20.2.1.1.1.1 | பங்குரிமை மூலதனம் அல்லது கூறப்பட்ட மூலதனம்/ வழங்கப்பட்ட மூலதனம் |
| 20.2.1.1.1.2 | ஒதுக்கு நிதியம் |
| 20.2.1.1.1.3 | வெளியிடப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட வருமானங்கள்/ (ஒன்றுசேர்ந்த பிடித்துவைக்கப்பட்ட இழப்புக்கள்) |
| 20.2.1.1.1.5 | பொதுவான அல்லது ஏனைய வெளிப்படுத்தப்பட்ட ஒதுக்குகள் |
| 20.2.1.1.1.6 | வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள வெளியிடப்படாத நடப்பாண்டு இலாபம்/ இழப்புக்கள் |
| 20.2.2.1.1.1 | தகைமை பெறுகின்ற மேலதிக அடுக்கு I மூலதனக் கருவிகள் |

4. மூலதனத் திட்டமிடல் செயன்முறை

4.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும், அவசியமானவிடத்து, வருடாந்த உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையில் மேற்குறிப்பிட்ட மூலதனத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கு மூலதன அதிகரிப்புத் திட்டங்களை உள்ளடக்கலாம். அத்தகைய வருடாந்த உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணத்தினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. இணங்குவிப்புக்களைப் பேணுவதற்கான நடவடிக்கைகள்

5.1 இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தவறுமிடத்து அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அத்தகைய இணங்குவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அவை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்படும் வரை பங்கிலாபங்களைச் செலுத்தவோ அல்லது இலாபங்களை அனுப்பவோ அல்லது அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மூலதனத்தில் மேலும் தேய்வினை ஏற்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் வழிமுறைகளையோ மேற்கொள்ளக்கூடாது.

5.2 சொத்துக்கள் வளர்ச்சி மற்றும் கிளை விரிவாக்கம் என்பனவற்றின் நியதிகளில், மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017இன் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2017 நவெம்பர் 29

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள்

நாணயச் சபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அவற்றின் வியாபாரத்தின் ஒவ்வொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதாவதொரு வங்கிக்குப் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. ஏற்புடைத்தன்மை

2.1 இப்பணிப்புரைகள் இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வெளிநாட்டு நாணயத்திலான பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருக்கின்றன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் இதனகத்துப் பின்னர் தகைமையுடைய வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்.

2.2 இப்பணிப்புரைகள் தகைமையுடைய வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுக்கும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கும் ஏற்புடைத்தனவாக இருத்தல் வேண்டும்.

3. பெறுதிகளினது கொடுக்கல் வாங்கல்களின் ஆரம்பம்

3.1 நிதியியல் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடவிருக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், ஆரம்பக் கொடுக்கல்வாங்கல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அதன் ஆர்வத்தை இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கான ஒரு பிரதியுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

3.2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 5.2இல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பெறுதியில் ஈடுபடுவதற்கும் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

4. சபை ஒப்புதலளித்த கொள்கைகளும் நடைமுறைகளும்

4.1 தகைமையுடைய வங்கிகள் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இடர்நேர்வுகளுக்குள்ளாகக்கூடிய தன்மையை அடையாளம் காணவும் கணியப்படுத்தவும் மற்றும் அவற்றை மதிப்பிடவும் இடர்நேர்வுகளை முகாமை செய்யவும் அத்துடன் செயலாற்றத்தைக் கண்காணிக்கவும் என பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மீதான சபை ஒப்புதலளித்த கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் நடைமுறையில் வைத்திருத்தல் வேண்டும்.

4.2 தகைமையுடைய வங்கிகள், நிதியியல் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான நிபுணத்துவம் மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் என்பன நடைமுறையிலுள்ளன என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்

5.1 பின்வரும் நோக்கங்களுக்காகப் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட முடியும்.

அ) **முடிவுப் பயன்படுத்துநர் வணிகம்:** காலத்திற்குக் காலம் அவசியமானவிடத்து தகைமையுடைய வங்கிகள் அவற்றின் சொந்தச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை (ஒதுக்கப்பட்ட மூலதனம் மற்றும் பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் தவிர) கட்டுக்காக்கும் நோக்கத்திற்காகவும் அவற்றின் சொந்த இடர்நேர்வுத் தோற்றப்பாட்டை முகாமைப்படுத்தும் நோக்கத்திற்காக, ஆனால் ஊக நோக்கத்திற்கன்றி, கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்.

ஆ) **சந்தையை உருவாக்காத வணிகம்:** தகைமையுடைய வங்கிகளினால் அவற்றின் வாடிக்கையாளர்களுடன் அதாவது தகைமையுடைய வங்கிகள் தவிர்ந்த, வேறொரு தரப்பினருடன் அல்லது மற்றொரு தகைமையுடைய வங்கியுடன் இலாப நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் வணிகம். இக்கொடுக்கல்வாங்கல்களில் தகைமையுடைய வங்கியொன்று அதன் சொந்த ஏடுகளில் எந்தவொரு சந்தை இடர்நேர்வினையும் எடுக்காது என்பதுடன் அதேநாளன்று இருபுறமும் சார்ந்த அடிப்படையில் இலங்கையிலுள்ள இன்னொரு தகைமையுடைய வங்கியுடன் அல்லது வெளிநாட்டு இணைத்தரப்பினருடன் கொடுக்கல்வாங்கலைக் காப்பீடு செய்ய வேண்டும்.

இ) **பெறுதிச் சந்தை உருவாக்க வணிகம்:** தகைமையுடைய வங்கிகளினால் அவற்றின் வாடிக்கையாளர்களுடன் அல்லது மற்றொரு தகைமையுடைய வங்கியுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களாக இருக்கின்ற வேளையில் சந்தை இடர்நேர்வுகளை அதன் சொந்த ஏடுகளுக்கு மாற்றிக் கொள்வதாகும்.

5.2 இப்பணிப்புரையின் கீழ் அனுமதிக்கப்பட்ட பெறுதிகள் வருமாறு:

அ) பரஸ்பர பரிமாற்றல்கள்

ஆ) தேர்வுகள்

இ) முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள்

ஈ) முன்னோக்கிய ஒப்பந்தங்கள்

உ) பரஸ்பர பரிமாற்றுத் தேர்வுகள்

ஊ) காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு ஏதேனும் சாதனங்கள்

5.3 தகைமையுடைய வங்கிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்:

அ) வாடிக்கையாளர்களுக்கு முன்வைக்கப்பட்ட அனைத்துப் பெறுதிகளும் நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய செல்லுபடியான அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

ஆ) அனுமதிக்கப்பட்ட பெறுதிகளின் பயன்பாடு கட்டுக்காப்பிற்கானவையாக அல்லது வாடிக்கையாளரின் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வினை முகாமைப்படுத்துகின்ற அல்லது செல்லுபடியாகக்கூடிய கொடுக்கல்வாங்கல்கள் நோக்கங்களுக்கானவையாக இருத்தல் வேண்டும். அவை ஊக நோக்கங்களுக்கானவையாக இருத்தல் கூடாது.

இ) பெறுதிகளின் ஏதேனும் முடுக்கி உட்பட எண்ணறிலை முதல் தொகை அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்/ சொத்து அல்லது பொறுப்பு அல்லது அடிப்படை வெளிப்படுத்துகை என்பனவற்றின் செலுத்தப்படாதுள்ள தொகையினை விஞ்சக்கூடாது.

5.4 வெளிநாட்டு இணைத்தரப்பினருடனான இருபுறமுமான கொடுக்கல்வாங்கல்களில் நுழைவதற்கு தகைமையுடைய வங்கிகள் மேலே 5.2இல் பட்டியலிடப்பட்டுள்ள சாதனங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

5.5 தகைமையுடைய வங்கிகள் எதிர்பாராத இடர்நேர்வுகள் அல்லது அவர்களது வாடிக்கையாளர்களின் ஐந்தொகையின் வெளிப்படுத்துகைகளினால் தோன்றக்கூடிய இடர்நேர்வுகளினைக் கட்டுக்காப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

5.6 தகைமையுடைய வங்கிகள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் கொடுக்கல்வாங்கல்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தம் உட்பட அவர்களின் வெளிப்படுத்துகைகளின் கட்டுக்காப்பினை அனுமதிக்கலாம். மதிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் பெறுமதியானது அவர்களது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அல்லது முன்னைய மூன்று ஒப்பந்தப் பெறுமதிகளின் சராசரி அல்லது உடனடியாக முற்போந்த ஒப்பந்தப் பெறுமதி என்பவற்றில் உயர்வான பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு தகைமையுடைய வங்கியொன்றின் உறுதிப்படுத்தலுக்குட்பட வேண்டும்.

5.7 தரப்பினர் அத்தகைய பெறுதிகள் இனித் தேவையில்லை எனக் கருதுவார்களாயின் அவர்கள் பின்வரும் விதத்தில் பெறுதிகளைப் பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ முடிவுறுத்தலாம்/ மீளவிற்பனை செய்யலாம்.

(அ) இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்குட்பட்டு, அனைத்துப் பெறுதி ஒப்பந்தங்களும் ஒருமுறை முடிவுறுத்தப்படுமிடத்து மீளப்பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையனவாகும்.

(ஆ) அடிப்படைக் கொடுக்கல்வாங்கல் இன்னமும் வலிதில் இருக்கும் வேளையில் எவரேனும் வாடிக்கையாளர் முதிர்ச்சிக்கு முன்னதாக பெறுதி ஒப்பந்தத்தினை முடிவுறுத்த விரும்புவாரேயாயின் அவ்வாறு செய்யும் பொழுது சந்தைப்படியாக ஏற்படும் இழப்பு அத்தகைய வாடிக்கையாளருக்கு விதிக்கப்படும்.

(இ) சந்தைப்படியான இலாபம் (நிதியியல் இலாபம்) வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தப்படக்கூடாது.

(ஈ) வட்டி வீத நன்மைகள், ஏதுமிருப்பின், மீளப்பதிவு செய்யப்படும் நேரத்தில் அது வாடிக்கையாளருக்கு வழங்கப்பட முடியும்.

5.8 கடன்தீராற்றலின்றிப் போகும் சந்தர்ப்பத்தில், இணைத்தரப்பினரின் கோரல் கடன்தீராற்றலற்ற தரப்பினருக்கும் கடன் வழங்கியோருக்குமிடையே பரஸ்பர கொடுக்கல்வாங்கல்களின் தேறலுக்காக வழங்கப்படுமாயின் ஒரு தரப்பினரால் செலுத்தப்படத்தக்க தொகை மற்றைய தரப்பினரால் செலுத்தப்படத்தக்க தொகைக்கெதிராக எதிரீடு செய்யப்படுமென்பதுடன் தேறிய மீதி மாத்திரம் செலுத்தப்படும் அல்லது பெறப்படும்.

5.9 வதிவற்றோர் தொடர்பில் ஏற்படும் பெறுதிக் கொடுக்கல்வாங்கல் செலவு வெளியில் அனுப்பத்தக்க நிதியத்திலிருந்து அத்துடன்/ அல்லது வழமையான வங்கித்தொழில் வழிப்படுத்தலூடான உள்முகப் பணவனுப்பல்களிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

5.10 2009ஆம் ஆண்டு ஒகத்து 01ஆம் திகதி விடுக்கப்பட்ட நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரைகள் (தொடர்பு எண்: 33/03/001/0029/002) மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2010 மாச்சு 11ஆம் திகதி விடுக்கப்பட்ட (தொடர்பு எண்: 06/04/02/2010) பணிப்புரைகள் என்பனவற்றின் கீழ் தகைமை பெற்ற வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பெறுதிகளும் முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரைகளைப் பின்பற்றும் விதத்தில் அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் முதிர்ச்சி வரை தொடர்ந்திருக்க முடியும். முன்னைய ஒப்பந்தங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முடிவடையாத பெறுதி ஒப்பந்தங்களை புதிய பணிப்புரைகளின் நியதிகளின் கீழ் மட்டுமே மீளப்பதிவு செய்ய முடியும்.

5.11 வாடிக்கையாளரொருவரின் அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் நிருவகிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஒப்பந்தங்களைக் குறிப்பிட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலின் போதும் ஆவணச்சான்றுகளை வழங்கினால் மாத்திரமே மேற்கொள்ள முடியும்.

6. தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள்

6.1 வதியும் வாடிக்கையாளர்கள் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களத் தலைவரின் குறித்துரைக்கப்பட்ட ஒப்புதலைப் பெற்றிருந்தாலொழிய தகைமை பெற்ற வங்கிகள் எந்தவொரு வெளிநாட்டு இணைத்தரப்பினரதும் சார்பில் வதியும் வாடிக்கையாளர்களுடனான பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

6.2 வெளிநாடுகளில் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் அல்லது வருவாய்களிலிருந்து ஏற்படும் வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை மற்றும் இடர்நேர்வுகள் சம்பந்தமான பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களில் தகைமையுடைய வங்கிகள் ஈடுபட முடியாது.

6.3 வாடிக்கையாளருக்கு எந்தவொரு நாணயத்திலும் தகைமையுடைய வங்கியினால் தேர்வுக் கட்டணங்கள் தவிர்ந்த முன்கூட்டிய கொடுப்பனவினைச் செய்வதுடன் தொடர்பான பெறுதிகள் அனுமதிக்கப்படமாட்டா.

7. பன்னாட்டுப் பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச் சங்கம்

7.1 இரண்டு தரப்பினரும் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச் சங்க முதன்மை உடன்படிக்கையில் கையொப்பமிடுவதிலிருந்து விலகியிருந்தாலொழிய தகைமையுடைய வங்கிகள், இணைத்தரப்பினருடன் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச் சங்க முதன்மை உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

7.2 பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் பெறுதிச் சங்க முதன்மை உடன்படிக்கையில் கையொப்பமிடுவதிலிருந்து விலகியிருக்க உடன்படுமிடத்து தகைமையுடைய வங்கிகள் இணைத்தரப்பினரிடமிருந்து எழுத்து மூலமான சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

7.3 தகைமையுடைய வங்கிகள் கொடுக்கல்வாங்கல்கள் குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

8. வாடிக்கையாளர் விழிப்புணர்வு

8.1 தகைமையுடைய வங்கிகள், வாடிக்கையாளர்கள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களிலுள்ள இடர்நேர்வுகளைத் தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் போதுமான வழிமுறைகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

8.2 தகைமையுடைய வங்கிகள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், குறிப்பாக விடயங்களைப் பொறுத்து தொடர்பான அடித்தள அளவுக் குறியீடுகள், வீதங்களை நிர்ணயித்தல், அடித்தல் விலை மற்றும் மிகை இலாபம் என்பனவற்றை எடுத்துக்காட்டும் சாதனத்தில் கூட்டிணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் வாசகங்கள் பற்றியும் அத்துடன் உயர்மட்ட வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக இடர்நேர்வு சூழல் பகுப்பாய்வின் விபரங்களையும் போதுமான தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

8.3 தகைமையுடைய வங்கிகள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு முன்னதாக, வாடிக்கையாளர்கள் சாதனங்களின் தன்மையினையும் அவற்றுடன் இயல்பாகவே சேர்ந்து காணப்படும் இடர்நேர்வுகள் பற்றியும் விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர்களிடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்பாடு ஒன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

8.4 தகைமையுடைய வங்கிகள் வாடிக்கையாளர்களிடமிருந்து, அனைத்து தகைமையுடைய வங்கிகளுடனுமான அவர்களது பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களினது மொத்தப் பெறுமதி குறிப்பிட்ட அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் வெளிப்படுத்தல் அல்லது பெறுமதியினை விஞ்சவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் எழுத்து மூலமான உத்தரவாதமொன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

8.5 அத்தகைய ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு முன்னர் தகைமையுடைய வங்கியினால் வழங்கப்பட்ட பெறுதிச் சாதனங்களில் ஈடுபடும் வாடிக்கையாளர்களின் நிறுவன ரீதியான இயலளவையும் ஒட்டுமொத்தப் பொருத்தப்பாட்டினையும் பற்றி, தகைமையுடைய வங்கிகள் தொழில்சார் நிபுணத்துவப் பகுப்பாய்வு பற்றி அவர்களே திருப்தியடைந்து கொள்ளல் வேண்டும்.

9. தகைமையுடைய நாணயங்கள்

9.1 வாடிக்கையாளரின் கோரிக்கையின்படியும், பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கிணங்கவும் தகைமையுடைய வங்கிகள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களைக் குறித்துரைக்கப்பட்ட நாணயங்களில் மேற்கொள்ளல் வேண்டும்.

10. காலம்

10.1 தகைமையுடைய வங்கிகள், பெறுதி ஒப்பந்தங்களின் முதிர்ச்சித் திகதி அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் முதிர்ச்சித் திகதியுடன் தொடர்பானதாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் எந்தவொரு சூழ்நிலையிலும் இது அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் திகதிக்கு அப்பால் நீடிக்கப்படக்கூடாது என்பதுடன் பெறுதிக் கொடுக்கல்வாங்கலின் உயர்ந்தபட்ச முதிர்ச்சிக் காலம் பத்து (10) ஆண்டுகளை விஞ்சவும் கூடாது.

11. தொடர்பு/ மதிப்பீட்டு அடித்தள அளவுக் குறியீடு

11.1 தொடர்பான தரப்பினர்கள் தொடர்பு மற்றும் மதிப்பீட்டு நோக்கங்களுக்காக சமவாய உடன்படிக்கை தொடர்பில் போதுமான வெளிப்படைத்தன்மையுடன் ஏதேனும் அடித்தள அளவுக்குறியீட்டினை எவ்வித கட்டுப்பாடுமின்றி பயன்படுத்த முடியும்.

12. அறிக்கையிடல்

12.1 தகைமையுடைய வங்கிகள் இணைப்பு I இல் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பான கூற்றினை மாதம் முடிவடைந்து 15 நாட்களுக்குள் மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. வரைவிலக்கணம்

இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காகப் பின்வரும் வரைவிலக்கணங்கள் ஏற்புடைத்தனவாக இருத்தல் வேண்டும்.

13.1 **பெறுதி**

பெறுதி என்பது நிதியியல் சாதனமொன்றாகும் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான ஒப்பந்தமொன்றாகும்.

13.2 **வெளிநாட்டு இணைத்தரப்பு**

வெளிநாட்டு இணைத்தரப்பு என்பது

அ) இலங்கைக்கு வெளியேயான வங்கியொன்று

ஆ) பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பெறுதிப் பரிவர்த்தனையொன்று எனப் பொருள்கோடப்படுதல் வேண்டும்.

13.3 **அனுமதிக்கப்பட்ட பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்**

**அ) பரஸ்பரபரிமாற்றல்**

பரஸ்பர பரிமாற்றல் என்பது கொடுக்கல்வாங்கலில் இணங்கப்பட்ட ஆயுள் காலப்பகுதியில் (முதிர்ச்சி அல்லது காலம்) குறிப்பிட்ட இடைவெளியில் (கொடுப்பனவுத் திகதி) காசுப்பாய்ச்சலை மாற்றிக் கொள்வதற்கான இருபுடை உடன்படிக்கையொன்றாகும். பரஸ்பர பரிமாற்றலில் நுழைவதற்கு கட்டணக் கொடுப்பனவுகள் பொதுவாக தேவையில்லை. இப்பணிப்புரையின் கீழ் தகைமையுடைய வங்கிகள் வட்டி வீத, குறுக்கு நாணய மற்றும் பண்ட பரஸ்பரபரிமாற்றல்களில் ஈடுபடத் தகைமையுடையனவாகும்.

**ஆ) தேர்வுகள்**

தேர்வுகள் என்பது கட்டணத்தினை செலுத்துகின்ற வாங்குநருக்கு, இணங்கப்பட்ட விலையில் (அடித்த அல்லது நடைமுறையிலுள்ள விலை) அடிப்படைச் சொத்தொன்றில் குறித்துரைக்கப்பட்ட தொகையினை உடனடியாக அல்லது ஒப்பந்தக் காலம் முடிவடையும் (காலாவதியாதல்) திகதியில் அல்லது அது வரையான காலப்பகுதியில் வாங்குவதற்கான அல்லது விற்பதற்கான கடப்பாடொன்றல்லாத உரிமையை வழங்குகின்ற உடன்படிக்கையாகும். அழைப்புத் தேர்வு என்பது அடிப்படையொன்றினை வாங்குவதற்கான தேர்வாகும். விற்கும் தேர்வு என்பது அடிப்படையொன்றினை விற்பதற்கான தேர்வாகும். இப்பணிப்புரையின் கீழ் தகைமையுடைய வங்கிகள் அடிப்படை வட்டி வீதம், நாணயம் மற்றும் பண்டங்களை அடிப்படையாகக் கொண்ட தேர்வுகளை வழங்கத் தகுதியுடையனவாகும்.

**இ) முன்னோக்கிய வட்டி வீத உடன்படிக்கைகள்**

முன்னோக்கிய வட்டி வீத உடன்படிக்கை என்பது வட்டி வீதச் சந்தையில் நுழைவதற்கான தகுதியினை நிறுவனமொன்றிற்கு வழங்குகின்ற இருதரப்பினருக்கிடையிலான வட்டி வீத ஒப்பந்தமாகும். முன்னோக்கிய வட்டி வீத உடன்படிக்கை என்பது ஒரு தரப்பினர் நிலையான வட்டிக் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற அதேவேளை மற்றைய தரப்பினர் கோட்பாட்டு ரீதியான முதல் தொகையினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தம் காலவதியாகுகையில் நிர்ணயிக்கப்படும் வட்டிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தமாகும். மற்றைய தரப்பினர் காலாவதியாகும் நாளன்று, கொடுப்பனவுகள் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

**ஈ) முன்னோக்கிய ஒப்பந்தம்**

முன்னோக்கிய ஒப்பந்தங்களில், ஒப்பந்தங்களை வைத்திருப்போர் நாணயங்களை/ பண்டங்களைக் குறித்துரைக்கப்பட்ட விலையில், குறித்துரைக்கப்பட்ட அளவில் குறித்துரைக்கப்பட்ட எதிர்காலத் திகதியில் வாங்குவதற்கான அல்லது விற்பதற்கான கடப்பாட்டினையுடையவராவர்.

உ) பரஸ்பர பரிமாற்றத் தேர்வுகள்

பரஸ்பர பரிமாற்றல்களுக்குள் நுழைவதற்கான தேர்வாகும். தேர்வுக் கட்டணத்தினைச் செலுத்துவதன் மூலம் அதனை வாங்குபவர் குறித்துரைக்கப்பட்ட எதிர்காலத் திகதியில் குறித்துரைக்கப்பட்ட பரஸ்பரபரிமாற்றல் உடன்படிக்கையொன்றில் நுழைவதற்கான கடப்பாட்டினையன்றி உரிமையினைப் பெற்றுக் கொள்கின்றார். இப்பணிப்புரையின் கீழ் தகைமையுடைய வங்கிகள் வட்டி வீதம், நாணயம் மற்றும் பண்டம் போன்ற அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட பரஸ்பரபரிமாற்றல்களை வழங்குவதற்கு தகைமையுடையனவாகும்.

**ஊ) வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல்கள்**

வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பரபரிமாற்றல் என்பது சமகாலத்தில் இடம்பெறும் கொள்வனவு மற்றும் விற்பனையாக அல்லது இரு வேறுபட்ட செல்லுபடியாகும் திகதிகளில் ஒரே தொகை கொண்ட நாணயத்தினை மற்றைய ஒன்றிற்காக மாற்றிக் கொள்வதாகும்.

14. இரத்துச் செய்தல்

14.1 செலாவணிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரினால் நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீது 2009 ஒகத்து 01ஆம் நாள் விடுக்கப்பட்ட தொடர்பு எண் 33/03/001/0029/002 பணிப்புரைகளும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2013 சனவரி 02ஆம் நாள் விடுக்கப்பட்ட தொடர்பு எண் 06/04/04/2013 பணிப்புரைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

15. நடைமுறைப்படுத்தல்

15.1 இப்பணிப்புரைகள் 2018 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **இணைப்பு I**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்**

வங்கி: ..................................................................................... மாதம்/ ஆண்டு ...................../.........

அட்டவணை 01 - மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

சாதன வகை - பரஸ்பரபரிமாற்றல்கள்

| வணிகத் திகதி | சாதனம் | இணைத்தரப்பு/ வாடிக்கையாளர் | கோட்பாட்டு ரீதியான முதல் தொகை | | முதிர்ச்சித் திகதி | அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | இருபுறமுமான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் | காப்பிடப்படாத வெளிப்படுத்து கைகள் | தொடர்பான அடித்தள அளவுக் குறியீடு | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | | | | | | |
| | | | | | | | | | | |

அட்டவணை 02 - மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

சாதன வகை - முன்னோக்கியவை

| வணிகத் திகதி | இணைத்தரப்பு/ வாடிக்கையாளர் | வாங்கல்/ விற்றல் | முதிர்ச்சித் திகதி | நாணயம் | தொகை | முன்னோக்கிய வீதம் | இருபுறமுமான வணிகம் (ஆம்/ இல்லை) | இருபுறமும் சார்ந்த இணைத்தரப்பு | அடிப்படைக் கொடுக்கல் வாங்கல் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

அட்டவணை 03 - மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

சாதன வகை - நாணயத் தேர்வுகள்

| வணிகத் திகதி | இணைத்தரப்பு/ வாடிக்கையாளர் | தேர்வு மேற் கொள்ளப்படும் திகதி | வங்கிக் கொள் வனவு | | வங்கி விற்பனை | | அடித்தல் விலை | இரு புறமுமான வணிகம் (ஆம்/ இல்லை) | இரு புறமுமான இணைத் தரப்பு | அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | நாணயம் | தொகை | | | | | |
| | | | | | | | | | | | |

அட்டவணை 04 - மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

சாதன வகை - தேர்வுகள்

| வணிகத் திகதி | இணைத்தரப்பு/ வாடிக்கையாளர் | சாதனம் | முதிர்ச்சித் திகதி | நாணயம் | தொகை | வணிக வீதம் | இரு புறமுமான வணிகம் (ஆம்/ இல்லை) | இரு புறமுமான வணிகத் தரப்பு | அடிப்படைக் கொடுக்கல் வாங்கல் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

அட்டவணை 05 - இரத்துச் செய்யப்படுகின்ற மற்றும் முடிவுறுத்தப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் (முதிர்ச்சிக்கு முன்னர்)

| வணிகத் திகதி | இ.ம. வங்கிக்கு அறிவிக்கப் பட்டவாறு சாதனம் | வாடிக்கை யாளர்/ இணைத் தரப்பு | கோட்பாட்டு ரீதியான முதல் தொகை | | இ.ம. வங்கியிற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆரம்பக் கொடுக்கல் வாங்கல்களுக்கான தொடர்பு | | முதிர்ச்சியின் மூலத் திகதி | இரத்துச் செய்யப் படும் அல்லது முடிவுறுத் தப்படும் திகதி | இருபுறமு மான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் | தொடர்பு/ அடித்தள அளவுக் குறியீடு | குறிப்புக்கள்/ இரத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு மாத முடிவிலிருந்து 15 நாட்களுக்குள் dfx@cbsl.lk ஊடாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**2017இன் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2017 திசெம்பர் 12

## உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் வங்கிகளுக்கான முக்கிய நிதியியல் மூலமாக விளங்குகின்றன. எனினும், மிகையானதும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாததுமான வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்கள் நாடொன்றின் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பனவற்றின் தேவையற்ற கரிசனைகளுக்குக் காரணமாகிவிடும்.

நாணயச் சபையானது, உரிமம் பெற்ற வங்கிகள் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளில் பெருமளவிற்குத் தங்கியிருப்பதனையும் அதன் மூலம் உரிமம் பெற்ற வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், வெளிநாட்டு நாணயத்திலான பாரிய கடன்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற நாட்டின் ஒதுக்கு மற்றும் செலாவணி வீதம் என்பனவற்றின் மீதான அழுத்தத்தினைக் குறைக்கும் நோக்கத்துடனும் உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்காக கொள்கைக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்தியது.

இதன்படி, நாணயச் சபை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்

1.1 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அனைத்திற்கும் அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கும் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கும் அத்தகைய வங்கி அல்லது வங்கிகளின் வியாபார விடயத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அவர்களுக்குப் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. ஏற்புடைத்தன்மை

2.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும் அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கும் ஏற்புடைத்தாகும்.

3. காலம்

3.1 வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் மீதமுள்ள முதிர்ச்சிக் காலம்:

(i) 3 ஆண்டுகள் அல்லது அதற்குக் குறைவானதாயின், குறுங்காலக் கடன்கள் எனக் கருதப்படும்.

(ii) 3 ஆண்டுகளுக்கும் கூடுதலானதாயின், நீண்டகாலக் கடன்பாடுகள் எனக் கருதப்படும்.

4. வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான வரையறை

4.1 உரிமம் பெற்ற வங்கிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் உயர்ந்தபட்ச வெளிநின்ற தொகை, இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின்படி மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக நிர்ணயிக்கப்படுகிறது.

4.2 உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் சதவீதம் கீழேயுள்ள அட்டவணைகள் 1 மற்றும் 2இல் தரப்பட்டுள்ளவாறு வங்கிகளின் வெளிநாட்டு நீண்டகாலக் கொடுகடன் தரமிடல் மற்றும் மொத்த மூலதன விகிதம் என்பனவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கிகளுக்குமாக வழங்கப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 1 - புள்ளிகளின் கணிப்பு**

| வங்கிகளின் கொடுகடன் தரமிடல் | வங்கியின் மொத்த மூலதன விகிதம் | ஒவ்வொரு கூட்டிற்கும் வழங்கப்பட்ட புள்ளி |
|---|---|---|
| AAA இலிருந்து AA- அல்லது சமமானவை | >14.0% | 3 |
| A+ இலிருந்து A- அல்லது சமமானவை | 13.6% - 14.0% | 2 |
| BBB+ இலிருந்து BBB- அல்லது சமமானவை | 12.5% - 13.5% | 1 |
| BBB- இற்குக் கீழே | <12.5% | 0 |

**அட்டவணை 2: மொத்தச் சொத்துக்களின் சதவீதமாகக் கடன்பாடுகளின் வரையறை**

| புள்ளிகளின் கூட்டுத்தொகை | குறுங்காலம் | மொத்தம் |
|---|---|---|
| 1 - 2 | 1.5% | 5.0% |
| 3 - 4 | 1.5% | 7.5% |
| 5 - 6 | 1.5% | 10.0% |

5. நாணயச் சபையின் ஒப்புதல்

5.1 மேலேயுள்ள பணிப்புரை 4இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறையினை விஞ்சுகின்ற ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கு, தேசிய நலவுரித்துக்களின் விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.2 நாணயச் சபையானது, பேரண்ட முன்மதியுடைய அம்சங்கள் மற்றும் கீழே தரப்பட்டுள்ள பணிப்புரைகள் 6, 7 மற்றும் 8இன் ஏற்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, அது பொருத்தமானது எனக்கருதும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் பெற்ற வங்கிகளின் சொத்துக்களின் 5 சதவீதமளவினால் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் ஏற்புடைத்தான வரையறையினை விஞ்சுவதற்கு விடயத்தைப் பொறுத்து அனுமதி வழங்கலாம்.

5.3 பணிப்புரை 5.2இன் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்பாடுகளை நாணயச் சபையின் ஒப்புதல் திகதியிலிருந்து 3 மாத காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்

6.1 உரிமம்பெற்ற வங்கியின் அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளும் வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6.2 உரிமம் பெற்ற வங்கிகள் பாசல் III இன் கீழான குறைந்தபட்ச மூலதனம், நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம், திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மற்றும் தேறிய திறந்த நிலைமை என்பன உள்ளடங்கலாக, ஆனாலும் இவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படாமல், அனைத்து முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் அனைத்து நேரங்களிலும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

6.3 உரிமம் பெற்ற வங்கிகள் வட்டி வீதம் மற்றும் வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வுகளுக்கான காப்பிடலைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளினால் தோன்றுகின்ற முதிர்ச்சிப் பொருத்தப்பாட்டின்மையையும் முகாமை செய்தல் வேண்டும்.

6.4 கடன்பட்ட வெளிநாட்டு நாணயம் மற்றொரு வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றல் செய்யப்படுமிடத்து வெளிநாட்டு இணைத்தரப்பினரொருவருடனான காப்பிடல் ஊக்குவிக்கப்படும்.

6.5 ஓராண்டிற்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் ஓராண்டிற்கும் கூடுதலான முதிர்ச்சிகளைக் கொண்ட கொடுகடன் வசதிகளை வழங்க பயன்படுத்தப்படக்கூடாது.

6.6 உரிமம் பெற்ற வங்கிகள் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளைச் சரியான நேரத்தில் மீளச்செலுத்துவதற்கான தமது இயலாற்றலை நிரூபித்தல் வேண்டும்.

7. தகைமையுடைய வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

7.1 கடன் வழங்குநர் உறுதியான நிதியியல் நிறுவனம் என்பதற்கான சிறந்த பதிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சாத்தியமான கடன் வழங்குநர்களாக:

(i) பல்புடை அபிவிருத்தி வங்கிகள்

(ii) பன்னாட்டு புகழ்பெற்ற வங்கிகள்

(iii) வெளிநாட்டு அரசுகளுக்குச் சொந்தமான அல்லது இணைந்த முகவர்கள்

(iv) வெளிநாட்டு வங்கிகளின் தலைமை அலுவலகம் மற்றும் கிளைகள்

என்பன காணப்படுகின்றன.

7.2 கடன்பாடுகளின் வட்டி வீதங்கள் (அனைத்துத் தொடர்பான செலவுகள் உட்பட) போட்டித்தன்மையுடையனவாக இருத்தல் வேண்டும்.

7.3 கடன்பாடுகள் ஆரம்பத்தில் குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுத் திகதிக்கு முன்னதாக தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது என்பதுடன் வாங்கும் அல்லது விற்கும் தேர்வுகளைக் கொண்டிருக்கக்கூடாது.

7.4 மீள்கொடுப்பனவிலிருந்து ஒரே நேரத்தில் பெருமளவு தொகையினைச் செலுத்தும் தாக்கம் ஏற்படக்கூடாது.

7.5 கடன்பாடுகள் மிகையான கொடுகடன் வளர்ச்சியை ஏற்பத்தக்கூடாது.

8. வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் பயன்பாடு

8.1 நீண்டகால வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் நாட்டிலுள்ள பின்வரும் கடன் வழங்கல்/ முதலீட்டு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாம்.

(i) ஏற்றுமதிகள், இறக்குமதிப் பதிலீடுகள், உட்கட்டமைப்பு, அரச அபிவருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடல்

(ii) தற்போதைய வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல் அல்லது இளைப்பாற்றுதல்

(iii) இலங்கை அரசாங்கத்தின் நாட்டிற்கான படுகடன் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளில் முதலீடு செய்தல்.

9. சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பம்

9.1 மேலேயுள்ள பணிப்புரை 5இன் கீழ், நாணயச் சபையின் ஒப்புதலைப் பெறுவதற்கு உரிமம் பெற்ற வங்கிகள் பின்வரும் விபரங்களுடன் எழுத்து மூலமான கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) கடன் வழங்குநரின் தோற்றப்பாடு

(ii) கடனின் பண்புகள்

(iii) இலக்குகளுடன் கூடிய குறிப்பிடப்பட்ட நோக்கம்/ குறிக்கோள்கள்

(iv) தற்போதுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களின் செயலாற்ற நிலைமை

(v) உத்தேச இடர்நேர்வு முகாமைத்துவப் பொறிமுறை

10. உயர்ந்தபட்ச வரையறைகளிலிருந்து விதிவிலக்கு

10.1 தலைமை அலுவலகத்திலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் இலங்கைக்கு வெளியே தொழிற்படுகின்ற ஏதேனும் கிளையிலிருந்து பெறப்படும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள், அவை பெறப்பட்ட திட்டமிட்ட நோக்கத்திற்காக அத்தொகைகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, மேலேயுள்ள பணிப்புப்புரை 4இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

10.2 3 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அபிவிருத்தி முறிகள், நாட்டிற்கான முறிகள் மற்றும் திறைசேரி முறிகளின் முதலீடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கடன்பாடுகள்

11. விளக்கங்கள்

11.1 மொத்தச் சொத்துக்கள், இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுக்களிலுள்ளவாறான தொகையாக இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | 11.2 | வெளிநாட்டு நாணயம் என்பது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயமாகவிருத்தல் வேண்டும் எனப் பொருள்படும். |
| 12. நடைமுறைப்படுத்தல் | 12.1 | இப்பணிப்புரைகள் 2018 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும் |
| 13. இடைக்கால ஒழுங்கு | 13.1 | மேலேயுள்ள பணிப்புரை 4இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச வரையறைகளை விஞ்சும் விதத்தில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை பெற்றிருக்கின்ற ஏதேனும் உரிமம் பெற்ற வங்கியானது வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வெளிநின்ற தொகை உயர்ந்தபட்ச வரையறைக்கு கீழே வீழ்ச்சியடையும் காலம் வரை மேலும் கடன்பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. |
| | 13.2 | இப்பணிப்புரைகளுக்கு முன்னதாக, வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் மீதான உயர்ந்தபட்ச வரையறையினை விஞ்சுவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு நாணயச் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல்கள் 2018 மாச்சு 31 உடன் செல்லுபடியற்றதாகிவிடும். |
| 14. இரத்துச்செய்தல் | 14.1 | முதன்மைக் கணக்காளரினால் 1997 சனவரி 13ஆம் திகதியிடப்பட்ட விடுக்கப்பட்ட சுற்றறிக்கை எண் பிடி/எவ்எக்ஸ்/196 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் 2017இன் 1ஆம் இலக்கம்** 2017 மாச்சு 07

## வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 3 மற்றும் 5இன் நியதிகளின்படி வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இலங்கையிலும் வேறு ஏதேனும் நாட்டிலும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையர்களுக்கு அவர்களது வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற்கொள்ளாது பின்வருவனவற்றுக்குட்பட்டு, தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிலிருந்து கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

### 1. கடன் வழங்கும் நோக்கம்

1.1 இலங்கையில் வதிவிட ஆதனமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

1.2 இலங்கையில் வதிவிட ஆதனமொன்றினை நிருமாணித்தல்/ விருத்தி செய்தல்/ புதுப்பித்தல்

### 2. வெளிநாட்டு நாணயங்களில் வழங்கப்படும் கடன்கள் (வெளிநாட்டு நாணயக் கடன்கள்)

2.1 கடன்களை மீளச் செலுத்துவதற்கு வெளிநாட்டு நாணய உழைப்பினை கடன்பாட்டாளர் கொண்டிருந்தால் மாத்திரம் வெளிநாட்டு நாணயக் கடன்கள் வழங்கப்பட வேண்டும் அத்துடன் கடன் வழங்குவதற்கு முன்னர் கடன்பெறுநர் வெளிநாட்டு நாணயத்தில் கடனை மீளச்செலுத்துவதற்கான இயலுமையினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மதிப்பீடு செய்து சுயமாக திருப்தியடைதல் வேண்டும்.

2.2 வெளிநாட்டு நாணயத்தில் கடன்பாட்டாளரின் மீள்செலுத்துகை ஆற்றலினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்த முடியாவிடின் வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்க வேண்டாம்.

2.3 கடன் பெறுகைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுக்காக கடன்பாட்டாளரின் பெயரில் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும். கடன் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் உடனடியாக வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கு மூடப்படுதல் வேண்டும்.

2.4 வதிவிட ஆதனத்தை விற்பனை செய்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு, அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பின், கடன்பெறுகைகளை மாற்றுவதற்கு கடன்பாட்டாளர் கோரினாலன்றி, கடன் பெறுகைகள் வெளிநாட்டு நாணய கடன் கணக்கிலிருந்து இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

2.5 வெளிநாட்டு நாணய உள்முக பணவனுப்பல் ஊடாக அல்லது கடன்பாட்டாளரின் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் பிணையங்கள் முதலீட்டு கணக்குகளில் கிடைக்கப்பெறும் நிதியங்களைப் பயன்படுத்தி கடனை மீளச்செலுத்தல் வேண்டும்.

### 3. இலங்கை ரூபாவில் வழங்கப்படும் கடன்கள் (ரூபாக் கடன்கள்)

3.1 கடன்களை மீளச் செலுத்துவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்து திருப்தியடைந்த பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ரூபாய்க் கடன்களை வழங்குதல் வேண்டும்.

3.2 கடன் பெறுகைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுதல் நோக்கங்களுக்காக கடன்பாட்டாளரின் பெயரில் இலங்கை ரூபாய்க் கடன் கணக்கொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

3.3 கடன் பெறுகைகள் இலங்கை ரூபாவில் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3.4 வெளிநாட்டு நாணய உள்முக பணவனுப்பல்கள் மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் பிணையங்கள் முதலீட்டு கணக்குகள் கிடைக்கப்பெறும் நிதியங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் கடன்பெறுநரின் இலங்கை ரூபா உழைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும் கடன் மீளச்செலுத்தப்பட வேண்டும்.

## 4. தவணை தவறுகின்ற போது கடன்களை அறவிடுதல்

2008இன் 3ஆம் இலக்க வங்கியியல் சட்ட (திருத்தியமைக்கப்பட்டவாறு) பணிப்புரைகளின் நியதிகளில் ஆகக் குறைந்தது துணை நியதி வகைகளில் செயற்படாதவையாக அத்தகைய கடன்கள் வகைப்படுத்தப்படும் நிலையில் மட்டுமே பின்வரும் முறையில் இலங்கை ரூபாவில் வெளிநாட்டு நாணயக் கடன்களை அறவிடல் வேண்டும்.

அ) முதலில் கடன்பாட்டாளரின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் மூலம்

ஆ) இரண்டாவதாக அடமானச் சொத்துக்கள் அல்லது வேறு உள்நாட்டு சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்படும் பெறுகைகளின் மூலம்

இ) இறுதியாக, வேறு மீதமுள்ள கடன் நிலுவையினை தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் பெறுமதியின் அளவிற்கு மட்டும் இலங்கை ரூபாய் பெறுகைகள் மாற்றம் செய்யப்படல் வேண்டும்.

## 5. ஏனைய நிபந்தனைகள்

5.1 கடனுடன் தொடர்பான அனைத்து இடர்நேர்வுகளையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பரிசோதிக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய இடர்நேர்வுகளை குறைப்பதற்கு பொருத்தமான நுண்மதியுடைய அளவீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5.2 கடன்பாட்டாளரின் பாரம்பரிய ஆதனமொன்றில் அல்லது கடன்பெறுநர் இலங்கையில் வதிபவராகவிருக்கின்ற போது சொந்தமாகக் கொண்டிருந்த ஆதனமொன்றில் நிருமாணிப்பதற்காக/ விருத்தி செய்வதற்காக/ புதுப்பிப்பதற்காக கடன் பெறுகைகள் பயன்படுத்தப்படுமாயின், 1988ஆம் ஆண்டில் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நுண்மதியுடைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தெரிவுசெய்யப்பட்ட விலை மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து ஆதனத்தின் விலை மதிப்பீட்டினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பெறுதல் வேண்டும்.

5.3 பந்தி 5.2இன் நியதிகளின்படி கடன் பெறுகைகளைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட/ நிருமாணிக்கப்பட்ட/ விருத்தி செய்யப்பட்ட/ புதுப்பிக்கப்பட்ட ஆதனத்திலிருந்தான பெறுதிகளின் விற்பனைப் பெறுகைகள் பின்வரும் அடிப்படையில் இலங்கைக்கு வெளியில் அனுப்பப்படுகின்றது என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

(அ) கடனை மீளச் செலுத்துவதற்கு இலங்கைக்கு அனுப்பப்படும் தொகைக்கு விகிதாசாரமான விற்பனை பெறுகைகள் கட்டுப்பாடுகளின்றி அனுப்பப்படலாம்.

(ஆ) ஏதேனும் மீதி விற்பனைப் பெறுகைகள் காணப்படுமாயின் புலம்பெயர் படிகளுக்குட்பட்டு அனுப்பப்படலாம்.

5.4 எதிர்கால வெளிமுக பணவனுப்பல்களை வசதிப்படுத்துவதற்காக, கடன் தீர்ப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் பற்றிய உறுதிப்படுத்தலொன்றினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் கடன்பாட்டாளருக்கு வழங்குதல் வேண்டும்.

5.5 கடன் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படும் வரை, ஏதேனும் நியதிச்சட்ட ஆவணத்தினைப் பேணுகின்ற தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, கடன் வழங்குகின்ற நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆவண ரீதியான சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பேணுதல் வேண்டும். கடன் தீர்ப்பனவு செய்யப்பட்டவுடன், தொடர்புடைய ஆவணச் சான்றானது நியதிச்சட்ட ஆவணம் பேணுப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட காலம் வரை பேணப்படுதல் வேண்டும்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் 2017இன் 2ஆம் இலக்கம் 2017 மாச்சு 07

## வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 3 மற்றும் 5இன் நியதிகளில், 2017 மார்ச் 07 திகதியிடப்பட்ட 2017இன் 01ஆம் இலக்க பணிப்புரைகளிலிருந்து பெறப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தல் தொடர்பில் பின்வரும் கணக்குகளிற்கு வரவு மற்றும் பற்றினை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு அனுமதி வழங்கப்படுகின்றது

**1. வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது வழங்கப்பட்ட 2016இன் 1ஆம் இலக்க பணிப்புரை மற்றும் 2016இன் 5ஆம் இலக்க பணிப்புரை**

பின்வருவதை உட்செலுத்துவதன் மூலம் பந்தி 1.4 திருத்தப்படுகின்றது

i. கணக்கு வைத்திருக்கும் ஆளின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்கொன்றிற்கு நிதியங்களின் மாற்றல்கள்

**2. வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது வழங்கப்பட்ட 2016இன் 2ஆம் இலக்க பணிப்புரை மற்றும் 2016இன் 6ஆம் இலக்க பணிப்புரை**

பின்வருவதை உட்செலுத்துவதன் மூலம் பந்தி 1.4 திருத்தப்படுகின்றது

i. கணக்கு வைத்திருக்கும் ஆளின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்கொன்றிற்கு நிதியங்களின் மாற்றல்கள்

**3. பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளின் மீது வழங்கப்பட்ட 2013 யூன் 12 திகதியிடப்பட்ட 06/04/18/2013 இலக்க பணிப்புரை**

பின்வருவதை உட்செலுத்துவதன் மூலம் பந்தி 1.4 திருத்தப்படுகின்றது

i. கணக்கு வைத்திருக்கும் ஆளின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்கொன்றிற்கு நிதியங்களின் மாற்றல்கள்

4. **வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்குகளின் மீது வழங்கப்பட்ட 2016இன் 4ஆம் இலக்க பணிப்புரை மற்றும் 2016இன் 8ஆம் இலக்க பணிப்புரை**

பின்வருவதை உட்செலுத்துவதன் மூலம் பந்தி 1.4 திருத்தப்படுகின்றது

i. கணக்கு வைத்திருக்கும் ஆளின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்கொன்றிற்கு நிதியங்களின் மாற்றல்கள்

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் 2017இன் 7ஆம் இலக்கம்** 2017 யூலை 05

## பன்னாட்டு பணிகள் வழங்குநர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களிற்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 45 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 3இன் நியதிகளில், இலங்கைக்கு வெளியே சேவைகளை வழங்கும் கம்பனிகளின் ஊழியர்களிற்கு பிரயோகிக்கக்கூடிய சலுகை வீதங்களுடன் தொடர்புடைய 2015இன் 9ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான திருத்தங்களுடன் 2006இன் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் "விலக்களிக்கப்பட்ட செயற்றிட்டங்களில்" ஈடுபட்டுள்ள தொழில்சார் பணிகள் வழங்குனர்களிற்காக வழங்கப்பட்ட வருமானவரி விலக்களிப்புக்களின் நீக்கம் காரணமாக 2010.05.07 திகதியிடப்பட்ட 06/04/05/2010 மற்றும் 2014.05.28 திகதியிடப்பட்ட 06/04/06/2014 பணிப்புரைகளின் கீழ் புதிய பன்னாட்டு பணிகள் வழங்குநர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களிற்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறத்தலானது இத்தால் மீளப்பெறப்படுகின்றது என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு அறிவிக்கப்படுகின்றது.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**இலங்கைச்சனநாயக சோசலிசக்குடியரசு வர்த்தமானப்பத்திரிகை**

**அதி விசேஷமானது**

2043/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

### 1ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 1ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டம் எத்திகதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமோ அத் திகதியாக 2017 நவெம்பர் மாதம் 20ஆந் திகதியை இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.

மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 1ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 2017 ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய 2040/43 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க,<br>
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கொழும்பு,<br>
2017, ஒற்றோபர் 31.

**இலங்கைச்சனநாயக சோசலிசக்குடியரசு வர்த்தமானப்பத்திரிகை**

**அதி விசேஷமானது**

2045/56 ஆம் இலக்கம்- 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

### ச.வ.பி 10/ 2017

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்கிரமசிங்க,<br>
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கொழும்பு,<br>
2017, ஒற்றோபர் 31.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டு நடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் எத்தேதியன்று அச்சட்டம் நடைமுறைக்கு வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I
### மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்

2. (1) பின்வரும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் கொண்டு நடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகள் ஆதல் வேண்டும்:-

(அ) இவ்வொழுங்குவிதிகளிற்கான Iஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள் நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய இலங்கையில் வதிவற்ற ஆள் ஒருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளிற்கான IIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய இலங்கைக்கு வெளியே வதிவற்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்; அத்துடன்

(இ) இவ்வொழுங்கு விதிகளிற்கான IIIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய நீக்கப்பட்ட கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட (பொது அல்லது விசேட) ஏதேனும் அங்கீகாரத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்.

(2) இவ்வொழுங்குவிதிக்கான IXஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வேறு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினாலும் அத்துடன் இச்சட்டத்தின் 4(1)(ஈ) என்னும் பிரிவின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியை கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்துள்ளவராக கருதப்பட்டவராலும் அத்துடன் IVஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக இச்சட்டத்தின் 4(1)(இ) என்னும் பிரிவினை வெளிநாட்டுச் செலாவணியை கையாளுவதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடியதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளினாலும் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

3. (1) இலங்கைக்கு வெளியே வங்கி ஒன்றினுள் கணக்கொன்றை திறப்பதற்கு, பேணுவதற்கு மற்றும் தொழிற்படுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய கணக்குகளை மூடுவதற்கு உட்கருதுகின்றவாறான IVஆம் அட்டவணையின் தலைப்பு V இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக அவ்வாறு செய்யலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் திறக்கப்படும் கணக்கொன்று இலங்கைக்கு வெளியே சட்டரீதியாக பெறப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவரிடமிருந்து அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கு IVஆம் அட்டவணையின் தலைப்பு V யின் பந்தி Iஇல் குறித்துரைக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஆள்ஒருவரிடமிருந்து பெறப்பட்டதுமான வெளிநாட்டுச் செலாவணியுடன் வரவுவைக்கப்படலாம்.

(3) ஓராம் பந்தியின் கீழ் திறக்கப்படும் நிதிக்கணக்குகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வதிவுள்ள ஆள் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களிற்கு பயன்படுத்தப்படலாம்.

(4) ஐந்தாம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, (1)ஆம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க வெளிநாட்டு வங்கி ஒன்றில்திறக்கப்பட்டு பேணப்படும் கணக்கொன்று மூடப்படுகின்றவிடத்து, கணக்கின் மீதியானது அத்தகைய கணக்கு மூடுகைபற்றி ஒருமாத காலத்தினுள் வங்கித்தொழில் வழிகளினூடாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும்.

(5) மேலே IVஆம் அட்டவணையின் V என்னும் தலைப்பின் (v) என்னும் விடயத்தின் கீழ் இலங்கைக்கு வெளியே கணக்கொன்றைத் திறந்து பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஆள்ஒருவர் அத்தகைய நாட்டினால் மாணவர் விசா மறுக்கப்படுகின்றவிடத்து அல்லது மாணவர் விசாவைப் பெற்ற பின்னர் கற்கைகளை தொடங்கவில்லை என தீர்மானிக்கின்றவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் இவ்அனுமதியின் கீழ் இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளினால் திறக்கப்பட்ட கணக்கின் வரவிற்கு இடுகின்ற எல்லாப்பணங்களையும் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

### பாகம் II
### பொது நிபந்தனைகள் முதலியன

4. (1) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு வர்த்தக வங்கி, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் ஆள், பிணையங்களின் வழங்குநர்கள் மற்றும் கடன் பெறுநர்கள், அவர்கள் ஈடுபட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் என்பதற்கு எண்பிப்பாக அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலிலிருந்தும் ஆறாண்டு காலப்பகுதியொன்றிற்கு எல்லாத் தகவல்களையும் ஆவணச்சான்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) பிணையங்களில் முதலீடுகள், கடன்கள் பெறுதல் மற்றும் பொறுப்புக்களுக்கு உத்தரவாதமளித்தல் விடயத்தில், அத்தகைய தகவல், அத்தகைய பிணையங்களின் கையுதிர்ப்பு, கடன் மீள்கொடுப்பனவு அல்லது உத்தரவாதத்தின் காலாவதித் தேதியிலிருந்து ஆறாண்டு காலப்பகுதியொன்றிற்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக இவ்வொழுங்கு விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ஒன்றில் ஈடுபட்ட எவரேனும் ஆள், நிதியங்களின் உட்பாய்ச்சல்கள் அல்லது வெளிப்பாய்ச்சல்கள், சொத்துக்களின் கையுதிர்ப்பு அல்லது கொள்ளுதல், மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வருமானம் அல்லது விபரத்திரட்டுக்களின் பற்றுச்சீட்டுக்கள் பற்றிய முறையான சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான ஆவணச்சான்றையும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் சட்டத்தன்மையை பொருளளவில் எண்பிக்கும் வேறு ஏதேனும் ஆவணச்சான்றையும் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(4) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு வர்த்தக வங்கியும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் ஒவ்வொரு ஆளும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் போது அவசியமான ஆவணங்களை வழங்குவதன் மூலம் வசதியளித்தல் வேண்டும்.

(5) இவ் ஒழுங்குவிதியின் நோக்கத்திற்காக -

"சட்டம்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்;

"அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மூலதனக் கொடுக்கல் வாங்கல்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 423)

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 2(அ))

**இலங்கையில் வதிவுள்ள ஆட்களினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்.**

1. எவரேனும் தகவுடைய வதிவிட முதலீட்டாளர் பின்வரும் நோக்கங்களுக்காக மூலதன கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியேயுள்ள வதிவிட ஆட்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராகவுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்யலாம்:-

(அ) (கடல்கடந்த கம்பெனி ஒன்று) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளின் பங்குகள் மற்றும் தனிசுப் பிணையங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்புகளில் உள்ள கூறுகள் மற்றும்பரஸ்பர நிதியங்கள் அத்துடன் முதலீட்டின் போது இலங்கையின் இறைமையுள்ள கடன் மதிப்பீட்டில் அல்லது அதற்கு மேல்மதிப்பிடப்பட்ட, வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட இறைமையுள்ள முறிகளையும் கொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல்,

(ஆ) (தனியாளினால் தவிர) வெளிநாடொன்றில்ஒரு கிளை, இணைப்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்ட, பிரதிநிதித்துவ அல்லது வேறு ஒத்த அலுவலகத்தைத்(கடல்கடந்த அலுவலகம்) தாபித்தல் மற்றும் பேணுதல்.

2. (1) மேலே பந்தி 1இல் குறித்துரைக்கப்பட்ட மூலதன கொடுக்கல்வாங்கல்கள், கீழேயுள்ள அட்டவணை 1இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளும் அத்துடன் இவ்வட்டவணையின் ஏற்பாடுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

**அட்டவணை 1 - வெளித்திரும்பல் முதலீடுகளுக்கான வரையறைகள்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| தகவுடைய வதிவிட முதலீட்டாளர் | முதலீடுகளின்/ சாதனங்களின் வகை | அனுமதிக்கப்பட்ட வரையறை |
| (i) கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனி ஒன்று | பங்குகள், கூறுகள், தனிசுப் பிணையங்கள் மற்றும் இறைமையுள்ள முறிகள் | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிற்கும் 2,000,000 ஐ.அ.டொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. |
| (ii) கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படாத கம்பெனி ஒன்று | | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிற்கும் 500,000 ஐ.அ.டொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச்சமமான தொகை. |
| (iii) இலங்கையில்பதிவு செய்யப்பட்ட பங்காண்மை ஒன்று | | வாழ்க்கைக்காலத்துக்காக 300,000 ஐ.அ.டொ ஏதேனும்வெளிநாட்டு நாணயத்தில்அதற்குச் சமமான தொகை. |
| (iv) தனியாள்ஒருவர் | | வாழ்க்கைக்காலத்துக்காக 200,000 ஐ.அ.டொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச்சமமான தொகை. |
| (v) கம்பெனி ஒன்று அல்லது பங் காண்மை ஒன்று | கடல்கடந்த அலுவகங்களைத் தாபித்தல் | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிற்கும் 300,000 ஐ.அ.டொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச்சமமான தொகை. |

(2) மேலே அட்டவணை 1இல் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கான கூட்டுமொத்த வரையறைகள், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுமொத்த முதலீடுகளையும், நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட, 2011ஆம் ஆண்டின் சனவரி 1ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இலக்கங்கள், 1686/50, 1686/52 மற்றும் 1686/53 போன்றவற்றின் மூலம் வழங்கப்பட்ட பொது அனுமதியின் நியதிகளின்படி முன்னதாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் வெளித்திரும்பல் கொடுப்பனவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. மேலே வரையறைகளை விஞ்சுகின்ற எவையேனும் முதலீடுகள் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீது இச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளின்படி பணச்சபையின் விசேட அங்கீகாரம் ஒன்றை தேவைப்படுத்த வேண்டும்.

4. அனுமதிக்கப்பட்ட முதலீடுகளை ஆக்குவதற்கு தேவைப்படும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றுடன் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்களால் திறக்கப்படும் மற்றும் பேணப்படும் வெளித்திரும்பும் முதலீட்டுக்கணக்கு ஒன்றின் ஊடாக செய்யப்படுதல் வேண்டும்.

5. (வழங்குகையினாலான கூட்டு நடவடிக்கை ஒன்றின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர் மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள், உரிமைப்பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றம் உட்பட) அத்தகைய முதலீடுகளிலிருந்தான ஏதேனும்வருமானம் மற்றும் கையுதிர்த்தல் வரும்படிகள் ஆனவை ஆரம்ப முதலீடு எந்த வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கின் ஊடாக கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் செய்யப்பட்டிருந்ததோ அதே வெளித்திரும்பல் முதலீட்டுக்கணக்கினூடாக இலங்கைக்குள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

6. தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் ஒவ்வொருவரும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக ஒரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன்எல்லா வெளித்திரும்பல் முதலீட்டுக்கணக்குகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக ஒன்றுக்கு மேற்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றுடன் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளை திறப்பதற்கும் பேணுவதற்கும் தேவைப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் முதலீட்டாளர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக அந்தந்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினூடாக வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரிடமிருந்து விசேட அங்கீகாரம் ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

7. நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வதிவுள்ள எந்த ஆளுக்கு எதிராக குற்றவழக்கு அல்லது புலனாய்வுகள் தொடர்பிலான சட்டவழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றதோ அந்த ஆள் இவ்வட்டவணையின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு தகவுடையவராதல் ஆகாது.

8. எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்கள், பிரதிபலன் எதுவும் அனுமதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் தொடர்பில் செலுத்தப்பட்டிருக்காதவிடத்து இவ்வட்டவணையின் 2ஆம் பந்தியின் 1ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள் இன்றியும் வரையறைகளைப் பொருட்படுத்தாமலும் கடல்கடந்த கம்பெனி ஒன்றின் பங்குகளை கொள்ளலாம் மற்றும் வைத்திருக்கலாம்.

9. இவ்வட்டவணையின் 2ஆம் பந்தியில் 1ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகள் ஆனவை இலங்கையிலுள்ள கடல்கடந்த கம்பெனியின் கிளைகளை அல்லது அதன் துணைநிலைக் கம்பெனிகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடல்கடந்த கம்பெனி ஒன்றினால் முனையப்பட்ட ஊழியர் பங்குச் சொத்தாண்மைத்திட்டம் அல்லது ஊழியர்பங்கு விருப்பத்தெரிவு செய்திட்டத்தின் கீழ் அத்தனியாளுக்கு உரித்தாக்கப்பட்ட பங்குகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு தேவைப்படுத்துகின்றவரான தனியாளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது. இலங்கையில் தாபிக்கப்பட்ட துணைநிலைக் கம்பெனிகளிடமிருந்து அல்லது கிளைகளிலிருந்து பெரியளவிலான அனுப்புதொகை ஒன்றின் அடிப்படை மீது அத்தகைய கடல்கடந்த கம்பெனிக்கு மேலே குறிப்பிடப்பட்ட பங்குகளின் பெறுகைக்கான பிரதியபன் என்ற வகையாக வெளித்திரும்பல் அனுப்புதொகை ஒன்றைச் செய்வதற்கு ஏதேனும் தேவைப்பாடு இருப்பின், அத்தகைய நிதிக்கைமாற்றல்கள் சட்டத்தினால் தேவைப்படுத்துகின்றவாறு கொடுக்கல்வாங்கலை நல்லெண்ணத்துடன் திருப்திப்படுவதன் மேல் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் செய்யப்படலாம்.

10. தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் ஒருவர் இவ்வட்டவணையின் 2ஆம் பந்தியின் 1ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய இராமல் வெளித்திரும்பல் முதலீட்டு கணக்கிற்கு வரவுவைக்கப்பட்ட முன்னைய வெளித்திரும்பல் முதலீடுகளின் மூலதனப்பெறுகைகளின் பெறுமதியின் ஐம்பது சதவீதம் வரையான நிதிகளைப் பயன்படுத்தி மேலே இவ்வட்டவணையின் கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக முதலீடுகளை செய்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

11. இவ்வட்டவணையின் நோக்கத்திற்காக -

"மத்திய வங்கியானது" 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனை" என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டதும் அத்துடன் பங்குத்தொகுதி பரிவர்த்தனை ஒன்றாக தொழிற்படுவதற்கு 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனை எனப் பொருள்படும்;

"தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்" என்பது மேலே 2ஆம் பந்தியின் 1ஆம் பட்டியலின் 1ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் எனப் பொருள்படும்;

"ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டம் அல்லது ஊழியர்பங்கு விருப்பத'தெரிவு செய்திட்டம்" என்பது இலங்கையில் அதனது கிளையினை அல்லது துணை நிலைக்கம்பெனியினை சேர்ந்த ஊழியருக்கு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று எந்த திட்டம் அல்லது செயற்திட்டத்தின் கீழ் அதனது பங்குகளை அல்லது கம்பெனிகளின் குழுவின் பங்குகளை கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்குகின்றதோ அந்த திட்டம் அல்லது செயற்திட்டம் எனப் பொருள்படும்;

"பணச்சபை" ஆனது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அட்டவணை II

(ஒழுங்குவிதி 2 (ஆ))

## இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆள் ஒருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்படும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்

அ. அனுமதிக்கப்பட்ட முதலீடுகள்

1. இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், முதலீட்டு நிதியங்கள் மற்றும் பரஸ்பர நிதியங்கள் உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள் இலங்கையின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் பின்வரும் வகைகளில் ஈடுபடலாம். இது இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் அனுப்பு தொகையை தேவைப்படுத்துகின்றது.

(அ) இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின் கீழ் பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட தவிர்ப்புக்களுக்கு அமையவும் பந்தி 4இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமையவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளினால் வழங்கப்பட்ட (வழங்குநரினால் கூட்டுநடவடிக்கையின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர் மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள், உரிமை ஒன்றின்பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றம் உட்பட) எல்லா வகுப்பினதான பங்குகள் அல்லது பங்குகளிற்கான உரித்துடைமை என்பவற்றை முதலிடுதல் கொள்ளுதல் வைத்திருத்தல்;

(ஆ) இலங்கையில் கூட்டிணைக்கப்பாததும் கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டதுமான கம்பெனி ஒன்றில் எல்லா வகுப்பினதான பங்குகளை கொள்ளுதல் அல்லது வைத்திருத்தல்;

(இ) வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை ரூபாய்களில் (உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனிகள், விசேடித்த குத்தகைக்கம்பெனிகள் மற்றும் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள் மற்றும் கடல்கடந்த கம்பெனிகள் தவிர வேறு) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளிற்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு கடன்பிணையங்களில் முதலீடு செய்தல் மற்றும் கடன்களை வழங்குதல்;

(ஈ) இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளின் அங்கீகாரத்திற்கு அமைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனிகள், விசேடித்த குத்தகைக் கம்பெனிகள் என்பவற்றினால் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாய்களில் வழங்கப்பட்ட தனிசுப்பிணையங்களிற்கு கடன்வழங்கல் அல்லது தனிசுப்பிணையங்களில் முதலீடு செய்தல்;

(உ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில்உள்ள ஏற்பாடுகள் அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைய -

(i) கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களிலான கூறுகளிலான முதலீடு;

(ii) அரசாங்கப் பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்);

(iii) இலங்கையின் மத்திய வங்கியினாலும் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்டக் குழுவினாலும் வழங்கப்பட்ட பிணையங்கள்;

(iv) இலங்கை அபிவிருத்தி முறிகள் (இ.அ.மு.கள்);

(v) உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலுள்ள வைப்புக்கள்;

(vi) அசைவற்ற ஆதனங்கள்; அல்லது

(vii) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவையேனும் முதலீட்டு வகுதிகள்;

2. மேலுள்ள அ என்னும் தலைப்பின்கீழ் 1ஆம் பந்தியின் (அ) முதல் (ஊ) வரையான விடயங்களில் குறித்துரைக்கப்பட்டு பொறுப்பேற்கப்பட்ட எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்-

(அ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட மூலதன முதலீடுகளுக்கெனத் தேவைப்படுத்தப்படும் எல்லா நிதிகளும் அங்கீகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால், மத்திய வங்கியினால் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் திறந்து பேணப்பட்டுவரும் உட்திரும்பல் வெளிநாட்டுக்கணக்கொன்றினூடாகச் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும், முதலீடுகளைக் கையாளுவதிலிருந்தான வரும்படிகளும், முதலீடானது எந்த உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கினூடாகச் செய்யப்பட்டதோ, அந்த உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்;

(இ) (இவ்வொழுங்குவிதிகளின் IVஆம் அட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் 1ஆம்

உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான குடியகல்வோர் புறநீங்கலாக) இலங்கை நாட்டினத்தவரல்லாத ஆளொருவரிடமிருந்து, (IVஆம் அட்டவணையின் ஆ என்னும் தலைப்பின்கீழ் 1ஆம் பந்தியின் 1ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான குடியகல்வோர் புறநீங்கலாக) இலங்கை நாட்டினத்தவரல்லாத ஆளொருவருக்கு மரபுரிமை என்ற வகையாக மாற்றல்செய்யப்பட்ட எல்லா வருமானங்கள், (வழங்குநரால் செய்யப்படும் கூட்டிணைப்பு நடவடிக்கையொன்றின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர் மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள், உரித்துரிமையொன்றின் பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றுதல் உள்ளடங்கலாக), மேலுள்ள முதலீடுகளின் விற்பனை மீதான வரும்படிகள் என்பன இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதிக்கு முன்னர், முதலீடானது இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியுடன் இணங்கியொழுகி ஆரம்ப முதலீட்டாளரின் உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கினூடாக அல்லது பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக (உட்திரும்பல் முதலீட்டுக்கணக்காக மீளப்பெயர் குறிக்கப்பட்ட) உட்திரும்பல் அனுப்புத் தொகை என்ற வகையில் அல்லது வேறு ஏதேனும் கணக்கினூடாக செய்யப்பட்டிருப்பின் பயனுகரியினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கொன்றினூடாகத் திருப்பியனுப்பப்படலாம்.

(ஈ) இவ்வொழுங்குவிதி பயனுக்குவரும் திகதிக்கு முன்னர் செய்யப்பட்ட எல்லா வருமானங்களும், (வழங்குநரால் செய்யப்படும் கூட்டிணைப்பு நடவடிக்கையொன்றின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர்மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப் பின்னரான பங்குகள், உரித்துரிமையொன்றின் பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றுதல் உள்ளடங்கலாக) மேலுள்ள முதலீடுகளின் விற்பனை மீதான வரும்படிகள் என்பன, மூல முதலீட்டுக்கான உட்திரும்பல் அனுப்புதொகை பற்றிய சான்றுகளின் சமர்ப்பிப்புக்கமைய, முதலீட்டாளரால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகத் திருப்பியனுப்பப்படலாம். 2010, சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் செய்யப்பட்ட முதலீடுகளுக்கான முதலீட்டுக்குரிய உட்திரும்பல் அனுப்புதொகையின் சான்றுகள் இல்லாதபட்சத்தில், முதலீட்டின்

சொல்லப்பட்ட வரும்படிகளும் ஏதேனும் வருமானமும், அங்கீகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினாலான அடிப்படைக் கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணம் பற்றி திருப்தியுறுவதன் மேல், வதிவற்ற முதலீட்டாளரினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகத் திருப்பியனுப்பப்படலாம்.

(உ) முதலீட்டைப்பெறும் கம்பெனி, கம்பெனி செயலகங்கள் மற்றும் பங்குத்தரகர்கள், கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள், பரஸ்பர நிதியங்கள் அத்துடன் நிதி நிறுவனங்கள் உள்ளடங்கலாக எல்லா சந்தை இடைத்தரகர்களும் உட்பட, இவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட, மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுடன் ஈடுபடுகின்ற வதிவுள்ள உருவகங்கள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்கள் இவ்வட்டவணையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா தேவைப்பாடுகளுடனும் இணங்கியொழுகி அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நடாத்திச் செல்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகும்.

3. தவிர்ப்புக்கள்- இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் 1(அ) என்னும் உட்பந்தியின் கீழான அனுமதியானது, பின்வரும் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உத்தேசிக்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற கம்பெனியொன்றின் பங்குகள் தொடர்பில் ஏற்புடையதாகாது.

(அ) அடகு பிடித்தல்;

(ஆ) கரையோர மீன்பிடி;

(இ) இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆட்களினால் பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமொன்று, அத்தகைய முதலீட்டுக்குப் பின்னர் 05 மில்லியன் ஐ.அ.டொலரை விடக்குறைவாக இருக்குமிடத்து சில்லறை வியாபாரம்.

4. வரையறைகள்:

(1) இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் 1(அ) என்னும் பந்தியின் கீழான அனுமதியானது, பின்வரும் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற பங்குகள் தொடர்பில் அத்தகைய கம்பெனியின் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் 40 சதவீதம் வரை மாத்திரம் அல்லது ஏதேனும் கம்பெனியில் வெளிநாட்டு முதலீட்டின் உயர்வீதமொன்றுக்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் விசேட அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய உயர்வீதம் வரை மாத்திரம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(அ) சர்வதேச ரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பங்கு வரையறைகளுக்கமைய இலங்கையின் ஏற்றுமதிகள் உள்ளவிடத்து பொருட்களின் உற்பத்தி.

(ஆ) தேயிலை, இறப்பர், தென்னை, கொக்கோ, அரிசி, சீனி மற்றும் வாசனைத் திரவியங்களை வளர்த்தலும் ஆரம்பப் பதனிடலும்.

(இ) மீள்புதுப்பிக்கத்தகா தேசிய வளங்களின் அகழ்வும் ஆரம்பப்பதனிடலும்.

(ஈ) உள்ளூர் வெட்டுமரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் வெட்டுமரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்.

(உ) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சினால் வரையறுக்கப்பட்டவாறாக) ஆழ்கடல் மீன்பிடி.

(ஊ) வெகுசன தொடர்பாடல்.

(எ) கல்வி.

(ஏ) கப்பற்சரக்கு அனுப்புதல்.

(ஐ) பயண முகவர்கள்.

(ஒ) கப்பற்றொழில் முகவர்கள்.

(2) அனுமதியானது, கம்பெனியின் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் சதவீதம் வரை மாத்திரம், பின்வரும் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற கம்பெனியொன்றின பங்குகள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும் அதற்காக, அத்தகைய தொழில்களில் வெளிநாட்டு முதலீடுகளுக்கான அங்கீகரத்துக்காக இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதற்கென அமைக்கப்பட்ட எவரேனும் சட்ட அல்லது நிருவாக அதிகாரியினால் ஒன்றில் பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்-

(அ) வான் போக்குவரத்து;

(ஆ) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சினால் வரையறுக்கப்பட்டவாறாக) கரையோர கப்பற்றொழில்;

(இ) 1990ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிலுள்ள கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளான-

(i) ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிபொருட்கள், இராணுவ வாகனங்கள் மற்றும் உபகரணங்கள், வானூர்தி மற்றும் ஏனைய இராணுவ தளபாடங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(ii) நஞ்சுப்பொருட்கள், போதைப்பொருட்கள், மதுபானம், அபாயகர ஔடதங்கள் மற்றும் நச்சுத்தன்மையுடைய பொருட்கள், தீங்குவிளைவிக்கக்கூடிய அல்லது ஊக்க மருந்துப் பொருட்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(iii) நாணயத்தாள்கள், நாணயக்குற்றிகள் அல்லது பாதுகாப்பு ஆவணங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(ஈ) பாரியளவில் இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு;

(உ) லொத்தர்கள்

5. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அ என்னும் தலைப்பின் கீழான ஏற்பாடுகளைப் பொருள்கோடல் செய்வதில் ஏற்புடையற்பாலதான பொது நெறி என்பது, மூல முதலீடு இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் அனுப்பு தொகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டிருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எவையேனும் மூலதன ஈட்டுகைகள் உள்ளடங்கலாக, இப்பந்திகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட முதலீடுகளின் கையுதிர்ப்பிலிருந்து எழுகின்ற வருமானத்தையும் வரும்படிகளையும் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வெளியே திருப்பியனுப்புதல் வேண்டும் என்பதாக இத்தால் வெளிப்படுத்துகின்றது. முதலீட்டாளரொருவர், இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்ட நடவடிக்கைமுறையான

தேவைப்பாடுகளிலிருந்து விலகிச்செல்லுகின்றவிடத்து, மத்திய வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அதற்குச்செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மேலும் அவ்விண்ணப்பத்தின் நல்லெண்ணத்தில் திருப்தியுற்றதன் மேலும் இந்நெறிகளுடன் இசைந்தொழுகி முதலீட்டாளர் ஒருவரால் செய்யப்படும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகளை அதிகாரமளிக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(ஆ) இலங்கையில் தொழிலிடமொன்றை ஆரம்பித்தலும் தொழிற்படுத்தலும்**

1. (1) இரண்டாயிரத்து எழாம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்று இலங்கையில் பின்வருவனவற்றைக் கொண்டுநடாத்தலாம்-

   (அ) இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின்கீழ் 2ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் தவிர, ஏதேனும் வர்த்தக, வியாபார அல்லது கைத்தொழில் செயற்பாடு ஆயின் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின்கீழ் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கான வெளிநாட்டு முதலீடுகளுக்காக அங்கீகாரம் வழங்குவதற்கெனத் தாபிக்கப்பட்ட ஏதேனும் சட்ட அல்லது நிருவாக அதிகாரியிடமிருந்து முன்னனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

   (ஆ) இணைப்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம், பிராந்திய அலுவலகம் அல்லது அதனையொத்த வேறு அலுவலகமொன்றினால் பொறுப்பேற்கப்பட்ட அல்லது கொண்டுநடாத்தப்பட்ட செயற்பாடுகள் போன்ற ஏதேனும் வர்த்தகஞ்சாரா, வியாபாரஞ்சாரா அல்லது கைத்தொழில்சாரா செயற்பாடு ஆயின், அத்தகைய செயற்பாடுகள் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் வருமானத்தைக் கம்பெனிக்கு வழங்குதலாகாது.

   (2) மேலே குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைப் பொறுப்பேற்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்று பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்-

   (அ) கிளை அலுவலகம், கருத்திட்ட அலுவலகம் அல்லது வேறு அதனையொத்த அலுவலகம் போன்ற தொழிலிடமொன்றின் விடயத்தில், கடல்கடந்த கம்பெனியின் கணக்கில் வரவு வைப்பதற்கென இலங்கையிலுள்ள அங்கீகாரம் பெற்ற அனுமதியளிக்கப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட அனுப்பு தொகைகளிலிருந்து ஆகக்குறைந்தது 200,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை (ஐ.அ.டொ) அல்லது வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை முதலீடு செய்தலும் அத்துடன் சொல்லப்பட்ட அனுப்பு தொகையின் எண்பிப்புக்கான சான்றை பதிவுசெய்யப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் கம்பெனிகள் பதிவாளர் திணைக்களத்துக்கு வழங்குதலும்.

   (ஆ) இணைப்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம் அல்லது வேறு அதனையொத்த அலுவலகம் போன்ற தொழிலிடமொன்றின் விடயத்தில், அத்தகைய தொழிலிடத்தை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான நிதிகளை, கடல்கடந்த கம்பெனியின் கணக்கில் வரவுவைப்பதற்கென இலங்கையிலுள்ள அங்கீகாரம்பெற்ற அனுமதியளிக்கப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக அனுப்புதல்.

   (3) மேலுள்ள (1)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்று, எந்த மார்க்கத்தினூடாக அதன் இலாபம், அரசுரிமைப்பணம், நடத்துரிமம் அல்லது வேறு அதனையொத்த கொடுப்பனவுகள் அல்லது மேன்மிகை நிதிகள், நிகரவரி என்பன அனுப்பப்பட்டதோ அந்த மார்க்கத்தினூடாக அவற்றை தாய்க்கம்பெனியின் உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கிற்கு இலங்கையிலிருந்து அனுப்பிவைக்கலாம்.

2. இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் 1(அ) என்னும் உட்பந்தியின் நோக்கத்திற்காக, பின்வரும் வர்த்தக, வியாபார மற்றும் கைத்தொழில் செயற்பாடுகள் கடல்கடந்த கம்பெனியொன்றினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

   (அ) (1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் தவிர) பணம் கடன்கொடுத்தல்;
   (ஆ) அடகு பிடித்தல்;
   (இ) மூலதனம் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களினால் பங்களிப்புச் செய்யப்பட்டும், அத்தகைய முதலீட்டின் பின்னர் 5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறைவாகவும் இருக்குமிடத்து சில்லறை வியாபாரம்;
   (ஈ) கரையோர மீன்பிடி/ தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் அரிசி என்பவற்றின் ஆரம்பப் பதனிடுகை;
   (உ) தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் அரிசி என்பவற்றை வளர்த்தலும் ஆரம்பப் பதனிடுதலும்;
   (ஊ) மீள்புதுப்பிக்கத்தகா தேசிய வளங்களின் அகழ்வும் ஆரம்பப் பதனிடுதலும்
   (எ) கப்பற்சரக்கு அனுப்புதல்;
   (ஏ) கப்பற்றொழில் முகவர்தொழில்;
   (ஐ) பாரியளவில் இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு; மற்றும்
   (ஒ) லொத்தர்கள்.

3. இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் 1(அ) என்னும் உட்பந்தியின் நோக்கத்துக்காக, பின்வரும் செயற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தின் அல்லது வெளிநாட்டு முதலீடுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கென தாபிக்கப்பட்ட ஏதேனும் சட்ட அல்லது நிருவாக அதிகாரியின் முன்னனுமதியுடன் கொண்டுநடாத்தப்படுவதற்கென அனுமதிக்கப்பட்டுள்ளன -

   (அ) சர்வதேச ரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பங்கு வரையறைகளுக்கமைய இலங்கையின் ஏற்றுமதிகள் உள்ளவிடத்து பொருட்களின் உற்பத்தி;

   (ஆ) சீனி, கொக்கோ மற்றும் வாசனைத் திரவியங்களை வளர்த்தலும் ஆரம்பப் பதனிடுதலும்;

   (இ) உள்ளூர் வெட்டுமரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும், வெட்டுமரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்;

   (ஈ) ஆழ்கடல் மீன்பிடி;

(உ) வெகுசன தொடர்பாடல்;

(ஊ) கல்வி;

(எ) வெளிநாடு செல்லும் பயண முகவர்தொழில்;

(ஏ) உள்ளூர் விமானப் போக்குவரத்து;

(ஐ) பின்வருவனவற்றை உற்பத்தி செய்யும் அல்லது தயாரிக்கும் ஏதேனும் கைத்தொழில்-

(i) ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிபொருட்கள், இராணுவ வாகனங்கள் மற்றும் உபகரணங்கள், வானூர்தி மற்றும் ஏனைய இராணுவ தளபாடங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்;

(ii) நஞ்சுப்பொருட்கள், போதைப்பொருட்கள், மதுபானம், அபாயகர ஔடதங்கள் மற்றும் நச்சுத்தன்மையுடைய பொருட்கள், தீங்குவிளைவிக்கக்கூடிய அல்லது ஊக்க மருந்துப்பொருட்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்; மற்றும்

(iii) நாணயத்தாள்கள், நாணயக்குற்றிகள்அல்லது பாதுகாப்பு ஆவணங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

4. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, ஆ என்னும் தலைப்பின் கீழான ஏற்பாடுகளைப் பொருள்கோடல் செய்வதில் ஏற்புடையற்பாலதான பொது நெறி என்பது, மூல முதலீடு இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் அனுப்பு தொகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டிருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எவையேனும் மூலதன ஈட்டுகைகள் உள்ளடங்கலாக, இப்பந்திகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட முதலீடுகளின் கையுதிர்ப்பிலிருந்து எழுகின்ற வருமானத்தையும் வரும்படிகளையும் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வெளியே திருப்பியனுப்புதல் வேண்டும் என்பதாக இத்தால் வெளிப்படுத்துகின்றது. முதலீட்டாளரொருவர், இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்ட நடவடிக்கைமுறையான தேவைப்பாடுகளிலிருந்து விலகிச்செல்லுகின்றவிடத்து, மத்திய வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மேலும் அவ்விண்ணப்பத்தின் நல்லெண்ணத்தில் திருப்தியுற்றதன் மேலும் இந்நெறிகளுடன் இசைந்தொழுகி முதலீட்டாளர் ஒருவரால் செய்யப்படும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகளை அதிகாரமளிக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. இவ்வட்டவணையின் நோக்கத்துக்காக-

“மத்திய வங்கி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள்” என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனி” என்பது, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழான நிதிக்கம்பெனி எனப்பொருள்படும் “உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனம்” என்பது, பின்வருமாறு பொருள்படும்-

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(இ) 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி;

(ஈ) விசேடித்த குத்தகைக்கம்பெனி; அல்லது

(உ) உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனி

“அமைச்சர்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டதிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“பணச்சபை” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“கடல்கடந்த கம்பெனி” என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“விசேடித்த குத்தகைக்கம்பெனி” என்பது, நிதிக்குத்தகைத்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கென 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக்குத்தகைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனி எனப்பொருள்படும்;

“இலங்கை அபிவிருத்தி முறிகள்” என்பது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொது தனிசுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட, ஐக்கிய அமெரிக்க டொலர்களில் வகுப்பினப்படுத்தப்பட்ட கடன் சாதனமொன்று எனப்பொருள்படும்.

## அட்டவணை III

(ஒழுங்குவிதி 2(இ))

### நீக்கப்பட்ட செலாவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட ஏதேனும் (பொது அல்லது விசேட) அங்கீகாரத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்.

இவ்வொழுங்குவிதிகளின் I, II மற்றும் IVஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை ஒத்ததாகவுள்ள, நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான, ஏலவேயுள்ள எல்லா கொடுக்கல்வாங்கல்களும், இவ்வொழுங்குவிதிகளால் அல்லது எவையேனும் அடுத்துப் பின்னரான ஒழுங்குவிதிகளால் வேறுபடுத்தப்பட்டாலொழிய, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கெனக் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமமைய தொடர்ந்திருக்கலாம்.

அட்டவணை IV

(ஒழுங்குவிதிகள் 2(2) மற்றும் 4)

## வேறு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்

கீழே இவ்வட்டவணையின் அ முதல் ஏ வரையிலான தலைப்புக்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வேறு மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது இந்நோக்கத்துக்கென ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினூடாகப் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

**அ. இலங்கைக்கு வெளியே வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்பட்ட அசைவற்ற ஆதனங்களின் (காணி மற்றும் கட்டடங்கள்) விற்பனை வரும்படிகளைத் திருப்பியனுப்புதல்**

1. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று, அத்தகைய கொடுப்பனவுகள், பின்வரும் நோக்கங்களுக்காகவும் இலங்கையில் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதல், சொந்தமாக வைத்திருந்தால் மற்றும் உடைமைகொள்ளுதல் என்பவற்றுக்கு இலங்கைக்கு வெளியே வதிகின்ற அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரரால் அல்லது மரபுரிமையாளரால் இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தின்விற்பனை தொடர்பில் செலுத்தப்படற்பாலதான பிரதிபயனாக அமைகின்றவிடத்து, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் இலங்கை ரூபாவில் செலுத்தப்பட்ட மூலதன ஈட்டுகைகள், எவையேனுமிருப்பின், உள்ளடங்கலான விற்பனை வரும்படிகளை திருப்பியனுப்புவதற்கு அனுமதியளிக்கப்படுகின்றன -

   (அ) அசைவற்ற ஆதனத்தின் மூலக்கொள்ளுதலானது உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருப்பின், சொந்தக்காரரின் அல்லது மரபுரிமையாளரின் உட்திரும்பல் முதலீட்டுக்கணக்கொன்றில் வரவு வைத்தல்.

   (ஆ) அத்தகைய ஆதனத்தின் மூலக்கொள்ளுதல் மற்றும் அபிவிருத்திக்கான உட்திரும்பல் அனுப்புதொகையின் (சொந்தக்காரரால் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதல் செய்யப்படுவதை வசதிப்படுத்திய, இலங்கையிலுள்ள மூன்றாம் திறத்தவரொருவரின் கணக்கொன்றுக்கு அச்சொந்தக்காரரால் அனுப்பப்பட்ட நிதிகள் உட்பட) எண்பிப்பை நிச்சயப்படுத்தியதன்மேல், சொந்தக்காரரால் அல்லது மரபுரிமையாளரால் இலங்கைக்கு வெளியே பேணப்படுகின்ற கணக்கொன்றில் வரவு வைத்தல்.

**ஆ. புலம்பெயர்ந்தோர் கைமாற்றங்கள்**

1. (1) இலங்கையில் வதிவுள்ளவொருவராக இருக்கின்றதும், இரட்டைப்பிரசாவுரிமை உட்பட, இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவுரிமை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுக்கொள்ளதுமான, இதனகத்துப்பின்னர் குடியகல்ந்தவரெனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நாட்டினத்தவரொருவர், புலம்பெயர்படிகளுக்குத் தகுதியுடையவராவார் அது அசைவுள்ள மற்றும்அசைவற்ற ஆதனங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வரும்படிகள், குடியகல்ந்தவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் மற்றும் வாழ்க்கைத்துணையிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் குடியகல்ந்தவரால் பெறப்பட்ட அன்பளிப்புக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களானவை, விலைமதிப்பற்ற இரத்தினக்கற்கள், விலைமதிப்பற்ற உலோகங்கள், தனிப்பட்ட ஆபரணங்கள் என்பவற்றின் பெறுமதியையும் அத்துடன் பயனுகரிகள் என்றவாறாக மரபுரிமைவழிவந்த மரணச்சொத்துக்கள் உட்பட இலங்கையில் வைத்திருக்கப்பட்ட வேறு சொத்துக்களையும் உள்ளடக்குகின்றது.

   (2) பின்வரும் வரையறைகள், மேலுள்ள ஆ என்னும் தலைப்பின் (1)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்-

      (அ) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தனியாள் ஒருவருக்கு ஐ.அ.டொலர் 200,000 கொண்ட ஆரம்பப்புலம்பெயர்படியொன்று

      (ஆ) ஐ.அ.டொலர் 30,000 கொண்ட வருடாந்த புலம்பெயர்படி ஆரம்பப்படியான ஐ.அ.டொலர் 200,000 முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து 12 மாதங்கள் கடந்த பின்னர், முதலாவது அத்தகைய வருடாந்தப் படி கைமாற்றத்தக்கதாகும். முதலாவது படிக்கு புறநீங்கலாக, அடுத்துப்பின்னரான படிகள் பஞ்சாங்க ஆண்டொன்றுக்கு கைமாற்றத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய ஒன்றுதிரளுகையில் கைமாற்றப்பட முடியுமாக இருத்தலும் வேண்டும்.

      (இ) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய, இலங்கையிலுள்ள மரபுவழி ஆதனத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வரும்படிகள் என்றவாறாக, வெளிநாட்டு நாட்டினத்தவர்கள் தொடர்பிலான ஐ.அ.டொலர் 30,000 கொண்ட வருடாந்தப்படியொன்று.

   (3) புலம்பெயர்படியானது, அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடம் அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றிடம் திறக்கப்பட்ட, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு (மூ.கொ.ரூ.க) ஒன்றினூடாக வெளியில் அனுப்பப்படுதல் வேண்டும்.

   (4) அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினால் அங்கீகாரமளிக்கப்பட்டவாறான தகுதியுடைய புலம்பெயர்படியானது, மூலதனக் கொடுக்கல்வாங்கல் கணக்கிலிருந்து விண்ணப்பகாரரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு மற்றும்/ அல்லது இலங்கையிலுள்ள உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் குடியகல்ந்தவரின் கணக்கொன்றுக்கு மாற்றப்பட முடியும்.

   (5) (வட்டி, பங்கிலாபங்கள், ஓய்வூதியங்கள், வாடகை, குத்தகை வாடகைகள் மற்றும் இலாபங்கள் உள்ளடங்கலான) நடைமுறை வருமானம் அத்துடன் (ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஊ.ந.நி) மற்றும் பணிக்கொடை போன்ற) ஓய்வுகால தன்மைகள், மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபா கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவை, புலம்பெயர்படிக்கு

மேலதிகமாக, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக்கணக்கிற்கு மற்றும்.'. அல்லது இலங்கையிலுள்ள உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே குடியகல்ந்தவரினால் பேணப்படும் கணக்கொன்றிற்கு மாற்றப்பட முடியும்.

2. இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட குடியகல்ந்தவர்கள் மற்றும்/ அல்லது வெளிநாட்டவர்களுக்கென, வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட மரபுவழிச்சொத்துக்களின் வரும்படிகள்/ வருமானம், எவையேனுமிருப்பின், அவற்றை வரவுவைக்கும் நோக்கத்திற்காக அத்தகைய ஆட்கள், ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**இ. இலங்கைக்கு வெளியே வதிபவர்களுக்கு இலங்கையில் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்**

அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று, கீழே தரப்பட்டுள்ளவாறான ஆட்களின் வகுதியினருக்கு குறித்தசில நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தில்அல்லது இலங்கை ரூபாவில் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கலாம்.

1. இன்னொரு நாட்டில்நிரந்தர வதிவுரிமை (நி.வ) விசாவில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்களும் இரட்டைப்பிரசாவுரிமையைக் கொண்டுள்ள பிரசைகளும்.

(1) கடன்கள், இலங்கையிலுள்ள வதிவிட ஆதனமொன்றின் கொள்ளல/ நிர்மாணித்தல/ அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைத்தல் நோக்கத்திற்காக, வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் வழங்குப்படுதல் வேண்டும்.

(2) வெளிநாட்டு நாணயக் கடன்கள், கடன்பெறுநர் கடனைத் திருப்பிச்செலுத்துவதற்கு வெளிநாட்டு நாணய உழைப்புக்களைக் கொண்டிருப்பின் மாத்திரமே வழங்கப்படுதல் வேண்டும்.

(3) கடன்பெறுநர், கடன் வரும்படிகளை வதிவிட ஆதனத்தை விற்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளுக்குக் கைமாற்றக் கோரினாலேயொழிய, கடன் வரும்படிகள் இலங்கை ரூபாவிலேயே பிரித்துக் கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(4) வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன்கள், வெளிநாட்டு நாணய உட்திரும்பல் அனுப்பு தொகைகள் மூலம் அல்லது, கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலும் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலும் கிடைக்கப்படற்பாலதானதாகவுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன்கள், வெளிநாட்டு நாணய உட்திரும்பல் அனுப்புதொகைகள் மூலம் அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலும் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலும் கிடைக்கப்படற்பாலதானதாகவுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் கடன்பெறுநரின் இலங்கை ரூபா உழைப்புக்களைப் பயன்படுத்துவதன் மூலமும் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) (தவறுகையின்) இலங்கை ரூபாவிலான வெளிநாட்டு நாணயக் கடன்களின் அறவிடுதல்களானவை, (திருத்தப்பட்டவாறான) 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க, ஆகக்குறைந்தது கீழ் நிலைக்கடன்வகுதியில் செயல்நிறைவேற்றப்படாதவாறாக வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதான அத்தகைய கடன்களின் ஒரு கட்டத்தில் மாத்திரமே பின்வருமாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும்:

(அ) முதலாவதாக, கடன்பெறுநரின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களுக்கூடாக

(ஆ) இரண்டாவதாக, ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வேறு உள்நாட்டுச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து தேறிப்பெறப்படும் வரும்படிகளுக்கூடாக

(இ) இறுதி எதிருரையாக, இலங்கை ரூபாவிலான வரும்படிகள், ஏதேனும் எஞ்சியுள்ள கடன் மீதிகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற தொகையின் அளவு வரை மாத்திரம் மாற்றப்படுதல் வேண்டும்.

2. (குடியகல்ந்தவர்கள் தவிர) வெளிநாட்டில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள இலங்கையர்கள்

(1) இலங்கையில் ஏதேனும் நோக்கத்துக்காக, கடன்களும் முற்பணங்களும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் பெறப்படுதல் வேண்டும். ஆயின் கடன் பெறுனர் அத்தகைய கடன்களை வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய கடன்களை வழங்குவதற்கு முன்னர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று அத்தகைய கடனின் கடன் ஆபத்தை மதிப்பிடுதல் வேண்டும்.

(3) வெளிநாட்டு நாணயத்திலான/ இலங்கை ரூபாவிலான கடன்களும் முற்பணங்களும், இறையிலிப்பற்று ஆதனம் (காணி மற்றும்கட்டடங்கள்) மீதான ஓர் ஈட்டு வடிவத்தில் அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்கள்/ சொத்துக்கள் மீதான சோந்தை வடிவத்தில் போதுமானளவு பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டதன் மேல் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) கடன்களின் காலமானது, கடன்பெறுநரின் வெளிநாட்டுத் தொழில் நிகழக்கூடிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கடன்கள், வங்கிகளால் வழமையாகப் பின்பற்றப்படுகின்ற நடவடிக்கை முறைகளுக்கிணங்க பிரித்துக்கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(5) கடன்பெறுநர், வெளிநாட்டு நாணயக்கடன் வரும்படிகளை வதிவிட ஆதனத்தை விற்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் பேணப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குக் கைமாற்றக்கோரினாலேயொழிய, கடன் வரும்படிகள் இலங்கை ரூபாவிலேயே பிரித்துக் கொடுக்கப்படுதல் வேண்டும் ஆயின், அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ளனர்.

(6) வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன்கள், உட்திரும்பல் அனுப்புதொகைகள் அல்லது கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள மீதி மூலமாக வெளிநாட்டு நாணயத்தில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன்கள், கடன்பெறுநர் நாட்டுக்கு வெளியே வேலைக்கமர்த்தப்பட்டுள்ள காலம் வரை, சொல்லப்பட்ட கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் கிடைக்கப்படற்பாலனவாகவுள்ள நிதிகளிலிருந்து மாத்திரம் அளிக்கப்படுதல் வேண்டும் இக்கடன்கள், கடன்பெறுநர் கடல்கடந்த வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தை முடித்துக் கொண்ட பின்னர் இலங்கைக்குத் திரும்பி வந்திருப்பின் மாத்திரம் அக்கடன்பெறுநருக்கு இலங்கை ரூபாவில் அளிக்கப்படலாம்.

(8) (தவறுகையில்) இலங்கை ரூபாவிலான வெளிநாட்டு நாணயக் கடன்களின் அறவிடுதல்களானவை, (திருத்தப்பட்டவாறான) 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க, ஆகக்குறைந்தது கீழ்நிலைக்கடன் வகுதியில் செயல்நிறைவேற்றப்படாதவாறாக வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதான அத்தகைய கடன்களின் ஒரு கட்டத்தில் மாத்திரமே பின்வருமாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும்:

(அ) முதலாவதாக, கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக்கணக்குகளில் உள்ள வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்/ வைப்புக்கள்/ மீதிகளுக்கூடாக;

(ஆ) இரண்டாவதாக, கடன்பெறுநரின் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வேறு உள்நாட்டுச்சொத்துக்களின் விற்பனையிலிருந்து தேறிப்பெறப்படும் வரும்படிகளுக்கூடாக; அத்துடன்

(இ) இறுதி எதிருரையாக, இலங்கை ரூபாவிலான வரும்படிகள், ஏதேனும் எஞ்சியுள்ள கடன்மீதிகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற தொகையின் அளவு வரை மாத்திரம் மாற்றப்படுதல் வேண்டும்.

**ஈ. கடல்கடந்த நாடொன்றில் கல்வியைத் தொடர்கின்ற இலங்கை மாணவர்களினால் பெறப்படும் கடன்பெறுகைகள்**

1. கல்விசார் நோக்கத்துக்கென இலங்கைக்கு வெளியே சென்றுள்ள எவரேனும் இலங்கைப்பிரசை, வெளிநாட்டில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும்பொழுது கற்றல்/ வாழ்க்கைச்செலவுகளை எதிர்கொள்வதற்கென வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுவதற்கும் அத்துடன், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினூடாக இலங்கையிலிருந்து நிதிகளை அனுப்புவதன் மூலம் அத்தகைய கடன்களைத் திருப்பிச்செலுத்துவதற்கும், அனுமதியளிக்கப்பட்டுள்ளார்.

2. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியொன்று அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் விசேடித்த வங்கியொன்று, கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணத்தைச் சரிபார்த்த பின்னர், கல்விசார் நோக்கத்துக்கென இலங்கைக்கு வெளியே சென்றுள்ள அத்தகைய இலங்கைப் பிரசைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களினால் சொல்லப்பட்ட கடன்கள் திருப்பிச்செலுத்தப்படுவதற்கென அந்தந்தக் கடன் கொடுக்கும் நிறுவனங்களுக்கு உட்திரும்பல் அனுப்பு தொகைகளைச் செய்யலாம்.

**உ. நிதிசார் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி அத்தகைய அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் நல்லெண்ணம் பற்றி திருப்தியுற்றதன் பின்னர், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட நடப்புக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் (அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள்) தொடர்பிலான நிதிசார் பெறுதித்திட்டங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

**ஊ. பண்டங்களின் ஏற்றுமதியாளர்களால் இலங்கைக்கு ஏற்றுமதி வரும்படிகள் திருப்பியனுப்பப்படுதல்**

1. பண்டங்களின் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரும், பண்டங்களின் ஏற்றுமதிக்காகப் பெறப்பட்ட கொடுப்பனவுகளை, ஏற்றுமதித் திகதியிலிருந்து 120 நாட்களுக்குள் இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.
2. நூற்றியிருபது நாட்கள் முடிவடைந்ததன் பின்னர், மேலுள்ள தேவைப்பாட்டின் எவையேனும் மீறல்களுக்கெதிராக ஏதேனும் வழக்கைத்தொடுக்கும் முன்னர் 30 நாட்களைக் கொண்ட பிரிவுக்காலப்பகுதியொன்று இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படலாம்.
3. பண்டங்களின் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு ஏற்றுமதியின் மீதான தொடர்புடைய ஆவணச்சான்றை கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் அந்தந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அல்லது ஒழுங்குவிதி 2இன் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**எ. இலங்கையில் வதியும் ஆளொருவர் வதியாதவர் சார்பில் நிதியியல் உத்தரவாதங்களை வழங்குதல்**

1. வங்கி உத்தரவாதங்கள், முறிகள் அல்லது துணைநில்கடன் பத்திரங்கள்.

(1) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கிகளிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் வங்கி உத்தரவாதங்கள் முறிகள் அல்லது துணைநிலை கடன்பத்திரங்கள் வழங்குவதற்கும் புதிப்பிப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றது -

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளின் அட்டை நிலையங்கள் சார்பில் உறுப்பாண்மை மீதான உறுப்பினர்களின் கடப்பாடுகள் பற்றிய கொடுப்பனவுகளையும் விசா செலவின் மீள்பெறுவனவையும் பிணையளிப்பதற்கு பிணையுறுதியாக வங்கி உத்தரவாதங்கள்

(ஆ) கேள்விப்பத்திரம் விலைகோரல் அல்லது ஒப்பந்தத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரினால் பொறுப்பேற்கப்பட்ட கடல்கடந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவரின் சார்பில் இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரின் சார்பாக வழங்குவதற்கு தேவைப்படும் விலைகுறிப்பிட்ட முறிகள்,

செயலாற்றுகை முறிகள், முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள் சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக தேவைப்படும் வேறு ஏதேனும் உத்தரவாதங்கள் ஒப்பந்தமொன்றுக்கு ஆகக்கூடியது மில்லியன் அமெரிக்க டொலர் வரையறை வரை வழங்கப்படல் வேண்டும்.

(இ) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டவாறு உரிமமளிக்கப்பட்டவாறு உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியாக உரிமமளிக்கப்பட்ட வா்த்தக வங்கிக்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாதான மதிப்பீட்டுடன் இலங்கைக்கு வெளியே புகழ்பூத்த சா்வதேச வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட இலங்கைக்கு வெளியே வதிவுள்ளவராகவுள்ள முதன்மைக் கடப்பாட்டாளரிடமிருந்து ஒத்த பதங்கள் மீது எதிா்உத்தரவாதம் ஒன்றைப் பெறுவதற்கு அமைய இலங்கையில் ஒப்பந்தமொன்று தொடா்பில் இலங்கையில் வதிவுள்ள ஆள்சாா்பில் இலங்கைக்கு வெளியே வதிகின்றவரான முதன்மைக் கடப்பாட்டாளா் ஒருவா் சாா்பிலான ஒரு உத்தரவாதம்

(ஈ) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி ஒன்றாக உரிமமளிக்கப்பட்ட வா்த்தக வங்கிக்கு ஏற்புடையற்பாலதான மதிப்பீட்டுடன் இலங்கைக்கு வெளியே புகழ்பூத்த சா்வதேச வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட இலங்கைக்கு வெளியே வதியுள்ள முதன்மைக் கடப்பாட்டாளரிடமிருந்து ஒத்த பதங்கள்மீது எதிா்உத்தரவாதத்தை பெறுவதற்கு அமைய இலங்கையிலுள்ள முகவரின் வேண்டுகோளின் படி இலங்கையிலுள்ள ஒப்பந்தம் தொடா்பில் இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரின் சாா்பாக முதன்மைக்கடப்பாட்டாளா் இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவராக இருக்கும் பட்சத்தில் அத்துடன் உத்தரவாதம் ஒன்று இலங்கையில் அவரது முகவரியினால் வழங்கப்பட வேண்டியதாக இருக்கும் பட்சத்திலும் உள்ள உத்தரவாதம் ஒன்று

(உ) இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்று (முதலீட்டாளா்), இலங்கைக்கு வெளியே கூட்டிணைப்புச் செய்யப்பட்ட எக்கம்பெனியில் சொல்லப்பட்ட முதலீட்டாளா் பங்குதாரரொருவராகவுள்ளாரோ அக்கம்பெனி (முதலீடுபெறுபவா்), நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி முதலீட்டைச் செய்திருப்பின், அம்முதலீடு பெறுபவா், ஐ.அ.டொலா் 1,000,000 என்னும் ஆகக்கூடிய வரையறைக்கமைய கூட்டிணைப்புச் செய்யப்பட்ட நாட்டிலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலச் செய்வதற்கான வங்கி உத்தரவாதமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில் செய்யப்படும் ஓா் உத்தரவாதம் உத்தரவாதப் பெறுமதியானது, கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் சொல்லப்பட்ட முதலீடு பெறுபவரிடத்திலுள்ள முதலீட்டாளரின் பங்குரிமை நூற்றுவீதத்துக்கான விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(ஊ) இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்று (முதலீட்டாளா்), எந்த நாட்டில் அதன் கிளையைத் தாபித்துள்ளதோ அந்த நாட்டிலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கென சொல்லப்பட்ட முதலீட்டாளரால் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட அக்கிளையை இயலச் செய்வதற்கான வங்கி உத்தரவாதமொன்றை வழங்குமாறு தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், முதலீடானது, நீக்கப்பட்ட செலாவணி சட்டத்தினதோ அல்லது இச்சட்டத்தினதோ ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி முதலீட்டாளரால் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட கிளையொன்றில் செய்யப்பட்டிருப்பின், சொல்லப்பட்ட கிளையொன்றுக்கு ஐ.அ.டொலா் 500,000 வரையான உத்தரவாதமொன்று வழங்கப்படலாம்.

(எ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவா், ஒப்பந்தகாரரொருவராக இலங்கையில் கருத்திட்டமொன்றைப் பொறுப்பேற்கின்ற பட்சத்திலும் இலங்கையில் வதிகின்ற ஆளொருவா் கீழொப்பந்தகாரரொருவா் என்ற ஆற்றலில், சொல்லப்பட்ட ஒப்பந்தக்காரா் சாா்பில் உத்தரவாதமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்திலும், விலைகூறல் முறிகள், செயல்நிறைவேற்றுகை முறிகள், முற்பணக்கொடுப்பனவு உத்தரவாதங்கள் என்பவற்றை கேள்விமனு அல்லது விலைமனுவில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய வழங்கலாம். சொல்லப்பட்ட நோக்கத்துக்கென தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் வேறு உத்தரவாதங்கள், ஒப்பந்தமொன்றுக்கு ஆகக்கூடிய வரையறை ஐ.அ.டொலா் 1,000,000 வரையில் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஏ) இரு திறத்தவா்களுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றுக்கமைய (முகவா் உடன்படிக்கை), இலங்கைக்கு வெளியே கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்றின் (முதல்வா்) முகவரொருவராக, இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்று தொழிற்படும் பட்சத்தில் உத்தரவாதமொன்று, சொல்லப்பட்ட முகவா் ஒப்பந்தத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஐ.அ.டொலா் 2,000,000ஐக் கொண்ட ஆகக்கூடிய தொகையொன்றுக்கு முதவல்வருக்கு ஆதரவாக முகவா் சாா்பில் வழங்கப்படுதல் வேண்டும்.

2. கூட்டிணை உத்தரவாதங்கள்

(1) முதலீடு பெறுநா் கூட்டிணைக்கப்பட்டுள்ள நாட்டில் நிதிநிறுவனங்களிலிருந்து வசதிகளைத் திரட்டுவதற்கு, சொல்லப்பட்ட முதலீட்டாளா் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட எக்கம்பெனியில் பங்குதாரரொருவராகவுள்ளாரோ அக்கம்பெனியை (முதலீடுபெறுநா்) இயலச்செய்வதற்கு, கூட்டிணை உத்தரவாதமொன்றை வழங்குமாறு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று (முதலீட்டாளா்) தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று, முதலீடானது, நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி சொல்லப்பட்ட முதலீடு பெறுநரில் செய்யப்படும் அத்துடன் கம்பெனியின் நிதிசாா் பலமானது கூட்டிணை உத்தரவாதத்தின் பொறுப்பினை மீட்பதற்கு போதுமானதாகவிருப்பின், ஐ.அ. டொலா் 1,000,000 என்னும் ஆகக்கூடிய வரையறைக்கமைய கூட்டிணை உத்தரவாதமொன்றை வழங்குவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் கம்பெனியின் பணிப்பாளா்கள் சபையானது, கூட்டிணை உத்தரவாதத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் எதிா்பாராத பொறுப்பை எதிா்கொள்வதற்கான நிதிசாா்பலத்தை கம்பெனி கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். உத்தரவாதப் பெறுமதியானது, கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் சொல்லப்பட்ட முதலீடு பெறுநரில் முதலீட்டாளருக்குள்ள பங்குரிமையின் நூற்றுவீதத்தின் விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனிகள், மேலுள்ள அனுமதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு கூட்டிணை உத்தரவாதம் பற்றிய விபரங்களை (கூட்டிணை உத்தரவாதத்தினதும் இயைபான சபைத் தீா்மானத்தினதும் பிரதிகள்), சொல்லப்பட்ட உடன்படிக்கை பயனுக்குவரும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

3. மேலே 1ஆம் மற்றும் 2ஆம் பந்திகளின் நோக்கத்திற்காக -

(அ) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2)ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பில் வலிதான கோரிக்கைகளிலிருந்து எழுகின்ற வெளித்திரும்பல் அனுப்பு தொகைகளைச் செய்வற்கு அனுமதிக்கப்பட்டதும் ஆகும். அத்துடன் ஆகக்கூடிய கோரிக்கை வரையறையானது அடிப்படை வசதியின் நிலுவையான கடப்பாடுகளிற்கு விகிதாசாரமான முறையில் அல்லது குறைவான முறையில் இருத்தல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள வரையறைகளை விஞ்சுகின்றதும் மேலேயுள்ள வகுதிகளின் கீழ் வராததுமான ஏதேனும் உத்தரவாதம் இச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழான பணச்சபையின் விசேட அங்கீகாரம் ஒன்றுடன் தேவைப்படுத்த வேண்டும். இதன்பொருட்டு விண்ணப்பமொன்று மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**ஏ. மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழ் இலங்கைக்கு வெளியே வங்கி ஒன்றுடனான கணக்கொன்றை திறப்பதற்கு, பேணுவதற்கு மற்றும் தொழிற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட ஆட்கள்**

பின்வரும் ஆட்கள் இலங்கைக்கு வெளியே வங்கி ஒன்றுடனாகி வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கொன்றை திறப்பதற்கு பேணுவதற்கு தொழிற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்-

(அ) தொழிலுக்காக, கல்விக்காக அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக தற்கலிகமாக இலங்கையை விட்டுச்சென்றுள்ள இலங்கையில் வதிவுள்ள ஆளொருவர்;

(ஆ) இலங்கைக்கு வெளியே உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் சேவையை வழங்குகின்ற தனியாள் ஒருவர் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பெனி அல்லது குழுமம் ஒன்று;

(இ) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த தனியாளொருவர் அல்லது அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட இருந்த இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பெனி அல்லது குழுமம் ஒன்று;

(ஈ) வியாபாரப் பொருள்களின் ஏற்றுமதியாளர்;

(உ) இன்னொரு நாட்டிலிருந்து செல்லுபடியாகும் நிரந்தர வதிவிட அனுமதியைப் பெற்றுள்ள ஆளொருவர்;

(ஊ) இரட்டைப் பிரசாவுரிமை; அத்துடன்

(எ) ஆளொருவர் விசா வழங்வதற்கான நிபந்தனை ஒன்றாக அத்தகைய நாட்டிலுள்ள வங்கி ஒன்றுடன் கணக்கொன்றைத் திறப்பதற்கு மற்றும் பேணுவதற்கு ஆன அதிகாரத்தை வழங்கும் விசாவை தேவைப்படுத்துமிடத்து நாடொன்றில் கற்பதற்காக இலங்கைக்கு வெளியே செல்லுவதற்கு உட்கருதுகின்ற இலங்கையிலுள்ள வதிவுள்ள ஆளொருவர்.

1. **இவ்வட்டவணையின் நோக்கத்திற்காக -**

"மத்திய வங்கி" ஆனது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறு அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"ஊழியர் சேமலாப நிதியம்" என்பது 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் எனப்பொருள்படும்.

"ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பது 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கை நிதியம் எனப்பொருள்படும்

"அமைச்சர்" என்பவர் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலவாணிச் சட்டத்தில் உள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"பணச்சபை" ஆனது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ச.வ.பி. 10/2017**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்ரமசிங்க,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காகக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## கணக்குகளைத் திறப்பதற்கான அதிகாரம்

2. பின்வரும் ஆட்கள் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்கு எவரேனும் ஆளின் பெயரில் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளை அல்லது இலங்கை ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரம் கொண்டவர்களாதல் வேண்டும்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி

(ஆ) அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்குச் சட்டத்தின் 4(1)(ஈ) என்னும் பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்ற ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி அத்துடன்

(இ) அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்கு சட்டத்தின் 4(1)(இ) என்னும் பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி.

3. இலங்கைக்கு வெளியே வதிவுள்ள நிதி நிறுவனமொன்று இலங்கையில் ஆட்களுக்கு கொடுப்பனவுகளைப் பயனுறுத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகள் மற்றும் இலங்கை ரூபாக் கணக்குகளைத் திறக்கலாம் மற்றும் பேணலாம்.

4. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது 2ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வேறு நாடுகளில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் வினைத்திறனான தீர்த்துவைத்தலை வசதிப்படுத்துவதற்கென இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு வங்கியிடம் அல்லது இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட அத்தகைய வங்கிக் கிளைகளிடம் நொஸ்ரோ கணக்குகளைத் திறக்கலாம் மற்றும் பேணலாம்.

## பாகம் II

## கணக்குகளின் வகைகள்

5. (1) பின்வரும் வகையினவான கணக்குகள், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியினால் அல்லது 2ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியினால் திறக்கப்படலாம் மற்றும் பேணப்படலாம்:

(அ) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கு (உமுக)

(ஆ) வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கு (வெமுக)

(இ) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு (மூகொரூக)

(ஈ) தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்கு (தூவெக)

(உ) தூதுவ ரூபாக் கணக்கு (தூரூக)

(2) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் என்பன நடப்பு (காசோலை வரைகின்ற வசதியின்றி), சேமிப்பு அல்லது கால வைப்புக் கணக்குகளாக இலங்கை ரூபாக்களில் அல்லது பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறக்கப்படலாம் மற்றும் பேணப்படலாம்.

(3) தனியாட்களினால் பேணப்படும் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள், தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் தூதுவ ரூபாக் கணக்குகள் தனியாக அல்லது வேறொரு தகவுடைய ஆளுடன் தனியான அல்லது கூட்டுக் கணக்காக வைத்திருக்கப்படலாம்.

(4) ஓராம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கணக்குகள், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால், தமது உள்ளக வங்கித் தொழிற்கூறுகளில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கணக்கு, இலங்கை ரூபாக்களில் அல்லது இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு நாணயத்தில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

7. (1) ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய கணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடையவராக அத்தகைய ஆள் இல்லாதவிடத்து 5ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறத்தலாகாது.

(2) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும் அல்லது 2ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியும் 3ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களின்கீழ் அத்தகைய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகவுள்ளனரா என ஆய்ந்தறிவதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். கணக்கைப் பேணும் போதும் கணக்கொன்றை மூடிய பின்னர் ஆறாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின் போதும் கணக்கு வைத்திருப்பவரின் தகவுடைமைக்குச் சான்றளித்து அவர் தொடர்பான தகவல்களும் ஆவண முறையான சான்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினாலும் அல்லது 2ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியினாலும் பேணப்படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வகையினதுமான கணக்கைத் திறப்பதற்கான தகவுடைமைக்கான

கட்டளைக்கற்கள், அத்தகைய ஒவ்வொரு வகையினதுமான கணக்குக்கும் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு வரையறைகள் என்பன இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதிகளில் உள்ளதெதுவும், கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் தொடர்பான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளை அல்லது 2ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளை அல்லது கணக்கு வைத்திருப்பவர்களைத் தடுத்தலாகாது.

## பாகம் III

## ஏலவேயுள்ள கணக்குகளுக்கு மீளப்பெயர்குறித்தல் முதலியன

8. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும், 2ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளும் இரண்டாயிரத்திப் பதினெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர்-

(அ) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டு நாணயங்களிலும் இலங்கை ரூபாக்களிலும் திறக்கப்பட்டு பேணப்பட்ட ஏலவேயுள்ள எல்லாப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளையும் (பிமுக) மற்றும் விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகளையும் (விவெமுவைக) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளாக (உமுக) மீளப்பெயர்குறித்தல் வேண்டும் அத்துடன்

(ஆ) ஏலவேயுள்ள எல்லா வதிவற்றோர் ரூபாக் கணக்குகளையும் (வரூக) வதிவற்றோர் முடக்கிய கணக்குகளையும் (வமுக) புலம்பெயர்ந்தோர் முடக்கிய கணக்குகளையும் (புமுக) மூலதன கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளாக (மூகொரூக) மீளப்பெயர்குறித்தல் வேண்டும்.

9. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபெ-ாருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நிதி நிறுவனம்" என்பது, நிதித் தொழிலை நடாத்துவதற்கு 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனி என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, (2ஆம் அத்தியாயமான) பொருள்கோடல் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அனுப்பு தொகைகள்" என்பது, தந்திக் கைமாற்றல்கள், வங்கிகளிடையேயான வேறு கைமாற்றல்கள், வங்கி வரைவுகள், வேறு கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவு உத்திகள் அல்லது அமைப்பு முறைகளினூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத்தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பெனிகளிலிருந்து/அகங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளை உள்ளடக்குதல் வேண்டும்;

"நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது, (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 6)

## பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

(1) ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலர்
(2) யூரோ
(3) ஸ்டேர்லிங் பவுண்
(4) அவுஸ்திரேலிய டொலர்
(5) சிங்கப்பூர் டொலர்
(6) சுவீடன் குரோனர்
(7) சுவிஸ் பிரான்க்
(8) கனேடிய டொலர்
(9) ஹொங்கொங் டொலர்
(10) யப்பானிய யென்
(11) டென்மார்க் குரோனர்
(12) நோர்வே குரோனர்
(13) சீன ரென்மின்பி
(14) நியூசீலாந்து டொலர்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 7)

### தகவுடைமையும் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு வரையறைகளும்

1. **உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் (உமுக)**

(1) **உமுகணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்**

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவா் அல்லாத ஒருவா்.

(ஆ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாட்டினத்தவா் அல்லாத ஒருவா்.

(இ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கைப் பிரசையொருவா்.

(ஈ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று.

(உ) இலங்கைக்கு வெளியே தாபிக்கப்படுகின்ற நாட்டு மற்றும் பிராந்திய நிதியங்களும் பரஸ்பர நிதியங்களும் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களும் மற்றும் வேறு நிறுவனஞ்சார் முதலீட்டாளர்களும்.

(ஊ) ஓா் இறந்த ஆளினது மரணச் சொத்தினது நிருவாகம் பூா்த்திசெய்யப்படும் வரை அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணி வந்த அத்தகைய இறந்த ஆளின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநரொருவா்.

(எ) வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும் வரை அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணிய கம்பெனியொன்றின் பெறுநா் அல்லது ஒழிப்போன் ஒருவா்.

(ஏ) காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனும் ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

(2) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையின் ஊடாக கணக்கு வைத்திருப்பவரின் சாா்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்பு தொகைகள்.

(ஆ) அதே கணக்கு வைத்திருப்பவரின் அல்லது வேறெவரேனும் ஆளின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித் தொழிற்கூறில் பேணப்பட்ட கணக்குகள் என்பவற்றிலிருந்தான கைமாற்றல்கள்.

(இ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்கள், விற்பனை அல்லது முதிா்ச்சி வரும்படிகள், ஒழித்துக்கட்டுதலின் கையுதிா்ப்பு, மூலதன மீட்பு, பங்கு மீள்வாங்குகை, இலாபங்கள், மேன்மிகை நிதிகள், வாடகை வருமானம், முதலை அறவிடுதல், வட்டி அல்லது வேறு தொடா்புபட்ட வருமானம்.

(ஈ) வெளிப்படுத்துகையின் மேல் கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயம் (அதாவது அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐ.அ.நா டொலா்களை விஞ்சுகின்றவிடத்து அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுகின்றவிடத்து சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகையின் மீது அல்லது அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐ.அ.நா டொலா்கள் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாக உள்ளவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான தோதான வெளிப்படுத்துகையொன்றின் மீது.

(உ) அத்தகைய மூல முதலீடு உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டுள்ளவிடத்து (அல்லது கணக்கு வைத்திருப்பவரின் மீளப்பெயா் குறிக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் ஊடாக அல்லது இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வருவதற்கு முன்னா் உட்திரும்பல் அனுப்புதல்களின் எண்பிப்பை நிச்சயிப்பதன் மேல்) இலங்கை ரூபாவில் பெறப்பட்ட மூலதன ஈட்டுகைகள், குத்தகைப்பற்று உரிமைகள், துணைக் குத்தகைப்பற்று உரிமைகள் எவையேனுமிருப்பின் அவையுட்பட அசைவற்ற ஆதனங்களின் விற்பனை வரும்படிகள்.

(ஊ) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அளிக்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரம் ஒன்றின் கீழ் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (வெளிநாட்டுக் கடன் தருநா்) அத்தகைய ஆளினால் (கடன் பெறுநா்) பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவாக இலங்கையில் வதிவுள்ள ஒருவரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(எ) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரத்தின் கீழ் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (வெளிநாட்டுக் கடன் தருநா்) பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுக்கென இலங்கையில் வதிவுள்ள ஒருவரினால் (கடன் பெறுநா்) வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட இலங்கை ரூபாக்கள்.

(ஏ) அதே கணக்கு வைத்திருப்பவரின் தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் தூதுவ ரூபாக் கணக்குகளிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(ஐ) அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் அத்தகைய முதலீடு அதே உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கின் ஊடாகக் கணக்கு வைத்திருப்பவரினால் செய்யப்பட்டுள்ளவிடத்து (வழங்குநரினால் கூட்டிணைப்புச் செயற்பாடொன்றின் பயனால் முதலீட்டாளா் ஒருவரை வந்தடைகின்ற எவையேனும் அடுத்துவரும் பங்குகள், உரிமையொன்றின், உரித்துடைமையொன்றின் அல்லது மாற்றமொன்றின் பிரயோகம் உட்பட) கணக்கு வைத்திருப்பவரினால் அத்தகைய வாங்குநருக்கு அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் விற்பனை தொடா்பில் வேறோா் ஆளின் (அதாவது வாங்குநா்) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(ஒ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளினால் அனுமதிக்கப்பட்டவாறாக அதே கணக்கு வைத்திருப்பவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(ஓ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ஔ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதிகளின் மீது உழைக்கப்பட்ட வட்டிகள்.

(3) **அனுமதிக்கப்பட்ட பற்றுகள்**

(அ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவர் சார்பில் வெளித்திரும்பல் அனுப்பு தொகைகள்.

(இ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள், தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் கூறில் பேணப்படும் கணக்குகளுக்கான கைமாற்றுதல்கள்.

(ஈ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் நியதிகளின் படி இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகள்.

(உ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரத்தின் நியதிகளின்படி வெளிநாட்டு நாணயக் கடன்கள் பெறப்பட்டுள்ளவிடத்து, இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு அத்தகைய கடன்கள் தொடர்பான செலுத்தீடுகள்.

(ஊ) அத்தகைய கடன்கள் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்கு நிதியளிக்கும் நோக்கத்துக்காகப் பெறப்பட்டுள்ளவிடத்து, (அதாவது, வெளித்திரும்பல் முதலீடொன்று) கடன்பெறுநரின் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு வெளிநாட்டு நாணயக்கடன்களின் வரும்படிகளைக் கைமாற்றுதல் (தனிசுப் பிணையங்களுட்பட).

(எ) அதே கணக்கு வைத்திருப்பவரின் தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் தூதுவ ரூபாக் கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(ஏ) கணக்கு வைத்திருப்பவரினால் அத்தகைய விற்பனையாளரிடமிருந்து ஏதேனும் அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் கொள்வனவு தொடர்பில் வேறோராளின் (அதாவது, விற்பனையாளர்) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஐ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

2. **வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் (வெமுக)**

(1) **வெமுகணக்குகள் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்**

(அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று தவிர 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்.

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பங்காண்மை ஒன்று.

(இ) இலங்கையில் வதிவுள்ள தனியாளொருவர்.

(2) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்று வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) எவ்வாளுக்கெதிராக அல்லது எக்கம்பெனிக்கெதிராக அல்லது எப்பங்காண்மைக்கெதிராகச் சட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது புலனாய்வுகள், நீக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, டிவெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குற்றவழக்குத் தொடர்பில் முடிவுறாதுள்ளனவோ அவ்வெவரேனுமாள் அல்லது கம்பெனி அல்லது பங்காண்மை மத்திய வங்கியிடமிருந்து அத்தகைய அனுப்பு தொகைக்கென அனுமதியைப் பெறாமல் அனுமதிக்கத்தகு மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் ஏதேனும் வெளித்திரும்பல் அனுப்புதொகையை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படலாகாது.

(4) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின் படி அத்தகைய வரையறைகள் குறித்துரைக்கப்பட்ட அளவிற்கு, முதலீட்டுத் தேவைப்பாடுவரை, வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்களின் இலங்கை ரூபா வரும்படிகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் வியாபார வெளிநாட்டு நாணயக்கணக்கிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(இ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்கு நிதியளிப்பதற்கென, (அதாவது, வெளித்திரும்பல் முதலீடு) கடன் தருநரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கு ஒன்றினூடாக வெளிநாட்டு மூலமொன்றிலிருந்து பெறப்பட்ட கடனொன்றின் (தனிசுப்பிணையங்களின் வழங்குகை உட்பட) வரும்படிகள்.

(ஈ) அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கின் ஊடாகச் செய்யப்பட்டுள்ளவிடத்து, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச்

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக இலங்கையில் வதிவுள்ள ஆட்களினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பெறப்பட்ட பங்கிலாபங்கள், பங்குகளின் விற்பனை வரும்படிகள் முதிர்ச்சி மூலதன ஈட்டுகைகள் மற்றும் ஒழித்துக்கட்டுகை வரும்படிகள், பெறப்படத்தக்க மூலதனக் குறைப்புக்கள், இறைமை முறிகள், கூறுகள், தனிசுப் பிணையங்கள், இலாபங்கள், விளிம்புகள் மற்றும் மேன்மிகை நிதிகள் முகாமைத்துவக் கட்டணங்கள், ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் தரகுகள் அல்லது வேறெவையேனும் தொடர்புபட்ட பெறுகைகள் முதலியனவான அனுப்பு தொகைகள் (வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையொன்றின் பயனால், உரிமையொன்றின், உரித்துடைமையொன்றின் அல்லது மாற்றத்தின் பிரயோகத்தினால் முதலீட்டாளரை வந்தடைந்த எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள் உட்பட).

(உ) காலத்திற்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றங்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றுதல்கள்.

(ஊ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் மீது உழைக்கப்பட்ட வட்டி.

(5) **அனுமதிக்கப்பட்ட பற்றுகள்**

(அ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிகளின் நியதிகளின் படி கணக்கு வைத்திருப்பவரினால் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் (அதாவது வெளித்திரும்பல் முதலீடுகள்) தொடர்பிலான கொடுப்பனவுகள் (தாபித்தல், பேணுதல் மற்றும் செலவு, வங்கி விதிப்பனவுகள், தரகுக்கட்டணங்கள், தரகுகள் அல்லது வேறு ஏதேனும் தொடர்புபட்ட கொடுப்பனவு முதலியன உட்பட).

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் நடப்புக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுகள்.

(இ) மூல முதலீடானது, அத்தகைய தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பற்றுவைப்பதன் மூலம் செய்யப்பட்டுள்ளவிடத்து, வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்குள் கடல்கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலொன்றிலிருந்து பெறப்பட்ட மூலதனமாக மற்றும் மூலதன ஈட்டுகைகளாக (அதாவது வெளித்திரும்பல் முதலீடு) கணக்கு வைத்திருப்பவரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான கைமாற்றுதல்கள்.

(ஈ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(உ) இலங்கை ரூபாக்களிலான மீளப்பெறுதல்கள்.

3. **மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் (மூகொரூக)**

(1) **மூகொரூகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்**

(அ) இலங்கைக்கு வெளியே நிரந்தரமாக வதிகின்ற, தனியாளான இலங்கையர்.

(ஆ) இலங்கைக்கு வெளியே வதிபவராகவுள்ள, இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாட்டினத்தவர் அல்லாதவர்.

(இ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவர்.

(ஈ) இலங்கையரான இரட்டைப்பிரசாவுரிமை கொண்ட பிரசை.

(உ) இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் குழுமங்களும் கம்பெனிகளும்.

(ஊ) இலங்கைகது வெளியே வதிகின்ற, இலங்கை நாட்டினத்தவரொருவர்.

(2) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்புதொகைகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையின் தனியாளான குடியகல்பவராக, இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவராக அல்லது இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட இலங்கைப் பிரசையாக இருக்குமிடத்து, இலங்கையில் பெறப்படுகின்ற, அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தினதும் அருவ.். உருவச் சொத்துக்களினதும் விற்பனை வரும்படிகள் உட்பட்ட உள்ளூர் வருமானம்.

(இ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின் மீது இலங்கை ரூபாக்களில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) **அனுமதிக்கப்பட்ட பற்றுகள்**

(அ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் படி, இலங்கையரான குடியகல்பவர் தொடர்பில் தனியாளொருவருக்கு 200,000 ஐ.அ.நா டொலர் வரை குடியகல்தற் படியின் அனுப்புதொகை.

(ஆ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, 4ஆம் பந்தியின் 3(அ) என்னும் உட்பந்திக்கு மேலதிகமாக, தகவுடைய இலங்கையரான குடியகல்பவர் தொடர்பில் 30,000 ஐ.அ.நா டொலரான படியொன்றின் அனுப்புதொகை.

(இ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, வெளிநாட்டினத்தவர்கள் தொடர்பில் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக ஆண்டொன்றுக்கு 30,000 ஐ.அ.நா டொலரின் அனுப்புதொகை.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையின் தனியாளான குடியகல்பவராக, இலங்கைக்கு வெளியேயான நாட்டினத்தவர் அல்லாதவரான வதிபவராக அல்லது இரட்டைப் பிரசாவுரிமைகொண்ட இலங்கைப் பிரசையாக இருக்குமிடத்து, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, தகவுடைய புலம்பெயர்படியைக்கணக்கு வைத்திருப்பவரின் ஒரு தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக்கணக்குக்கு அல்லது ஓர் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்குக் கைமாற்றுதல்.

(உ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

4. **தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தூவெக)**

(1) **தூவெகணக்குகளைத் திறப்பதற்குத்தகவுடைய ஆட்கள்**

(அ) வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினால் வழங்கப்பட்ட தூதுவக் கடவுச்சீட்டை, தூதுவ அடையாள அட்டையை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(ஆ) தூதுவர்சாராக் கடவுச்சீட்டை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப்பிரசையொருவர்.

(2) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்பு தொகைகள்.

(ஆ) சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகையின் மீது கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கையினுட் கொணரப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(இ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிற் கூறிலிருந்தும் பேணப்பட்ட கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தும் தூதுவ ரூபாக் கணக்குகளிலிருந்துமான கைமாற்றல்கள்.

(உ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ஊ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட எவையேனும் வெளித்திரும்பல் அனுப்பு தொகைகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் உள்ளூர் செலவுகளுக்காக வெளிநாட்டு நாணயத்திலான அல்லது இலங்கை ரூபாக்களிலான மீளப்பெறுதல்.

(இ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளுக்கும் கரைகடந்த வங்கித்தொழிற்கூறில் பேணப்பட்ட கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் தூதுவ ரூபாக் கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(உ) வேறெவரேனுமாளின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

5. **தூதுவ ரூபாக்கணக்குகள் (தூரூக)**

(1) **தூரூகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்**

(அ) வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினால் வழங்கப்பட்ட தூதுவக் கடவுச்சீட்டை, தூதுவ அடையாள அட்டையை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(ஆ) தூதுவர்சாரா கடவுச்சீட்டை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(2) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்பு தொகைகள்.

(ஆ) இலங்கையிலுள்ள எவரேனுமாளிடமிருந்து கணக்கு வைத்திருப்பவருக்கு வருமதியான மீளளிப்புகள், மீளச்செலுத்துகைகள் மற்றும் கொடுப்பனவுகள்.

(இ) கணக்கு வைத்திருப்பவரினால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் மேல் இலங்கையில் பெறப்பட்ட, கணக்கு வைத்திருப்பவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் விற்பனை வரும்படிகள்.

(ஈ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(உ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தும் தூதுவ ரூபாக் கணக்குகளிலிருந்துமான கைமாற்றல்கள்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(எ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(ஆ) விசாக் கட்டணங்கள், மீளளிப்புகள், மீளச் செலுத்துகைகள் மற்றும் கணக்கு வைத்திருப்பவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் விற்பனை வரும்படிகள்.

(இ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளுக்கான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் தூதுவ ரூபாக் கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(உ) இயைபான துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் கொடுக்கல்வாங்கல்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

6. **இவ்வட்டணையின் நோக்கத்துக்காக-**

"இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது, 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருளாகும்.

**ச.வ.பி. 10/2017**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 5ஆம், 8ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்ரமசிங்க,
**தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்**

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) ஒழுங்குவிதிகள்என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**பாகம் I**

**கணக்குகளைத் திறப்பதற்கான அதிகாரம்**

2. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர், அவரது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு, எவரேனுமாளின் பெயரில் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமுடையவராதல் வேண்டும்.

## பாகம் II

## கணக்குகளின் வகைகள்

3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் பின்வரும் வகையினவான கணக்குகள் திறக்கப்பட்டு பேணப்படலாம்:

(அ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக)

(ஆ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக) அல்லது

(இ) மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புகளின் நியதிகளின்படி பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகள்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் விடயத்தில், (1)ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட கணக்குகள், அவற்றின் உள்ளக வங்கித்தொழிற் கூறுகளில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கணக்கு, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை ஐஇல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் நாணயத்தில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

5. (1) ஆளெவரும், ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாக 3ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடையவராகவிராதவிடத்து அத்தகையவொரு கணக்கை அத்தகைய ஆள் திறத்தலாகாது.

(2) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், 3ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள் அட்டவணை ஐஐ இல்குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களின்கீழ் அத்தகைய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகவுடையவர்களாகவுள்ளனர் என்பதனை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் கணக்கைப் பேணும்போதும் கணக்கொன்றை மூடியபின்னர் ஆறாண்டுக் காலப்பகுதியின் போதும் அவரது தகவுடைமையைச் சான்றுப்படுத்துகின்ற அவர் தொடர்பான தகவல்களும் ஆவணமுறையான சான்றும் ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினாலும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினாலும் பேணப்படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வகையினதுமான கணக்கைத் திறப்பதற்கான தகவுடைமைக்கான மற்றும் அத்தகைய ஒவ்வொரு வகையினதுமான கணக்குக்கும் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு எல்லைகளுக்கான கட்டளைக்கற்கள் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதிகளில் உள்ளதெதுவும், கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளை, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளை அல்லது கணக்கு வைத்திருப்பவர்களைத் தடுத்தலாகாது.

## பாகம் III

## ஏலவேயுள்ள கணக்குகளுக்கு மீளப்பெயர்குறித்தல் முதலியன

6. (1) எல்லா அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளும், இரண்டாயிரத்துப் பதினெட்டாமாண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னர் பின்வருவனவற்றை, அதாவது:-

(அ) (423ஆம் அத்தியாயமான) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் திறக்கப்பட்டு பேணப்பட்ட ஏலவேயுள்ள எல்லா வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வவெநாக), வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வவெநாக), வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வநாஅவெநாக) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளாக (தவெநாக) மீளப்பெயர்குறித்தல் வேண்டும்

(ஆ) ஏலவேயுள்ள எல்லா வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளையும் (வெசெஉக), உட்திரும்பல் அனுப்பு தொகைப் பகிர்வுக் கணக்குகளையும் (உஅபக), வெளிநாட்டுக் கப்பற்றொழில் அல்லது வானூர்திக் கம்பெனிகளின் முகவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வெகவாமுவெநாக) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளாக (விவெநாக) மீளப்பெயர் குறித்தல் வேண்டும்.

(2) ஏலவேயுள்ள எல்லா வதிவுள்ள அதிதி வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் மற்றும் சிரேட்ட வெளிநாட்டினத்தவர்கள் விசேட கணக்குகளும் மீளப்பெயர் குறிக்கப்படாமல் இரண்டாயிரத்துப் பதினெட்டாமாண்டு சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொழிற்பாட்டில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக) மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக) பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நடப்பு (காசோலை வரையும் வசதியின்றி), சேமிப்பு அல்லது கால வைப்புக் கணக்குகளாகத் திறக்கப்பட்டு பேணப்படலாம். அத்தகைய கணக்குகளிலிருந்து தனியாட்களினால் பேணப்பட்ட தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வேறொரு தகவுடைய ஆளுடன் தனியான அல்லது கூட்டுக்கணக்குகளாக வைத்திருக்கப்படலாம்.

7. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பெ-ாருளையுடையதாதல் வேண்டும்

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"ஆள்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"அனுப்பு தொகைகள்" என்பது, தந்திக் கைமாற்றல்கள், வங்கிகளிடையேயான வேறு கைமாற்றல்கள், வங்கி வரைவுகள், வேறு கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவு உத்திகள் அல்லது அமைப்பு முறைகளினூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத்தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பெனிகளிலிருந்து/ அகங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளை உள்ளடக்குதல் வேண்டும்

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 4)

### பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

(அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலர் (ஐஅநாடொ)

(ஆ) யூரோ

(இ) ஸ்டேர்லிங் பவுண்

(ஈ) அவுஸ்திரேலிய டொலர்

(உ) சிங்கப்பூர் டொலர்

(ஊ) சுவீடன் குரோனர்

(எ) சுவிஸ் பிரான்க்

(ஏ) கனேடிய டொலர்

(ஐ) ஹொங்கொங் டொலர்

(ஒ) யப்பானிய யென்

(ஓ) டென்மார்க் குரோனர்

(ஔ) நோர்வே குரோனர்

(க) சீன ரென்மின்பி

(ங) நியூசீலாந்து டொலர்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 5)

### தகவுடைமையும் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு வரையறைகளும்

1. **தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக)**

(1) **தவெநாகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்**

(அ) இலங்கை நாட்டினத்தவராகவுள்ள பராயமடையாதவர் உட்பட்ட தனியாளொருவர்.

(ஆ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற பராயமடையாதவர்உட்பட இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தனியாளொருவர்.

(இ) இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவரல்லாத வதிவுள்ளவரொருவர்.

(ஈ) ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதருகின்ற அல்லது இலங்கைக்கு வருகைதருவதற்கு உட்கருதுகின்ற நாட்டினத்தவர் அல்லாதவரொருவர்.

(உ) அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த ஓர் இறந்துள்ள ஆளின் பெயரில், இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகம் பூர்த்தி செய்யப்படும் வரை அத்தகைய இறந்துள்ள ஆளின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

(2) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித் தொழில் முறைமையினூடாகக் கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்பு தொகைகள்.

(ஆ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு பயண நோக்கத்துக்காகத் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்று வைப்பதன் மூலம் கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்.

(இ) கணக்கு வைத்திருப்பவரினால் வெளிப்படுத்துகையின் மேல் இலங்கையினுட் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி [அதாவது, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐ.அ.நா டொலரை அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுமிடத்து அல்லது அதற்குச் சமமாகவிருக்குமிடத்து சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகை ஒன்றின் மீது அல்லது அத்தகைய வெளிநாட்டு நாணயத் தாள்கள் 15,000 ஐ.அ.நா டொலருக்கு அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாகவிருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கான தோதான வெளிப்படுத்துகை ஒன்றின்மீது].

(ஈ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறில் பேணப்பட்ட கணக்குகள் என்பவற்றிலிருந்தான கைமாற்றல்கள்.

(உ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியே வதிவுள்ளவராகவிருக்குமிடத்து அல்லது இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவராகவிருக்குமிடத்து, அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஊ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு அதே கணக்கு வைத்திருப்பவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கிலிருந்தான கைமாற்றல்கள்.

(எ) வேறெவரேனுமாளின் தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஏ) மூலக் கைமாற்றல், தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன் மூலம் செய்யப்பட்டிருப்பின் [அல்லது இக் கட்டளை பயனுடையதாக வருமுன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வதிவற்றவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவுள்ளவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாதவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பவற்றிலிருந்து செய்யப்பட்டிருப்பின்] வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து எழுகின்ற மூலதனம், மூலதன ஈட்டுகைகள் மற்றும் வேறு பெறுகைகள்.

(ஐ) மூல முதலீடு இக்கட்டளை பயனுக்கு வருமுன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வதிவற்றவர் வெளிநாட்டு நாணயக் கணக்கை, வதிவுள்ளவர் வெளிநாட்டு நாணயக் கணக்கை அல்லது வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாதவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்று வைப்பதன் மூலம் செய்யப்பட்டிருப்பின், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினுள் வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மூலதனமும் மூலதன ஈட்டுகைகளும்.

(ஒ) வெளிநாட்டுப் பயண அட்டை தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து நிரப்பப்பட்டிருந்த தொகை வரை, அதே கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டுப் பயண அட்டையில் எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத மீதி.

(ஓ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவராகவிருக்குமிடத்து, மாதாந்தச் சம்பளமாக, தொழில் நன்மைகளாக மற்றும் வேறு தொடர்புபட்ட நன்மைகளாகத் தொழில்தருநர்களின் இலங்கை ரூபாக் கணக்கிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஔ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவராகவிருக்குமிடத்து, வரவு வைக்கும் நாளன்று பெறப்பட்ட செலாவணி வீதத்தில் மாற்றப்பட்ட, வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவதற்காக மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட இலங்கை ரூபாக்களிலான தொகைகள்.

(க) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களிலிருந்தான கைமாற்றல்கள்.

(ங) சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் நியதிகளின் படி கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து இலங்கைக்கு வெளியேயிருந்து அனுப்பப்படும் அனுப்பு தொகைகள்.

(ச) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) அனுமதிக்கப்பட்ட பற்றுகள்

(அ) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட எவையேனும் வெளித்திரும்பல் அனுப்பு தொகைகள்.

(ஆ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(இ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான அல்லது கரைகடந்த வங்கித் தொழிற் கூறுகளில் பேணப்பட்ட கணக்குகளுக்கான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியே வதிபவராகவிருக்குமிடத்து, அல்லது இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவராகவிருக்குமிடத்து, அதே கணக்கு வைத்திருப்பவரின் ஓர் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(உ) ஒரு வெளிநாட்டுப்பயண அட்டையை உள்நிரப்புவதற்காக நிதிகளைக் கைமாற்றுதல்.

(ஊ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியில் இலங்கையில் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஏதேனும் முதலீடு தொடர்பிலான கைமாற்றல்கள்.

(எ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு பயண நோக்கத்துக்காக 10,000 ஐ.அ.நா டொலர் வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானது வரை) வெளிநாட்டு நாணயத்தாள்களிலான மீளப்பெறுகை.

(ஏ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவரல்லாதவராகவிருந்து இலங்கைக்குத் தற்காலிகமாக வருகை தருகின்றவிடத்து, வெளிநாட்டு நாணயத்திலான மீளப்பெறுகைகள்.

(ஐ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவராக இருக்குமிடத்து, அத்தகைய தொழில்தருநருக்கு வருமதியான சம்பளங்கள் மற்றும் வேறேதேனும் கொடுப்பனவின் மிகைக் கொடுப்பனவு தொடர்பில் தொழில்தருநரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான கைமாற்றல்கள்.

(ஒ) இவ்வட்டவணையின் 1ஆம் பந்தியின் (2)(ஓ) என்னும் உட்பந்தியின்படி, இலங்கையில் வதிபவராகவுள்ள நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவருக்கு மிகைக் கொடுப்பனவொன்று செய்யப்படும் பட்சத்தில் தொழில் தருநர்களின் இலங்கை ரூபாக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஓ) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளினால் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வகுதியினவான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் வதிவோருக்கான கொடுப்பனவுகள்.

(ஔ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

2. வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக)

(1) தகவுடைய ஆட்கள்

(அ) வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற பின்வரும் ஆட்கள்:

(i) இலங்கையில் வதிகின்ற தனியாளொருவர்.

(ii) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தனியுரிமையாண்மையின் உரிமையாளர் அல்லது பங்காண்மையின் பெரும்பான்மையோரான பங்காளர்கள் இலங்கையில் வதியுமிடத்து, (இரு பங்காளர்களுடனான பங்காண்மையொன்றின் விடயத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்காளரேனும் இலங்கையில் வதிபவராகவிருத்தல் வேண்டும்) அத்தனியுரிமையாண்மை அல்லது பங்காளர்.

(iii) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி.

(iv) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கடல்கடந்த கம்பெனியொன்றாகப் பதிவு செய்யப்பட்ட, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி.

(v) இயைபான துறை அமைச்சுச் செயலாளரின் அல்லது தோதான அதிகாரியின் விதப்புரையுடன் அரச நிறுவனமொன்று.

(vi) முறையே வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் இலங்கைக் குடியியல்வான் செலவு அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமத்துடன் அல்லது அதிகாரவளிப்புக் கடிதத்துடன் ஒரு வெளிநாட்டுக் கப்பற்றொழிற் கம்பெனியின் அல்லது வானூர்திக் கம்பெனியின் சார்பில் (வெளிநாட்டு முதல்வர்) இலங்கையில் கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராகத் தொழில் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்.

(ஆ) அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த ஓர் இறந்துள்ள ஆளின் மரணச் சொத்தினது நிருவாகம் பூர்த்திசெய்யப்படும்வரை அத்தகைய இறந்துள்ள ஆளின் மரணச் சொத்தினது நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

(இ) அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணிவந்த கம்பெனியொன்றின் பெயரில், வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும் வரை பெறுநர் அல்லது ஒழிப்போன் ஒருவர்.

(2) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்று வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்தல், ஏற்றியிறக்குநிலைய வியாபாரம், கணக்கு வைத்திருப்பவரினால் பொறுப்பேற்கப்பட்ட கடல்கடந்த கருத்திட்டங்கள், இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு உள்ளூரில் வழங்கப்பட்ட பண்டங்கள் என்பன தொடர்பில் வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட அனுப்புதொகைகள்.

(ஆ) கடல்கடந்த தொழில் தருநர்களுக்குச் சேவைகளையளிக்கின்ற இலங்கையரின் வேதனங்களை அத்துடன்/அல்லது உழைப்புக்களைச் செலுத்தீடு செய்வதற்காகக் கணக்கு வைத்திருப்பவர் எந்தத் தொழில் தருநரிடம் ஒழுங்கேற்பாடொன்றைக் கொண்டுள்ளாரோ அத்தகைய கடல்கடந்த தொழில் தருநரிடமிருந்து வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட அனுப்புதொகைகள்.

(இ) இலங்கையிலுள்ள கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களும் சேவைகளும் தொடர்பில் அத்தகைய ஆளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயணிகள் காசோலைகள், வங்கி வரைவுகள் அல்லது நாணயத்தாள்கள் என்ற வடிவத்திலான வெளிநாட்டு நாணயம்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் ஒரு கப்பற்றொழில் முகவராக அல்லது ஒரு பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, அந்தந்த முகவராண்மை உடன்படிக்கைகளின் கீழான நோக்கங்களுக்காக அந்தந்த வெளிநாட்டு முதல்வரிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதல்வரின் சார்பில் ஒரு மூன்றாந் திறத்தவரிடமிருந்து வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட அனுப்புதொகைகள்.

(உ) ஒரு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குக்கெதிரான அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறில் பேணப்பட்டவொரு கணக்குக்கெதிரான அனுப்புதொகை என்றவகையாக, வெளிநாட்டு முதல்வரின் சார்பில் இலங்கையிலுள்ள கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக உள்ள கணக்கு வைத்திருப்பவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் சேகரிக்கப்பட்ட கப்பற்சரக்குக் கட்டணம்.

(ஊ) (அதாவது, வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐ.அ.நா டொலரை அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுமிடத்து அல்லது அதற்குச் சமமாகவிருக்குமிடத்து சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகையின் மீது அல்லது அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐ.அ.நா டொலருக்கு அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாகவிருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கான தோதான வெளிப்படுத்துகையின் மீது) கணக்கு வைத்திருப்பவரினால் வெளிப்படுத்துகையின் மேல் இலங்கையினுள் கொண்டுவரப்படும் வெளிநாட்டு நாணயம்.

(எ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான அல்லது கரைகடந்த வங்கித்தொழிற்கூறில் பேணப்பட்ட கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஏ) வதிபவரொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான பிரதிபயனாகவுள்ள கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் அல்லது கொடுக்கல்வாங்கல்களின் வகுதிகள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளினால் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு அக்கொடுப்பனவுகள்.

(ஐ) மத்திய வங்கியின் முன்னங்கீகாரத்துடன், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் உள்ளக வங்கித்தொழிற்கூறிலிருந்து அல்லது கரைகடந்த வங்கித்தொழிற்கூறிலிருந்து கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் முற்பணங்களினதும் வரும்படிகள்.

(ஒ) சொத்தானது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன் மூலம் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் சொத்தின் விற்பனையிலிருந்தான வரும்படிகள்அல்லது அதன் ஏதேனும்பாகம்.

(ஓ) மூலக் கைமாற்றல் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன் மூலம் (அல்லது இக்கட்டளை பயனுடையதாக வருவதற்கு முன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிலிருந்து) செய்யப்பட்டிருப்பின், வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து எழுகின்ற மூலதனம், மூலதன ஈட்டுகைகள் மற்றும் வேறு பெறுகைகள்.

(ஔ) மூல முதலீடு, இக்கட்டளை பயனுடையதாக வருவதற்கு முன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கைப் பற்று வைப்பதன் மூலம் செய்யப்பட்டிருப்பின், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினுள் வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மூலதனம் மற்றும் மூலதன ஈட்டுகைகள்.

(க) இவ்வட்டவணையின் 2ஆம் பந்தியின் உற்பத்திகள் (4)(இ) மற்றும் (4)(ஈ) என்பவற்றின் படி வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன் மூலம் கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்.

(ங) வெளிநாட்டுப் பயண அட்டை வியாபார வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கிலிருந்து நிரப்பப்பட்டிருந்த தொகைவரை, அதே கணக்கு வைத்திருப்பவரின் அத்தகைய வெளிநாட்டுப் பயண அட்டவணையில் எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத மீதி.

(ச) தகவுடைய வாடிக்கையாளர்களுக்கும் கூட்டுக் காப்புறுதியாளர்களுக்கும் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களின் மீது கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணங்களும் இலங்கைக் காப்புறுதிச் சபையிடம் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பெனிகளினால் மீள்காப்புறுதியாளர்களிடமிருந்தும் தேசியக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்தும் பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளும்.

(ஞ) சம்பளங்களினதும் வேறெவையேனும் நன்மைகளினதும் மிகைக் கொடுப்பனவுகளாகவுள்ள, இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவரல்லாத ஊழியரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ட) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ண) சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் நியதிகளின் படி கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து இலங்கைக்கு வெளியேயிருந்து அனுப்பப்படும் அனுப்பு தொகைகள்.

(த) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(4) **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட எவையேனும் வெளித்திரும்பல் அனுப்பு தொகைகள்.

(ஆ) இலங்கை ரூபாக்களில்இலங்கையிலான செலுத்தீடுகள்.

(இ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டவாறாகப் பயண நோக்கத்துக்காக 10,000 ஐ.அ.நா டொலர் வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதுவரை) வெளிநாட்டு நாணயத் தாள்களிலான மீளப்பெறுதல்.

(ஈ) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதன் மேல் வெளிநாட்டில் பட்டை தீட்டப்பட்டு மெருகூட்டப்பட்ட அல்லது பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களையும் வேறு மூலப் பொருட்களையும் கொள்வனவு செய்யும் நோக்கத்துக்காக இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகளினால் ஒரு தடவையில்

50,000 ஐ.அ.நா டொலர் வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் சமமானது வரை) வெளிநாட்டு நாணயத் தாள்களிலான மீளப்பெறுதல்.

(உ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் ஒரு கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களுடனான கோரிக்கையொன்றின் மீது, வெளிநாட்டு முதல்வரிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதல்வரின் சார்பில் பெயர் குறிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட உட்திரும்பல் அனுப்புதொகைக்கெதிராகக் கப்பற்றலைவர்களுக்கான பணம் என்ற வகையாக ஒவ்வொரு வருகைக்கும் ஒவ்வொரு கலத்துக்கும் 50,000 ஐ.அ.நா டொலர்வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானது வரை) வெளிநாட்டு நாணயத்தாள்களில் மீளப்பெறுதல்.

(ஊ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் ஒரு கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, மேன்மிகையான நிதிகளை வெளிநாட்டு முதல்வருக்குத் திருப்பியனுப்புதல் ஆயின், அரசாங்கத்துக்குச் செலுத்தப்படற்பாலதான வரியும் முகவராண்மைத் தரகும் உட்பட, இலங்கையில் வெளிநாட்டு முதல்வரின் எல்லா உள்ளூர்ப் பொறுப்புக்களையும் எதிர்கொள்வதற்குக் கணக்கில் போதிய நிதிகள் வைத்திருக்கப்பட்டுள்ளன என்ற பொருள்பட, கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (அதாவது முகவரிடமிருந்து) எழுத்திலான உறுதிப்படுத்துகை பெறப்படுதல் வேண்டும்.

(எ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, வியாபார வெளிநாட்டு நாணயக்கணக்குகள், தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித் தொழிற்கூறில் பேணப்பட்ட கணக்குகள் என்பவற்றுக்கான கைமாற்றல்கள்.

(ஏ) அதே கணக்கு வைத்திருப்பவரின் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஐ) கணக்கு வைத்திருப்பவரினால் அத்தகைய வெளிநாட்டுக் கடன் தருநரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனை மீளக்கொடுப்பனவு செய்யும் நோக்கத்துக்காக இலங்கைக்கு வெளியே வதிகின்றவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றுக்கான கைமாற்றல்கள்.

(ஒ) ஒரு வெளிநாட்டுப் பயண அட்டையை உள்நிரப்புவதற்காக நிதிகளைக் கைமாற்றுதல்.

(ஓ) கணக்கு வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளிடமிருந்து அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்ட தனிசுசார் கொடுப்பனவுகளும் வெளிநாட்டு நாணயத்தை மீளக்கொடுப்பனவு செய்தலும்.

(ஔ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஏதேனும் முதலீடு தொடர்பிலான கைமாற்றல்கள்.

(க) வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்கள், உள்ளூர் அல்லது கடல்கடந்த மீள்காப்புறுதியாளர்களுக்கும் தேசியக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்குமான கட்டுப்பணங்கள் மற்றும் இலங்கைக் காப்புறுதிச் சபையிடம் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பெனிகளினாலான தரகுப் பணம் என்பன தொடர்பில் தகவுடைய வாடிக்கையாளர்களுக்கும் கூட்டுக் காப்புறுதியாளர்களுக்கும் உரிமை கோரிக்கைகளின் கொடுப்பனவுகள்.

(ங) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வகுதியினவான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் வதிவுள்ளோருக்கான கொடுப்பனவுகள்.

(ச) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கான கைமாற்றல்கள்.

(5) எச்சூழ்நிலைகளின் கீழும் இலங்கை ரூபாக்கள் வெளிநாட்டு நாணயமாக மாற்றப்பட்டு ஒரு வியாபார வெளிநாட்டு நாணயக்கணக்கினுள் வரவு வைக்கப்படுதலாகாது.

**3. இவ்வட்டவணையின் நோக்கத்துக்காக -**

“தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை” என்பது, 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை என்று பொருளாகும்;

“இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபை” என்பது, 2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட குடியியல் வான்செலவு அதிகாரசபை என்று பொருளாகும்;

“வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி” என்பது, 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

“தேசியக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்” என்பது, 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசியக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசியக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருளாகும்.

ச.வ.பி. 10/2017

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

### 8ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபராகவுள்ள ஆளொருவர், எந்த நோக்கங்கள், எல்லைகள், நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தவராக பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டுமோ, அந்த நோக்கங்கள், எல்லைகள் நியதி நிபந்தனைகளை இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக இக்கட்டளை மூலம் விதித்துரைக்கின்றேன்:-

(அ) ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை அல்லது இலங்கை நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தல் வேண்டும் அல்லது இலங்கையினுள் இறக்குமதி செய்தல் வேண்டும்;

(ஆ) அவரது உடைமையில் அல்லது இலங்கையிலுள்ள ஒரு வங்கியில் வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருத்தல் வேண்டும்;

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் இதற்கான அட்டவணை II இல் விதித்துரைக்கப்பட்டுள்ளவையுமான கட்டளைகள் இத்தால் அழித்தொழிக்கப்படுகின்றன.

ரணில் விக்ரமசிங்க,
தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

## அட்டவணை I

### பாகம் I

### வெளிநாட்டு நாணயத்தின் அல்லது இலங்கை நாணயத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. (1) இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற அல்லது இலங்கையில் வந்திறங்குகின்ற எவரேனும் ஆள், அத்தகைய ஆளால் நாணயத்தாள்கள், வங்கி வரைவுகள், காசோலைகள், பயண அட்டைகள் போன்ற வடிவங்களில் சட்டமுறையாகக் கொள்ளுதல் செய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணித் தொகையினை, அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியின் மொத்தப் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்றதாகவிருப்பின், முறையே புறப்பட்டுச் செல்கின்ற அல்லது வந்திறங்குகின்ற தளத்திலுள்ள சுங்கத் திணைக்களத்துக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்றுக்கமைய எடுத்துச் செல்லலாம்.

   (2) எவ்வாறாயினும், இலங்கையில் வந்திறங்குகின்ற ஆளொருவர், ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்ற வெளிநாட்டு நாணயத் தாள்களைத் திருப்பி எடுத்துச் செல்வதற்கு உட்கருதுகின்றவிடத்து, அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்ற வெளிநாட்டு நாணயத் தாள்களை எடுத்துக் கொண்டு இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்ல உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய ஆள், சுங்கத் திணைக்களத்துக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

2. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள், இலங்கை ரூபா 20,000 பெறுமதி வரையான இலங்கை நாணயத்தை முறையே, இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லலாம் அல்லது இலங்கையினுள் கொண்டு வரலாம்.

3. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, அவரது தொழிலின் சாதாரண நடவடிக்கையில் அல்லது சாதாரண நடவடிக்கைக்காகவும் அத்துடன் அவரது அதிகாரமளிப்பின் நியதிகளுக்குட்பட்டும் கொள்ளுதல் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யலாம் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யலாம்.

4. இப்பாகத்தின் நோக்கத்திற்கென :-

   "அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### பாகம் II

### வெளிநாட்டுச் செலாவணியை உடைமையில் வைத்திருப்பதற்கான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணி வைத்திருக்கப்படுதல்

   (1) இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள் இதன் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மட்டுப்பாட்டுக் காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, ஏதேனும் காலப்பகுதிக்கு, ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000இன், அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான பெறுமதி வரை அவருடைய உடைமையில் பிடித்து வைத்திருக்கலாம். ஆயின், அத்தகைய வெளிநாட்டு நாணயம் பின்வருவனவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்;

   (அ) அத்தகைய ஆளின் வெளிநாட்டுப் பயணத்துக்கென அத்தகைய ஆளினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, இலங்கைக்குத் திரும்பும் பொழுது பயன்படுத்தப்படாத நாணயங்களாக திருப்பிக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயம்; அல்லது

   (ஆ) அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு, அளிக்கப்பட்ட சேவையொன்றுக்கான அல்லது வழங்கப்பட்ட பண்டங்களுக்கான கொடுப்பனவு என்றவாறாக, அல்லது வேறு ஏதேனும் சட்டமுறையான மூலத்திலிருந்து, இலங்கைக்கு வெளியேயிருந்து, அத்தகைய ஆளினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயம்; அல்லது

(இ) பயண நோக்கத்துக்கென அத்தகைய ஆளினால் அவரது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து அல்லது தொழில்சார் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள்.

(2) (அ) எவரேனும் ஆள், அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு, அல்லது எந்தப் பயணிக்கு அத்தகைய பண்டங்களும் சேவைகளும் வழங்கப்பட்டனவோ அந்தப் பயணியின் வதிவிட அந்தஸ்தைப் பொருட்படுத்தாது, இலங்கையிலுள்ள தளங்களில் இலங்கைக்கு வந்திறங்குகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற பயணிகளுக்கு தீர்வையற்ற சலுகையின் கீழ் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக அனுமதியளிக்கப்பட்ட தொழிலொன்றைக் கொண்டு நடாத்தும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களும் சேவைகளும் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அவரது உடைமையில் பிடித்து வைத்திருக்கலாம்;

(ஆ) அத்தகைய ஆள், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொண்ட ஆளின் பெயரிலுள்ள தொழில்சார் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் வைப்புச் செய்யாமல், அல்லது அத்தகைய பயன்பட சான்றைச் சமர்ப்பிப்பதன் மேல், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவருக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவருக்கு விற்பனை செய்யாமல், ஏற்புச்செய்யப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைத்தலாகாது;

(3) இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயம் அவர் இலங்கைக்கு வெளியே இருக்கும் போது, அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளிடம் பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளிலிருந்து அவரால் கொள்ளுதல் செய்யப்பட்டதாகவிருப்பின், இலங்கையில் வரையறையின்றி அவரது உடைமையில் பிடித்துவைக்கலாம்.

2. வெளிநாட்டுச் செலாவணியைப் பிடித்துவைத்திருப்பதற்கான காலப்பகுதி பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(1) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமொன்றுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தைப்பெறுகின்றதும், அத்தகைய நோக்கத்துக்கென அதனைப் பயன்படுத்தாதுமான எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவுக்கு மாற்றாமல், அத்தகைய வேளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைத்திருத்தலாகாது.

(2) (அ) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமொன்றுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தைப் பெறுகின்ற எவரேனும் ஆள், சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அல்லது அதன் பாகத்தை இலங்கைக்குத் திருப்பிக் கொண்டுவந்ததன் பின்னர், அத்தகைய ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவுக்கு மாற்றாமல், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைத்திருத்தலாகாது.

(ஆ) எவ்வாறாயினும் 1ஆம் பந்தியின் (1)(அ) என்னும் உட்பந்தியின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் 10000 இன், அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான பெறுமதி வரை பயண நோக்கத்திற்கென வெளிநாட்டு நாணயத் தாள்களைப் பெற்றுக் கொண்ட ஆளொருவர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரிடத்தில் பேணப்படும் ஏலவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஊழியம், உயர்தொழில் வேலை என்பவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காக, அல்லது தொழிலொன்றை அமைத்துக் கொள்வதற்காக இலங்கைக்கு வெளியே செல்கின்றதும், அத்தகைய ஊழியம், உயர்தொழில் அல்லது தொழிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை உழைக்கின்ற அல்லது பெறுகின்ற அத்துடன் இலங்கைக்குத் திருப்பிக் கொண்டு வருகின்றதுமான எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை, இலங்கை ரூபாவுக்கு மாற்றாமல், அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி அத்தகைய ஆளினால் திறக்கப்பட்டு மற்றும்∴ அல்லது பேணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கொன்றில் வரவு வைக்காமல், அதன் திருப்பியனுப்பல் திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

3. இப்பாகத்தின் நோக்கத்துக்கென -

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட எவரேனும் தனிநபர், தனிநபர்களின் வகுப்பு அல்லது வகுப்புக்களை குறிக்கின்ற ஒரு அதிகாரமளிக்கப்படாத வணிகராவார்.

## அட்டவணை II

| வர்த்தமானி இல. | வெளியிடப்பட்ட திகதி | நோக்கம் |
|---|---|---|
| 1947/13 | 2015.12.29 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1)ஆம் மற்றும் (2)ஆம் உட்பிரிவுகளின் கீழான கட்டளை. |
| 1947/15 | 2015.12.29 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 44ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 6,அ,ஆ என்னும் பிரிவின் கீழான கட்டளை. |

| | | |
|---|---|---|
| 1686/50 | 2011.01.01 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423ஆம் அத்தியாயமான நீக்கப்பட்ட) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் (1)ஆம் மற்றும் (2)ஆம் உட்பிரிவுகளின் கீழான கட்டளை. |
| 1631/36 | 2009.12.11 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழான கட்டளை. |
| 1854/3 | 2014.03.17 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423ஆம் அத்தியாயமான) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழான கட்டளை. |

**ச.வ.பி. 10/2017**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**31ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கத்துக்காக இலங்கையில் வதிபவர்களாகவிருத்தல் வேண்டுமென இக்கட்டளை மூலம் தீர்மானிக்கின்றேன்.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு ஏப்பிறல் 21 ஆந் தேதிய 15007ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்பு இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க,
தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**அட்டவணை**

1. எவரேனும் இலங்கைப் பிரசை அல்லது இலங்கைப் பிரசையொருவரைத் திருமணஞ்செய்துள்ள எவரேனும் வெளிநாட்டுப் பிரசை, முற்போந்த 12 மாதங்களின் போது கூட்டுமொத்தத்தில் 183 நாட்களைக் கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இருந்திருப்பின் அத்தகைய ஆள்.

2. (அ) முற்போந்த 12 மாதங்களின் போது கூட்டுமொத்தத்தில் 182 நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு, விடுமுறை, கல்வி, தொழில், மருத்துவச்சிகிச்சை என்பவற்றுக்காக அல்லது வேறேதேனும் ஒத்த காரணத்துக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாகச் சென்றுள்ளவரான

   (ஆ) வேறொரு நாட்டினால் வழங்கப்பட்ட மாணவ அல்லது அதற்குச் சமமான விசாவொன்றின் மீது இலங்கைக்கு வெளியே சென்றுள்ளவரான, எவரேனும் இலங்கைப் பிரசை.

3. (அ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கை அரசாங்கத்தின் (எத்தகையதுமான எப்பெயரினாலும் அல்லது தலைப்புப் பெயரினாலும் பெயர் குறிக்கப்பட்ட) தூதுவப் பிரதிநிதிகள், தூதர்கள் அல்லது வியாபார ஆணையாளர்கள்;

   (ஆ) இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனுமாள் மேலே பந்தி 3(அ)வில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் பணியாட் தொகுதியுறுப்பினராகவிருந்தால் அவர்;

   (இ) வெளிநாட்டில் ஆட்சேர்க்கப்பட்டவர்கள் தவிர, வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின், ஓர் அரசாங்க நிறுவனத்தின், ஒரு நியதிச் சட்டமுறையான சபையின், ஓர் உரிமமளிக்கப்பட்ட வங்கியின் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின் பணியாட்டொகுதியுறுப்பினரொருவர்;

   (ஈ) மேலே 3(அ) முதல் 3(இ) வரையிலான பந்திகளின் கீழ் இலங்கையில் வதிபவராகக்கருதப்பட்ட எவரேனுமாளின் எவரேனும் குடும்பவுறுப்பினர்.

4. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இயைபான விசாவின் கீழ் இலங்கையில் வதிகின்ற அல்லது தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வெளிநாட்டுப்பிரசைகள், ஆனால் வேறு நாடுகளுக்கு இடைப்பெயர்விலுள்ள பயணிகள் அல்லது உல்லாசத்துக்காக அல்லது தொழிலுக்காக நாட்டில் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்கின்ற வருகையாளர்கள் அல்ல.

5. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட பின்வரும் நிறுவனங்களைச் சொந்தமாக வைத்திருக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற அல்லது முகாமை செய்கின்ற ஆட்களின் பிரசாவுரிமையினது அந்தஸ்தைப் பொருட்படுத்தாது அத்தகைய நிறுவனங்கள்:

   (அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்;

   (ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளுட்பட (வெளிநாட்டு வங்கிகள்) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனிகள்;

   (இ) கரைகடந்த கம்பெனிகளாகப் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்;

(ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுட்பட, களரிகள், சங்கங்கள் அல்லது வேறெவையேனும் ஒழுங்கமைப்புக்கள்.

6. இறந்த நேரத்தில் இறந்தவர், அல்லது தீர்த்துவைத்தல் செய்யப்பட்ட நேரத்தில் தீர்த்துவைப்பவர் மேலே 1 முதல் 5 வரையிலான பந்திகளின் நியதிகளின் படி வதிபவராகவிருந்தவிடத்து, அத்தன்மையில் மட்டுமே செயலாற்றும் போது இறுதிவிருப்பாவண நம்பிக்கைப் பொறுப்புகளின் அல்லது வாழ்வோரிடைத் தீர்த்துவைத்தல்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் மரணச் சொத்துக்களின் நிருவாகிகள் அல்லது இறுதி விருப்பாவணங்களின் நிறைவேற்றுநர்கள்.

7. 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக்கப்பற்றொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட, தனியாள் இலங்கைக் கப்பலொன்றில் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற காலப்பகுதியின் போது, அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுகின்ற இலங்கைப் பிரசைகள்.

8. மேலே 1, 2, 3 அல்லது 7 என்னும் பந்திகளிலுள்ள நிபந்தனைகளைத் திருப்தி செய்யாத இலங்கைப் பிரசையாகவுள்ள அல்லது இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட தனியாட்கள், சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும், கட்டளைகளுக்கும், பணிப்புகளுக்கும் அமைய, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான நோக்கத்துக்காக மட்டுமே இலங்கையில் வதிபவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

2046/08ஆம் இலக்கம் - 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை

(அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்**

1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் செலாவணி கட்டுப்பாட்டாளரினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

யு.பி. அலவத்தகே
**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2017 நவம்பர் 20

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

**நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) பிரிவு 9(1)இன் நியதிகளில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

1. அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு சட்டத்தின் 4ஆம் பிரிவின் நியதிகளில், அதன் தொடர்பான அதிகாரமளித்தலில் குறித்துரைக்கப்பட்டளவிற்கு முதல்வர் அல்லது இடையேற்பாட்டாளரென்ற விதத்தில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினைக் கையாளமுடியும்.

2. இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது வதியும் ஆளொருவர் (அவரின் வாழ்க்கைத் துணைவர் பிள்ளைகள் அல்லது பெற்றோர் உட்பட) இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணிக்கு அல்லது மறுதலையாக மாற்றுகின்றமையுடன் தொடர்புபட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட முடியும்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இச்சட்டத்தின் பிரிவு 6(3) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு கோரிக்கைகளின் உண்மைத்தன்மை மற்றும் சரிபார்ப்புக்களையிட்டு அவர்களே திருப்தியடைந்த பின்னர், இப்பணிப்புரையின் அட்டவணை I இல் காணப்படும் விபரங்களின்படி எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கலாம். இப்பணிப்புரைகளின் அட்டவணை I விளக்கக் குறிப்புக்களைக் கொண்ட பட்டியலாகும். இது நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் குறிப்பிட்ட வகைகளுக்கான உதாரணங்களைத் தருவதுடன் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் முழுமையான பட்டியலைத் தரவில்லை.

4. உண்மைத்தன்மையினையும் மற்றும் சரிபார்ப்புக்களையும் மதிப்பிடுகையில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கல்களின் தன்மை மற்றும் பணவனுப்பல்களின் நன்மைபெறுநர் என்பனவற்றுடன் தொடர்பான ஆவணச் சான்றுகளை அல்லது வேறு ஏதேனும் கிடைக்கத்தக்கத் தகவல்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியின் வணிகப்படுத்தலுக்கான வழிகாட்டல் இப்பணிப்புரைகளின் அட்டவணை IIஇல் தரப்பட்டுள்ளது. இக்கொடுக்கல்வாங்கல்கள் கொடுப்பனவுகள் (வெளிப்பாய்ச்சல்) மற்றும் பெறுகைகள் (உட்பாய்ச்சல்கள்) இரண்டையும் உள்ளடக்குவதுடன், நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் எந்தவொரு வகைக்குமான எந்தவொரு உள்முகப் பணவனுப்பல்களும் கட்டுப்பாடெதுவுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கை மத்திய வங்கியினால் சரிபார்ப்பதற்காக ஒவ்வொரு நடைமுறை கொடுக்கல்வாங்கல்களினதும்

அடிப்படையில் அவை தொடர்பான எந்தவொரு தகவலையும் அல்லது ஆவணங்களையும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு வைத்திருத்தல் வேண்டும்.

7. சட்டத்தின் பிரிவு 6(5) இற்கு இணங்கிச் செல்லும் விதத்தில் சட்டத்தின் பிரிவு 6(4) இல் தெரிவிக்கப்பட்ட காரணங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுவதற்கு மறுக்கப்படலாம்.

**8. கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல்:**

8.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் 2018 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணிக்கு அல்லது மறுதலையாக மாற்றுவதற்குத் தேவைப்படுத்தும் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியினை வாங்கும் விற்கும் வாடிக்கையாளர்களிடமிருந்து முறையே இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் தரப்பட்டுள்ள புதிய படிவத்திலுள்ளவாறு முறையே படிவம் I (வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள்) மற்றும் படிவம் 2 (வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள்) என்பனவற்றைத் துல்லியமாகவும் பூரணமாகவும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதுவரை, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரையின்படி, முறையே இணைப்பு III மற்றும் இணைப்பு IV இல் உள்ள படிவம் 1 மற்றும் படிவம் 2 இல் தரப்பட்டுள்ள ஏற்கனவேயுள்ள படிவமுறைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

8.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய அனைத்து வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீதான தகவல்களை (கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியினைக் கருத்திற் கொள்ளாது) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமை - FOREXNET (https://www.cbsl.lk/forexnet) ஊடாக இலத்திரனியல் முறையில் நாளாந்த அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.3 இலங்கை மத்திய வங்கியின் கிரமமான பரிசோதனைகளை இயலச்செய்யும் விதத்திலும் தேவையெனக் கருதப்படும் பொழுதும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலேயுள்ள பந்தி 8.1 இன்படி பெற்றுக்கொள்ளப்பட்ட படிவம் 1 மற்றும் படிவம் 2 இனைக் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் உண்மைத்தன்மையினை நிறுவுவதற்குத் தேவையான ஆவணச்சான்றுகளுடன் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து குறைந்தபட்சம் ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு வங்கி/ கிளைகளின் பணிமனைகளில் அல்லது மையப்படுத்தப்பட்ட செயன்முறைப்படுத்தல் பிரிவில் பேணுதல் வேண்டும்.

8.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு இலத்திரனியல் ரீதியாக சமர்ப்பிக்கப்பட்ட படிவம் 1 மற்றும் படிவம் 2இல் உள்ள தகவல்களின் துல்லியத்தன்மையின் சரிபார்ப்புக்களையும் பூரணப்படுத்தல்களையும் அதன் உள்ளகக் கணக்காய்வுகளிலும் காலாந்தர மீளாய்வுகளிலும் இணங்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் அவை மேற்கொள்ளப்பட்டமைக்குச் சான்றாக இலங்கை மத்திய வங்கியின் பரீட்சிப்புக்களுக்கு அவை ஆயத்தநிலையில் கிடைக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

**2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான அட்டவணை I**

நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விளக்கக் குறிப்பு

**1. பணிகள் மற்றும் வழமையான குறுங்கால வங்கித்தொழில் மற்றும் கொடுகடன் வசதிகள் உட்பட வெளிநாட்டு வர்த்தகம், ஏனைய நடைமுறை வியாபாரங்கள்**

**1.1 வெளிநாட்டு வர்த்தகம்**

**1.1.1. இலங்கைக்கான பொருட்களின் இறக்குமதி மற்றும் இலங்கையிலிருந்தான பொருட்களின் ஏற்றுமதி**

1.1.1.1 பொதுவான வணிகப் பொருட்கள், இவை அசையும் பொருட்களை உள்ளடக்குகின்றன.

1.1.1.2 திருத்தல் அல்லது பதனிடலுக்கான பொருட்களின் ஏற்றுமதிகள் அல்லது இறக்குமதிகள்.

1.1.1.3 எரிபொருட்கள், மளிகைப் பொருட்கள், களஞ்சியங்கள் மற்றும் நிரம்பல்கள் போன்ற கொண்டு செல்பவரினால் துறைமுகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்.

**1.1.2. சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகம்**

1.1.2.1 இறக்குமதி செய்யப்பட்டு மூன்றாவது நாட்டிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படும் வரை வரி செலுத்தப்படாது சுங்கக் களஞ்சிய அறைகளில் சேமித்து வைக்கப்படும் பொருட்கள்.

1.1.2.2 மூன்றாவது நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட முன்னர் வரி செலுத்தப்படாது சுங்க களஞ்சியத்தில் வைத்து அல்லது சுங்கப்பகுதியில் வைத்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை மீளப் பொதியிடல்/ மீள சுட்டுத் துண்டிடல்/ எளிதான பதனிடல்களை மேற்கொள்ளுதல்.

1.1.2.3 இலங்கைக்குப் பொருட்கள் வராமலேயே இரண்டாவது நாட்டிலிருந்து மூன்றாவது நாட்டிற்குப் பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்தல்.

1.1.2.4. வரி செலுத்தப்படாது சுங்கக் களஞ்சியத்திற்குப் பொருட்களை எடுத்துச் செல்லாமலேயே இலங்கைத் துறைமுகமொன்றிற்குள் கப்பல் அல்லது வானூர்தியிலிருந்து இன்னொன்றிற்குப் பொருட்களை மாற்றுதல்.

**1.2 பணிகள் உட்பட ஏனைய நடைமுறை வியாபாரங்கள்**

1.2.1 மற்றையவர்களுக்குச் சொந்தமான பௌதீக உள்ளீடுகளின் தயாரிப்புப் பணிகள் (பதனிடல் பணிகள்), இது பதனிடல், பொருத்தல், சுட்டுத் துண்டிடுதல் மற்றும் பொதியிடல் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

1.2.2 பேணல் மற்றும் திருத்தல் பணிகள், இவை கப்பல்கள், வானூர்திகள் மற்றும் ஏனைய போக்குவரத்துக் கருவிகள் போன்றவற்றின் திருத்தல் மற்றும் பேணலை உள்ளடக்குகிறது.

1.2.3 போக்குவரத்துப் பணிகள், இவை பயணிகளைக் கொண்டு செல்பவையுடன் தொடர்பான பணிகள், பொருட்களின் நகர்வுகள்

(சரக்கு) மற்றும் அஞ்சல், கூரியர், சரக்கு கையாளல் மற்றும் களஞ்சியப்படுத்தல் பணிகள் போன்றவை உள்ளிட்ட தொடர்பான ஆதரவுப் பணிகளை உள்ளடக்குகிறது.

1.2.4 பயண முகவர்கள், சுற்றுலா தொழிற்பாட்டாளர்கள் அல்லது ஏனைய பணி வழங்குவோரூடாக ஒழுங்கு செய்யப்பட்ட பயணப் பணிகள் உட்பட, வியாபாரம் கல்வி, சுகாதாரம், விடுமுறை, யாத்திரை, ஆய்வரங்குகள், விளையாட்டு, மாநாடு, கலாச்சார நடவடிக்கைகள், விஜயம் செய்தல் என்பனவற்றுடன் தொடர்பான பயணம்.

1.2.5 கட்டுமானப் பணிகள், இவை உருவாக்கம், புத்தாக்கம், திருத்தல், வடிவமைப்பு, நிலையான சொத்துக்களின் விரிவாக்கம் (கட்டடங்களின் வடிவமைப்பு, பொறியியற்படுத்தல் தன்மையின் காணி மேம்பாடுகள் போன்றவை), செயற்றிட்டங்களின் கட்டுமானம் மற்றும் நிறுவுதல்கள் (வீதிகள், பாலங்கள், அணைகள் போன்றவை), இடங்களைத் தயார்படுத்தல் மற்றும் வர்ணம் தீட்டுதல், நீர்க்குழாய் வேலைகள், இடித்தல் போன்ற விசேட பணிகள் மற்றும் கட்டுமானச் செயற்றிட்டத்தின் முகாமைப்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

1.2.6 தொடர்பூட்டல் பணிகள், இவை அஞ்சல், கூரியர், வானொலி, தொலைத் தொடர்பூட்டல் பணிகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

1.2.7 காப்புறுதியுடன் தொடர்பான பணிகள், இவை உள்ளூர் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு சரக்கு அல்லது கப்பல் காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் காப்புறுதியுடன் தொடர்பான மற்றைய காப்புறுதிகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

1.2.8 நிதியியல் பணிகள், இவை கட்டணங்கள், தரகுகள், தரகுப் பணம், காரணிப்படுத்தல், ஒப்புறுதிகள் அல்லது கொடுப்பனவு தீர்ப்பனவுக் கட்டணங்கள், கொடுகடன் தரமிடல் கட்டணங்கள், நம்பிக்கைப் பொறுப்புக் கட்டணங்கள் மற்றும் ஏனைய இடையேற்பாட்டு பணிக் கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.9 தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள், இவை ஒலிபரப்பு மற்றும் கடத்திப் பணிகள், வியாபார வலையமைப்புப் பணிகள், கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் பணிகள், முறைமை பேணல் மற்றும் ஏனைய ஆதரவுப் பணிகள் (நிறுவுதல், திருத்தல், பயன்படுத்துவதுடன் தொடர்பான உரிமங்கள் போன்றவை), வடிவமைத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டப்படுத்தல், உத்தரவாதக் கோரல்கள், புதுப்பித்தல் கட்டணங்கள் மற்றும் தரவுச் செயன்முறைப்படுத்தல் அல்லது வெப் உதவிப் பணிகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

1.2.10 வேத்துரிமை மற்றும் ஏனைய வியாபாரம் தொடர்பான கட்டணங்கள், இவை உரிமக் கட்டணம், வணிக உரிமக் கட்டணம், முகாமைத்துவக் கட்டணம், முடிவுறுத்தல் கட்டணம், உற்பத்தி ஊக்குவிப்பு பணிக் கட்டணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணம் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.11 கண்டுபிடிப்புக்களுக்கான தனியுரிமைப் பத்திரம், பதிப்புரிமை, கைத்தொழில் செயன்முறைகள், வடிவமைப்பு, வர்த்தக இரகசியங்கள், தலைப்பு அனுசரணைகளுக்கான பிரத்தியேக உரிமை, ஊடக உரிமக் கட்டணம் போன்றவை தவிர்ந்த குத்தகை வாடகை மற்றும் ஏனைய மாற்றத்தக்க ஒப்பந்தங்கள் போன்ற புலமைச் சொத்துரிமையினைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்.

1.2.12 ஏனைய வியாபாரப் பணிகள், இவை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள், தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் (சட்டம், கணக்கீடு, முகாமைத்துவம், ஆலோசனை, பொதுமக்கள் தொடர்புகள், விளம்பரப்படுத்தல், சந்தை ஆராய்ச்சிப் பணிகள் போன்றவை உட்பட), தொழில்நுட்பப் பணிகள் (கட்டடக்கலை, பொறியியல் பணிகள் போன்றவை உட்பட), வர்த்தகத்துடன் தொடர்பான பணிகள் (வணிகப்படுத்தல் (துறைமுகத்திலான வர்த்தகம்), வெளிநாட்டு மாலுமிகளுக்கான கூலிகள், வசதிகளின் கொள்வனவு, தொடர்பான நியதிக் கொடுப்பனவுகள், ஒப்பந்த அடிப்படையிலான கப்பல், வானூர்திகள், கொள்கலன் போன்றவற்றிற்கான வாடகை உட்பட பன்னாட்டு நீர்ப்பரப்பில் உள்நாட்டு கப்பல் போக்குவரத்துக் கம்பனிகளினால் தொழிற்படுத்தப்படும் கப்பல் தொழிற்பாடுகள்) மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.13 கட்புல செவிப்புல மற்றும் தொடர்பான பணிகள் போன்றவை உட்பட தனியாள், கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்குப் பணிகள்.

1.2.14 கட்டணம் மற்றும் விதிப்புக்கள், இவை உறுப்புரிமைச் சந்தாக்கள், உலகளாவிய மாநாடுகள்/ ஆய்வரங்குகள்/ பாடநெறிகளைப் பதிவு செய்தல் மற்றும் பங்கேற்புக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், கௌரவக் கொடுப்பனவுகள், இணைப்புக் கட்டணங்கள், கடப்பாட்டுக் கட்டணங்கள், பன்னாட்டு பிரசுரக் கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.15 ஏனைய பணிகள், இது அரசாங்கங்கள், பன்னாட்டு மற்றும் பிரதேச அமைப்புக்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையேயான அனைத்துப் பணிகள் அதாவது தூதரகச் செலவுகள், விசாக் கட்டணங்கள், தேர்ச்சி அல்லது அறிமுக மதிப்பீட்டுக் கட்டணங்கள், மருத்துவப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் விசா தொடர்பான ஆவணங்களின் பதிவு மீதான செயன்முறைப்படுத்தல் கட்டணம் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

1.2.16 ஏனைய நடைமுறை வியாபாரங்கள், இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

1.2.16.1 குறிப்பிட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்று தொடர்பில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஒருவரின் சார்பில் அல்லது மறுதலையாக, இலங்கையில் வதியுமொருவரினால் மீளளிக்கத்தக்க வைப்பாக அல்லது பிணையமாக முன்கூட்டியே வைப்புச் செய்யப்படவுள்ள முற்பணம்.

1.2.16.2 தரப்பினரிடையேயான தொடர்பான வியாபாரம், பணி உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படுவதனைத் தொடர்ந்து இலங்கைக்கு வெளியே வதிபவர்களுக்கான கொடுப்பனவுகளின் மீளளிப்பு (நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்று தொடர்பில் உள்முகப் பணவனுப்பலாகப் பெறப்பட்டவை).

1.2.16.3 வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் உள்நாட்டில் வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் அல்லது ஒப்பந்தங்கள் தொடர்பில் கப்பற்படுத்தல் அல்லது வான் சரக்கு மற்றும் வேறு போக்குவரத்துச் செலவுகள் போன்றன உட்பட பொருட்களின் கொள்வனவிற்கான பணவனுப்பல்.

1.2.16.4 வதியும் தொழில்தருநர் கம்பனிகள்/ நிறுவனங்களுக் காக மேற்கொள்ளப்பட்ட இலங்கையிலுள்ள செயற்றிட்டங்கள் அல்லது ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்குப் பிடித்துவைக்கப்பட்ட பணத்தினை விடுவித்தல்.

1.2.16.5 வதியும் செயற்றிட்டக் கம்பனிகள்/ நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கையிலுள்ள செயற்றிட்டங்களுக்காக வெளிநாட்டுக் கொடைஞர்கள் அல்லது முகவர்களிடமிருந்து உள்முகப் பணவனுப்பல்களாகப் பெறப்பட்ட ஏதேனும் செலவிடப்படாத அல்லது பயன்படுத்தப்படாத நிதிகளை அனுப்புதல்.

1.2.16.6 அத்தகைய பணி வழங்குபவர்கள் முகவராண்மை உடன்படிக்கைகளை வைத்திருக்கும் தொடர்பான வெளிநாட்டு முகவர்களுக்கு இலங்கை ரூபாயில் சரக்கு மற்றும் பயணக் கட்டணங்களை இலங்கையிலுள்ள கப்பற்படுத்தல், வான் பயண முகவர்கள் மற்றும சரக்கு னுப்புவோரினால் சேகரிக்கப்பட்ட நிதிகளை அனுப்புதல்.

1.2.16.7 விசா பணிகள் அல்லது செயன்முறைப்படுத்தல் நிலையங்கள் (இராசதந்திர தூதரகங்கள் அல்லாதவை) மற்றும் இலங்கையிலுள்ள கல்வி/ பயிற்சி வழங்கல் நிறுவனங்கள் முறையே விசா விண்ணப்பதாரிகள் மற்றும் உள்ளூர் மாணவர்களிடமிருந்து இலங்கை ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் விசாக் கட்டணமாக, பரீட்சை அல்லது பதிவுக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட நிதிகளை அத்தகைய பணி வழங்குவோர் உடன்படிக்கைகளை மேற்கொண்டிருந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுப்புதல்.

1.2.16.8 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்ட) கீழ் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியினால் (இலங்கையில் தொழிற்படுகின்ற வெளிநாட்டுக் கம்பனி தொடர்பில் ஏற்பட்ட) செலவிடப்பட்ட பணத்தினை வெளிநாட்டிலுள்ள தாய்க் கம்பனிக்கு அனுப்புதல்.

1.2.16.9 பல்தேசியக் கம்பனியுடன் இணைக்கப்பட்டதாகக் காணப்படும் இலங்கையிலுள்ள கம்பனியொன்றினால் கம்பனிகளுக்கிடையிலான கட்டணத்தினை (விடயம் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களாகக் குறிப்பிடப்பட்டிருக்குமிடத்து) அனுப்புதல்.

1.2.16.10 வெளிநாடுகளிலுள்ள குறிப்பிட்ட அரசாங்கங்களினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றவாறு மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்கின்ற இலங்கையிலுள்ள மாணவர்களின் வாழ்க்கைச் செலவினைப் பூர்த்தி செய்வதற்கு (கொள்கையளவில் விசா ஒப்புதலளிக்கப்பட்ட மாணவர்கள்) முன்கூட்டியே நிதிகளை அனுப்புதல்.

**1.3 வழமையான குறுங்கால வங்கித்தொழில் மற்றும் கொடுகடன் வசதிகள்**

1.3.1 நாணயக் கடிதங்கள்

பன்னாட்டு வர்த்தகச் சம்மேளனத்தின் ஆவணப்படுத்தல் கொடுகடனுக்காக ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க நடைமுறை ஏற்பாடுகளின் கீழ், அத்தகைய நாணயக் கடிதங்கள் நிறுவப்பட்டிருக்கும் பொழுது பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பாருட்டு, அதிகாரமளிகப்பட்ட வணிகர்களினூடாக நாணயக் கடிதங்களின் வழங்கல், செல்லுபடியாகும் காலத்தினை நீடித்தல் மற்றும் அவற்றின் கிளை வாசகங்களில் திருத்தங்கள் என்பனவற்றை மேற்கொள்ளலாம்.

1.3.2 வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் வசதிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்

வெளிநாட்டு நிரம்பலர்களினால் பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை (அதாவது கொடுகடன் காலமொன்றுடன் கொடுப்பனவு நியதிகள் தொடர்புபட்டிருக்குமிடத்து), அப்பொழுது நிலவுகின்ற பன்னாட்டு வட்டி வீதங்களை விஞ்சாத விதத்தில் மற்றும் வழங்கப்பட்ட கொடுகடன் காலத்திற்கு அல்லது உண்மையான தீர்ப்பனவுத் திகதிக்கப்பால் (இதில் எது முதலில் வருகின்றதோ ப்பொழுது) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுப்பி வைக்க முடியும்.

1.3.3 வங்கி உத்தரவாதங்கள் மற்றும் துணைநில் நாணயக் கடிதங்கள்

நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அத்தகைய வங்கி உத்தரவாதங்கள் அல்லது துணைநில் நாணயக் கடிதங்கள் மீது கோரல்களாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வங்கி உத்தரவாதங்களை அல்லது துணைநில் நாணயக் கடிதங்களை வழங்கி புதுப்பிக்கலாம்.

**2. கடன்கள் மீதான வட்டி மற்றும் ஏனைய முதலீடுகளிலிருந்தான தேறிய வருமானம்**

2.1 முதலீட்டு வருமானம், இது பங்கிலாபங்கள், வட்டி, வாடகை மற்றும் இலாபங்களை உள்ளடக்குகிறது -

2.1.1 அரச பிணையங்கள், நேரடி மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகளிலிருந்தான வருமானம் உட்பட முதலீட்டு வருமானம்.

2.1.2 நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பெறப்பட்ட கடன்கள் தொடர்பிலான கடன் வட்டி, கடப்பாட்டுக் கட்டணம், கடன் நிருவாகம் மற்றும் ஏனைய தொடர்பான கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் என்பனவற்றின் கொடுப்பனவுகள்.

2.1.3 நடைமுறை வருவாய்களிலிருந்து பிரகடனப்படுத்தப்பட்ட கம்பனிகள் அல்லது பங்குடமைகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள். இவை முன்னைய ஆண்டுகளின் பங்கிடப்படாத இலாபங்களிலிருந்து பிரகடனப்படுத்தப்பட்ட இலாபங்கள் அல்லது பங்கிலாபங்கள், கம்பனி ஒதுக்குகள் அல்லது நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்தான ஏதேனும் மாற்றல்களை உள்ளடக்காது.

**3. கடன்களின் தீர்ப்பனவுகள் மற்றும் நேரடி முதலீடுகளின் தேய்மானத்திற்கான கொடுப்பனவுகள்**

3.1 கடன் உடன்படிக்கைகள் தொடர்பான கொடுப்பனவுகள் உரிய தவணையில் செலுத்தப்படாதிருக்கையில் மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் மீள்கொடுப்பனவுத் தொகை மற்றும் உரிய காலத்தின் கொடுப்பனவு, நீக்கப்பட்ட

1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க இசைந்தவையாக இருக்கும்.

3.2 அத்தகைய முதலீடுகள், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் பொதுவாக அல்லது சிறப்பு விதமாக ஒப்புதலளிக்கப்பட்டவையாக இருக்குமிடத்து, நேரடி முதலீடுகளின் தேய்மானமாக நியாயமானதொரு தொகையினைக் கொண்ட கொடுப்பனவு.

**4. குடும்பங்களின் வாழ்க்கைச் செலவுகளுக்கான பணவனுப்பல்கள்**

4.1 வெளிநாட்டு ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் (தேசியத்தினைக் கருத்திற் கொள்ளாது), இவை ஓய்வூதியம் அல்லது சேம நிதியப் பங்களிப்புக்கள், கோரப்படாத அல்லது வாழ்க்கை மற்றும் ஏனைய செலவுகள் உட்பட தொழில்தருநர்களினால் செலுத்தப்படும் கூலிகள், சம்பளங்கள் மற்றும் வேறு தொழில்நிலை நன்மைகளை உள்ளடக்குகிறது.

4.2 முன்னர் அல்லது தற்பொழுது தொழில்புரியும் வெளிநாட்டு ஊழியர்களின் ஒன்றுசேர்ந்த சம்பளங்கள் மற்றும் தொழில்நிலை அல்லது வேறு எவற்றுடனும் தொடர்பான நன்மைகளின் கொடுப்பனவுகளாக அல்லது பணவனுப்பல் நிதிகளாக, வெளிநாடுகளில் பேணப்படும் வெளிநாட்டில் தொழில்புரிபவர் கணக்கிற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினர் கணக்கிற்கு (அதாவது பன்னாட்டு ஓய்வூதிய நிதியங்கள்/ திட்டங்கள், தாய்க் கம்பனிகள் போன்றவை) நிதியங்களை அனுப்புதல்.

4.3 வெளிநாட்டில் வதியும் குடும்பங்கள் அல்லது தங்கியிருப்போரினை (பெற்றோர், வாழ்க்கைத் துணைவர், பிள்ளைகள்) பராமரிப்பதற்கான நிதியங்களின் பணவனுப்பல்.

**5. பல்வகை நடைமுறை மாற்றல்கள்**

5.1 நிவாரண முயற்சிகளுடன் இணைந்த உணவு, ஆடை மற்றும் நுகர்வுப்பொருட்கள், மருத்துவ வழங்கல்கள் போன்ற அன்பளிப்புக்கள் தொடர்பான அரச மற்றும் தனிப்பட்ட மாற்றல்கள்.

5.2 இணங்கிக் கொள்ளாமை அல்லது சட்ட மீறுதல்கள் மீதான சட்ட நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய அரச அல்லது நிறுவன ரீதியான ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகள் என்பனவற்றினால் விதிக்கப்பட்ட குற்றக் கட்டணங்கள், தண்டப் பணங்கள், விதிப்புக்கள் மற்றும் கோரல்கள் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள். இவை ஆட்களுக்கு ஏற்பட்ட காயம் அல்லது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் அல்லது வேறு இழப்புகளுக்கான நட்ட ஈடுகள் (காப்புறுதிப் பூட்கைகளை உள்ளடக்கவில்லை) வழங்கப்பட்ட கட்டாயக் கொடுப்பனவுகள் அல்லது சட்ட நீதிமன்றத்தில் இணங்கிக்கொள்ளப்பட்ட தீர்வுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

**2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான அட்டவணை II**

**நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் வணிகங்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள்**

**(1) வர்த்தகக் கொடுப்பனவுகள்**

**1.1 வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள்**

**1.1.1 பொதுவான கொள்கை**

1.1.1.1 நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை உருவாக்கும் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்குட்பட்டு, எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகிறது.

1.1.1.2 ஏற்றுமதிப் பெறுகைகளை, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஏற்றுமதியாளரினால் திறந்து பேணப்படும் ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

**1.1.2 தரகுகள் மற்றும் கோரல்கள்**

1.1.2.1 இலங்கையிலுள்ள வதிவோர் ஒருவரினால் பெறப்பட்ட வணிக ஏற்றுமதிகள் அல்லது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகள் அல்லது உள்முகப் பணவனுப்பல்கள் அனுப்பப்படுமிடத்து வெளிநாட்டிலுள்ள முகவருக்கான தரகுகளின் அனுப்பல்.

1.1.2.2 இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகள் பெறப்படுமிடத்து, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் தரம் மற்றும் அளவுகளில் காணப்படும் வேறுபாடுகள் தொடர்பில் வெளிநாட்டு வாங்குநர்களினால் செய்யப்படும் கோரல்கள் மீதான நியாயமான தொகை கொண்ட பணவனுப்பல்.

**1.1.3 உள்முகப் பணவனுப்பல்களின் திரும்பல் அல்லது இரத்து** - ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்த வரையில் அத்தகைய ஏற்றுமதிக் கட்டளைகள் பூரணப்படுத்தப்படாமல் அல்லது நிதிகள் மிகையாகப் பெறப்பட்டிருக்குமிடத்து அனுப்பியவர் அதனை மீளக் கோருமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய ஏற்றுமதிப் பொருட்களுக்காக இலங்கையில் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களைத் திருப்பி அனுப்பலாம்.

**1.2 வணிகப் பொருட்களின் இறக்குமதிகள்**

1.2.1 பொதுவான கொள்கை - இறக்குமதிப் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்குட்பட்டு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

1.2.2 குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினருக்கான இறக்குமதிக் கொடுப்பனவுகள் - மற்றொரு வெளிநாட்டு நிரம்பலரினால் (வாங்குநருக்கும் விற்பவருக்குமிடையிலான இணங்கிக் கொள்ளப்பட்ட வர்த்தக உடன்படிக்கையின்படி) நிரம்பல் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக வெளிநாடுகளிலுள்ள குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினருக்கு பொருட்களின் இறக்குமதியாளர்களினால் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கலாம்.

1.3 **சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகம்**

1.3.1 பொதுவான கொள்கை

1.3.1.1 அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்குட்பட்டு, சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தவிர்ந்த, வங்கித்தொழில் முறைமையூடாகக் கட்டுப்பாடுகளெதுவுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

1.3.1.2 சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகத்தின் கீழ், பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகள், பெறுமதி கூட்டப்பட்ட செலவுகள், வங்கி விதிப்புக்கள் மற்றும் இலாபங்கள் உட்பட மற்றைய உள்நாட்டுக் கட்டணங்கள் என்பன உட்பட உள்நாட்டு வர்த்தகம் போதுமான இலாபங்கள் பெறுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பெறப்படக்கூடிய தொடர்பான கொடுப்பனவுகளிலும் பார்க்கக் குறைவானதாக இருத்தல் வேண்டும்.

(2) பணிக் கொடுப்பனவுகள்

2.1 **பொதுவான கொள்கை** - நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் கீழ்வரும் பணிகளுக்கான கொடுப்பனவுகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

2.2 **உள்முகப் பணவனுப்பல்களைத் திருப்புதல் அல்லது இரத்துச் செய்தல்** - இலங்கையில் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் பெறப்பட்டும் பயன்படுத்தப்படாமல் அல்லது மிகையாக இருக்குமிடத்து அவற்றை அனுப்பியவர் மீளக்கோருமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அப்பணவனுப்பல்களை திருப்பியனுப்பலாம்.

(3) பொதுவானவை

3.1 **பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல்**

3.1.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பயணம் செய்பவர் இலங்கையில் வதியும் இலங்கை பிரசையாக இருக்குமிடத்து கடவுச்சீட்டில் பொருத்தமான புறக் குறிப்பீட்டினைச் செய்வதுடன், உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 (அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயங்கள்) கொண்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு அத்தகைய ஆள் எந்தவொரு நோக்கத்திற்காகவும் (பயணம், வியாபாரம், பயிற்சி, வெளிநாட்டில் மருத்துவச் சிகிச்சை போன்றவை உட்பட) வெளிநாட்டிற்குப் பயணம் செய்யுமிடத்து அவருக்கு பயணப் படிகளை விடுவித்தல் வேண்டும்.

3.1.2 வெளிநாட்டுப் பயணத்திற்காக இலங்கையை விட்டுச் செல்லும் பொழுது வெளிநாட்டு நாணயத்தில் நாணயப் படிகளைப் பெறுவதற்கு உரித்துடைய ஆட்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுப் பயண அட்டைகளை வழங்கலாம். சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின்படி, பிரயாண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தினை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்குமிடத்து எந்தவொரு கணக்கிலிருந்தும் பற்று வைப்பதன் மூலம் வெளிநாட்டுப் பயண அட்டையொன்றினை வழங்கலாம்.

3.2 **கொடுப்பனவு அட்டைகள்** - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலங்கையிலுள்ள ஆளொருவருக்குத் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அதாவது அட்டையை வைத்திருப்பவரின், அவரின்/ அவளின் வாழ்க்கைத் துணைவர், பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்கு வர்த்தக நோக்கம் தவிர்ந்த மற்றைய நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே வதிபவர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை அதாவது, கொடுகடன்/ பற்று/ பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டைகளை வழங்கமுடியும். எனினும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்குவதும் பயன்படுத்துவதும் இது தொடர்பில் விடுக்கப்பட்ட தனியான குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டதாகும்.

3.3 **முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்** - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் முக்கியமான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக ஏற்படும் செலாவணி இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்களது வாடிக்கையாளர்களின் வழமையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் உண்மைத்தன்மையினைக் கொண்டிருப்பது பற்றி திருப்தியடைவதன் மூலம் வாடிக்கையாளர்களுடன் முன்னோக்கிய ஒப்பந்தங்களில் நுழைய முடியும்.

3.4 **செலவளிக்கப்படாத ரூபாவினை மீளமாற்றுதல்** - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவரினால் வழங்கப்பட்ட தொடர்பான காசுமாற்றல் பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிப்பதன் மீது வெளிநாட்டுக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர் வசமுள்ள ஏதேனும் செலவு செய்யப்படாத இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணியாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மீளமாற்ற முடியும்.

**2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

| அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனை | | | படிவம் 1 |
|---|---|---|---|
| தே.அ.அ/ கடவுச்சீட்டு/ கம்பனி பதிவு இல. | | தொடர் இல. | |
| வருமான வரி கோப்பு இல./ | | | |
| விண்ணப்பதாரியின் பெயர் | | வங்கி குறியீடு | நோக்கக் குறியீடு |
| விண்ணப்பதாரியின் முகவரி | | கிளை குறியீடு | துணை நோக்கக் குறியீடு |
| விமானப் பயணச்சீட்டு இல. (பயண நோக்கத்திற்கு மாத்திரம்) | | நாட்டுக் குறியீடு | நாணயக் குறியீடு / விடுவிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை |
| நன்மைபெறுநரின் பெயர் | | வங்கி வரைவு | |
| நன்மைபெறுநரின் முகவரி | | தந்தி மாற்றல் | |
| நோக்கம் | | பயண அட்டை | |
| வெளிநாட்டுச் செலாவணிக்கு விண்ணப்பித்த தொகை | ஐ.அ.டொ. | | |
| | யூரோ | ஏனையவை (குறிப்பிடுக) | |
| | பி.பவுண் | | |
| என்னால் வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையுமென நான் வெளிப்படுத்துகிறேன் | | நாணய வழங்கல் | |
| திகதி | விண்ணப்பதாரியின் கையொப்பம் | | |
| வங்கியின் பயன்பாட்டிற்கு | திகதி / காசாளரின் கையொப்பம் / வணிகரின் கையொப்பமும் முத்திரையும் | குறிப்புக்கள் | |

குறிப்பு: விண்ணப்பதாரி இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணிக்கு மாற்றியவராக இருத்தல் வேண்டும். உதாரணமாக, வியாபார நோக்கங்களுக்காக கம்பனியொன்று ஊழியரொருவருக்கு வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கும் பொழுது அது விண்ணப்பதாரியாகவும் ஊழியரின் நன்மை பெறுநராகவும் இருத்தல் வேண்டும்.

**2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு II**

| அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு | | | படிவம் 2 |
|---|---|---|---|
| தே.அ.அ/கடவுச்சீட்டு கம்பனி பதிவு இல. | | தொடர் இல. | |
| வருமான வரி கோப்பு இல. | | | |
| விண்ணப்பதாரியின் பெயர் | | வங்கி குறியீடு | நோக்கக் குறியீடு |
| விண்ணப்பதாரியின் முகவரி | | கிளை குறியீடு | துணை நோக்கக் குறியீடு |
| | | நாட்டுக் குறியீடு | நாணயக் குறியீடு |
| | | | விடுவிக்கப்பட்ட தொகை |
| | | தொகை இலங்கை ரூபாவில் | |
| பணம் அனுப்பியவரின் பெயர் | | | |
| பணம் அனுப்பியவரின் முகவரி | | | |
| நோக்கம் | | | |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை | ஐ.அ.டொ. | | |
| | யூரோ | | |
| | பி.பவுண் | | |
| என்னால் வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையுமென நான் வெளிப்படுத்துகிறேன் | | | |
| திகதி | விண்ணப்பதாரியின் கையொப்பம் | மொத்தம் | |
| வங்கியின் பயன்பாட்டிற்கு | திகதி / காசாளரின் கையொப்பம் / அ. வணிகரின் கையொப்பமும் முத்திரையும் | குறிப்புக்கள் | |

குறிப்பு: படிவம் 2 நன்மைபெறுநரினால் நேரடியாக கையொப்பமிடப்படல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் உரியவரின் சார்பில் உள்முகப் பணவனுப்பல்களைப் பெறும் சந்தர்ப்பத்திலும் உள்ளகக் கணக்கு மாற்றல்கள் அதேநேரக் கணனிவழி வங்கித்தொழில் முறைமையில் இடம்பெறும் சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் கையொப்பமிடப்படல் வேண்டும்.

**2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு III**

| அ.வ. | கிளை | தொடர் இல. |
|---|---|---|
|   |   |   |

## இலங்கை மத்திய வங்கி

விடுவிக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான தகவல்
படிவம் 1 - வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள்

**சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்**

**வெளிநாட்டுச் செலாவணிக்கான விண்ணப்பதாரியினால் நிரப்பப்பட வேண்டியது.**

விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர்: ..................................................

(பெரிய எழுத்துக்களில்) : ..................................................

முகவரி : ..................................................

(பெரிய எழுத்துக்களில்) : ..................................................

தே.அ.அ. இலக்கம் : ..................................................

கடவுச்சீட்டு இலக்கம் : ..................................................

வருமான வரி கோப்பு இல. : ..................................................

விமான நிறுவனம் : ..................................................

விமானப் பயணச் சீட்டு இல. : ..................................................

இலங்கையிலிருந்து புறப்பட உத்தேசித்திருக்கும் திகதி : ..................................................

சேருமிடம் : ..................................................

நன்மைபெறுநரின் பெயர் மற்றும் முகவரி:
..................................................
..................................................

வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு/ அனுப்பலின் நோக்கம்
..................................................
..................................................

வெளிநாட்டுச் செலாவணி பின்வருவனவற்றிற்காக விண்ணப்பிக்கப்படுகிறது
- பயண அட்டை : ..................................................
- வரைவுகள் : ..................................................
- நாணயத்தாள்கள் : ..................................................
- ஏனையவை (குறிப்பிடுக) : ..................................................

இறக்குமதிக்கானவை
- விடயம் : ..................................................
- பெறுமதி : ..................................................

இப்படிவத்தில் என்னால் மேலே தரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். நான் இந்நோக்கத்திற்காக வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வெளிநாட்டுச் செலாவணிக்காக வேறு ஏதேனும் விண்ணப்பங்களைச் செய்திருக்கவில்லை.

**திகதி:** ........................ ..................................................

**தி.மா.ஆ.** *விண்ணப்பத்தாரியின் கையொப்பம்*

**சேரல்: வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர்**

**வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் நிரப்பப்பட வேண்டியது.**

கிளையின் குறியீடு : ..................................................

கிளையின் குறியீடு : ..................................................

நாட்டிற்கான குறியீடு : ..................................................

நோக்கத்திற்கான குறியீடு : ..................................................

நாணயத்திற்கான குறியீடு : ..................................................

வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி

பயண அட்டை : ..................................................

வரைவுகள் : ..................................................

நாணயத் தாள்கள் : ..................................................

ஏனையவை (குறிப்பிடுக) : ..................................................

வங்கியின் தொடர்பு இலக்கம்: ..................................................

தொடர்பான ஆவணங்களை நான் பரீட்சித்துள்ளேன். கோரிக்கையின் நம்பகத்தன்மையயிட்டு நான் திருப்திப்படுவதுடன் விண்ணப்பத்தாரியினால் தரப்பட்ட நோக்கத்திற்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனையையும் உறுதிப்படுத்துகின்றேன்.

**திகதி:** .......................... ..................................................

**தி.மா.ஆண்டு** *அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் ஒப்பம் மற்றும் முத்திரை*

முக்கிய குறிப்பு: படிவம் I விண்ணப்பதாரியினால் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடப்படல் வேண்டும். மூன்றாந்தரப்பினரினால் ஒப்பமிடப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. அனைத்து வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மீதான தகவல்களும் (கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியினைக் கருத்தில் கொள்ளாது படிவம் 1இன் பிரதிகள்) நாளாந்த அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணத் திணைக்களத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் இலத்திரனியலூடாக FOREX NET (https://www.cbsl.lk/forexnet) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அ.வ. - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்

**2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு IV**

| அ.வ. | கிளை | தொடர் இல. |
|---|---|---|
| | | |

## இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டுச் செலாவணியின் உள்முகப் பணவனுப்பல் தொடர்பான தகவல்

படிவம் 2 - வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு

| சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் | சேரல்: வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர் |
|---|---|
| உள்முகப் பணவனுப்பல் நன்மைபெறுநரினால் நிரப்பப்பட வேண்டியது.<br>முழுப்பெயர் : ........................................<br>: ........................................<br>முகவரி : ........................................<br>: ........................................<br>தே.அ.அ. இலக்கம் : ........................................<br>வருமான வரி கோப்பு இல. : ........................................<br>அனுப்புவரின் பெயர் மற்றும் முகவரி:<br>........................................<br>........................................<br>........................................<br>........................................<br>........................................<br>உள்முகப் பணவனுப்பலின் நோக்கம்<br>........................................<br>........................................<br>நாணயம் மற்றும் தொகை : ........................................<br>இப்படிவத்தில் என்னால் மேலே தரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் பெறப்பட்ட நிதியம் இப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுமெனவும் நான் வெளிப்படுத்துகின்றேன்.<br>திகதி: ........................ ........................................<br>தி.மா.ஆ. விண்ணப்பத்தாரியின் கையொப்பம் | அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் நிரப்பப்பட வேண்டியது.<br>வங்கியின் குறியீடு : ........................................<br>கிளையின் குறியீடு : ........................................<br>நாட்டிற்கான குறியீடு : ........................................<br>நாணயத்திற்கான குறியீடு : ........................................<br>தொகை : ........................................<br>தொடர்பான ஆவணங்களை நான் பரீட்சித்துள்ளேன். பணவனுப்பல்கள் நம்பகத்தன்மையையிட்டு நான் திருப்திப்படுவதுடன் வெளிநாட்டுச் செலாவணியில் கொள்வனவு அனுப்புவரினால் வழங்கப்பட்ட நோக்கங்களுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துகின்றேன்.<br>திகதி: ........................ ........................................<br>தி.மா.ஆண்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் ஒப்பம் மற்றும் முத்திரை |

| | |
|---|---|
| முக்கிய குறிப்பு: | படிவம் 2 நன்மைபெறுநரினால் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடப்படல் வேண்டும். உரியவரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உள்முகப் பணவனுப்பல்களைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பங்களிலும் உள்ளகக் கணக்கு மாற்றல்கள் அதேநேரக் கணனிவழி வங்கித்தொழில் முறைமையூடாக இடம்பெறும் சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் கையொப்பமிடப்படலாம். அனைத்து வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு தொடர்பான தகவல்களும் (கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியினைக் கருத்திற் கொள்ளாது படிவம் 2 இன் தகவல்கள்) நாளாந்த அடிப்படையில் அதிகாரம் பெற்ற வணிகரினால் வெளிநாட்டுச் செலாவணி வலையமைப்பினூடாக (http://www.cbsl.lk/forexnet) செலாவணித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

அ.வ. - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

### இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) பிரிவுகள் 6 மற்றும் 7 உடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 9(1) மற்றும் 9(2) பிரிவுகளின் நியதிகளில், இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலங்கையிலுள்ள ஆட்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு (அதாவது அட்டை உடமையாளர்) வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் பின்வரும் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுவதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(அ) வர்த்தக நோக்கங்களுக்காக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவிற்கு பயன்படுத்துவதனைத் தவிர, தனிப்பட்ட தன்மையான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கான ஏதேனும் கொடுப்பனவிற்கு.

(ஆ) இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையொன்று வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கெதிராக வழங்கப்பட்டிருக்குமிடத்து எந்தவொரு நோக்கத்திற்காகவும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு.

(இ) இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கிற்கெதிராக பற்று அட்டை வழங்கப்பட்டிருக்குமிடத்து எந்தவொரு நோக்கத்திற்காகவும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவிற்கு.

3. அட்டை உடமையாளரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணத்திற்கு எதிராக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பற்று அட்டைகளை வழங்கலாம்.

4. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் வரவுகளிலுள்ள நிதியத்திற்கு எதிராகவும் வெளிநிற்கும் தொகைகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் அல்லது உள்முக பணவனுப்பல்கள் மூலமும் தீர்க்கப்படும் என்ற நிபந்தனைக்கு எதிராகவும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை வழங்கப்பட்டிருந்தாலொழிய, அட்டை உரிமையாளர் இலங்கையை விட்டு புலம்பெயரும் பொழுது அல்லது தொழில்புரிவதற்காக வெளிநாட்டிற்கு செல்லும் பொழுது அத்தகைய ஆளுக்கு இலங்கையில் வழங்கப்பட்ட அட்டையினை வழங்கிய வங்கியிடம் கையளித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டே இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினை வழங்குதல் வேண்டும்.

5. கடன் அட்டையைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களை எடுப்பனவு செய்வது அல்லது கொடுகடன் அட்டை மூலமாக காசு முற்பணங்களைப் பெறுவது தொடர்பில் அத்தகைய நாணயங்கள் இப்பணிப்புரையின் பந்தி 2(அ) இன்கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கான சான்றுகளை அவர்கள் வைத்திருத்தல் வேண்டும் என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அட்டை உடமையாளர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வங்கியின் கம்பனி வாடிக்கையாளர்களுக்கு கம்பனி அட்டைகளை (கொடுகடன் அட்டை அல்லது பற்று அட்டைகள்) குறித்துரைக்கப்பட்ட ஊழியர்களின் அல்லது அத்தகைய கம்பனியின் நிறுவனங்கள்/ அமைப்புக்களின் பணிப்பாளர்களின் பெயர்களில், வர்த்தக நோக்கத்திற்காக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவது நீங்கலாக, நடைமுறை கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளக் நடைமுறைகளுக்கிணங்க வழங்க முடியும்.

7. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொடுகடன் இடர்நோ்வுகளை தணிப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளும் பொறிமுறையும் நடைமுறைக்கிடப்பட்டிருக்குமிடத்து கொடுகடன் வசதியுடன் (அதாவது கடன் அட்டைகள்) தொடர்பான இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை பின்வருவனவற்றிற்கு வழங்கலாம்.

(அ) இராஜதந்திர கடவுச்சீட்டினையும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினையும் வைத்திருக்கும் வெளிநாட்டுப் பிரசைகளுக்கு

(ஆ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு இலங்கையிலுள்ள அத்தகைய ஆட்களின் வெளிநாட்டு நாணயக் கணக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியில் 90 சதவீதமான நிதி என்ற வரையறைக்குட்பட்டு அதன் பிணையங்களைக் கொண்டு வழங்கப்படுமிடத்து, அத்தகைய இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது உறப்பட்ட செலவினத்தினை வெளிநாட்டிலிருந்தான உள்முக பணவனுப்பல்கள் மூலம் அல்லது வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்தான மாற்றல்கள் மூலம் தீா்ப்பனவு செய்தல் வேண்டும்.

8. இப்பணிப்புரையின் அதிகாரத்திற்கு உட்படாத ஏதேனும் நோக்கத்திற்கு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையூடாக இலங்கைக்கு வெளியே வதிபவருக்கு ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியைப் பெறவேண்டும் என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அட்டை உடமையாளர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

**9. மற்றைய தேவைப்பாடுகள்**

9.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பான தற்போதுள்ள ஒழுங்குவிதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி அவை பற்றி அவர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும் என்பதுடன் இணைப்பு Iஇல் உள்ளவாறு அத்தகைய விண்ணப்பதாரியிடமிருந்து வெளிப்படுத்தலொன்றினையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நெருங்கிக் கவனிக்கும் நடைமுறைகளை நிறைவேற்ற வேண்டியதுடன் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை எவரேனும் அட்டை உடமையாளர்கள் பயன்படுத்துகின்றனர் என்ற சந்தேகத்திற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமிடத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதனை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன் இது பற்றி வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவருதலும் வேண்டும்.

9.3 இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு மாத்திரமே அட்டை உடமையாளர்கள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஒவ்வொரு கணக்குடமையாளரினதும் கொடுக்கல்வாங்கல்களை வெளிநாட்டுச் செலாவணியிலும் இலங்கை ரூபாவிலும் தனித்தனியாக அடையாளம் காணுதல் வேண்டும்.

9.5 நீக்கப்பட்டுள்ள 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள், இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

**10. மாதாந்த அறிக்கையிடல்**

10.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் குறைந்தமட்ட வரையறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டு நாணயத்திலான காசு எடுப்பனவு உட்பட, அட்டை உடமையாளரின் வெளிநாட்டுச் செலாவணியில் செலவிட்ட செலவினம் தொடர்பிலான அனைத்து கொடுக்கல்வாங்கல்களினதும் விபரங்களை வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையான - FOREX - Net (https:// www.cbsl.lk/ forexnet) மூலமாக மாதாந்த அடிப்படையில் இலத்திரனியல் மூலமாக மாத்திரம் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு சமா்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சிய தனியொரு கொடுக்கல்வாங்கல்.

(ஆ) கலண்டர் மாதமொன்றின் போது ஐ.அ.டொலர் 10,000 அல்லது அதற்குச் சமமான வேறுஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சிய ஒன்றுசேர்ந்த பயன்பாட்டினைக் கொண்ட பல் கொடுக்கல்வாங்கல்கள்.

11. **இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(i) **"இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை"** என்பது பயன்படுத்துனர் வரவு, பற்று அல்லது வேறு ஏதேனும் வடிவிலான மாற்றல்களை இயலச்செய்யும் அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் பெறுமதி சேமிப்பு அட்டைகள் என்பனவற்றை உள்ளடக்குமிடத்து வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்லும் நோக்கத்திற்காக கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் விபரங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடையாளம் காணவும் முடியும்.

(ii) **"பற்று அட்டை"** என்பது அட்டை உடமையாளரின் கணக்கிலுள்ள வரவு நிலுவைகளிலிருந்து நேரடியாக பற்று வைப்பதன் மூலம் காசினை எடுப்பனவு செய்யவும் கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தவும் அத்துடன் அல்லது பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்த முடியுமொரு அட்டை என பொருள்படும்.

(iii) **"கடன் அட்டை"** என்பதன் பொருள் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குனரால் வழங்கப்படும் தொடர் கொடுகடனுடன் தொடர்புபட்டதாக இருக்குமிடத்து பயன்படுத்தப்பட்ட கடனை குறித்துரைக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தீர்ப்பனவு செய்யமுடியும். குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படாத ஏதேனும் தொகையின் மீது வழங்குநர் வட்டியை அல்லது வேறு ஏதேனும் கட்டணத்தினை விதிக்கலாம்.

(iv) **"தனியாள்"** என்பது அட்டை வைத்திருப்பவர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் பயன்பாட்டினைக் குறிக்கும், இது எந்தவொரு வர்த்தக நோக்கங்களுக்குமான பயன்பாட்டினை உள்ளடக்காது.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

*(வங்கியில் வைத்திருக்கப்படும் அட்டை வைத்திருப்பவரின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை விண்ணப்பத்தில் அல்லது ஒப்பந்தங்களை செய்பவரின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியவை)*

**இலங்கை மத்திய வங்கி**

**இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளுக்கான விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளின் வெளிப்படுத்துகை**

**சேரல்: பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

(கடன்/ பற்று அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைக்கெதிராக வெளிநாட்டுச் செலாவணியினைப் பெறுவதற்காக விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்படவேண்டியது)

.............................................. (பிரதான அட்டை வைத்திருப்பவர்/ துணை அட்டை வைத்திருப்பவர்) .............................. (பிரதான அட்டை வைத்திருப்பவர்/ துணை அட்டை வைத்திருப்பவர்) ஆகிய நான்/ நாங்கள் மேலே என்னால்/ எங்களால் இப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் பிரகடனம் செய்கின்றேன்/ செய்கின்றோம்.

நான்/ நாங்கள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் **2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்** (சட்டம்) ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நான்/ நாங்கள் அறிவோம் என்பதனை இத்தால் நான்/ நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம் இதற்கு உட்பட்டு வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்காக அட்டை பயன்படுத்தப்படுமென்பதற்கும் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நாம்/ நாங்கள் நடந்துகொள்வதற்கும் பொறுப்பேற்கிறோம்.

சட்டத்தின் நோக்கத்திற்காக .............................. வங்கி கேட்டுக்கொள்கின்றவாறு எனக்கு/ எங்களுக்கு வழங்கப்பட்ட அட்டை தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியில் என்னால்/ எங்களால் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் மீதான ஏதேனும் தகவல்களை வழங்குவதற்கு நான்/ நாங்கள் மேலும் உடன்படுகின்றேன்/ உடன்படுகின்றோம்.

எனக்கு/ எங்களுக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் என சந்தேகப்படுவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை மீதான வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவினை இடைநிறுத்துமாறும் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு விடயத்தினை அறிவிக்குமாறும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் (வங்கி) கேட்டுக்கொள்ளப்படுவர் என்பதனை நான்/ நாங்கள் அறிவோம்.

நான்/ நாங்கள் புலம்பெயரும் பொழுது அல்லது தொழிலுக்காக வெளிநாட்டிற்குச் செல்லும்பொழுது கடன் அட்டைகளை .......................................... வங்கியிடம் கையளிப்போம் என நான்/ நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்வோம் என நான்/ நாங்கள் உறுதியளிக்கின்றோம்.

............................................... ...............................................

திதி.மாமா.ஆஆ பிரதான அட்டை வைத்திருப்பவரின் கையொப்பம்

...............................................

துணை அட்டை வைத்திருப்பவரின் கையொப்பம்

நான், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்ற ரீதியில் விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளினால் வழங்கப்பட்ட தொடர்பான ஆவணங்களுடன் சேர்ந்த தகவல்களை மிகக் கவனமாக பரீட்சித்து பார்த்ததுடன் இத்தகவல்களினதும் ஆவணங்களினதும் நம்பகத்தன்மையினையிட்டு திருப்தியடைந்துள்ளேன். வெளிநாட்டுச் செலாவணியில் அவர்/ அவளின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தொடர்பாக, அட்டை வைத்திருப்பவரினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மீது நெருங்கிய கவனத்தினைச் செலுத்துவதற்கும் பொறுப்புக்களை மீறும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமிடத்து இலத்திரனியல் நியதி மாற்றல் அட்டை மீது கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணியை இடைநிறுத்தி இவ்விடயத்தினை வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

............................................... ...............................................

திதி.மாமா.ஆஆ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

## தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல்) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகள் என்பனவற்றின் நியதிகளில் பின்வருவனவற்றிற்குட்பட்டு தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

தகைமையுடைய ஆட்கள் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட ஆட்களாக இருத்தல் வேண்டும்.

**1.2 கணக்குகளைத் திறந்து பேணி வருதல்**

ஒழுங்குவிதிகளின் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்குப் புறம்பாக, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணி வரும் பொழுது பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக விஜயம் செய்கின்ற இலங்கையரல்லாதவர்கள் அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ளவர்கள் இக்கணக்குகளைக் கூட்டுக் கணக்குகளுக்காகத் திறக்கவும் பேணவும் தகைமையுடையவர்களாகார்.

(ஆ) பராயமடையாதவர் இலங்கை நாட்டவராக அல்லது இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவராகவும் இலங்கைக்கு வெளியே வதிபவராகவும் இருந்து அவரின் பெயரில் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குத் திறக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில், அத்தகைய கணக்குகளை, இலங்கைக்கு வெளியே வதியும் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப்பல்களை வரவு வைப்பதன் மூலம் அல்லது ஏற்கனவேயுள்ள பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து நிதியத்தினை மாற்றல் செய்வதன் மூலம் திறத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் தகவல்களையும் ஆவணங்களையும் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு முன்னர் ஏற்புடைத்தான விதத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

| | தகைமையுடைய ஆட்கள் | தகவல்/ ஆவணங்கள் |
|---|---|---|
| i. | இலங்கைக்கு வெளியே வதியும் பராயமடையாதோர் உட்பட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தனிப்பட்ட ஒருவர் | • முழுப் பெயர், தேசியம் மற்றும் வெளிநாட்டு முகவரி<br>• கடவுச்சீட்டு இலக்கம், வழங்கப்பட்ட திகதி செல்லுபடியாகும் காலம்<br>• இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்ற திகதி<br>• பிரசா உரிமை அல்லது வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட விசாவின் தன்மை |
| ii. | இலங்கையில் வதியும் இலங்கையரல்லாதவர் | • முழுப் பெயர், தேசியம் மற்றும் வெளிநாட்டு முகவரி<br>• இலங்கையில் தொழில்புரியும் இடத்தின் முகவரி மற்றும் பதவி ஏதுமிருப்பின்<br>• தொழில் ஒப்பந்தத்தின் பிரதி மற்றும் சம்பள விபரங்கள்<br>• குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் விசாவின் பிரதிகள் |
| iii. | ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதரும் இலங்கையரால்லாதவர் அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ள ஒருவர் | • முழுப் பெயர், தேசியம் மற்றும் வெளிநாட்டு முகவரி<br>• கடவுச்சீட்டு மற்றும் விசாவின் பிரதிகள் |

**1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

அனுமதிக்கப்பட்ட வரவுகள் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்குட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

**1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்குப் புறம்பாக ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குப் பின்வரும் பற்றுக்கள் அனுமதிக்கப்படுகின்றன.

(அ) கணக்குடமையாளரின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கிற்கு அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்கிற்கான நிதிய மாற்றல்கள்.

**2. மாதாந்த கூற்றுக்கள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு I இல் உள்ளவாறு மாதாந்த அடிப்படையில் dfem@cbsl.lk இற்கு மின்னஞ்சல் மூலம் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இத்திணைக்களத்திற்கு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட அறிக்கையிடல் தேவைப்பாட்டிற்கிணங்க, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவர்கள் தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் வங்கிக்குள் முறைமையொன்றினை நடைமுறைக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: .......................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| நாணய வகை | கணக்கு உடமையாளரின் வதிவிட அந்தஸ்தின் வகை | ஆரம்ப நிலுவை | | வரவுகள் | | | | | பற்றுக்கள் | | | | இறுதி நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை | வெளிநாடுகளிலிருந்தான உள்முகப் பணவனுப்பல்கள் | ஏனைய கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் | வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | ஏனைய வரவுகள் | மொத்தம் | இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்கள் | ஏனைய கணக்குகளுக்கான மாற்றல்கள் | ஏனைய பற்றுக்கள் | மொத்தம் | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை |
| ஐ.அ. டொலர் | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |
| பிரித்தானிய பவுண் | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |
| யூரோ | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |
| ஏனையவை* குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |

* ஏனைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்குத் தேவையான அளவிற்கு நிரல்களை நீங்கள் விரிவாக்கிக் கொள்ளலாம்.

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ...................................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ................................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

**வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருகின்றமை) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகளின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பின்வருவனவற்றிற்குட்பட்டு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறந்து பேணிவர அனுமதிக்கப்படுகின்றனர்.

1.1 **தகைமையுடைய ஆட்கள்**

ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டவாறான தகைமையுடைய ஆட்கள்.

1.2 **கணக்குகளைத் திறந்து பேணி வருதல்**

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட

விடயங்களுக்குப் புறம்பாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறந்து பேணிவருகின்ற வேளையில் பின்வருவனவற்றை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) எந்தவொரு சூழ்நிலையிலும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் மேலதிகப் பற்றுக்கள் இடம்பெறக்கூடாது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலேயுள்ள பந்தி 1.1இன் கீழ் கணக்கு உடமையாளர் தகைமையுடைய கப்பற்படுத்தல் முகவராக அல்லது பொதுவிற்பனை முகவராக இருக்குமிடத்து சரக்கு கட்டணத்தின் கூறுகளல்லாத உள்ளூர் கட்டணங்களாக அல்லது விதிப்புக்களாக சேகரிக்கப்பட்ட கட்டணங்களையும் வைப்புக்களையும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைக்கக்கூடாது.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்படும் வெளிநாட்டு நாணயக் கடன்களின் (படுகடன் பிணையங்கள் உட்பட) பெறுகைகளையும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து கணக்குடமையாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான கடன் பெறுகைகளையும் இலங்கைக்கு வெளியேயான மூலதன கொடுக்கல்வாங்கல்களுக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் பயன்படுத்தவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

### 1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குப் பின்வரும் வரவுகள் அனுமதிக்கப்படுகின்றன.

(அ) பொருட்களின் விற்பனை மற்றும் கணக்குடமையாளரினால் வழங்கப்பட்ட பணிகள் என்பன தொடர்பில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளர் சார்பில் இலங்கையில் வங்கிகளினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வரைவுகள்.

(ஆ) வெளிநாட்டு கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட கடன்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட ஒப்புதலொன்றின் நியதிகளில் பெறப்பட்டனவாக இருக்குமிடத்து (இலங்கைக்கு வெளியே மூலதன கொடுக்கல்வாங்கல்களின் நோக்கத்திற்காக பெறப்பட்ட கடன்கள் நீங்கலாக) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுகைகள்.

(இ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு கணக்கு உடமையாளரினால் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் அவரால் வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் பெறப்பட்ட கொடுப்பனவுகளைப் பொறுத்தவரை அத்தகைய பொருட்கள் மற்றும் பணிகளுக்கான அக்கொடுப்பனவுகள் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையைப் பயன்படுத்தி இலத்திரனியல் தரவுகளை பெற்றுக்கொள்ளும் முனைக்கோடி அல்லது இணையத்தளக் கொடுப்பனவு நுழைவாயிலினூடாக மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, எது எவ்வாறிருப்பினும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி இக்கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான இலத்திரனியல் தரவினைப் பெற்றுக்கொள்ளும் முனைக்கோடி அல்லது இணையத்தளக் கொடுப்பனவு நுழைவாயில் பணி வழங்குனரின் எழுத்துமூலமான உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் மாத்திரம் அக்கொடுப்பனவினை வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

(ஈ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட இலங்கையிலுள்ள அசையும் சொத்துக்களின் குத்தகை அல்லது வாடகை தொடர்பாக வங்கித்தொழில் முறைமையூடாக கணக்குடமையாளரால் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி பணவனுப்பல்கள்.

(உ) இலங்கையிலுள்ள கணக்குடமையாளரின் வதிவிடச் சொத்துக்களின் கைப்பற்றல்/ கட்டுமானம்/ அபிவிருத்தி மற்றும் புதுப்பித்தல் நோக்கங்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்.

### 1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கு ஏற்றனவாக இருத்தல் வேண்டும்.

### 1.5 மாதாந்தக் கூற்றுக்கள்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு Iஇல் உள்ளவாறான அறிக்கையினை மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அதற்கு முன்னதாகவோ dfem@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக இத்திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்குவதற்கு அல்லது பிரித்தெடுப்பதற்கேற்ற விதத்தில் வங்கிக்குள்ளே முறைமையொன்றை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

### 1.6 இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக

(அ) **"வெளிநாட்டு கப்பற்படுத்தல் கம்பனி"** என்பது 1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உரிமம் வழங்குகின்ற கப்பற்படுத்தல் முகவர் சட்டத்தின் (திருத்தப்பட்டது) கருத்திற்குள்வரும் இலங்கைக்கு வெளியே வதியும் ஏதேனும் கப்பற்படுத்தல் நிறுவனம் என பொருள்படும்.

(ஆ) **"வெளிநாட்டு வான் நிறுவனம்"** என்பது 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வான் போக்குவரத்து சட்டத்தின் (திருத்தப்பட்டது) கருத்திற்குள் வரும் இலங்கைக்கு வெளியே வதியும் ஏதேனும் வெளிநாட்டு வான் தொழிற்பாட்டாளரைக் குறிக்கும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு 1**

**வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| கணக்கின் வகை | நாணயம் | மாதத் தொடக்கத்திலுள்ளவாறு நிலுவை | வரவுகள் | | | | | பற்றுக்கள் | | | | | மாதத்தின் இறுதியிலுள்ளவாறு நிலுவை | மாதத்தின் இறுதியிலுள்ளவாறு கணக்குகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டுப் பணவனுப்பல்கள் | ஏனைய கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் | ஏனையவை | வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | மொத்தம் | வெளிமுகப் பணவனுப்பல்கள் | ஏனைய வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள் | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள் | ஏனைய பற்றுக்கள் | மொத்தம் | | |
| ஏற்றுமதியாளர்கள் | | | | | | | | | | | | | | |
| தொழில்சார் பணிகள் வழங்குவோர் | | | | | | | | | | | | | | |
| பயண முகவர்/ சுற்றுலா | | | | | | | | | | | | | | |
| சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள் | | | | | | | | | | | | | | |
| இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்கள் | | | | | | | | | | | | | | |
| காப்புறுதியாளர்கள் | | | | | | | | | | | | | | |
| வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகவர்கள் | | | | | | | | | | | | | | |
| வெளிநாட்டு தொழில்தருநர்களுக்குப் பணிகளை வழங்கும் இலங்கையர்களுக்கு பகிர்ந்தளிப்புக்களுக்கான பணவனுப்பல்கள் | | | | | | | | | | | | | | |
| ஏற்பாடுகள், கப்பற் சரக்கின் அனுப்புதல் மற்றும் தொடர்பான பணிகள் போன்றவை | | | | | | | | | | | | | | |
| கப்பற்படுத்தல் முகவர்கள் | | | | | | | | | | | | | | |
| பொதுவான விற்பனை முகவர் (எயார்லையின்) | | | | | | | | | | | | | | |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான வெளிநாட்டு நாணயக் கடன்கள் | | | | | | | | | | | | | | |
| வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு மாற்றல் செய்யப்பட்ட கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான வெளிநாட்டு நாணயக் கடன்கள் | | | | | | | | | | | | | | |
| வெளிநாட்டு கடன் வழங்குநரின் (முதலீட்டு நோக்கங்களுக்கானவை தவிர) உள்முக முதலீட்டுக் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள் | | | | | | | | | | | | | | |
| இலங்கைக்கு உள்ளே/ வெளியேயுமான முதலீடுகள் | | | | | | | | | | | | | | |
| வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் | | | | | | | | | | | | | | |
| ஏனைய பணி வழங்குவோர் (குறிப்பிடவும்) | | | | | | | | | | | | | | |
| பிரிவு 8 (3) இன் கீழ் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட பணவனுப்பல்கள் | | | | | | | | | | | | | | |
| ஏனையவை (வகையைக் குறிப்பிடவும்) | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

குறிப்பு : தயவுசெய்து எல்லாக் கணக்குகளிலுமுள்ள குறித்துரைக்கப்பட்ட வேறுபட்ட வகை நாணயங்களினதும் (யூரோ, ஐ.அ.டொலர் ஏனையவை தயவுசெய்து குறித்துரைக்கவும்) தொடர்பான தகவல்களைத் தருக.

: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாங்கள் தொடர்பான ஆவணங்களை பரீட்சித்திருப்பதுடன் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................
கையொப்பம்: .....................................................
திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................
கையொப்பம்: .....................................................
திகதி: .......................................................

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

## இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் (ஒழுங்குவிதிகள்) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகள் என்பனவற்றின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவனவற்றிற்குட்பட்டு இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராஜதந்திர ரூபாக் கணக்குகளையும் திறந்து பேணி வருவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

தகைமையுடைய ஆட்கள் ஒழுங்குவிதிகளிலுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

**1.2 கணக்குகளைத் திறந்து பேணி வருதல்**

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவற்றிற்குப் புறம்பாக, இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராஜதந்திர ரூபாக் கணக்குகளையும் திறந்து பேணும் பொழுது பின்வருவனவற்றையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) இராஜதந்திர ரூபாக் கணக்குகளை நடைமுறை, சேமிப்பு அல்லது தவணை வைப்புக் கணக்குகளாகத் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கான பற்றுக்களையும் வரவுகளையும் காசோலைகளினூடாக மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. எனினும், இராஜதந்திர ரூபாக் கணக்கிலிருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேலதிக எடுப்பனவுகளை எடுக்க முடியாது.

(இ) இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு உந்து ஊர்திகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளை வரவு வைக்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு I இல் குறிக்கப்பட்டவாறு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**1.3 இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்கள்**

அனுமதிக்கப்படுகின்ற வரவுகளும் பற்றுக்களும் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

**1.4 இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக, இராஜதந்திர ரூபாக் கணக்கிற்குப் பின்வரும் வரவு அனுமதிக்கப்படுகின்றன.

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாக கணக்குடமையாளரின் பெயருக்கு இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட இலங்கை ரூபாவிலான பணவனுப்பல்கள்.

**1.5 இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க பற்றுக்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

**2. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக**

(அ) **"இராஜதந்திர பணிமனை"** என்பது தூதரகம், உயர் ஸ்தானிகராலயம், காவற்தூதரகம், ஐக்கிய நாடுகள் அல்லது ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு என்பனவற்றின் நிரந்தரப் பணிமனையினைக் குறிக்கும்.

(ஆ) **"இராஜதந்திர ஆளணியினர்"** என்பது இராஜதந்திர பணியகத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வெளிநாடொன்றின் பிரசைகளைக் குறிக்கும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு உந்து ஊர்திகளின் விற்பனைப் பெறுகைகளை வரவு வைக்கும் பொழுது பெறப்பட வேண்டிய ஆவணங்கள்**

i. விற்பவரின் பெயரிலுள்ள உந்து ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்.
ii. உந்து ஊர்தியின் உடமை மாற்றல் அறிக்கை - வாங்குநருக்கு மாற்றல் செய்யப்பட்ட உந்து ஊர்தியின் சொத்துடமையினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்று.
iii. உந்து ஊர்தியின் விலையினை உறுதிப்படுத்தி வாங்குநரிடமிருந்து பெற்ற கடிதம்.
iv. அரச நிதித் திணைக்களத்திலிருந்து பெற்ற தீர்வை மதிப்பீடு.
v. உந்து ஊர்தியின் மாற்றலை உறுதிப்படுத்துகின்ற தொடர்பான அமைச்சிலிருந்தான கடிதம்.
vi. சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுங்கத் தீர்வைக் கணிப்பு மற்றும் ஏனைய விதிப்புக்கள்.
vii. சுங்கத் திணைக்களம் - பொருட்களைப் பிரகடனப்படுத்தும் படிவம்.
viii. சுங்கத் திணைக்களத்தின் மதிப்பிட்டு அறிவித்தல்.

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

## வதியும் விருந்தினர் திட்டம் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகளின் நியதிகளில், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைக்கிடப்பட்ட "வதியும்

விருந்தினர் திட்டத்தின்" கீழ் முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய முதலீட்டாளர்கள் மற்றும் இலங்கைக்கு வரும் தொழில்சார் நிபுணர்களின் பெயர்களில் கீழ்வரும் நிபந்தனைக்குட்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2. முதலீட்டாளரொருவர் இலங்கையில் முதலீடு செய்வதற்காக ஐ.அ.டொலர் 250,000 அல்லது அதற்குச் சமமான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினையும் முதலீட்டாளர் மற்றும் அவருடன் சேர்ந்துவரும் தங்கியிருப்போரின் வாழ்க்கைச் செலவிற்காக ஆளொருவருக்கு மேலும் ஐ.அ.டொலர் 35,000 இனையும் அனுப்புமாறு அல்லது கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3. தொழில்சார் நிபுணரொருவர் மாதமொன்றிற்கு ஐ.அடொலர் 2,000 கொண்ட தொகையினையும் அவருடன் சேர்ந்து வருகின்ற அவரில் தங்கியிருப்பவர்களின் வாழ்க்கைச் செலவிற்காக ஒவ்வொரு தங்கிருப்போருக்கும் மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1,000 கொண்ட மேலுமொரு தொகையினையும் அனுப்புமாறு அல்லது கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. **கணக்குகளின் வகை**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்திட்டத்தின் கீழ் அவர்களது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் பின்வரும் சிறப்புக் கணக்குகளைத் திறந்து பேணி வரலாம்.

**4.1 வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

**4.1.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வைப்புச் செய்யும் நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமையினூடாகப் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பலான ஐ.அ.டொலர் 250,000 அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களைக் கொண்ட ஆரம்பத் தொகை அல்லது ஏற்புடைத்தான விதத்தில் சுங்கத் திணைக்களத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு பிரகடனப்படுத்தி இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(ஆ) ஆரம்பத்தில் இரண்டாண்டு காலப்பகுதிக்கு கணக்கில் வைத்திருக்கப்பட்ட பயன்படுத்தப்படாத நிதியத்தின் மீதான வட்டி. (வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் முதல் இரண்டாண்டு காலப்பகுதி முடிவடைந்த பின்னர் வட்டி செலுத்தப்படக்கூடாது).

**4.1.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) தொடர்பான ஒப்புதல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமையினை நிருபிக்கும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குட்பட்டு பின்வரும் "ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில்" முதலீடு செய்வதற்காக எடுப்பனவு செய்யப்படும் நிதிகள்.

i. இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது தொடர்பான அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட புதிய துணிகரத் தொழில்முயற்சிகள்

ii. தொடர்பான அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருக்கும் ஏற்கனவேயுள்ள அல்லது புதிய கம்பனிகள்

iii. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பங்குகள்

(ஆ) ஐ.அ.டொலர் 250,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்குக் கூடுதலாக நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்படாமல் கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியங்களின் மாற்றல்.

(இ) கணக்கில் வைத்திருக்கப்படும் பயன்படுத்தப்படாத நிதியின் மீது உழைக்கப்பட்ட வட்டியை முதலீட்டாளரின் வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாற்றல்.

(ஈ) திட்ட நடைமுறைப்படுத்தல் முகவரின் சம்மதத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் எடுப்பனவுகள் அல்லது நிதிய மாற்றல்கள்.

**4.2 வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - முதலீட்டாளர்கள்**

**4.2.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 35,000 அல்லது அதற்குச் சமனான வேறு வெளிநாட்டு நாணயங்களை ஆரம்பத் தொகையாக வைப்புச் செய்யும் நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமையினூடாகப் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களின் இலங்கை ரூபாப் பெறுகைகள் அல்லது ஏற்புடைத்தான விதத்தில் சுங்கத் திணைக்களத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பிரகடனம் செய்து இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(ஆ) முதலீட்டாளரினால் அவரினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் வாழ்க்கைச் செலவினத்திற்காகச் செய்யப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களின் இலங்கை ரூபாத் தொகை அல்லது இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(இ) இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட முதலீட்டாளரின் வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதியத்திற்குச் செலுத்தப்படும் வட்டி.

(ஈ) முதலீடுகளிலிருந்தான வருமானம் (பங்கிலாபங்கள், இலாபங்கள்), வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்த பங்குகளின் விற்பனைப் பெறுகைகள்.

**4.2.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) முதலீட்டாளரினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள்.

(ஆ) மேலேயுள்ள பந்தி 4.1.2(அ) இல் குறித்துரைக்கப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீடுகள்.

(இ) முதலீட்டாளர் அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியிருப்பவர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவிற்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஈ) திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற முகவரின் சம்மதத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வேறு ஏதேனும் எடுப்பனவுகள் அல்லது நிதிய மாற்றல்கள்.

**4.3 வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - தொழில்சார் நிபுணர்கள்**

**4.3.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) ஐ.அ.டொலர் 2,000 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயங்களுக்குச் சமமான ஆரம்பத் தொகையொன்றினை வைப்புச் செய்யும் நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமையினூடாகப் பெறப்பட்ட உள்நாட்டுப் பணவனுப்பல்களின் இலங்கை ரூபாத் தொகை அல்லது ஏற்புடைத்தான விதத்தில் சுங்கத் திணைக்களத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பிரகடனம் செய்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவர் மற்றும் அவரில் தங்கியிருப்பவர்களின் வாழ்க்கைச் செலவிற்காக இலங்கை ரூபாவில் பெறுகைகளைக் கொண்ட உள்நாட்டுப் பணவனுப்பல்கள் அல்லது இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(இ) கணக்கு உடமையாளரினால் இலங்கையில் வழங்கப்பட்ட தொழில்சார் பணிகளுக்காகப் பெறப்பட்ட சம்பளம், ஆலோசனைக் கட்டணம் போன்றவை.

**4.3.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளர் மற்றும் அவரில் தங்கியிருப்பவர்களின் உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள்.

(ஆ) கணக்கு உடமையாளர் அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியிருப்பவர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(இ) திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற முகவரின் சம்மதத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் எடுப்பனவுகள் அல்லது நிதிய மாற்றல்கள்.

**5. அறிக்கையிடுகின்ற தேவைப்பாடுகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாயணக் கணக்குகள் மற்றும் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - முதலீட்டாளர் என்பனவற்றிற்கான இணைப்பு ஐ மற்றும் இணைப்பு ஐஐ இன்படி காலாண்டுக் கூற்றுக்களை அடுத்துவரும் காலாண்டின் 15ஆம் திகதிக்குப் பிந்தாமலும் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கு - தொழில்சார் நிபுணர்கள் கணக்கிற்கான இணைப்பு III இன்படி மாதாந்தக் கூற்றுக்களை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்குப் பிந்தாமலும் னகநஅளூஉடிளட.டம இற்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் காலாண்டுக் கூற்று**

வங்கியின் பெயர்: ......................................................................
அறிக்கையிடும் காலாண்டு மற்றும் ஆண்டு: ...............................

| கணக்கு உடமை யாளரின் பெயர் | நாணயம் | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | பற்றுக்கள் | | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப வைப்பு | உள்முகப் பணவனுப்பல்கள், நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட வெளி நாட்டுச் செலாவணி | வரவு வைக்கப் பட்ட வட்டி | முதலீட்டிற் கான எடுப்ப னவுகள் | பயன்படுத்தப் படாத/ மிகையான நிதியத்தின் மாற்றல் | வ.வி.ரூ.ந. கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட் டவை | இ.ம.வ. இனால் ஒப்புதலளி க்கப்பட்ட வேறு ஏதேனும் எடுப்பனவுகள் | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................
கையொப்பம்: ......................................................
திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................
கையொப்பம்: ......................................................
திகதி: .......................................................

**வ.வி.ரூ.ந.க. - வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கு**
**இ.ம.வ. - இலங்கை மத்திய வங்கி**

2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு II

**வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகளின் காலாண்டுக் கூற்று - முதலீட்டாளர்கள்**

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் காலாண்டு மற்றும் ஆண்டு: ................................

| கணக்கு உடமை யாளரின் பெயர் | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | பற்றுக்கள் | | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்முகப் பணவனுப்பல்கள்/ நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம் | வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள் | முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள் | முதலீடுகளுக்கான எடுப்பனவுகள் | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் | இ.ம.வ. இனால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் எடுப்பனவுகள் | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இ.ம.வ. - இலங்கை மத்திய வங்கி

2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு III

**தொழில்சார் வதிவோர் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் காலாண்டு மற்றும் ஆண்டு: ................................

இலங்கை ரூபாவில்

| கணக்கு உடமை யாளரின் பெயர் | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | பற்றுக்கள் | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | உள்முகப் பணவனுப்பல்கள்/ நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் ஈட்டப்பட்டவை | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள் | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் | இ.ம.வ. இனால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் எடுப்பனவுகள் | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இ.ம.வ. - இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

**மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான இச்சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் நியதிகளில், பின்வருவனவற்றிற்குட்பட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் “இலங்கை - எனது

கனவு இல்ல நிகழ்ச்சித்திட்டம்" என்பதன் கீழ் இலங்கையில் வதிவிட விசாவினைப் பெறவிரும்பும் மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் பெயரில் பின்வரும் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

2. மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் விசாவிற்காக விண்ணப்பிக்கும் 55 வயதிற்கு மேற்பட்ட மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தினை இலங்கைக்கு அனுப்பி, அவர்கள் இலங்கையில் இருக்கும் காலம் வரை அதனை வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். மேலும், ஐ.அ.டொலர் 1,500 அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தினைப் பிரதான விண்ணப்பதாரிக்காகவும் அவரில் தங்கியிருக்கும் ஒவ்வொருவருக்கும் அல்லது வாழ்க்கைத்துணைக்கும் ஐ.அ.டொலர் 750 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயத் தொகையினையும் மாதாந்தம் அனுப்பி அதனை அவர்களது வாழ்க்கைச் செலவிற்காக இலங்கை ரூபாக் கணக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

3. **கணக்குகளின் வகை**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் நிலையான வைப்புக் கணக்கினையும் மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் ரூபாக் கணக்கினையும் திறந்து பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

3.1 **மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள்**

3.1.1 **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இக்கணக்குகள் வங்கித்தொழில் முறைமையூடாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட குறைந்தபட்சம் ஆரம்பத் தொகையான ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்கின்ற நோக்கத்திற்காகத் திறக்கப்படுதல் வேண்டும்.

3.1.2 **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளர் இலங்கையில் தங்கியிருப்பதனை முடிவுறுத்துவதெனத் தீர்மானித்து, அவ்வாறு அவர் புறப்படுவதனை உறுதிப்படுத்தும் ஆவணச்சான்றுகளைப் பெறுகின்ற வேளையில் மாத்திரம் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்கிலிருந்தான எடுப்பனவுகளை அனுமதித்தல் வேண்டும். நிதியத்தினைப் பின்வருமாறு விடுவிக்கலாம்:

i. இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு நிதிகளை அனுப்புதல்

ii. கணக்கு உடமையாளரின் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கிற்கு நிதியினை மாற்றல் செய்தல்

iii. ஐ.அ.டொலர் 10,000 வரையான தொகையினை வெளிநாட்டு நாணயத் தாள்களில் எடுப்பனவு செய்தல்

(ஆ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்கின் மீது செலுத்தப்படும் வட்டி கணக்கு உடமையாளரின் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படல் வேண்டும்.

3.2 **மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்குகள்**

இக்கணக்குகளை, இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு ஏற்புடைத்தான விதத்தில் பிரகடனம் செய்வதன் மூலம் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 1,500 அல்லது அதற்குச் சமமான ஏதேனும் மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்திலான வைப்புடன் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளாகத் திறக்க முடியும்.

3.2.1 **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) உள்நாட்டுப் பணவனுப்பல்கள் அல்லது இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குப் பிரகடனம் செய்து கணக்குடமையாளரினால் அவரின் வாழ்க்கைச் செலவிற்கும் (மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1,500) அவரின் வாழ்க்கைத்துணை மற்றும் தங்கியிருப்பவர்களின் வாழ்க்கைச் செலவிற்குமாக (ஒவ்வொரு தங்கியிருப்பவருக்குமாக மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 750 என்ற ரீதியில்) நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(ஆ) கணக்கு உடமையாளரின் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதியின் மீது ஈட்டப்பட்ட வட்டி.

3.2.2 **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) முதலீட்டாளரினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் உள்நாட்டுச் செலவுகள்.

(ஆ) கணக்கு உடமையாளரினதும் அத்துடன்/ அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

4. **அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்டவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ dfem@cbsl.lk ஊடாக மின்னஞ்சல் மூலம் இத்திணைக்களத்திற்கு மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I

**மூத்த வெளிநாட்டு பிரசைகள் நிலையான வைப்பு கணக்கின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ......................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ...............................

| கணக்கு உடமையாளரின் பெயர் | நாணயம் | ஆரம்ப வைப்பு | வெளிமுகப் பணவனுப்பல்/ நாட்டை விட்டுச் செல்லும் நேரத்தில் எடுப்பனவு | மூத்த வெளிநாட்டு பிரசைகள் ரூபாக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட வட்டி | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: .....................................

கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................

2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு II

**மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ......................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ...............................

இலங்கை ரூபாவில்

| கணக்கு உடமையாளரின் பெயர் | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | பற்றுக்கள் | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | | உள்முகப் பணவனுப்பல்கள்/ வைப்புக்கள் | மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்கின் மீது பெறப்பட்ட வட்டி | நடைமுறைக் கொடுக்கல் வாங்கலுக்கான கொடுப்பனவுகள் | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள் | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: .....................................

கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

**மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறந்து பேணுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகள் என்பனவற்றிற்கிணங்க, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

ஒழுங்குவிதிகளின் நியதிகளில் பின்வருவோர் தகைமையுடைய ஆட்களாவர்;

i. இலங்கைக்கு வெளியே நிரந்தரமாக வதியும் தனிப்பட்ட இலங்கையர்கள்

ii. இரட்டைப் பிரசாவுரிமையுடைய இலங்கையரொருவர்

iii. இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டு பிரசை

iv. இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையரல்லாதவர்

v. இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கை நாட்டவர்

vi. இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள்

**1.2 கணக்குகளைத் திறந்து பேணி வருதல்**

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்குப் புறம்பாக, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறந்து பேணி வரும் பொழுது பின்வருவனவற்றையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளை உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் நடைமுறை (காசோலை வரைவு வசதியில்லாமல்), சேமிப்பு அல்லது தவணை வைப்புக் கணக்குகள் வடிவில் இலங்கை ரூபாவில் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) மேலேயுள்ள பந்தி 1.1 இன் விடயத்தில் (i-iv) குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆளான தனிப்பட்ட ஒருவர் வெளிமுகப் பணவனுப்பல் நோக்கத்திற்காக ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை மாத்திரம் திறந்து பேணி வரலாம்.

(இ) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை இன்னொரு தகைமையுடைய ஆளுடன் சேர்ந்து கூட்டாகப் பேணலாம்.

(ஈ) மேலேயுள்ள பந்தி 1.1 இன் விடயத்தில் (i-iv) குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆளாக விளங்கும் பராயமடையாத ஆளொருவரும் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறக்க முடியும்.

**1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக பின்வரும் வரவுகள் அனுமதிக்கப்படுகின்றன.

(அ) மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் தவிர்ந்த உள்நாட்டு வரவுகள்.

(ஆ) கணக்கு உடமையாளர் மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (i-iii)இல் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆளொருவராக இருக்குமிடத்து ஓய்வுகால நன்மைகள், வட்டி, பங்கிலாபம், ஓய்வூதியம், வாடகை, குத்தகை வாடகை மற்றும் இலாபங்கள் அல்லது வேறு ஏதேனும் ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியம் அல்லது ஓய்வுகால நிதியங்கள் போன்றவை.

(இ) கணக்கு உடமையாளர் மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (iv)இல் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆளாக இருக்குமிடத்து பாரம்பரியமாகக் கிடைத்த அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் உட்பட உள்ளூர் சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகள்.

(ஈ) கணக்கு உடமையாளர் மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (v)இல் குறிப்பிடப்படும் தகைமையுடைய ஆளாக இருக்குமிடத்து உள்ளூ ரில் பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் கணக்கு உடமையாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் அல்லது இலங்கை ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்.

**1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்குப் புறம்பாகப் பின்வரும் பற்றுக்கள் அனுமதிக்கப்படுகின்றன.

(அ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஆ) மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயங்கள் (i-iii)இல் குறிப்பிடப்படும் தகைமையுடைய ஆட்களினால் இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு மாற்றப்படும் தகைமையுடைய புலம்பெயர்படிகள்.

(இ) கணக்கு உடமையாளர் மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (vi)இல் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆளொருவராக இருக்குமிடத்து உடன்படிக்கைகள், பொருட்பட்டியல்கள், அறிக்கைகள் போன்றவை சரிபார்க்கப்பட்டமை மற்றும் அத்தகைய கோரிக்கைகள் தொடர்பான நம்பகத்தன்மையினையிட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் திருப்தியடைந்தமையினைத் தொடர்ந்து நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக இலங்கையில் பெறப்பட்ட ஒன்றுசேர்ந்த நிதியங்களின் மாற்றல்.

**1.5 மூலதன நிதிய மாற்றல்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை**

**1.5.1 புலம்பெயர் படிகளை மாற்றல் செய்கின்ற நோக்கத்திற்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை**

(அ) மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (ை-ைைை)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆளொருவருக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறக்கும் பொழுது ஸ்கான் செய்யப்பட்ட பின்வரும் ஆவணங்களை னகநளூ உடிளட.டம ஊடாகச் சமர்ப்பிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

i. இணைப்பு 1இன் பூரணப்படுத்தப்பட்ட படிவம்

ii. நடப்பிலுள்ள கடவுச்சீட்டின் பிரதியொன்று

iii. ஆரம்பப் புறப்படுகை, இறங்கியமை பற்றிய புறக்குறிப்பீடு மற்றும் அடையாளப் பக்கம் (ஏற்புடைத்தாயின்) உட்பட இலங்கைக் கடவுச்சீட்டின் பிரதியொன்று

iv. நிரந்தர வதிவிட திகதி மற்றும் நாடு (ஏற்புடைத்தான விதத்தில்) என்பனவற்றை நிரூபிக்கும் விதத்தில் நிரந்தர வதிவிட புறக்குறிப்பீடு அல்லது ஏனைய ஆவணங்களின் பிரதியொன்று

(ஆ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் கிடைக்கப்பெற்றதும் மூலதனக்

கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திறத்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அதே மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக ஏற்புடைத்தானவாறு ஆரம்ப மற்றும் அதனைத் தொடர்ந்தான மூலதன நிதியின் மாற்றல்களாக தகைமையுடைய ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கலாம்.

i. அத்தகைய கணக்கு உடமையாளர் மற்றொரு நாட்டின் நிரந்தர வதிவிடத்தினைப் பெறும் பொழுது செல்லுபடியாகக்கூடிய இலங்கைக் கடவுச்சீட்டினை வைத்திருக்குமிடத்து, ஐ.அ.டொலர் 200,000 வரையான ஆரம்பப் புலம்பெயர் படியொன்று மற்றும் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஐ.அ.டொலர் 30,000 கொண்ட வருடாந்த புலம்பெயர் படி.

ii. ஆரம்பப் புலம்பெயர் படியான ஐ.அ.டொலர் 200,000 தொகையும் முழுமையாக பயன்படுத்தப்பட்டதிலிருந்து 12 மாதங்கள் கடந்த பின்னர் முதலாவது அத்தகைய வருடாந்தப் படியான ஐ.அ.டொலர் 30,000 இனை மாற்றல் செய்யமுடியும்.

iii. ஆரம்பப் புலம்பெயர் படி தவிர, அதன் பின்னரான புலம்பெயர் படிகளையும் ஒவ்வொரு கலண்டர் ஆண்டிலும் மாற்றல் செய்யமுடியும்.

iv. புலம்பெயர்ந்த ஒருவர் வருடாந்த புலம்பெயர் படியினை முன்னைய ஆண்டு மாற்றல் செய்யாத சந்தர்ப்பத்தில் அதனையும் சேர்த்து மாற்றல் செய்யமுடியும்.

v. நிரந்தர வதிவிடம் கிடைத்து முதல் தடவையாக இலங்கையை விட்டு செல்லும் நேரத்தில் தகைமையுடைய ஆளொருவர் தகைமையுடைய புலம்பெயர் படியிலிருந்து ஐ.அ.டொலர் 10,000 இனை நாணயத் தாள் வடிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

vi. மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (i-iii)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆளொருவரின் மூல நிரந்தர வதிவிட விசா முத்திரையிடப்பட்ட இலங்கை கடவுச்சீட்டினை, வெளிநாட்டுச் செலாவணி விற்பனை தொடர்பில் வழங்கும் திகதி, வெளிநாட்டுச் செலாவணித் தொகை, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கின் பதிவு இலக்கம், புலம்பெயரும் நாடு என்பனவற்றைக் கொண்ட விபரங்களுடன் சரியான விதத்தில் புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

**1.5.2 மூலதன நிதிகளை மாற்றல் செய்கின்ற நோக்கத்திற்காக, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை**

(அ) மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயம் (iv)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆளொருவருக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறக்கும் பொழுது ஸ்கான் செய்யப்பட்ட பின்வரும் ஆவணங்களை dfe@cbsl.lk ஊடாகச் சமர்ப்பிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

i. இணைப்பு Iஇன் பூரணப்படுத்தப்பட்ட படிவம்

ii. தற்போதைய கடவுச்சீட்டின் பிரதியொன்று

(ஆ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் கிடைக்கப்பெற்றதும் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திறத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கையிலுள்ள பாரம்பரிய சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகளிலிருந்து ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 30,000 வரையான வெளிநாட்டுச் செலாவணியினையும் விடுவிக்கலாம்.

**2. ஏனைய தேவைப்பாடுகள்**

(அ) மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயங்கள் (i-iv)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆட்கள் தொடர்பில் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கு ஒப்படைக்கப்பட்ட கணக்கு இலக்கத்தினை, அது வழங்கப்பட்ட பின்னர் இத்திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(ஆ) மேலுயுள்ள பந்தி 1.1இன் விடயங்கள் (i-iv)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆட்கள் தொடர்பில் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கு ஒப்படைக்கப்பட்ட கணக்கினை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெறாமல் மூடிவிடக்கூடாது.

(இ) ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கின் உடமையாளர் அல்லது கூட்டு உடமையாளர் இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் என தெரிய வந்ததும் அல்லது அவ்வாறு நம்புவதற்குப் போதுமான காரணங்கள் இருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் உடனடியாக அத்தகைய கணக்கினை “மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு” என மீளக்குறித்துரைத்து அது பற்றி கணக்கு உடமையாளருக்குச் சரியான முறையில் அறிவித்தல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் அதேபோன்று மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு இலக்கம் என்பனவற்றிலிருந்து தனிப்பட்டவரை அடையாளம் காணத்தக்கப் பொறிமுறையொன்றினை நடைமுறையில் வைத்திருத்தல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு மாற்றல் பற்றிய ஆவணச் சான்றுகளையும் ஆளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிவேடுகள் (ஒன்றில் பத்திரங்கள் வடிவில் அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் பேணப்படல் வேண்டும். இப்பணிப்புரைகளின் கீழ் மாற்றல் தொடர்பான பதிவேடுகளைப் பேணுகின்ற காலம் சட்ட ரீதியான பதிவேடுகளைப் பேணுகின்ற தேவைப்பாடுகள் மூலம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. மேலேயுள்ள பந்தி 1.1இன் விடயங்கள் (i-iv)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆட்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கொன்றினைத் திறப்பது தொடர்பில் பெறப்படும் ஆவணங்கள் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு 2 அல்லது இணைப்பு 3இனை (ஏற்புடைத்தானவிடத்து) பார்த்தல் வேண்டும்.

**3. மாதாந்தக் கூற்றுக்கள்**

இப்பணிப்புரைகளின் கீழ் புலம்பெயர்ந்தவர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி பற்றிய மாதாந்தக் கூற்றுக்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு 4இல் உள்ளவாறு dfem@cbsl.lk இற்கு மின்னஞ்சல் மூலமாக அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும்.

4. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக

(அ) **"புலம்பெயர்ந்தோர் படி"** என்பது புலம்பெயர்ந்தவர்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மற்றும் உருவம் மற்றும் அருவச் சொத்துக்கள் மற்றும் வாழ்க்கைத்துணை மற்றும் பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்ட அன்பளிப்புக்கள் என்பனவற்றின் பெறுகைகளை உள்ளடக்கும். சொத்துக்கள் பெறுமதிமிக்க கற்கள், பெறுமதிமிக்க உலோகங்கள், தனிப்பட்ட ஆபரணங்கள் மற்றும் நன்மைபெறுநர்கள் என்ற ரீதியில் பாரம்பரியமாக கிடைத்த சொத்துக்கள் உட்பட இலங்கையில் வைத்திருக்கப்படும் சொத்துக்களை உள்ளடக்கும்.

(ஆ) **"புலம்பெயர்ந்தோர்"** என்பது தமது சொந்த நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு நிரந்தரமாக குடியேறுவதற்காகச் செல்கின்ற ஆட்களைக் குறிக்கும்.

(இ) **"இலங்கையர்"** என்பது இலங்கைப் பிரசைகளைக் குறிக்கும்.

(ஈ) **"இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்"** என்பது தொழிலைப் பெறுவதற்கு அல்லது வியாபாரமொன்றினை நிறுவுவதற்கு அல்லது தொழில்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகளைக் குறிக்கும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு 1

**வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்கான கோரிக்கை**

**மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கான கோரிக்கை**

**1) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு உடமையாளரின் விபரங்கள்**

அ) முழுப் பெயர்*: ...............................................................

ஆ) தேசிய அடையாள அட்டை இல.: ...............................................................

இ) தற்போதைய கடவுச்சீட்டு*: ...............................................................

ஈ) இலங்கை கடவுச்சீட்டு இல. (ஏதுமிருப்பின்): ...............................................................

உ) பிறந்த திகதி : ...............................................................

ஊ) நிரந்தர வதிவிடத்தினைப் பெற்ற திகதி : ...............................................................

எ) நிரந்தர வதிவிடம்/ பிரசா உரிமை கிடைத்த நாடு*: ...............................................................

ஏ) விடுவிக்கப்படவுள்ள வெளிநாட்டுச் செலாவணித் தொகை*: ...............................................................

**2) அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் விபரங்கள்***

அ) பெயர் : ...............................................................

ஆ) கிளை : ...............................................................

இ) கிளை முகவரி : ...............................................................

ஈ) மின்னஞ்சல் : ...............................................................

உ) கோரிக்கைவிடும் அலுவலரின் பெயர் : ...............................................................

ஊ) பதவி : ...............................................................

எ) தொடர்பு இல. : ...............................................................

ஏ) திகதி : ...............................................................

குறிப்பு: 1. *மேலேயுள்ள 2.1இன் விடயம் (ஐ)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆட்களுக்கான தொடர்பான தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேலே கேட்டுக் கொள்ளப்பட்டவாறு துல்லியமானதும் முழுமையானதுமான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு 2

## தகைமையுடைய ஆட்களின் பந்தி 2.1இன் விடயம் (i-iii) தொடர்பில் புலம்பெயர் படிகளை விடுவிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள்

புலம்பெயர் படிகளை வழங்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் பின்வரும் தகவல்கள்/ ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்:

i. புலம்பெயர்ந்தவரிடமிருந்தான வழமையான கோரிக்கை (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவமொன்றைப் பேணுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றனர்).

ii. நிரந்தர வதிவிடங்களை, பிரசா உரிமையினை (ஏதுமிருப்பின்) மற்றும் இரட்டைப் பிரசா உரிமையினை (ஏதுமிருப்பின்) நிரூபிப்பதற்கான ஆவணங்கள்

iii. நிதியின் மூலங்களை நிரூபிக்கின்ற செல்லுபடியாகக்கூடிய ஆவணங்கள் (நன்கொடையாளரினால் கையொப்பமிடப்பட்ட சம்மதக் கடிதத்தினையும் பிறப்புச்சான்றிதழ் அல்லது திருமணச் சான்றிதழ் என்பனவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை ஏற்புடைத்தான விதத்தில் இணைத்துச்

சமர்ப்பிக்கப்படுமிடத்து விண்ணப்பதாரியின் பெற்றோர் அல்லது வாழ்க்கைத்துணையிடமிருந்தான நன்கொடைகளினை நிதியின் மூலமாக ஏற்றுக்கொள்ள முடியும்).

iv. அனுப்பப்பட வேண்டிய தொகைக்காக இலங்கை உண்ணாட்டரசிறைத் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்ட வரி இசைவுச் சான்றிதழ்.

v. ஆரம்பப் படியான ஐ.அ.டொலர் 200,000 மற்றும் வருடாந்தப் படியான ஐ.அ.டொலர் 30,000 இனை விஞ்சி மாற்றல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அல்லது மேற்கொள்ளப்படாது என்பதனை வெளிப்படுத்துகின்ற விதத்தில் சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சொலிஸ்டரினால் சரியான முறையில் முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு சத்தியக்கடதாசி. பிரகடனப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னதாக ஏதேனும் புலம்பெயர் படி பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனைப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

vi. நிரந்தர வதிவிட விசா பெறப்படும் நேரத்தில் பயன்படுத்தப்பட்ட மற்றும் அதனைத் தொடர்ந்து இன்றுவரை வைத்திருக்கப்படும் புலம்பெயர்பவரின் கடவுச்சீட்டுக்களினது அனைத்துப் பக்கங்களினதும் பிரதிகள்.

vii. வான் பயணச்சீட்டின் பிரதி.

viii. புலம்பெயர்பவரின் அட்டோணித்தத்துவத்தின் பிரதியொன்று (ஏற்புடைத்தாயின்).

ix. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 3 (இணைப்பு 5).

x. மேற்குறிப்பிட்டவை தவிர, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், அவர்களது உள்ளக நடைமுறைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஏதேனும் ஆவணங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு 3**

## பந்தி 2.1இன் விடயம் (iv)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்கள் தொடர்பில் மூலதன நிதியத்தினை விடுவிப்பது தொடர்பில் பெறப்பட வேண்டிய ஆவணங்கள்

பாரம்பரிய சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளிலிருந்து பெற்ற மூலதன நிதியத்திற்கான செலாவணியினை விடுவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் பின்வரும் தகவல்கள்/ ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்:

i. விண்ணப்பதாரியிடமிருந்து வழமையான கோரிக்கையொன்று (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவமொன்றினைப் பேணுமாறு ஆலோனை வழங்கப்படுகின்றனர்).

ii. விண்ணப்பதாரியின் தற்போதைய கடவுச்சீட்டின் பிரதி.

iii. நிதியின் மூலங்களை உறுதிப்படுத்தும் செல்லுபடியாகும் ஆவணங்கள்.

iv. அனுப்பப்பட வேண்டிய தொகைக்காக இலங்கை உண்ணாட்டரசிறைத் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமிருந்தான வரி இசைவுச் சான்றிதழொன்று; தேவைப்படுமிடத்து.

v. மேற்குறிப்பிட்டவை தவிர, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், அவர்களது உள்ளக நடைமுறைகளை மேற்கொள்ளத் தேவையான ஏதேனும் ஆவணங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு 4**

### மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ...............................

| கணக்கு உடமையாளரின் விபரங்கள் | | | | | | கணக்கின் விபரங்கள் | | | மூலதன மாற்றல்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முழுப் பெயர் | கடவுச்சீட்டு இல. | தே.அ. அட்டை இல. | நிரந்தர வதிவிடத் திகதி | நிரந்தர வதி விட நாடு/ தேசியம் | மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகளின் எண்ணிக்கை | மூ.கொ. வா.ரூ. கணக்கின் பதிவு இல. | கணக்கு இலக்கம் | நாணய வகை | கொடுக்கல் வாங்கலின் திகதி | தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு | உள்முக முதலீட்டுக் கணக்குகள் | இலங்கைக்கு வெளியேயுள்ள வெளிநாட்டுக் கணக்கு | மொத்தத் தொகை |
| | | | | | | | | | | | | | |

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ..................................... இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ..................................................... கையொப்பம்: .....................................................

திகதி: ...................................................... திகதி: ......................................................

**2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு 5**

| அ.வ. | கிளை | தொடர் இல. |
|---|---|---|
| | | |

## இலங்கை மத்திய வங்கி

## விடுவிக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான தகவல்

## படிவம் 3 - புலம்பெயர்ந்தோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள்

| சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் | சேரல்: வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர் |
|---|---|
| வெளிநாட்டுச் செலாவணிக்கான விண்ணப்பதாரியினால் நிரப்பப்பட வேண்டியது.<br><br>விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர் : .................................<br>(பெரிய எழுத்துக்களில்) : .................................<br><br>தற்போதைய முகவரி : .................................<br>(பெரிய எழுத்துக்களில்) : .................................<br><br>வெளிநாட்டு முகவரி : .................................<br>: .................................<br><br>தேசியம் : .................................<br>தே.அ.அ. மற்றும் கடவுச்சீட்டு இல.: .................................<br><br>இலங்கையிலிருந்து புறப்பட உத்தேசித்திருக்கும் திகதி : .................................<br>சேருமிடம் : .................................<br>வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு/ அனுப்பலின் நோக்கம்<br>.................................<br>.................................<br><br>வெளிநாட்டுச் செலாவணி பின்வருவனவற்றிற்காக விண்ணப்பிக்கப்படுகிறது<br>தந்தி மாற்றல் : .................................<br>வரைவுகள் : .................................<br>நாணயத் தாள்கள் : .................................<br>ஏனையவை (குறிப்பிடுக) : .................................<br><br>நான் மேலே குறிப்பிடப்பட்டவாறு சேருமிடத்தின் நாட்டில் நிரந்தரமாக வதிவதற்காக இலங்கையை விட்டுப் புறப்படுகிறேன்/ புறப்பட்டு விட்டேன் என்பதனையும் நான் இத்துடன் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் எனது அறிவுக்கெட்டிய வரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்திக் கொள்கிறேன். இதே நோக்கத்திற்காக வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக வெளிநாட்டுச் செலாவணிக்காக வேறு ஏதேனும் விண்ணப்பங்களைச் செய்திருக்கவில்லை.<br><br>திகதி: ....................... .................................<br>தி.மா.ஆ. *விண்ணப்பத்தாரியின் கையொப்பம்* | வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் நிரப்பப்பட வேண்டியது.<br><br>வங்கியின் குறியீடு : .................................<br><br>கிளையின் குறியீடு : .................................<br><br>நாட்டிற்கான குறியீடு : .................................<br><br>நோக்கத்திற்கான குறியீடு : .................................<br><br>நாணயத்திற்கான குறியீடு : .................................<br>வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி<br>தந்தி மாற்றல் : .................................<br>வரைவுகள் : .................................<br>நாணயத் தாள்கள் : .................................<br>ஏனையவை (குறிப்பிடுக) : .................................<br>வங்கியின் தொடர்பு இலக்கம்: .................................<br><br>தொடர்பான ஆவணங்களை நான் பரீட்சித்துள்ளேன். கோரிக்கையின் நம்பகத்தன்மையையிட்டு நான் திருப்திப்படுவதுடன் விண்ணப்பத்தாரியினால் தரப்பட்ட நோக்கத்திற்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனையையும் உறுதிப்படுத்துகின்றேன்.<br><br>திகதி: .......................... .................................<br>தி.மா.ஆ *அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் ஒப்பம் மற்றும் முத்திரை* |

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

## வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுகின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு பின்வருவனவற்றிற்குட்பட்டு தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கடன் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. வழமையான வங்கித்தொழில் நடவடிக்கைகளில் தமது வர்த்தகத் தீர்மானங்களின் பகுதியொன்றாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தீர்மானிக்கக்கூடியவாறு இலங்கையில் ஏதேனும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு கடன்களை வழங்கலாம்.

3. இவ்வனுமதியின் கீழான கடன்கள், உரிய காலத்தில் கடனை முழுமையாகத் தீர்ப்பதற்கு ஏற்ற விதத்தில் அதன் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது அவர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கிரமமான காசுப்பாய்ச்சலினை பெறுகின்றனர் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திருப்தியடைகின்ற விதத்தில் வெளிநாட்டு நாணயத்தினை உழைப்பவர்களுக்கு மாத்திரம் வழங்குதல் வேண்டும்.

4. தம்வசமுள்ள அல்லது எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் காசுப்பாய்ச்சல்களிலிருந்து கடனைத் தீர்ப்பனவு செய்வதற்கான வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போரின் இயலுமையினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நுண்மதியுடன் மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன் அவர்களது மதிப்பீட்டிற்கு வலுவளிப்பதற்கான ஆவணங்களையும் பேணுதல் வேண்டும்.

5. கடன் முழுமையாக பெறுமதி இழந்துள்ளது என அதன் நிதியியல் கூற்றுகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இனங்காணுகின்ற திகதியிலிருந்து 90 நாட்களை விஞ்சாத கால கட்டமொன்றில் மாத்திரம் கடன் அறவீடுகள் இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய திகதிக்கு முன்னர் இலங்கை ரூபாவில் கடன்களை மீட்பதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன் அனுமதியினைக் கோருதல் வேண்டும்.

6. இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய மாதாந்த கூற்றுக்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு I இற்கமைய வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7. நீக்கப்பட்ட 1953இன் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களின் நியதிகளும் நிபந்தனைகளும் அத்துடன் கடன்களின் அறவீடும் இப்பணிப்புரையின் நிபந்தனைகளுக்கமைவாக செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போருக்கான கடன்கள் தொடர்பான மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| கடன்பாட்டாளரின் பெயர் | கடன் வழஙகுகின்ற திகதி | நாணயத்தின் வகை | கடன் ஒப்பந்தக் காலம் | வழங்கிய தொகை | கடன் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

## வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் கொண்டு நடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் பிரிவு 9(2) என்பனவற்றின் நியதிகளின்படி தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுகின்ற வெளிநாட்டில் தொழில்பெற்றுள்ள இலங்கையர்களுக்கு இலங்கையில் ஏதேனும் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு, பின்வருவனவற்றுக்குட்பட்டு, தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிலிருந்து கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்கள்.**

2.1 கடன்களை மீளச் செலுத்துவதற்கு கடன்பாட்டாளர், வெளிநாட்டு நாணய உழைப்பினைக் கொண்டிருந்தால் மாத்திரம் வெளிநாட்டு நாணயத்தில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்பட வேண்டும் அத்துடன் கடன்பாட்டாளர்களின் வெளிநாட்டுத் தொழில் அல்லது அவரது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள மீதிகள் என்பவற்றை கருத்திற்கொண்டு வெளிநாட்டு நாணயத்தில் கடனை திருப்பிச்செலுத்துவதற்கான அவரது இயலுமையினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மதிப்பீடு செய்து சுயமாக திருப்தியடைதல் வேண்டும்.

2.2 வதிவிட அல்லது வர்த்தக ஆதனத்தை விருத்திசெய்கின்ற இலங்கையில் வதிகின்ற அத்தகைய ஆட்கள் (அதாவது, இலங்கையில் ஆதன விற்பனை வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளை வைத்திருப்போர்) பேணுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பின், அவர்களின் வெளிநாட்டு நாணயக் கடன்பெறுகைகளை அனுப்புமாறு கடன்பெறுநர் கோரினாலன்றி, கடன் பெறுகைகள் இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

**3. இலங்கை ரூபாவில் வழங்கப்படும் கடன்களும் முற்பணங்களும்.**

3.1 கடன் இடர்நேர்வு பற்றி, குறிப்பாக, கடன்பாட்டாளரின் வெளிநாட்டுத் தொழிலை கருத்திற்கொண்டு கடனை மீளச் செலுத்துவதற்கான அவரின் இயலுமை பற்றி மதிப்பீடு செய்து திருப்தியடைந்த பின்னர் இலங்கை ரூபாவில் கடன் மற்றும் முற்பணங்கள் வழங்கப்பட வேண்டும்.

3.2 கடன் பெறுகைகள் கடன்பாட்டாளருக்கு இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

4. வெளிநாட்டு நாணயத்தில் மற்றும் இலங்கை ரூபாவில் வழங்கப்படும் கடன்களினதும் முற்பணங்களினதும் ஒப்பந்த காலம், பிணை, மீளச் செலுத்தல் அல்லது கடன் தீர்ப்பனவு மற்றும் தவணை தவறுகின்ற போது வெளிநாட்டு நாணயத்தில், இலங்கை நாணயத்தில் கடன் அறவிடுதல் என்பன ஒழுங்குவிதிகளின் நியதிகளில் இருத்தல் வேண்டும்.

**5. ஏனைய நிபந்தனைகள்**

5.1 கடன் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படும் வரை, ஏதேனும் நியதிச்சட்ட ஆவணங்களைப் பேணுகின்ற தேவைப்படுத்தலுக்கு மேலதிகமாக, கடன் வழங்குகின்ற நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆவணரீதியான சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பேணுதல் வேண்டும். கடன் தீர்ப்பனவு செய்யப்பட்டவுடன், தொடர்புடைய ஆவணச் சான்றானது நியதிச்சட்ட ஆவணம் பேணுப்படுவதற்கு தேவைப்படும் காலம் வரை பேணப்படுதல் வேண்டும்.

5.2 இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய மாதாந்த கூற்றுக்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு I இற்கமைய வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

5.3 நீக்கப்பட்ட 1953இன் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டில் தொழில் பெற்றுள்ள இலங்கையருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்களின் நியதிகளும் நிபந்தனைகளும் அத்துடன் அறவீடும் இப்பணிப்புரையின் நிபந்தனைகளுக்கமைவாக செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

**2017ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் பற்றிய மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ......................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ...............................

| கடனின் வகை | கடன்பாட்டாளரின் பெயர் | கடன் வழங்குகின்ற திகதி | கடன் ஒப்பந்தக் காலம் | வழங்கிய தொகை | கடனின் நோக்கம் | பிணையின் தன்மை |
|---|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு நாணயக் கடன்கள் (வெளிநாட்டு நாணயத்தின் வகையினைக் குறிப்பிடவும்) | | | | | | |
| இலங்கை ரூபாய் கடன்கள் | | | | | | |

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: .....................................................

திகதி: .....................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: .........................................

கையொப்பம்: .....................................................

திகதி: .....................................................

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

## வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் கொண்டு நடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) பிரிவு 9(2)இன் நியதிகளின்படி வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இலங்கையிலும் வேறு ஏதேனும் நாட்டிலும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையர்களுக்கு அவர்களது வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற்கொள்ளாது பின்வருவனவற்றுக்குட்பட்டு, தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிலிருந்து கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. கடன் வழங்கும் நோக்கம்.**

2.1 இலங்கையில் வதிவிட ஆதனமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

2.2 இலங்கையில் வதிவிட ஆதனமொன்றினை நிருமாணித்தல்/ விருத்தி செய்தல்/ புதுப்பித்தல்

**3. வெளிநாட்டு நாணயங்களில் வழங்கப்படும் கடன்கள் (வெளிநாட்டு நாணயக் கடன்கள்)**

3.1 கடன்களை மீளச் செலுத்துவதற்கு வெளிநாட்டு நாணய உழைப்பினை கடன்பாட்டாளர் கொண்டிருந்தால் மாத்திரம் வெளிநாட்டு நாணயக் கடன்கள் வழங்கப்பட வேண்டும் அத்துடன் கடன் வழங்குவதற்கு முன்னர் கடன்பெறுநர் வெளிநாட்டு நாணயத்தில் கடனை மீளச்செலுத்துவதற்கான இயலுமையினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மதிப்பீடு செய்து சுயமாக திருப்தியடைதல் வேண்டும்.

3.2 கடன் பெறுகைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுக்காக

கடன்பாட்டாளரின் பெயரில் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும். கடன் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் உடனடியாக வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கு மூடப்படுதல் வேண்டும்.

3.3 வதிவிட ஆதனத்தை விருத்தி செய்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு, அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பின், கடன்பெறுகைகளை மாற்றுவதற்கு கடன்பாட்டாளர் கோரினாலன்றி, கடன் பெறுகைகள் வெளிநாட்டு நாணய கடன் கணக்கிலிருந்து இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

3.4 வெளிநாட்டு நாணய உள்முக பணவனுப்பல் ஊடாக அல்லது கடன்பாட்டாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் மற்றும் உள்முக முதலீட்டு கணக்குகளில் கிடைக்கப்பெறும் நிதியங்களைப் பயன்படுத்தி கடனை மீளச்செலுத்தல் வேண்டும்.

4. **இலங்கை ரூபாவில் வழங்கப்படும் கடன்கள் (ரூபாக் கடன்கள்)**

4.1 கடன்களை மீளச் செலுத்துவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்து திருப்தியடைந்த பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ரூபாய்க் கடன்களை வழங்குதல் வேண்டும்.

4.2 கடன் பெறுகைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுதல் நோக்கங்களுக்காக கடன்பாட்டாளரின் பெயரில் இலங்கை ரூபாய்க் கடன் கணக்கொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

4.3 கடன் பெறுகைகள் இலங்கை ரூபாவில் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

4.4 வெளிநாட்டு நாணய உள்முக பணவனுப்பல்களூடாகத் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் உள்முக முதலீட்டு கணக்குகள் கிடைக்கப்பெறும் நிதியங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் கடன்பெறுநரின் இலங்கை ரூபா உழைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும் கடன் மீளச்செலுத்தப்பட வேண்டும்.

5. வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை அறவிடுதல் அல்லது தவணை தவறுகின்ற போது இலங்கை ரூபாவில் கடன்களை அறவிடுதல் ஒழுங்குவிதிகளின் நியதிகளில் இருத்தல் வேண்டும்.

6. **ஏனைய நிபந்தனைகள்**

6.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கடனுடன் இணையப்பெற்ற அனைத்து இடர்நேர்வுகளையும் மதிப்பீடு செய்து இறையிலி ஆதனத்தின் மீதான ஈட்டு வடிவில் அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்கள் அல்லது சொத்துகள் பற்றுரிமை வடிவத்தில் போதிய பிணையினைப் பெற்றுக்கொள்ளல் உள்ளடங்கலாக அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்குப் பொருத்தமான நுண்மதியுடைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

6.2 கடன்பாட்டாளரின் பாரம்பரிய ஆதனமொன்றில் அல்லது கடன்பெறுநர் இலங்கையில் வதிபவராகவிருக்கின்ற போது சொந்தமாகக் கொண்டிருந்த ஆதனமொன்றில் நிருமாணிப்பதற்காக/ விருத்தி செய்வதற்காக/ புதுப்பிப்பதற்காக கடன் பெறுகைகள் பயன்படுத்தப்படுமாயின், 1988ஆம் ஆண்டில் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நுண்மதியுடைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தெரிவுசெய்யப்பட்ட விலை மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து ஆதனத்தின் விலை மதிப்பீட்டினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பெறுதல் வேண்டும்.

6.3 பந்தி 6.2இன் நியதிகளின்படி கடன் பெறுகைகளைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட/ நிருமாணிக்கப்பட்ட/ விருத்தி செய்யப்பட்ட/ புதுப்பிக்கப்பட்ட ஆதனத்திலிருந்தான பெறுதிகளின் விற்பனைப் பெறுகைகள் பின்வரும் அடிப்படையில் இலங்கைக்கு வெளியில் அனுப்பப்படுகின்றது என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

(அ) கடனை மீளச் செலுத்துவதற்கு இலங்கைக்கு அனுப்பப்படும் தொகைக்கு விகிதாசாரமான விற்பனை பெறுகைகள் கட்டுப்பாடுகளின்றி அனுப்பப்படலாம்.

(ஆ) ஏதேனும் மீதி விற்பனைப் பெறுகைகள் காணப்படுமாயின் புலம்பெயர் படிகளுக்குட்பட்டு அனுப்பப்படலாம்.

6.4 எதிர்கால வெளிமுக பணவனுப்பல்களை வசதிப்படுத்துவதற்காக, கடன் தீர்ப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் பற்றிய உறுதிப்படுத்தலொன்றினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் கடன்பாட்டாளருக்கு வழங்குதல் வேண்டும்.

6.5 கடன் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படும் வரை, ஏதேனும் நியதிச்சட்ட ஆவணத்தினைப் பேணுகின்ற தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, கடன் வழங்குகின்ற நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆவண ரீதியான சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பேணுதல் வேண்டும். கடன் தீர்ப்பனவு செய்யப்பட்டவுடன், தொடர்புடைய ஆவணச் சான்றானது நியதிச்சட்ட ஆவணம் பேணுப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட காலம் வரை பேணப்படுதல் வேண்டும்.

6.6 இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய மாதாந்த கூற்றுக்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு I இற்கமைய வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7. நீக்கப்பட்ட 1953இன் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களின் நியதிகளும் நிபந்தனைகளும் அத்துடன் அறவீடும் இப்பணிப்புரையின் நிபந்தனைகளுக்கமைவாக செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

## வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் பற்றிய மாதாந்தக் கூற்று

வங்கியின் பெயர்: ......................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| கடனின் வகை | கடன்பாட்டாளரின் பெயர் | கடன் வழங்குகின்ற திகதி | நாணயத்தின் வகை | வழங்கிய தொகை | கடனின் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணயக் கடன்கள்** (வெளிநாட்டு நாணயத்தின் வகையினைக் குறிப்பிடவும்) | | | | | |
| **இலங்கை ரூபாய் கடன்கள்** | | | | | |

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவம்பர் 20

## இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் பிரிவுகள் 4 மற்றும் 9(2)இன் நியதிகளில் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்து சந்தைப்படுத்துகின்ற நோக்கத்திற்காக, குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் பின்வரும் விதத்தில் அனுமதி வழங்கப்படுகிறது.

2.1 இலங்கை அபிவிருத்தி முறிகளை கையேற்றல், உடமையில் வைத்திருத்தல் மற்றும் மாற்றல் செய்யும் நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஐ.அ.டொலர்களில் பின்வரும் இரண்டு விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுவதற்கு.

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை நேரடியாக கொள்வனவு செய்கின்ற, கீழே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர் வகையிலிருந்து பெறப்பட்ட, இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிதியத்தினை வரவு வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் "இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டுக் கணக்கு" என்ற பெயரில் ஐ.அ.டொலரில் வட்டி உழைக்கும் கணக்கினைப் பேணுவதற்கு.

(ஆ) கீழேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர் வகையுடன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளை வகைப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக வட்டி உழைக்கும் அடிப்படையில் பேணக்கூடிய "முறி முதலீட்டிற்கான டொலர் கணக்கு" என்ற பெயரில் ஐ.அ.டொலர் கணக்கு. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களைப் பொறுத்தவரையில் இக்கணக்கினைப் பேணுவது கட்டாயமல்ல.

2.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து ஐ.அ.டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு முதனிலை வணிகர்களாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட முகவர்கள், அத்தகைய கொள்வனவுகள் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடமையாளர்களிடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருக்குமிடத்து, கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் தொகை இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவிற்கு தேவையற்றதாக இருக்குமிடத்து முதனிலை வணிகர்கள் அவ்வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு உடனடியாக விற்றுவிடல் வேண்டும்.

**3. இலங்கை அபிவிருத்தி முறிகளின் தகைமையுடைய முதலீட்டாளர்களின் வகைகள்**

(அ) 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின்கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள்.

(ஆ) இலங்கையில் வதிகின்ற அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற வெளிநாட்டு அரசுகளின் பிரசைகள்

(இ) இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவைப் பெற்றுள்ள இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கைப் பிரசைகள்

(ஈ) தொழிலொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக அல்லது வியாபாரமொன்றினை ஏற்படுத்துவதற்காக அல்லது தொழில்சார் நிபுணத்துவத்தில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகள்.

(உ) இலங்கை தவிர்ந்த வேறொரு நாட்டின் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத நிறுவனங்கள்.

(ஊ) ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை வரவு வைக்கும் நோக்கத்திற்காக மாத்திரம் பேணப்படுகின்ற அத்தகைய கம்பனிகளின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு பற்று வைப்பதன் மூலம் இலங்கை அபிவிருத்தி முறிகளின் அனைத்து கொள்வனவுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்தான முழுமையான விலக்கல்களுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் நியதிகளில் உடன்படிக்கையினைச் செய்து கொண்டுள்ள கம்பனிகள்.

(எ) நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட ஒப்புதலின் நியதிகளில், அத்தகைய காப்புறுதிக் கம்பனிகளினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் பேணப்படும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் செய்யப்படும் பற்றுக்களுக்கெதிராகவே இலங்கை அபிவிருத்தி முறிகளின் அனைத்துக் கொள்வனவுகளும் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள்.

(ஏ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்கள்.

(ஐ) வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்.

(ஒ) சட்டத்தின் 4(1)(அ) மற்றும் 4(1)(ஆ) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்.

(ஓ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனியாட்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள்.

**4. இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு**

**4.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து ஐ.அ.டொலரில் பெறப்பட்ட நிதியங்கள்.

**4.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களினால் இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு செய்யப்படவேண்டிய கொடுப்பனவு தொடர்பில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்ட முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் அல்லது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, செய்யப்படும் நிதிய மாற்றல்.

(ஆ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் மீது வேறு ஏதேனும் நோக்கத்திற்கான மீளளிப்பு மற்றும் கொடுப்பனவுகளின் பொருட்டு மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கான நிதிய மாற்றல்.

**5. முறி முதலீடுகளுக்கான டொலர் கணக்கு**

**5.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட ஐ.அ.டொலர்.

(ஆ) இலங்கை அபிவிருத்தி முறிகளின் விற்பனை தொடர்பில் மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட நிதியம்.

(இ) கணக்குடமையாளரினால் வைத்திருக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான முதல் மற்றும் வட்டியின் மீளக்கொடுப்பனவாகப் பெறப்பட்ட தொகைகள்.

**5.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளை கையேற்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் கொடுப்பனவாக பொதுப்படுகடன் கண்காணிப்பாளரால் முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்கச் செய்யப்படும் நிதிய மாற்றல்.

(ஆ) இரண்டாந்தரச் சந்தையில் கணக்குடமையாளரினால் இலங்கை அபிவிருத்தி முறிகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த அபிவிருத்தி முறி விற்பனையாளருக்கான கொடுப்பனவுகள்.

(இ) துணைப் பிரிவுகள் மற்றும் முறிகளின் திரட்சிக்கான கட்டணம் போன்றவற்றிற்காக பொதுப்படுடன் கண்காணிப்பாளருக்கு கொடுப்பனவு செய்யவேண்டிய ஏதேனும் தொகை தொடர்பாகப் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட ஆவணம் அல்லது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கிணங்க செய்யப்படும் நிதிய மாற்றல்கள்.

(ஈ) இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான அளவினைவிட கணக்குடமையாளர் கணக்கில் மிகையானதாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்றல்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவெம்பர் 20

**உள்முக முதலீட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் (கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம்

இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 9(2)ஆம் பிரிவின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இச்சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதன கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளில் (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான ஒழுங்குவிதிகள்) குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு உள்முக முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்டன.

2. தகைமையுடைய ஆட்கள்

உள்முக முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கு தகைமையுடைய ஆட்கள் பற்றி கணக்குகள் மீதான ஒழுங்குவிதிகள் குறித்துரைக்கின்றன.

3. அனுமதிக்கப்பட்ட வரவுகள்

3.1 உள்முக முதலீட்டுக் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட வரவுகள் கணக்குகள் மீதான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படுகின்றன.

3.2 இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், கணக்குத் தொடர்பான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக, பின்வரும் வரவுகள் உள்முக மூலதனக் கணக்குகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

(அ) பங்கிலாபங்கள், விற்பனை மீதான பெறுகைகள், பங்குகளின் மீள் கொள்வனவுகள் மற்றும் வதிவற்ற முதலீட்டாளர்களினால் வழங்கப்பட்ட பொறிகள் மற்றும் கருவிகளின் பெறுமதிக்கெதிராக, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட பங்குகளின் அனைத்து வகுப்புக்களிலிருந்தும் பெறப்பட்ட வேறு ஏதேனும் தொடர்பான வருமானம்.

4. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

4.1 உள்முக முதலீட்டுக் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் கணக்குகள் மீதான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படுகின்றன.

4.2 இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், கணக்குத் தொடர்பான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்குப் புறம்பாக பின்வரும் பற்றுக்கள் உள்முக முதலீட்டுக் கணக்குகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு நாணயக் கடன்கள் (படுகடன் பிணையங்கள் உட்பட) சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் வழங்கப்பட்ட அனுமதிகளின்படி பெறப்பட்டிருக்குமிடத்து (இலங்கைக்கு வெளியே மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைச் செய்யும் நோக்கத்திற்காக பெறப்பட்ட கடன்கள் நீங்கலாக) இலங்கையில் வதியும் ஆளொருவரினால் (அதாவது கடன்பாட்டாளர்) வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுகைகளது மாற்றல்.

5. ஏனைய நிபந்தனைகள்

5.1 உள்முக முதலீட்டுக் கணக்குகள் மேலதிகப் பற்றுக்களை கொண்டிருக்கக்கூடாது என்பதுடன் உள்முக முதலீட்டு கணக்கு வைத்திருப்பவருக்கு கடன் வசதிகளையும் வழங்கக்கூடாது.

5.2 கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் அட்டவணை II இன் பந்தி 1(2)இன் துணைப் பந்திகளான இ, ஊ, எ மற்றும் ஐ மற்றும் பந்தி 1(3) இன் துணைப் பந்திகளான ஈ, உ, ஊ என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட மாற்றல்களை மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான ஒழுங்குவிதிகளின் கீழும் அதனைத் தொடர்ந்து காலத்திற்கு காலம் வழங்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள் என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதி தொடர்பிலும் மேற்கொள்ளலாம்.

5.3 கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் அட்டவணை II இன் பந்தி 1(2)இன் துணைப்பந்தி (இ) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நிறைவேற்றுகின்ற நேரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்ற ரீதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று முதலீட்டின் அனைத்து வருமானங்களும் பெறுகைகளும் உள்முக முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துகின்றவிடத்து, அத்தகைய முதலீட்டினை, மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான ஒழுங்குவிதிகளின் தொழிற்பாட்டுத் திகதிக்கு முன்னதாக மீளக்குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.4 கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் அட்டவணை II இன் பந்தி 1(2)இன் துணைப்பந்தி (ஊ) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக விளங்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி, மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான ஒழுங்குவிதிகளின் நியதிகளில் அல்லது சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட விசேட ஒப்புதலின் கீழ் கடன்பாட்டாளரினால் வெளிநாட்டு நாணயக் கடன்கள் (படுகடன் பிணையங்கள் உட்பட) பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.5 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்ற ரீதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மேற்கொள்ளப்படவுள்ள கொடுக்கல்வாங்கல்களின் சட்ட பூர்வத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையினை நிறுவுவதற்காக சரியான சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (கேட்டுக்கொள்ளப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் இப்பணிப்புரைகளில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுகுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.6 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களென்ற ரீதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஏதேனும் சட்ட ரீதியான பதிவேடுகளை பேணும் தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் நேரத்தில் பெறப்பட்ட ஆவணச் சான்றுகளை உரிய முதலீடுகளை அகற்றியதன் பின்னரும் ஆறு ஆண்டுகள் முடியும் வரை பேணுதல் வேண்டும்.

5.7 உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினை மூடிவிடுதல்

(அ) குறிப்பிடப்பட்ட உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக கணக்குடமையாளர் கையேற்ற அனைத்து முதலீடுகளையும் அகற்றியதன் பின்னர் மாத்திரமே உள்முக முதலீட்டுக் கணக்கினை மூடமுடியும்.

(ஆ) எனினும், புதிய உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினைத் திறக்கும் நோக்கத்திற்காக அல்லது இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட

வணிகருடன் பேணும் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு நிதிகளை மாற்றல் செய்வதற்காக இதே கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை அகற்றுவதற்கு முன்னர் உள்முக முதலீட்டுக் கணக்கினை மூடுவதற்கு உள்முக முதலீட்டுக் கணக்கு உடமையாளர் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பத்தில் ஆரம்ப உள்முக முதலீட்டுக் கணக்கினை வைத்திருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், கணக்குடமையாளரின் கோரிக்கையின் பேரில் மூடப்படவுள்ள உள்முக முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதியங்களிலிருந்து செய்யப்பட்ட வெளிநின்ற முதலீடுகளின் உறுதிப்படுத்தலுடன் பெறுநரின் உள்முக முதலீட்டுக் கணக்கினை தொழிற்படுத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**6. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கையிடல்**

6.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரென்ற ரீதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உள்முக முதலீட்டுக் கணக்குகளின் விபரங்களை நாளாந்த அடிப்படையில் https://www.cbsl.lk/forexnet ஊடாக இத்திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்ற ரீதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், மேலேயுள்ள அறிக்கையிடுகின்ற தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, அவர்களின் தொடர்பான வங்கிகளின் கணக்கு ஏடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

6.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்ற ரீதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு இலத்திரனியல் ரீதியாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மையினையும் பூரணமான தன்மையினையும் சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும். இதன் உள்ளகக் கணக்காய்வு, காலாந்தர மீளாய்வு மற்றும் இணங்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இவை மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தில் பரிசோதனைகளுக்கு கிடைக்கத்தக்கவிதத்தில் ஆயத்தநிலையில் இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவெம்பர் 20

## வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணி வருதல்) ஒழுங்குவிதிகள் (கணக்குகள் மீதான ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 7 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான பிரிவு 9(2)இன் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளில் (மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான ஒழுங்குவிதி) அனுமதிக்கப்பட்டவாறு வெளிமுக முதலீட்டுக் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

**2. தகைமையுடைய ஆட்கள்**

வெளிமுக முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கான தகைமையுடைய ஆட்கள் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**3. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

3.1 வெளிமுக முதலீட்டுக் கணக்கின் அனுமதிக்கப்பட்ட வரவுகள் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றன.

3.2 இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகளுக்குப் பின்வரும் வரவுகள் அனுமதிக்கப்படுகின்றன.

(அ) கணக்கு உடமையாளரின் மற்றொரு வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(ஆ) பங்கிலாபங்கள், விற்பனை மற்றும் முதிர்ச்சிகளிலிருந்தான பெறுகைகள், மூலதன இலாபங்கள், திரவத்தன்மைப் பெறுகைகள், பங்குகள் மீது பெறத்தக்க மூலதனக் குறைப்புக்கள், நாட்டிற்கான முறிகள், கூறுகள் மற்றும் படுகடன் பிணையங்கள், இலாபங்கள், அளவுகள் மற்றும் மிகை நிதியங்கள், முகாமைத்துவக் கட்டணங்கள், ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் தரகுகள் அல்லது வேறு ஏதேனும் தொடர்பான பெறுகைகள் போன்றவற்றின் வடிவில் பெறப்பட்ட பணவனுப்பல்கள் (வழங்குநரினால் ஒப்படைக்கப்பட்ட கம்பனி நடவடிக்கைகளின் மூலம் முதலீட்டாளர் மீது சுமத்தப்படுகின்ற ஏதேனும் தொடர்பான பங்குகள், உரிமைகள், உரித்துக்கள் அல்லது மாற்றல்களின் பிரயோகம் உட்பட), சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் வழங்கப்பட்ட அனுமதியொன்றின் கீழ் அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து இலங்கையில் வதியும் ஆட்களினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் பெறப்பட்டவைகள்.

**4. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

4.1 வெளிமுக முதலீட்டுக் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

4.2 இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்குப் புறம்பாக, வெளிமுக முதலீட்டு கணக்கிற்குப் பின்வரும் பற்றுக்கள் அனுமதிக்கப்பட்டன.

(அ) கணக்கு உடமையாளரின் மற்றொரு வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்

(ஆ) கணக்கு உடமையாளரின் ரூபாக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(இ) பங்கிலாபங்கள், விற்பனை மற்றும் முதிர்ச்சியின் மீதான பெறுகைகள், மூலதன இலாபங்கள், விற்பனை மற்றும் முதிர்ச்சியின் மீதான பெறுகைகள், மூலதன இலாபங்கள், திரவத்தன்மைப் பெறுகைகள், பங்குகளின் மீதான பெறத்தக்க மூலதனக் குறைப்புக்கள், நாட்டிற்கான முறிகள், கூறுகள் மற்றும் படுகடன் பிணையங்கள், இலாபங்கள், அளவுகள் மற்றும் மிகை நிதிகள், முகாமைத்துவக் கட்டணம், ஆலோசனைக் கட்டணம் மற்றும் தரகுகள் அல்லது வேறு ஏதேனும் மற்றையவற்றுடன் தொடர்பான பெறுகைகள் போன்றவற்றிலிருந்தான கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள் (வழங்குநரினால் ஒப்படைக்கப்பட்ட கம்பனி நடவடிக்கைகளின் மூலம் முதலீட்டாளர் மீது சுமத்தப்படுகின்ற ஏதேனும் தொடர்பான பங்குகள், உரிமைகள், உரித்துக்கள் அல்லது மாற்றல்களின் பிரயோகம் உட்பட) அத்தகைய தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் நேரடியாக பற்று வைப்பதன் மூலம் அத்தகைய தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் போன்றவற்றிலிருந்து வெளிமுக முதலீட்டு கணக்குகளுக்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகளிலிருந்து முதலீடுகள் செய்யப்பட்டிருக்குமிடத்து வெளிநாட்டு மூலதனக் கொடுக்கல்வாங்கல் கணக்கொன்றிலிருந்து வெளிமுக முதலீட்டு கணக்கொன்றிற்கு பெறப்பட்டவைகள் (அதாவது வெளிமுக முதலீடு).

5. ஏனைய நிபந்தனைகள்

5.1 வெளிமுக முதலீட்டுக் கணக்குகள், வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றாக உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணப்பட வேண்டும்.

5.2 வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றினை தகைமையுடைய முதலீட்டாளர்களுடன் சேர்ந்து கூட்டாகப் பேண முடியாது.

5.3 வதியும் முதலீட்டாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றுடனே வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் எல்லாவற்றையும் திறந்து பேண வேண்டும்.

5.4 மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்த பின்னர், வதியும் முதலீட்டாளர்கள் இப்பணிப்புரையின் நிபந்தனைகளுக்குட்பட்டு மாத்திரமே ரூபாப் பெறுகைகள் வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்டு வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலீடுகளை மேற்கொள்ளாமல் வெளிமுக முதலீட்டுக் கணக்கில் அத்தகைய நிதிகளை வைத்திருக்கக்கூடாது.

5.5 கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் அட்டவணை IIஇன் பந்தி 2(4)இன் துணைப் பந்திகள் (அ) (இ) (ஈ) மற்றும் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் அட்டவணை IIஇன் பந்தி 2.(5)இன் துணைப் பந்தி என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான ஒழுங்குவிதிகளுடன் தொடர்பான விதத்திலும் அதன் பின்னர் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் வழங்கப்படும் சிறப்பு அனுமதிகளுக்கேற்பவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5.6 கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் அட்டவணை IIஇன் பந்தி 2.(5) பந்தியின் துணைப்பந்தி (அ)இல் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுகளை, வெளிநாட்டுக் கம்பனியின் (அதாவது முதலீட்டினைப் பெற்றவர்) கணக்கொன்றிற்கு அல்லது அனுமதிக்கப்பட்ட பிணையத்தின் (முதலீட்டினைப் பெற்றவர் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டவராக இருப்பின் பங்குத்தரகரூடாக) விற்பனையாளரின் கணக்கிற்கு அல்லது நாட்டிலுள்ள வதியும் முதலீட்டாளரினால் வைத்திருக்கப்படும் கணக்கொன்றிற்கு (வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான அந்நாட்டின் சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கிணங்க) அல்லது நியமிக்கப்பட்ட செயலாளரின் கணக்கிற்கு அல்லது முதலீட்டினைப் பெற்றவர் கூட்டிணைத்தல் செயற்பாட்டில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பதிவாளரின் கணக்கிற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

5.7 கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகளின் அட்டவணை IIஇன் பந்தி 2.(5) இன் துணைப் பந்தி (இ) மற்றும் இப்பணிப்புரையின் பந்தி 4(ஆ)இன் துணைப் பந்தி (iii) என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட மாற்றல்கள், கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள முதலீட்டுத் தொகையில் பயன்படுத்தப்பட்ட நிதியத்தின் விகிதாசாரத்திற்கேற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.8 வதியும் முதலீட்டாளரொருவர், மேலதிக முதலீடொன்றிற்காக முதலீட்டினைப் பெறுகின்றவருக்கு வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றினூடாக நிதிகளை அனுப்ப எண்ணும் சந்தர்ப்பத்தில், முதலீட்டின் ஒரு பகுதி ஏற்கனவே வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றினூடாக மேற்கொண்டிருக்குமிடத்து, உத்தேச மேலதிக முதலீட்டினை ஆரம்ப முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக வழிப்படுத்தல் வேண்டும்.

5.9 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வதியும் முதலீட்டாளர்களினால் இணைப்பு Iஇல் உள்ள ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடைத்தான வரையறைகள் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும் சிறப்பு அனுமதிகளுக்குட்பட்டு மாத்திரம் வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து ஏதேனும் வெளிமுக பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.10 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்காக (ஏற்புடைத்தான விதத்தில்) சத்தியக்கடதாசி ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அ) வதியும் முதலீட்டாளர், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற மற்றொரு வங்கியில் ஏதேனும் இன்னொரு வெளிமுக முதலீட்டுக் கணக்கினைத் திறக்கவில்லை.

(ஆ) தனிப்பட்ட ஆளொருவரினால் அல்லது பங்குடமையினால் முதலீடொன்று மேற்கொள்ளப்படவுள்ள சந்தர்ப்பத்தில், சட்டத்தின் பிரிவு 31(3)இன் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையின் நியதிகளில் தனிப்பட்ட ஆள் அல்லது பங்காளர் இலங்கையில் வதிவோராக இருத்தல்.

5.11 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மேற்கொள்ளப்படவுள்ள அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வத் தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவிக் கொள்வதற்காகப் பொருத்தமான சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (தேவைப்படுத்தப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்குப் புறம்பாக, இப்பணிப்புரைகளில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

5.12 இணைப்பு Iஇன் பந்தி 1இன் துணைப் பந்தி (இ)இல் குறிப்பிடப்பட்ட இசைவுக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஏதேனும் காரணத்திற்காக உத்தேச முதலீட்டிற்கு வெளிமுகப் பணவனுப்பல்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரென்ற ரீதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி இதனை dfem@cbsl.lk ஊடாக பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

5.13 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களென்ற ரீதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கணக்கு உடமையாளரினால் கையேற்கப்பட்ட அனைத்து முதலீடுகளையும் குறிப்பிட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக அகற்றியதன் பின்னர் மாத்திரமே வெளிமுக முதலீட்டுக் கணக்கினை மூடுதல் வேண்டுமென்பதுடன் இதனை வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட அனைத்து முதலீடுகளும் அகற்றப்பட்டமையின் மீதான விபரங்களுடன் சேர்த்து பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

**6. பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிக்கையளித்தல்**

6.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களென்ற ரீதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பான விபரங்களை நாளாந்த அடிப்படையில் **https://www.cbsl.lk/forexnet** ஊடாக இத்திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களென்ற ரீதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மேற்குறிப்பிட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கிணங்க, அவர்களது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களைத் தயாரிப்பதற்கு அல்லது பிரித்தெடுப்பதற்கு வங்கிக்குள்ளே முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

6.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலத்திரனியல் ரீதியாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் துல்லியமான தன்மை மற்றும் பூரணமான தன்மையின் சரிபார்ப்புக்களை அதன் உள்ளகக் கணக்காய்வு, காலாந்தர மீளாய்வுகள் மற்றும் இணங்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டியதுடன் இந்நடவடிக்கையின் சான்றுகளை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பரீட்சிப்புக்களுக்குக் கிடைக்கத்தக்கதாக ஆயத்தநிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

6.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வதியும் முதலீட்டாளர்களிடமிருந்து இணைப்பு Iஇல் உள்ள ஆவணங்களைப் பெற்று அத்தகைய ஆவணங்களைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

**இணைப்பு I**

1. இப்பணிப்புரையின் கீழ் அனைத்து வெளிமுக முதலீடுகளுக்குமாகப் பின்வரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அ) இணைப்பு III இல் உள்ள தகவல்களை உள்ளடக்கிய கோரிக்கை

(ஆ) இணைப்பு IV இல் உள்ள படிவத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அங்கத்துவத்தினைப் பெற்ற உறுப்பினரால் செய்யப்பட்ட விதந்துரைப்பு

(இ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (முதலீடுகளுக்கான ஒவ்வொரு வெளிமுகப் பணவனுப்பல்களுக்குமான) ஏற்பாடுகளின் கீழ் பரீட்சிப்புக்களெதுவும் நிலுவையில் இல்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திலிருந்து இசைவுச் சான்றிதழ்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் (இரண்டாவது வங்கி/ வங்கிகள்) வெளிமுக முதலீட்டுக் கணக்குகளைப் பேணி வருவதற்கு வதியும் முதலீட்டாளர்களுக்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலப்பகுதிக்காக அனுமதிக்கப்பட்ட வரையறைக்கிணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதனைக் கண்டறிவதற்காக, இரண்டாவது வங்கியில்/ வங்கிகளில் வதியும் முதலீட்டாளரினால் பேணப்படும் குறிப்பிட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்த தொகை தொடர்பாக இரண்டாந்தர வங்கியின்/ வங்கிகளின் உறுதிப்படுத்தலொன்று (ஏற்புடைத்தானவிடத்து).

2. மேலே குறிப்பிடப்பட்டவற்றிற்குப் புறம்பாக, பின்வரும் வகை - குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களும் பெறப்பட வேண்டும்.

(அ) உத்தரவாதங்களினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்.

i. கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ், விஞ்ஞாபனம் மற்றும் அமைப்பு அகவிதிகள் என்பனவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

ii. உத்தேச முதலீட்டிற்கான ஒப்புதல் மீதான கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

(ஆ) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்குடமையொன்று

i. பங்குடமை ஒப்பந்தம் மற்றும் பதிவுகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

ii. ஒவ்வொரு பங்காளரினதும் முதலீட்டுத் தொகையினையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் வரி இசைவுச் சான்றிதழ் (உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு).

(இ) இலங்கையிலுள்ள தனிப்பட்ட வதிவோர்

i. வதிவிட அந்தஸ்தினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்

ii. முதலீட்டுத் தொகையினை உள்ளடக்கும் விதத்தில் வரி இசைவுச் சான்றிதழ் (உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு)

**இணைப்பு II**

1. வெளிநாட்டுச் செலாவணியின் வெளிமுகப் பணவனுப்பல் மேற்கொள்ளப்பட்டு மூன்று மாதத்திற்குள்:

(அ) பட்டியலிடப்படாத கம்பனியொன்றின் பங்குகளில் முதலீடு செய்யப்படுமிடத்து நாட்டிற்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட புதிய கம்பனியின் கூட்டிணைப்பு, விஞ்ஞாபனம் மற்றும் அமைப்பு அகவிதிகள் என்பனவற்றின் சான்றிதழ்.

(ஆ) வெளிநாட்டு அலுவலகங்களின் பதிவுச் சான்றிதழ்.

(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட பட்டியலிடப்படாத கம்பனியிலுள்ள முதலீட்டுப் பங்குகள் தொடர்பில் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் சான்றுகளின் பிரதிகள்.

(ஈ) ஊழியர் பங்குத் தேர்வு திட்டத்திற்கு சந்தா செலுத்தும் அனைத்து வதிவிட ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட பங்கு முதலீட்டு/ சேர்ப்புச் சான்றிதழ்களின் பிரதிகள்.

(உ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பட்டியலிடப்பட்டுள்ள பங்குகளிலுள்ள முதலீடுகள் தொடர்பில் வெளிநாட்டுப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் அரச அமைப்புக்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் தொடர்பான மத்திய வைப்பக முறைமைகளிலிருந்தான கூற்றுக்கள்.

(ஊ) இலங்கைக்கு வெளியே வெளியிடப்பட்ட கூறுகள்/ படுகடன் பிணையங்களின் சேர்ப்பனவிற்கான சான்றிதழின் பிரதிகள்.

2. வருடாந்த அடிப்படையொன்றில்

(அ) பட்டியலிடப்படாத வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் கடல்கடந்த அலுவலகங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பட்டியலிடப்பட்டுள்ள பங்குகளிலுள்ள முதலீடுகள் தொடர்பில் வெளிநாட்டுப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் அரச அமைப்புக்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் தொடர்பான மத்திய வைப்பக முறைமைகளிலிருந்தான கூற்றுக்கள்.

**இணைப்பு III**

**வெளிநாட்டு முதலீடுகள் மீதான தகவல்கள்**

1. **பொதுவான தகவல்கள்**

(அ) கம்பனிகள்/ பங்குடமை/ தனிப்பட்டவரின் பெயர்:

(ஆ) வியாபாரப் பதிவு இலக்கம்/ தேசிய அடையாள அட்டை இலக்கம்/ இலங்கையில் வதியும் முதலீட்டாளர் இலங்கையில் வதியும் வெளிநாட்டு நபராகவும் செல்லுபடியாகக்கூடிய தேசிய அடையாள அட்டையைக் கொண்டிராதவராகவும் இருக்குமிடத்து மாத்திரம் கடவுச்சீட்டு இலக்கம்:

2. **வெளிநாட்டு முதலீடுகள் மீதான விபரங்கள் (ஏற்புடைத்தானவிடத்து)**

2.1 பங்குகள்/ நாட்டிற்கான முறிகள்/ கூறுகள்/ படுகடன் பிணையங்களிலுள்ள முதலீடுகள்;

i. முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை (ஐ.அ.டொலரில்);
ii. வெளிநாட்டுக் கம்பனியின்/ வழங்குநரின் பெயர் மற்றும் நாடு;
iii. கொள்வனவு செய்யப்படவுள்ள பங்குகள்/ முறிகள்/ கூறுகள்/ படுகடன் பிணையங்களின் எண்ணிக்கை;
iv. பிணைகள்/ முறிகள்/ கூறுகள்/ படுகடன் பிணையங்களின் விலை;
v. முதிர்ச்சித் திகதி;
vi. வட்டி வீதம்;
vii. வழங்குகின்ற நிறுவனத்தின் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்;

2.2 வெளிநாட்டு அலுவலகங்களை ஏற்படுத்தல் மற்றும் பேணுவதற்கான முதலீடு

i. ஐ.அ.டொலரில் முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை;
ii. வெளிநாட்டு அலுவலகத்தின் வகை மற்றும் நோக்கம் மற்றும் நாடு;

எனது சிறந்த அறிவுக்கெட்டிய வரை மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பணிப்பாளர்: பணிப்பாளர்:

**இணைப்பு IV**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்காக பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அங்கத்தவரான ..................... இன் விதந்துரைப்பு

சேரல்: முகாமையாளர்

கிளை:

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவராகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் பெயர்:

இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரினால் உருவாக்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் கீழேயுள்ள முதலீடு என்னால் பகுப்பாய்வு செய்யப்பட்டது என்பதனை நான் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் அது தொடர்பாக விதந்துரைக்கப்பட்ட முதலீட்டு விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

1. **பொதுவான தகவல்கள்**
   (அ) முதலீட்டாளரின் பெயர்:
   (ஆ) ஐ.அ.டொலரில் தொகை (அல்லது வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் சமமான தொகை):
2. **முதலீட்டின் விபரங்கள் (ஏற்புடைத்தான விதத்தில்)**
   (அ) முதலீட்டினைப் பெறுபவரின் பெயர் மற்றும் நாடு:
   (ஆ) முதலீட்டின் வகை (பங்குகள்/ நாட்டிற்கான முறிகள்/ கூறுகள்/ படுகடன் பிணையங்கள்/ வெளிநாட்டு அலுவலகம்):
   (இ) இது வெளிநாட்டு அலுவலகமாக இருப்பின், கடல்கடந்த அலுவலகத்தின் நோக்கம்:
   (ஈ) பங்குகள்/ நாட்டிற்கான முறிகள்/ கூறுகள்/ படுகடன் பிணையங்கள் போன்றவற்றின் எண்ணிக்கை:
   (உ) பங்குகள்/ நாட்டிற்கான முறிகள்/ கூறுகள்/ படுகடன் பிணையங்கள் போன்றவற்றின் ஒன்றிற்கான விலை:
   (ஊ) முதிர்ச்சித் திகதி:
   (எ) வட்டி வீதம்:
   (ஏ) சிறப்புக் குறிப்புக்கள் (ஏதுமிருப்பின்):

கையொப்பம்:

திகதி:

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவெம்பர் 20

## வங்கி உத்தரவாதம் அல்லது முறிகள், கொடுகடனின் துணைநில் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் (மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 9(2)இன் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக விளங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கி உத்தரவாதங்கள், முறிகள், கொடுகடனின் துணைநில் கடிதங்கள் என்பனவற்றை வழங்கவும் புதுப்பிக்கவும் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்யவும் பின்வருவனவற்றிற்குட்பட்டு அனுமதிக்கப்பட்டன.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அடிப்படை கொடுக்கல்வாங்கல்களை (கேட்டுக் கொள்ளப்பட்டவாறு) நிரூபிக்கும் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிகளின் நியதிகளில் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலாக இருத்தல் வேண்டும்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வழங்கப்படவுள்ள உத்தரவாதங்களிலிருந்து தோன்றக்கூடிய ஏதேனும் எதிர்பாராத பொறுப்பினை ஈடுசெய்வதற்காக கம்பனியின் நிதியியல் வலுவினை மதிப்பிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. பின்வருவனவற்றை வழங்கும் சந்தர்ப்பத்தில்;

   4.1 முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள்,

   (அ) உத்தரவாதத்தின் பெறுமதி, இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து இலங்கையில் வதியும் ஆளொருவரினால் பெறப்பட்ட முற்பணக் கொடுப்பனவின் பெறுமதியிலும் பார்க்கக் குறைவானதாக அல்லது சமமானதாக இருத்தல் வேண்டும்.

   (ஆ) உத்தரவாதமானது, இலங்கையில் வதியும் ஆளொருவரின் இலங்கையிலுள்ள கணக்கிற்கு இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவரிடமிருந்து முற்பணக் கொடுப்பனவு பெறப்பட்டமையின் பின்பு மாத்திரமே அது வலுவுடையதாகும் என்ற நிபந்தனையினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

   4.2 செயலாற்ற முறியானது ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதனை நிரூபிப்பதற்கும் அதில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

   4.3 விலைக்குறிப்பீட்டு முறி, இது விலைக்கோரல் அல்லது விலைக்குறிப்பீட்டில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இதே நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்தும் உத்தரவாதத்தைப் பெறவில்லை என்பதனை நிரூபிக்கும் விதத்தில் கம்பனியிடமிருந்து சத்தியக்கடதாசியொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக விளங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மேற்கொள்ளப்படவுள்ள அடிப்படைக் கொடுக்கல்வாங்ல்களின் சட்டபூர்வத் தன்மையினையும் நம்கத்தன்மையினையும் நிறுவுவதற்காக சரியான சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (கேட்டுக் கொள்ளப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தவிர இப்பணிப்புரைகளில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7. செல்லுபடியாகும் கோரல்கள்

   7.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மை தொடர்பில் திருப்தியடைந்தமையினைத் தொடர்ந்து முன்னர் குறிப்பிடப்பட்ட அரச வர்த்தமானியில் அனுமதிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பிலான செல்லுபடியாகும் கோரல்களிலிருந்து எழும் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

7.2 உத்தரவாதமொன்றின் கீழ் செல்லுபடியாகும் கோரலின் உயர்ந்தபட்சத் தொகை, குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வெளிநின்ற கடப்பாட்டின் விகிதத்திற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பெயரில் (அதாவது முதலீட்டினை ஏற்றுக்கொள்பவர்) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் சார்பில் (அதாவது முதலீட்டாளர்) வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் கோரல் காணப்படும் சந்தர்ப்பத்தில், கோரலின் உயர்ந்தபட்சத் தொகை, கோரல் நேரத்தில் வெளிநின்ற கடப்பாடுகளின் முதலீட்டிலுள்ள முதலீட்டாளரின் பங்குடமையின் விகிதசமமாக அல்லது அதற்கும் குறைவானதாக இருத்தல் வேண்டும்.

8. **வெளிநாட்டுச் செலவாணித் திணைக்களத்திற்கு அறிக்கையிடல்:** இணைப்பு Iஇல் உள்ளவாறு மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகராகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட உத்தரவாதம் தொடர்பான காலாண்டு அறிக்கையினை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையின் ஸ்கான் பிரதியை dfem@cbsl.lk ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இணைப்பு I**

## உத்தரவாதங்கள் மீதான அறிக்கை

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்:** ......................................................................................

**ஆண்டு/ காலாண்டு:** ......................................................................................

1. உத்தரவாதங்கள்

| வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் எண்ணிக்கை | இளைப்பாறிய உத்தரவாதங்களின் எண்ணிக்கை | வெளிநின்ற பெறுமதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

2. கோரல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்களின் விபரங்கள், ஏதுமிருப்பின்

| கம்பனியின் பெயர் | பணவனுப்பலின் திகதி மற்றும் தொகை | கோரலின் தன்மை | உத்தரவாதத்தின் வகை (கம்பனி/ முற்பணக் கொடுப்பனவுகள் / துணைநில் நாணயக் கடிதம் போன்றவை) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் துல்லியமானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன்

.................................. ......................................................................................

திகதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் கையொப்பம்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2017 நவெம்பர் 27

## இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணுதல்) ஒழுங்குவிதிகளினதும் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2) ஆம் பிரிவுகளினதும் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆட்களுக்குப் புறம்பாக, பின்வரும் பெயர்களில் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராசதந்திர ரூபாக் கணக்குகளையும் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.

1.1 **தகைமையுடைய ஆட்கள்**

(இ) வெளிநாட்டு இராசதந்திர பணியினர்

(ஈ) இலங்கையிலுள்ள இராசதந்திர அல்லது இராசதந்திரமல்லா கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பதுடன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வதிவிட விசாவினைப் பெற வேண்டிய தேவையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ள இராசதந்திர ஆளணியினரின் குடும்ப உறுப்பினர்கள்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

2017 சனவரி 16

**தொடர்பு எண்:** 37/06/001/0001/016

**சுற்றறிக்கை - 01/17**

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை நியதிகளில் தலத்திலான பரீட்சிப்புக்கள் - 2017 பரீட்சிப்புத் திட்டம்**

நிதியியல் உளவறிதல் பிரிவு, 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர்களை நெருங்கிக் கவனியுங்கள்) விதிகள் மற்றும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் 2017 சனவரியிலிருந்து ஆரம்பமாகும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகளினதும் உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகளினதும் தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும். பரீட்சிப்புக் காலத்தின் போது பரீட்சகர்கள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பன தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காண்பதற்கும் தணிப்பதற்குமான பொருத்தமான முறைமைகளும் கட்டுப்பாடுகளும் கிடைக்கத்தக்கதாக இருப்பதன் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட பரீட்சிப்புக்கள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அ) நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 15(1)(உ) இன் நியதிகளில் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர், பரீட்சை தொடங்க இருப்பது பற்றி தொடர்பான நிதியியல் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்.

ஆ) தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துவதற்காக பரீட்சகர்கள் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு/ தெரிவு செய்யப்பட்ட கிளைகளுக்கு விஜயம் செய்வர்.

இ) கண்டறியப்பட்டவை பற்றி அறிவிப்பதற்காக முக்கிய முகாமைத்துவ ஆளணியிருடன் கூட்டம் இடம்பெறும்.

ஈ) அவசியமாயின், கண்டறியப்பட்ட முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படுவதற்காகவும் குறைபாடுகளைத் திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கைத் திட்டமொன்றின் நோக்கத்திற்காகவும் நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையுடன் கூட்டமொன்றினைக் கூட்டும்.

உ) நிதியியல் நிறுவனங்கள், பரீட்சிப்பில் கண்டறியப்பட்ட விடயங்களை சாத்தியமானளவிற்கு நேரகாலத்துடன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் குறிப்பட்ட சபைக் கூட்டம் முடிவடைந்த பின்னர் 15 நாட்களுக்குள் நிதியியல் உளவறிதல் பிரிவினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு முறைமைகளின் பலயீனங்களைச் சரிசெய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்குமாக ஒப்புதலளிக்கப்பட்ட காலக் கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கைத் திட்டமொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகின்றன.

ஊ) இதற்கிணங்கத் தவறும் சந்தர்ப்பத்தில், நிதியியல் நிறுவனங்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 19ஆம் பிரிவிற்கிணங்க கையாளப்படுவதற்குப் பொறுப்புடையனவாகும்.

இது தொடர்பில் தங்களின் ஒத்துழைப்பு வெகுவாக வரவேற்கப்படுகிறது.

**பணிப்பாளர் /நிதியியல் உளவறிதல் பிரிவு**

2017 சனவரி 20

**தொடர்பு எண்:** 37/05/002/0017/016

**சுற்றறிக்கை - 02/17**

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்
(பணப் பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் தொடர்பில்)

**2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணப் பெறுமதி மாற்றல் பணி வழங்குவோருக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக் கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருவதுடன் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்துடனும் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளரை நெருங்கிக் கவனியுங்கள்) விதிகளுடனும் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும்.

**பணிப்பாளர் /நிதியியல் உளவறிதல் பிரிவு**

**2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோருக்கான பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவிப்புக் கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

1. அறிமுகம்

(அ) 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களுடன் தொழிற்படுகின்ற இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, 2016ஆம் ஆண்டு சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 1951/13 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளை விடுத்ததுடன் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான "நிதித் தொழிலில்" ஈடுபடும் நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

(ஆ) 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளின் விதி 3இன் கீழ் ஏற்புடைத்தானவாறு, மற்றைய விடயங்களுடன் இவ்விதிகளுடன் சேர்ந்த ஏற்பாடுகள், தற்போதுள்ள வாடிக்கையாளர் பற்றிய

உரிய விழிப்புக் கவனத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் வாடிக்கையாளர்களினால் ஏற்படுத்தப்படக்கூடிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் மதிப்பிடுவதற்கும் மற்றும் முகாமைப்படுத்தலுக்குமான நோக்கங்களுக்காக அடையாளம் காணப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் அதில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(இ) விதிகளிலும், செல்லிடத் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமைகளின் தொழிற்பாட்டாளர்களுக்கான பரந்த கோட்பாடுகளிலும் நியமங்களிலும் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையொன்றின் அடிப்படையில், தற்பொழுது இடம்பெற்றுவரும் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்வதில் குறிப்பிட்ட விதிகளின் ஏற்பாடுகளுடனும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்துடனும் அவர்கள் இணங்கிச் செல்வதற்கு வசதியளிப்பதற்காக, குறிப்பிட்ட விதிகளினதும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2 இற்கு இணங்கவும் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதியின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோரினால் பின்பற்றப்படுவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் தற்போதைய வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

(ஈ) இவ்வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் இவை 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும். இவ்வழிகாட்டலின் ஏதாவது ஏற்பாட்டினை மீறின் அல்லது அதற்கு இணங்கியொழுகாதுவிடின் அது தண்டம், தடைகள் அல்லது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளுக்குள்ளாக வேண்டியிருக்கும்.

**2. ஏற்புடைத்தன்மை**

இவ்வழிகாட்டல்கள் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளை வழங்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருக்க வேண்டுமென்பதுடன் மட்டுப்படுத்தப்படாது பின்வரும் மற்றையவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்:

i. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவையும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகள் வியாபாரத்தினை மேற்கொள்கின்றவையுமான நிறுவனங்கள்.

ii. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவையும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகள் வியாபாரத்தினை மேற்கொள்கின்றவையுமான நிறுவனங்கள்.

iii. 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறான பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகள் வியாபாரத்தினை மேற்கொள்கின்ற ஏதேனும் நிறுவனம்.

iv. 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டத்தின் நியதிகளில் உரிமம் வழங்கப்பட்ட செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணம் முறைமையினை மேற்கொள்ளும் எவரேனும் தொழிற்பாட்டாளர்.

v. நாட்டிற்குள் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளை வழங்குவதனையொத்த பணிகளை வழங்குவோர் என நிதியியல் உளவறிதல் பிரிவினால் அடையாளம் காணப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனங்கள்.

**3. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேவைப்பாடுகள்**

3.1 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகள் வழங்குபவர் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ தலைவர், நிறுவனத்தின் இணங்குவிப்பு அலுவலராக மூத்த முகாமைத்துவ மட்ட அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும். அவர், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 14ஆவது பிரிவின் நியதிகளில் பணம் தூயதாக்கலுக்கெதிராக/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் சட்டத்தின் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இணங்குவிப்பு அலுவலரின் விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தலும் வேண்டும்.

3.1.1 இணங்குவிப்பு அலுவலர் நியமிக்கப்பட்டமை தொடர்பான தகவல் கிடைத்ததும் நிதியியல் உளவறிதல் பிரிவு, இணங்குவிப்பு அலுவலர் நிதியியல் உளவறிதல் பிரிவின் வெப்தளத்தினை பார்வையிடுவதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்யும்.

3.1.2 அனைத்து பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளை வழங்குபவர்களும் ஒரு மில்லியன் ரூபாவினை விஞ்சிய (ரூ.1,000,000) அல்லது அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டு நாணயத் தொகையினைக் கொண்ட காசுக் கொடுக்கல்வாங்கல்களை அத்துடன்/ அல்லது இலத்திரனியல் நிதிய மாற்றல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

3.1.2.1 மேலே குறிப்பிடப்பட்ட தொகையானது அத்தகைய ஆளின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட ஒன்று அல்லது கூடுதலான சிம் அட்டைகளைப் பயன்படுத்தி, ஒரு நாளுக்குள் அத்தகைய ஆளினால் மேற்கொள்ளப்பட்ட தனியொரு கொடுக்கல்வாங்கலின் பெறுமதியாகவோ அல்லது பல கொடுக்கல்வாங்கல்களின் கூட்டுத்தொகையாகவோ இருக்கலாம்.

3.1.3 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் வழங்கப்பட்ட சிம் அட்டைகளின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையினையும் சிம் அட்டைகளின் விபரங்களையும் அத்தகைய பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளிலுள்ள ஒவ்வொரு ஆட்களினதும் பதிவு/ சேர்ந்த விபரங்களையும் அடையாளம் காணக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

3.1.4 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் ஒரு நாளுக்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் பெறுமதியினை பணி வழங்குவோர் கண்காணிக்கும் விதத்தில் வழங்கப்பட்ட சிம் அட்டைகளை இணைப்பதற்கு நடைமுறை ரீதியாக அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

3.1.5 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர், நடைமுறைச் சாத்தியமானளவிற்கு, மாற்றல் செய்யப்பட்ட நிதியத்தின் நன்மைபெறும் உரிமையாளரை அடையாளம் காண்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்பதுடன் தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்கள், ஏதேனும் இடம்பெறுகின்றதா என்பதனையும் மனதில் கொள்ளுதல் வேண்டும்.

3.1.6 நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு வழங்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய அறிக்கைகளை லங்கா வின்

அதேநேர அறிவித்தல் முறைமையினூடாக இரண்டு கிழமைக்கொரு தடவை என்ற அடிப்படையில் இணைப்பு - 1இல் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

3.1.7 ஒவ்வொரு மாதமும் 1 - 15ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய அறிக்கைகள் அம்மாதத்தின் 30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகவும் ஒவ்வொரு மாதத்தினதும் எஞ்சிய காலப்பகுதிக்கான அறிக்கைகள் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3.2 எவரேனும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குபவர் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கொடுக்கல்வாங்கலுக்கான எத்தனங்கள் ஏதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கையுடன் தொடர்பானதாகவுள்ளது என சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டிருப்பாராயின் அத்தகைய பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குபவர் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழும் இவ்வழிகாட்டல்களின் கீழும் வழங்கப்பட்ட நடவடிக்கை முறைகளைப் பின்பற்றி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிக்கையினைக் கோப்பிடல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குபவரும் நிதியங்கள் அல்லது கொடுக்கல்வாங்கல்களின் வழமைக்கு மாறான நகர்வுகளைக் கண்டறிவதற்குப் பொருத்தமான முறைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் நிதியங்கள் அல்லது கொடுக்கல்வாங்கல்கள் சந்தேகத்திற்குரியனவா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு அத்தகைய நிதிகளை உரிய நேரத்தில் நுணுக்கமாக ஆய்வு செய்தலும் வேண்டும்.

3.4 அனைத்துப் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குபவர்களும் இணைப்பு - IIஇல் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் 'லங்கா வின்' அதேநேர முறைமையினூடாக சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3.5 பணம் அனுப்பியவர் அல்லது பயன்பெற்றவர் தொடர்பான தேவையான தகவல்கள் இல்லாதவிடத்து, இலத்திரனியல் நிதிய அல்லது கம்பி வழி மூலமான மாற்றல்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் சந்தேகத்திற்குரியனவாகப் பரிசீலிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்குத் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

3.6 ஒவ்வொரு பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோரும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள (ஏதேனும்) அதன் முகவர்கள் துணை முகவர்கள் அத்துடன்/ அல்லது வணிகர்களின் பட்டியலைப் பேணுவதுடன் அவற்றை இற்றைப்படுத்தவும் வேண்டுமென்பதுடன் அத்தகைய பட்டியலைக் கோரிக்கையின் மீது நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு வழங்குதலும் வேண்டும்.

3.7 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குபவர் ஒவ்வொருவரும் அவர்களின் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனிக்கும் செயன்முறையினை பூரணப்படுத்துவதற்காக ஒன்றில் இலத்திரனியல் ரீதியாகவோ அல்லது கையின் மூலமோ போதுமான முகாமைத்துவத் தகவல் முறைமையினை நடைமுறையில் கொண்டிருத்தல் வேண்டும். கிரமமற்ற கொடுக்கல்வாங்கல்களை அத்துடன்/ அல்லது ஏதேனும் சந்தேகத்திற்குரிய நடவடிக்கையினைக் கண்டுபிடிப்பதற்கு அறிக்கையிடும் நிறுவனத்தினை இயலுமைப்படுத்துவதற்காக முகாமைத்துவத் தகவல் முறைமை சரியான நேரத்தில் கிரமமான அடிப்படையில் தகவல்களை வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3.8 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளை வழங்குவோர் தமது வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களை வழங்குவதன் மூலமாக ஏதேனும் புத்தாக்கங்களை துஷ்பிரயோகம் செய்துவிடக்கூடாது என்பதுடன் அத்தகைய துஷ்பிரயோகம் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனியுங்கள் தொடர்பான நடைமுறைகளையும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட ஏதேனும் விதிகளையும் மீளவழிவகுக்கலாம்.

3.9 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் வெளிநாட்டு முகவர்கள், துணை முகவர்கள் அத்துடன்/ அல்லது வணிகர்களைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், பணி வழங்குவோர் அத்தகைய முகவர்கள்/ துணை முகவர்கள்/ வணிகர்கள் அத்தகைய சட்டங்களின் கீழ் விடுக்கப்பட்ட இலங்கைச் சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் தூ யதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பணம் தூ யதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகள் ஏற்புடைத்தானவை என்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3.9.1 வெளிநாட்டு நியாயதிக்கத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் இலங்கையிலுள்ள இச்சட்டங்களைவிடக் கடுமை குறைந்தனவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் இலங்கை நியாயாதிக்கத்தில் கீழுள்ள பணம் தூயாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேவைப்பாடுகளைப் பிரயோகித்தல் வேண்டும்.

## 4. இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

4.1 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் பின்னணியில், இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் செறிவும் விரிந்த அளவும் பணம் அல்லது பெறுமதி கொடுக்கல்வாங்கல் பணி வழங்குபவரின் நடவடிக்கைகள் மற்றும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் தன்மை, அளவு மற்றும் சிக்கலான தன்மை என்பனவற்றிற்கு விகிதாசாரமாக இருத்தல் வேண்டும். இதன்படி, பணம் அல்லத பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் பொருண்மியம் மற்றும் இடர்நேர்வின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு, வாடிக்கையாரை நெருக்கமாகக் கவனியுங்கள் தேவைப்பாட்டினைப் பிரயோகித்தல் வேண்டுமென தேவைப்படுத்துகின்றனர்.

4.2 ஒவ்வொரு பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்:

(அ) தேவையான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிறுவனம் மற்றும் தொழிற்பாடுகளுக்குள் காணப்படும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல்.

(ஆ) அடையாளம் காணப்பட்டுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்குமான கொள்கைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அக்கொள்கைகள், கட்டுப்பாடுகள், நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தலும் அவசியமாயின் அவற்றினை மேம்படுத்தலும் வேண்டும்.

(ஈ) உயர்ந்த இடர்நேர்வுகள் அடையாளம் காணப்படுமிடத்து இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் அதிகரித்தளவு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

4.3 அனைத்துப் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர், புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்காக புதிய வழங்கல் பொறிமுறைகள் மற்றும் புதிய அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் உட்பட புதிய வியாபார நடைமுறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஏற்படக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு மதிப்பிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**5. ஊழியர்கள்/ முகவர்கள்/ துணை முகவர்களை ஆய்வுசெய்யும் நடைமுறைகள்**

5.1 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் நடவடிக்கைகளுக்கு அறிக்கையிடுகின்ற நிறுவனங்களின் தொழிற்பாட்டு அளவு மற்றும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளுக்கு ஈடான விதத்தில் ஊழியர்/ முகவர்/ துணை முகவர்/ வணிக மதிப்பீட்டு முறைமைகளை நிறுவி ஆய்வு நடவடிக்கைகளை நிறுவ வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

5.2 ஆய்வு நடவடிக்கை முறைகள் ஊழியர்கள்/ முகவர்கள்/ துணை முகவர்/ வணிகர்கள் ஆகியோரை வாடகை அடிப்படையில் தொழிலுக்கு அமர்த்தும் பொழுது பிரயோகிக்கப்பட வேண்டியதுடன் தொழில் காலம்/ முகவர் காலம் முழுவதும் நடைமுறையிலிருந்து வருதலும் வேண்டும்.

5.3 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் அவர்களது ஊழியர்களுக்கு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்தகைய பயிற்சிகளைக் கிரமமாக புதுப்பிக்கப்பட்ட பாடநெறிகளுடன் கூடிய துணைநிரப்பல் செயற்பாடுகளுடன் நடத்துதல் வேண்டும்.

5.4 பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோர் தமது அனைத்து முகவர்கள், துணை முகவர்கள் மற்றும் வணிகர்கள் ஆகியோர் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் பின்பற்றுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவிப்புக்கள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனைத் தீர்மானிப்பதற்குக் கிரமமான சுயாதீனமான கணக்காய்வுகள் நடத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**இணைப்பு I**

**பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளுக்கான நிதியியல் உளவறிதல் பிரிவின் தரவு அறிக்கையிடல் படிவம்**

நிதியியல் உளவறிதல் பிரிவு பின்வருவனவற்றிற்காக இரண்டு இலத்திரனியல் கோப்புக்களை எதிர்பார்க்கிறது:

1. உள்வரும் இலத்திரனியல் நிதிய மாற்றல்
2. வெளிச்செல்லும் இலத்திரனியல் நிதிய மாற்றல்

**1. உள்வரும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் (இலங்கைக்கு)**

குறிப்பிட்ட மட்டத்திற்கு மேலே பெறப்படுகின்ற அனைத்து இலத்திரனியல் நிதிகளும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கிணங்க அறிக்கையிடப்படல் வேண்டும்.

| களப் பெயர் | தரவு வகை | பொறுப்பாணை | கருத்து |
|---|---|---|---|
| வங்கிக் குறியீடு | எண்ணிக்கை (4) | ஆம் | நிதியியல் உளவதறிதல் பிரிவினால் வழங்கப்பட்ட நிறுவனக் குறியீடு (NNNN) |
| பெறுமதித் திகதி | எண்ணிக்கை (8) | ஆம் | ஆஆஆஆமாமாதிதி |
| | | | உ-ம்: 20160305 இற்காக 2016.03.05 |
| வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி | எண்ணிக்கை (16,2) | ஆம் | உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தின் தொகை |
| நாணயக் குறியீடு | உரை (3) | ஆம் | நாணயக் குறியீடு |
| பெறுமதி ரூ. | எண்ணிக்கை (16,2) | ஆம் | இலங்கை ரூபா தொகை (இல. ரூ.) |
| உரை விபரம் | உரை (120) | ஆம் | நோக்கம் |
| அனுப்புநரின் பெயர் | உரை (75) | ஆம் | அனுப்புநரின் முழுப் பெயர்/ முதலெழுத்துக்களுடன் பெயர் |
| அனுப்புநரின் முகவரி | உரை (150) | ஆம் | அனுப்புநரின் முகவரி |
| அனுப்புநரின் வியாபாரம் | உரை (50) | இல்லை | அனுப்புநரின் வியாபார/ தொழில்சார் நிபுணத்துவம்/ தொழிலின் தன்மை |
| அனுப்புநரின் முகவர் அடையாளம் | உரை (12) | ஆம் | துணை முகவரின் குறியீடு/ அடையாள இலக்கம் |
| வெளிக் கொடுப்பனவு வகை | உரை (50) | ஆம் | வெளிக் கொடுப்பனவு வகை/ விநியோகத் தேர்வு, உ-ம்: முகவர் அமைவிடத்தில் காசு, செல்லிடப் பணப் பையில் வைப்பு, வங்கிக் கணக்கு போன்றவற்றிற்கான வைப்பு |
| அனுப்புநரின் நாடு | உரை (150) | ஆம் | அனுப்புநரின் நாடு |
| பெறுநரின் முகவர் அடையாளம் | உரை (12) | ஆம் | குறியீடு/ துணை முகவரின் அடையாள இலக்கம் |

| | | | |
|---|---|---|---|
| பெறுநரின் கணக்கு இல. | உரை (30) | இல்லை | |
| பெறுநரின் பெயர் | உரை (75) | ஆம் | பெறுநரின் முழுப் பெயர்/ முதலெழுத்துக்களுடன் பெயர் |
| பெறுநரின் அடையாளம் | உரை (30) | ஆம் | தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது வியாபாரப் பதிவு இலக்கம் |
| பெறுநரின் முகவரி 1 | உரை (75) | ஆம் | |
| பெறுநரின் முகவரி 2 | உரை (75) | ஆம் | |
| பெறுநரின் முகவரி 3 | உரை (75) | இல்லை | |
| பெறுநரின் வியாபாரம் | உரை (75) | ஆம் | |
| கொடுக்கல்வாங்கல் தொடர்பு | உரை (30) | ஆம் | கொடுக்கல்வாங்கல் தொடர்பு. கொடுக்கல்வாங்கலை அடையாளம் காணப்பதற்கு தனித்துவமான அடையாளப்படுத்தல் குறியீடு |

**2. வெளிச்செல்லும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் (இலங்கைக்கு வெளியே)**

குறிப்பிட்ட மட்டத்திற்கு மேலே வெளிச் செல்கின்ற அனைத்து இலத்திரனியல் கொடுப்பனவுகளும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கிணங்க அறிக்கையிடப்படல் வேண்டும்.

| களப் பெயர் | தரவு வகை | பொறுப்பாணை | கருத்து |
|---|---|---|---|
| வங்கிக் குறியீடு | எண்ணிக்கை (4) | ஆம் | நிதியியல் உளவதறிதல் பிரிவினால் வழங்கப்பட்ட நிறுவனக் குறியீடு (NNNN) |
| பெறுமதித் திகதி | எண்ணிக்கை (8) | ஆம் | ஆஆஆஆமாமாதிதி |
| | | | உ-ம்: 20160305 இற்காக 2016.03.05 |
| வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி | எண்ணிக்கை (16,2) | ஆம் | வெளிநாட்டு நாணயத்தின் தொகை |
| நாணயக் குறியீடு | உரை (3) | ஆம் | நாணயக் குறியீடு |
| பெறுமதி ரூ. | எண்ணிக்கை (16,2) | ஆம் | இலங்கை ரூபா தொகை (இல. ரூ.) |
| உரை விபரம் | உரை (120) | ஆம் | நோக்கம் |
| அனுப்புநரின் முகவர் அடையாளம் | உரை (12) | ஆம் | துணை முகவரின் குறியீடு/ அடையாள இலக்கம் |
| அனுப்புநரின் கணக்கு இல. | உரை (30) | இல்லை | |
| அனுப்புநரின் பெயர் | உரை (75) | ஆம் | அனுப்புநரின் முழுப் பெயர்/ முதலெழுத்துக்களுடன் பெயர் |
| அனுப்புநரின் அடையாளம் | உரை (30) | ஆம் | தேசிய அடையாள அட்டை அல்லது வியாபாரப் பதிவு இலக்கம் |
| அனுப்புநரின் முகவரி 1 | உரை (75) | ஆம் | |
| அனுப்புநரின் முகவரி 2 | உரை (75) | ஆம் | |
| அனுப்புநரின் முகவரி 3 | உரை (75) | இல்லை | |
| அனுப்புநரின் வியாபாரம் | உரை (50) | ஆம் | அனுப்புநரின் வியாபார/ தொழில்சார் நிபுணத்துவம்/ தொழிலின் தன்மை |
| பெறுநரின் பெயர் | உரை (75) | ஆம் | பெறுநரின் முழுப் பெயர்/ முதலெழுத்துக்களுடன் பெயர் |
| பெறுநரின் முகவரி | உரை (75) | ஆம் | |
| பெறுநரின் வியாபாரம் | உரை (75) | இல்லை | |
| | உரை (50) | ஆம் | வெளிக் கொடுப்பனவு வகை/ விநியோகத் தேர்வு, உ-ம்: முகவர் அமைவிடத்தில் காசு, செல்லிடப் பணப் பையில் வைப்பு, வங்கிக் கணக்கு போன்றவற்றிற்கான வைப்பு |
| பெறுநரின் நாடு | உரை (150) | ஆம் | பெறுநரின் நாடு |
| கொடுக்கல்வாங்கல் தொடர்பு | உரை (30) | ஆம் | கொடுக்கல்வாங்கல் தொடர்பு. கொடுக்கல்வாங்கலை அடையாளம் காணப்பதற்குத் தனித்துவமான அடையாளப்படுத்தல் குறியீடு |

**இணைப்பு II - சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை**

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை**

அ. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான தேவைப்பாட்டினை இவ்வறிக்கை பூரணப்படுத்துகிறது.

ஆ. நிதியியல் அறிக்கையிடல் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் நல்லெண்ணத்துடன் அத்தகைய அறிக்கையினைச் செய்யும் ஆளொருவருக்கெதிராக குடியியல், குற்றவியல் அல்லது ஒழுக்காற்று வழக்கு விசாரணைகள் எதுவும் கொண்டு வரப்படுதலாகாது.

இ. சந்தேகத்தினை வாடிக்கையாளருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அறிவிப்பது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 9இனை மீறியமைக்காக தண்டிக்கத்தக்கதொரு குற்றமாகும்.

ஈ. இவ்வட்டவணையானது பின்வருவனவற்றிற்கு ஏற்புடைத்தனவாகும்.

i. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டு பணப் பெறுமதி மாற்றல் பணிகள் வியாபாரத்தினை மேற்கொள்கின்ற நிறுவனங்கள்;

ii. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டு பணப் பெறுமதி மாற்றல் பணிகள் வியாபாரத்தினை மேற்கொள்கின்ற நிறுவனங்கள்;

iii. 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளைக் கொண்டு நடத்துகின்ற ஏதேனும் நிறுவனம்;

iv. 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் நியதிகளில் உரிமம் வழங்கப்பட்ட செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட முறைமையின் எவரேனும் தொழிற்பாட்டாளர்; அத்துடன்

v. நாட்டிற்குள் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணிகளையொத்த பணிகளை வழங்குகின்றது என நிதியியல் உளவறிதல் பிரிவினால் அடையாளம் காணப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பகுதி அ - அறிக்கையின் விபரங்கள்** | | | | | |
| 1 | நிறுவனத்தின் பெயர் | | | | |
| 2 | வியாபாரத்தின் வகை | | | | |
| 3 | அனுப்பும் அறிக்கையின் திகதி | | | | |
| 4 | இது முன்னைய அறிக்கைக்குப் பதிலீடானதா? (ஆம்/ இல்லை) | | | | |
| 5 | இது பதிலீட்டு அறிக்கையாக இருப்பின் முன்னைய தொடர்பு இலக்கம் | | | | |
| **பகுதி ஆ - சந்தேகம் தொடர்பான தகவல்கள்** | | | | | |
| 6 | முழுப் பெயர் (நிறுவனமாக இருப்பின் வியாபாரப் பதிவு/ நிறுவனத்தின் பெயரைத் தருக) | | | | |
| 7 | வதிவிட/ வதிவு செய்யப்பட்ட முகவரி | | | | |
| 8 | தேசிய அடையாள அட்டை இல./ கடவுச்சீட்டு இல./ஓட்டுநர் உரிம இல./ வியாபார பதிவு இல./ அரச முகவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் அடையாள இல. | | | | |
| 9 | தேசியம் | | | | |
| 10 | பால்: | ஆண் | | பெண் | |
| 11 | வதிவிட நாடு (தனிப்பட்டவராக இருப்பின்) | | | | |
| 12 | வியாபாரம்/ தொழில் வகை | | | | |
| 13 | தொழில் (பொருத்தமானவிடத்து கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற ஆளின் பிரதான நடவடிக்கை | | | | |
| 14 | தொழில்தருநரின் பெயர் (பொருத்தமானவிடத்து) | | | | |
| 15 | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் | | | | |
| 16 | இறுதி மீளாய்வுத் திகதி | | | | |
| **பகுதி இ - சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள்/ நடவடிக்கைகளின் விபரங்கள்** | | | | | |
| 17 | கணக்கு இல./ பூட்கை இல./ பொருட்பட்டியல் இல./ வேறு ஏதேனும் தொடர்பு இல. ஏற்புடைத்தானவிடத்து | | | | |
| 18 | அமைவிடம்/ முகவரி (சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள்/ நடவடிக்கைகள் இடம்பெறுமிடத்து | | | | |
| 19 | அடிக்கடி இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்கள் | | | | |
| 20 | சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் திகதி | | | | |
| 21 | நாணயக் குறியீடு | | | | |
| 22 | சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான மொத்தத் தொகை (ரூ.) | | | | |
| 23 | வெளிநாட்டு நாணயத்தில் தொகை (ஏற்புடைத்தாயின்) | | | | |
| 24 | கொடுப்பனவு மாதிரி (காசு/ நிதிய மாற்றல்/ காசோலை/ ஏனையவை) | | | | |
| 25 | கொடுக்கல்வாங்கல்களின் நன்மைபெறுநர், ஏதேனும் | | | | |
| 26 | தொடர்பான வங்கிக் கணக்கு விபரங்கள் (ஏற்புடைத்தாயின்) | | | | |
| 27 | கொடுக்கல்வாங்கல்/ நடவடிக்கையின் ஏனைய விபரங்கள் | | | | |

| | |
|---|---|
| 28 | சந்தேகத்திற்கான குறிப்பிட்ட அடிப்படைகள்/ காரணங்கள் - சந்தேகத்திற்கான வேறு ஏதேனும் அடிப்படைகள் |
| **பகுதி ஈ - அறிக்கையிடும் ஆளின் விபரங்கள்** | |
| 29 | அறிக்கையிடும் திகதி |
| 30 | அறிக்கையிடும் ஆளின்/ முகவரின் பெயர் |
| 31 | தேசிய அடையாள அட்டை இலக்கம் |
| 32 | பதவி/ தொழில் |
| 33 | முகவரி |
| 34 | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் |
| 35 | கையொப்பமும் அலுவலக முத்திரையும் |

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் சட்ட ரீதியான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் பொருட்டு அறிக்கையிடும் நிறுவனங்கள் பூரணப்படுத்தப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமா்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றன.

**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
சிறிலங்கா

தொலைபேசி : +94 11 2477125
தொலைநகல் : +94 11 2477125
மின்னஞ்சல் : fiu@cbs.lk
வெப்தளம் : http://fiusrilanka.gov.lk

2017 சனவரி 10

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 01/2017**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

## 2017 சனவரி 20ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

இலங்கை மத்திய வங்கி, 2017 சனவரி 20ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களினது கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக நேரத்தினைக் கருத்திற் கொண்டு (தமிழ் தைப்பொங்கல் தினம் 2017 சனவரி 14ஆம் நாள் சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) 2017 சனவரி 20ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை 08.00 மணியிலிருந்து 15.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய 2017 சனவரி 20ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | 12.45 மணி |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | 14.00 மணி |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | 14.15 மணி |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (பிரிவு 2) | 14.15 மணி |
| துணைநில் வைப்பு வசதித் தீர்ப்பனவுகள் | 14.30 மணி |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் துணைநில் கடன்வழங்கல் தீர்ப்பனவுகள் | 14.45 மணி |
| அலுவல்களை மூடிவிடுதல் | 15.00 மணி |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | 15.30 மணி |

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

2017 சனவரி 09

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**
**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 02/2017**
சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

## லங்கா செட்டில் முறைமை 2017 சனவரி 26 மற்றும் 27ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை **2017 சனவரி 26 மற்றும் 27ஆம் நாட்களில் (வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை)** அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், ஆயத்தநிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2017 சனவரி 26ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு. லசித் பர்னாந்து - 2477124 (மின்னஞ்சல்: lasith@cbsl.lk)
- திரு. ருசிறு பொறலுகொட - 2398617 (மின்னஞ்சல்: rusiru@cbsl.lk)

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

பிரதி: முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர் சங்கம்
தலைவர் - முதனிலை வணிகர் சங்கம்
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுறோ லிமிடெட்

2017 சனவரி 23

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**
**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 04/2017**
சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

## லங்கா செட்டில் முறைமை 2017 பெப்புருவரி 02 மற்றும் 03ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்

தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளால் லங்கா செட்டில் முறைமையின் நேரடி தொழிற்பாடுகளை அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து **2017 சனவரி 26** மற்றும் **27ஆம்** நாட்களிற்குப் பதிலாக **2017 பெப்புருவரி 2 மற்றும் 3ஆம் நாட்களிற்கு மீள்அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்கின்றோம்.**

இதற்கேற்ப, இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், ஆயத்தநிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2017 பெப்புருவரி 02ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீசித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு. லசித் பர்னாந்து - 2477124 (மின்னஞ்சல்: lasith@cbsl.lk)
- திரு. ருசிறு பொறலுகொட - 2398617 (மின்னஞ்சல்: rusiru@cbsl.lk)

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

பிரதி: முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர் சங்கம்
தலைவர் - முதனிலை வணிகர் சங்கம்
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுறோ லிமிடெட்

2017 பெப்புருவரி 9

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 05/2017**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

## 2017 பெப்புருவரி 17ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

இலங்கை மத்திய வங்கி 2017 பெப்புருவரி 17ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களினது கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக நேரத்தினைக் கருத்திற் கொண்டு (தேசிய தினம் 2017 பெப்புருவரி 4ஆம் நாள் சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) 2017 பெப்புருவரி 17ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை 08.00 மணியிலிருந்து 15.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய 2017 பெப்புருவரி 17ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | 12.45 மணி |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | 14.00 மணி |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | 14.15 மணி |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (பிரிவு 2) | 14.15 மணி |
| துணைநில் வைப்பு வசதித் தீர்ப்பனவுகள் | 14.30 மணி |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதித் தீர்ப்பனவுகள் | 14.45 மணி |
| அலுவல்களை மூடிவிடுதல் | 15.00 மணி |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | 15.30 மணி |

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

2017 ஏப்பிறல் 28

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 06/2017**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**வியாபார நேரத்திற்குப் பின்பும் லங்கா செட்டில் முறைமையினை நீடிப்பதற்கான கோரிக்கை**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2015 யூலை 02ஆம் திகதியிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/03/2015 மீது தங்களின் தயவான கவனத்தினை ஈர்க்க விரும்புகிறோம்.

லங்கா செட்டில் முறைமையின் சில பங்கேற்பாளர்கள் முறைமை விதிகளை இன்னமும் பின்பற்றாமல், முறைமையை மூடுவதற்கான அட்டவணையிடப்பட்ட நேரத்திற்கு, குறிப்பாக சற்று முன்னதாக லங்கா செட்டில் முறைமை மூடப்படும் நேரத்தினை நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினை பல தடவைகள் கோரியுள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. ஏதேனும் பங்கேற்கும் நிறுவனம் எதிர்பாராத நிகழ்வொன்றின் போது குறித்துரைக்கப்பட்ட நேர வரையறையினை நீடிக்குமாறு கோரிக்கைவிடுமிடத்து பங்கேற்கும் நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவ அலுவலரொருவர் தொடர்பான வியாபார நாளன்று **பி.ப. 4.00 மணிக்கு** முன்னதாக கோரிக்கையினை நியாயப்படுத்தக்கூடிய பொருத்தமான விபரங்களுடன் பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலும், தங்களின் இலகுவான பரிசீலனைக்காக மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**சுற்றறிக்கை எண். ஆர்ரிஜிஎஸ்/03/2015** 2015 யூலை 02

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**வியாபார நேரத்திற்குப் பின்பும் லங்கா செட்டில் முறைமையினை நீடிப்பதற்கான கோரிக்கை**

நீங்கள் அறிந்தவாறு, 2013 ஓகத்தில் வெளியிடப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளின் பதிப்பு 2.1இன் தொகுதி 4 இலுள்ள விதிகள் 1.2 மற்றும் 1.3 இன் நியதிகளுக்கிணங்க, நிலையான வியாபார அட்டவணையொன்றின் அடிப்படையில் லங்கா செட்டில் முறைமை இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கமைய, பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு வியாபார நாளன்றும் பி.ப. 4.30 மணியளவில் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் நிறைவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், தொழிற்பாட்டு நாளொன்றினை நீடிப்பதற்கான கோரிக்கையினை லங்கா செட்டில் பங்கேற்பாளரொருவர் நெருக்கடியான சூழ்நிலையொன்றில் மாத்திரமே மேற்கொள்ளமுடியும்.

எனினும், கடந்த ஒரு சில மாதங்களாக சில பங்கேற்பாளர்கள் முறைமை விதிகளைப் பின்பற்றாமல், முறைமையை மூடுவதற்கான அட்டவணையிடப்பட்ட நேரத்திற்கு, குறிப்பாக சற்று முன்னதாக லங்கா செட்டில் முறைமை மூடப்படும் நேரத்தினை நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினை பல தடவைகள் கோரியுள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நடைமுறைகள் இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்களுக்கு மட்டுமன்றி மற்றைய லங்கா செட்டில் பங்கேற்பாளர்களுக்கும் பெருமளவு வசதியீனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்கள் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் நிறைவுபெறும் வரை அவற்றின் முறைமைகளை தொழிற்பாட்டில் வைத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

ஆகவே, எதிர்பாராத நெருக்கடியான சந்தர்ப்பங்களைத் தவிர, நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையிலுள்ள குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கு அப்பால் லங்கா செட்டில் முறைமையின் வியாபார நேரத்தினை நீடிப்பதற்கான கோரிக்கையினை மேற்கொள்ள வேண்டாமென உங்களுக்கு இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. அத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பங்கேற்கும் நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவ அலுவலரொருவர் தொடர்பான வியாபார நாளன்று பி.ப. 4.00 மணிக்கு முன்னதாக கோரிக்கையினை நியாயப்படுத்தக்கூடிய பொருத்தமான விபரங்களுடன் பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

(திருமதி) சி எம் டி என் கே செனவிரத்ன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

2017 யூலை 06

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 07/2017**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமையில் பேர்ப்பெட்ஜுவல் ரெசறீஸ் லிமிடெட்டின் வியாபாரத்தினை மட்டுப்படுத்தல்**

மறு அறிவித்தல் வரை லங்கா செட்டில் முறைமையிலுள்ள பேர்ப்பெட்ஜுவல் ரெசறீஸ் லிமிடெட்டின் வியாபாரம் உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இதன்படி, மட்டுப்படுத்தப்பட்டுள்ள இக்காலப்பகுதியில், லங்கா செட்டில் முறைமையினூடாக பேர்ப்பெட்ஜுவல் ரெசறீஸ் லிமிடெட்டிற்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு கீழே தரப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தொடர்பான கொடுப்பனவுச் செய்திகள் (ரி +0 மாத்திரம்) லங்கா செட்டில் முறைமையில் வழமை போன்று பதியப்படல் வேண்டும்.

2. பெர்ப்பெட்ஜுவல் ரெசரீஸ் லிமிடெட்டிலிருந்து நேரடியாகப் பிணையங்கள் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களை லங்கா செகுயர் முறைமைக்கு அனுப்புவதனை தவிர்த்துக் கொள்ளவும். பெர்ப்பெட்ஜுவல் ரெசரீஸ் லிமிடெட்டுடனான லங்கா செகுயர் கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை (ரி +0 மாத்திரம்) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் எக்சல் தாளில் நிரப்பிக் கொள்ளுமாறும் சரியான முறையில் நிரப்பப்பட்ட எக்சல் தாளினை, பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மின்னஞ்சல்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் (வ.அ.நி.நி.தி.ப மின்னஞ்சல் முகவரி: dsnfbi@cbsl.lk மற்றும் வ.அ.நி.நி.தி.து.ப hdajith@cbsl.lk).

3. லங்கா செட்டில் முறைமையிலுள்ள பெர்ப்பெட்ஜுவல் ரெசரீஸ் லிமிடெட்டின் தீர்ப்பனவுக் கணக்குகள் 0800 மணியிலிருந்து 1630 மணி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதுடன் பெர்ப்பெட்ஜுவல் ரெசரீஸ் லிமிடெட்டுடனான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுக்குட்பட்டு 1630 மணியிலிருந்து 1645 மணிவரை தீர்ப்பனவு செய்யப்படும்.

4. லங்கா செட்டில் முறைமையின் வியாபார மணித்தியாலம் மாற்றப்படமாட்டாது என்பதுடன் வியாபார மணித்தியாலங்களை நீடிப்பதற்கான கோரிக்கைகள் 2013இல் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகள் பதிப்பு 2.1இன் தொகுதி 4 இலுள்ள பிரிவு 3.1 இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு (2013 மாச்சு 31 வரையான திருத்தங்கள் உட்பட) மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. இந்நோக்கத்திற்காக தாங்கள் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை நியமிக்கலாம் என்பதுடன் அத்தகைய அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்களை 2017 யூலை 07ஆம் நாளுக்கு முன்னதாக அறிவித்தல் வேண்டும்.

6. தேவையான நேரத்தில் தேவையான விதத்தில் மேலும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்படும்.

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

சி. பி. எஸ். பண்டார
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் சார்பில்**

2017 யூலை 20

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 08/2017**

சேரல்: உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் நிறைவேற்று அலுவலர்களுக்கு

## பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீதான உயர்ந்தபட்ச வரையறைகளும் கட்டணமும்

இச்சுற்றறிக்கையானது, பாரிய வாடிக்கையாளர் பங்கேற்பினூடாகப் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளிக்கு ஊக்குவிப்பினையும் வசதியையும் வழங்குவதற்காக 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டத்தின் பிரிவு 44 மற்றும் அதே சட்டத்தின் பிரிவு 4 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான பிரிவுகளின் கீழ் விடுக்கப்படுகின்றது.

2. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் அனைத்து உறுப்பினர்களும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாகச் சொந்த வாடிக்கையாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மீது பின்வரும் உயர்ந்தபட்ச வரையறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

2.1 கொடுக்கல்வாங்கல் குறியீடு “58” தவிர்ந்த அனைத்துக் கொடுக்கல்வாங்கல் குறியீடுகளினூடாகவும் மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல்களின் உயர்ந்தபட்சப் பெறுமதி கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.5 மில்லியனை விஞ்சக்கூடாது. கொடுக்கல்வாங்கல் குறியீடு “58” இற்கூடான இலங்கை சுங்கத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற நிதிய மாற்றலின் உயர்ந்தபட்சப் பெறுமதி ரூ.20 பில்லியனை விஞ்சக்கூடாது.

2.2 கொடுக்கல்வாங்கல் மீது விதிக்கப்படுகின்ற உயர்ந்தபட்சக் கட்டணம்:

(அ) பின்வருவனவற்றினூடாக மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல் தொடர்பில் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50 இனை விஞ்சக்கூடாது

(i) இணையத்தள வங்கித்தொழில்;

(ii) செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில்; மற்றும்

(iii) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொடர்பான உறுப்பினர்களின் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள்

(ஆ) கருமபீடத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிதிய மாற்றல் தொடர்பில் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.100.

(இ) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் மற்றைய உறுப்பினர்களது தன்னியக்கக் கூற்றுப் பொறியினூடாக மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல் தொடர்பான கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.100.

3. இச்சுற்றறிக்கையானது 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சுற்றறிக்கையினை நீக்குவதுடன் 2017 யூலை 20 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

ஆர் எம் ஜெயவர்த்தன
**மேலதிகப் பணிப்பாளர் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

2017 செத்தெம்பர் 14

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 09/2017**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

## லங்கா செட்டில் முறைமையின் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்குத் திருத்தம்

1. **2017 ஒத்தோபர் 02ஆம்** திகதியிலிருந்து இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் புதிய தீர்ப்பனவிற்காக மூன்று (3) தீர்ப்பனவுச் சுற்றுக்கள் (தொடர்கள்) நடைமுறைக்கிடப்படவுள்ளன. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தீர்ப்பனவு நேரங்களும் உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு தீர்ப்பனவுச் சுற்றின் (தொடர்) தீர்ப்பனவு நாட்களும் பின்வருமாறு இருக்கும்:

| தீர்ப்பனவுச் சுற்றுத் தொடர் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு நேரம் | உள்ளடக்கப்பட்ட தீர்ப்பனவு நாட்கள் |
|---|---|---|
| சுற்று 1 | மு.ப. 8.30 | ரி +1 இலிருந்து ரி +14 |
| சுற்று 2 | பி.ப. 1.00 | ரி + 0 இலிருந்து ரி +14 |
| சுற்று 3 | பி.ப. 3.00 | ரி + 0 இலிருந்து ரி +14 |

2. **பங்கேற்பாளர்கள்,** சம்பளக் கொடுப்பனவுகள் மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு தீர்ப்பனவுச் சுற்றினூடாகவும் சமர்ப்பிக்கப்பட முடியும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. இதன்படி, நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை மீதான லங்கா செட்டில் முறைமையின் விதிகள் வாசகம் 2.1 - ஒகத்து 2013இன் தொகுதி 4இன் கிளை வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையானது **2017 ஒத்தோபர் 02ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்படும்.**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 6.30 | முறைமை ஆரம்பித்தல் | ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ் பிரயோகங்களைத் தொடங்குதல் |
| மு.ப. 7.30 இலிருந்து மு.ப. 8.00 மணி வரை | நாளாந்தச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளுக்கான பிணையங்களை நிர்ணயித்தல் |
| மு.ப. 8.00 | வியாபாரத்திற்காக லங்கா செட்டில் முறைமை திறக்கப்படுகிறது | காத்திரமான கொடுக்கல்வாங்கல்களுக்காக முறைமை திறக்கப்படுகிறது. |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்பு வசதி | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்கல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதியின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல் |
| மு.ப. 8.15 | நாளொன்றின் முதிர்ச்சிகள்/ வட்டிக் கொடுப்பனவுகள் ஆரம்பமாகின்றன | முதிர்ச்சிப் பெறுகைகள்/ பிணையங்களின் நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்கா செட்டில் விதிப்புக்கள்/ தண்டங்களை மேற்கொள்ளுதல் |
| மு.ப. 8.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 1/ காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையினை முக்கியமாகத் தீர்ப்பனவு செய்தல் |
| மு.ப. 8.30 | உடனடி விற்பனை/ கொள்வனவு | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளைத் தீர்த்தல் |
| மு.ப. 8.45 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி சுற்று 1 |
| மு.ப.. 9.00 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி சுற்று 1 |
| மு.ப. 11.00 | நேர்மாற்று மீள்கொள்வனவினை மாற்றுதல் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |
| மு.ப. 11.45 | நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 12.45 | மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 1.00 | முதலாந்தர ஏல தீர்ப்பனவினை மூடிவிடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களின் தீர்ப்பனவு |
| பி.ப. 2.45 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | கொடுத்துத் தீர்த்தல் மற்றும் சீரமைப்புத் தீர்ப்பனவு |
| பி.ப. 3.00 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி<br>மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்கல்களுக்கான முதன்மை வெட்டு நேரம் | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 2<br>பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி சுற்று 2<br>வங்கிக்கு வங்கி (எம்ரி2எக்ஸ்எக்ஸ் தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (ரி+0 இற்காக) மூடிவிடுதல் |
| பி.ப. 3.15 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி சுற்று 2 |
| பி.ப. 3.45 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளருக்கான வெட்டு நேரம் | பங்கேற்பாளர்கள் பி.ப. 3.45 இற்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பிக்கக்கூடாது |
| பி.ப. 4.00 | துணைநில் வைப்பு வசதி | துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |

| | | |
|---|---|---|
| பி.ப. 4.15 | துணைநில் கடன்வழங்கல் வசதி | துணைநில் கடன்வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொடுப்பனவு | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு |
| பி.ப. 4.30 | இறுதி வெட்டு நேரம்<br>வியாபாரத்தினை மூடிவிடுதல் | மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. முறைமையானது வியாபாரத்திற்காக மூடப்படுவதன் காரணமாக நீண்ட வரிசை/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படுவதுடன் இன்னமும் வரிசையிலுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும் |
| பி.ப. 4.30 மணியிலிருந்து பி.ப. 5.00 மணி வரை | நாள் மூடிவிடுதல்<br>செயன்முறைப்படுத்தல் | நாள் முடிவின் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப் பேரேடு, ஏற்றுமதி கோப்புக்களைத் தயாரித்தல், பட்டியற்படுத்தல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| பி.ப. 5.00 | முறைமையினை மூடிவிடுதல் | ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ் பிரயோக மென்பொருளினை மூடிவிடத் தொடங்குதல், தலத்திற்கு வெளியேயான பின்னூட்டல்களைப் பெறுதல் |

4. பங்கேற்பாளர்கள் இணைய உலாவி பணி நிலையங்களூடாக அவற்றின் தீர்ப்பனவுகள் கணக்குகளைக் கண்காணிக்குமாறு ஆர்ரிஜிஎஸ் முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினைத் தீர்ப்பனவு செய்யும் நேரத்தில் அவற்றின் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமான நிதியத்தினை வைத்திருப்பதனை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறார்கள்.

டி. குமாரதுங்க
பணிப்பாளர்/கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2017 ஒத்தோபர் 10

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 10/2017**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**வாடிக்கையாளர்களில் அரசாங்கப் பிணையங்களை மத்திய வங்கியிலிருந்து ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைப் பெறுவதற்கான பிணையமொன்றாகப் பயன்படுத்துவதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, 2013 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகள் விதிப்பு 2.1இன் தொகுதி 3இன் பிரிவு 11 இனையும் (2013 மாச்சு 31 வரையான திருத்தங்கள் உள்ளீடு செய்தல்) ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி தொடர்பான உடன்படிக்கையின் பிரிவு 2 இனையும் திருத்துவதற்கு ஒப்புதலளித்திருக்கிறது.

இதன்படி, 2013 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகள் பதிப்பு 2.1இன் தொகுதி 3இன் பிரிவு 11உம் (2013 மாச்சு 31 வரையான திருத்தங்களை உள்ளீடு செய்தல் மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி தொடர்பான உடன்படிக்கையின் பிரிவு 2 உம் **2017 ஒத்தோபர் 17 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்** பின்வரும் விதத்தில் வாசிக்கப்படுதல் வேண்டும்.

**லங்கா செட்டில் முறைமை விதிகள் பதிப்பு 2.1இன் தொகுதி 3இன் பிரிவு 11**

**11. ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி**

11.1 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் தொழிற்பாடுகள் தொகுதி 2இன் விதி 7இல் விபரிக்கப்படுகின்றன. லங்கா செகுயர் முறைமை வசதிகள் பங்கேற்பாளர்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிலுள்ள நிலைமை பிணையங்களுக்கு, அதாவது, மீள்நிலைப்படுத்தல் அறிவுறுத்தல்களினைப் பயன்படுத்துவதன் மூலமாக பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கெதிராக பிணையமாக வைத்திருக்கப்படவுள்ள அனைத்துப் பிணையங்களும் பங்கேற்பாளர்களின் சொந்தக் கணக்குகளிலிருந்து ஒரு நாளுக்குள்ளேயான கணக்கிற்கு மாற்றல் செய்யப்படுதல் (மீள்நிலைப்படுத்தல்) வேண்டும்.

11.2 பங்கேற்பாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்ட அல்லது வாடிக்கையாளர்களுடனான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அல்லது மத்திய வங்கியுடனான ஒரு நாளுக்குள்ளேயான கொடுக்கல்வாங்கல் நோக்கத்திற்காக பங்கேற்பாளர்களுக்குச் சொந்தமாக இல்லாத வேறு ஏதேனும் பிணைகளைப் பயன்படுத்தக்கூடாது.

11.3 மேலேயுள்ள பிரிவு 11.2 இனை மீறுகின்ற பங்கேற்பாளர்கள் பின்வரும் முறையில் மத்திய வங்கிக்குக் கொடுப்பனவுகளைச் செய்ய பொறுப்புடையவர்களாவர்.

(அ) கடன்பட்ட தொகை ரூ.1,000 மில்லியன் வரையில் இருக்குமாயின் நாளொன்றிற்கு 2 சதவீதம்.

(ஆ) கடன்பட்ட தொகை ரூ.1,000 மில்லியன் வரையில் இருக்குமாயின் நாளொன்றிற்கு 2.5 சதவீதம்.

11.4 பங்கேற்பாளரொருவர் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டுத் தலையீடு இல்லாமல் ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவினை முன்னெடுக்க முடியும். பங்கேற்பாளரொருவர், ஒரு தடவையில், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று மீள்கொள்வனவு மாற்றல் பதிவுகளை பிணையிடப்பட்ட பிணையமொன்றின் மொத்த அளவிற்கான பிணைய அடிப்படையின் மீது அல்லது பிணையிடப்பட்ட பிணையின் மொத்த அளவில் ஒரு பகுதியின் அளவில் அல்லது பிணையிடப்பட்ட அனைத்துப் பிணையங்களினதும் மொத்த அளவில் மேற்கொள்ள முடியும். இப்பங்கேற்பாளரினால் முகாமைப்படுத்தப்படும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவை உருவாக்கும் வசதியானது வியாபார நாட்களில் உரித்துடைய பங்கேற்பாளர்களுக்கு மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.45 மணி வரை கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

இலங்கை மத்திய வங்கி ஒவ்வொரு வேலை நாளன்றும் பி.ப. 4.15 மணிக்கு இறுதி ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவு பதிவு

மாற்றலை முன்னெடுப்பதன் மூலம் அனைத்துப் பங்கேற்பாளர்களினாலும் பிணையிடப்பட்ட அனைத்துப் பிணையங்களுக்குமான ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொள்வனவுகளின் பதிவுகள் மாற்றிப் பதியப்படுகின்றன.

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீதான உ டன்படிக்கையின் பிரிவு 2

2. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணை

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதிகள் இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்பட்டிருக்கின்ற விதத்தில், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்ற நோக்கத்திற்காக தகைமையுடைய பிணையங்களினால் முழுமையாக பிணையிடப்பட்டிருத்தல் வேண்டும் (தகைமையுடைய பிணையங்கள்).

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிணையமொன்றாக பங்கேற்பாளர்கள், குறிப்பிட்ட பங்கேற்பாளர்களுக்குச் சொந்தமானவை தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்குச் சொந்தமான பிணையங்களை அல்லது வேறு ஏதேனும் வழியில் பாரபந்தப்படுத்தப்பட்ட பிணைகளைப் பயன்படுத்தக்கூடாது.

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிணையொன்றாக பங்கெற்பாளரொருவர் குறிப்பிட்ட பங்கேற்பாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்குச் சொந்தமான பிணையங்களையோ அல்லது வேறு ஏதேனும் வழியில் பாரபந்தப்படுத்தப்பட்ட பிணையங்களையோ பயன்படுத்த முடியாது. அத்தகைய ஆள் இவ்வொப்பந்தத்தின் 2ஆவது பிரிவினை மீறியவராக கருதப்பட்டு கடன்பட்ட தொகை ரூ.1,000 மில்லியன் வரை இருக்குமிடத்து 2 சதவீதத்தினையும் ரூ.1,000 மில்லியனுக்கு மேல் இருக்குமிடத்து 2.5 சதவீதத்தினையும் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராக இருப்பார்.

டி குமாரதுங்க
பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

டி எம் ரூபசிங்க
கண்காணிப்பாளர், பொதுப் படுகடன்

2017 ஒத்தோபர் 24

தொடர்பு எண்: 34/07/029/0001/002

சுற்றறிக்கை எண்: கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை எண் 11/2017

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

### லங்கா செட்டில் முறைமை 2017 நவெம்பர் 10ஆம் நாளில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை **2017 நவெம்பர் 10ஆம் நாளன்று (வெள்ளிக்கிழமை)** அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், ஆயத்தநிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2017 நவெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு. நதீஸ் பிரியங்கா - 2477493 (மின்னஞ்சல்: nadeesh@cbsl.lk)
- திரு. சசிந்த கருணாரத்ன - 2477325 (மின்னஞ்சல்: sachinda@cbsl.lk)

ஆர் எம் ஜெயவர்த்தன
பதில் பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

பிரதி: முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர் சங்கம்
தலைவர் - முதனிலை வணிகர் சங்கம்
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுறோ லிமிடெட்

தொடர்பு எண்: 08/21/005/035/001 2017 ஏப்பிறல் 24

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மற்றும் பொதுப்படுகடன் திணைக்களம்

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள்

### அரச பிணையங்களின் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களைக் கட்டாயமாக அறிக்கையிடுதல்

அரச பிணையங்கள் சந்தையின் வெளிப்படைத்தன்மை மற்றும் விலை கண்டறிதலை மேம்படுத்தும் மேலுமொரு வழிமுறையாக, புளூம்பேர்க் வர்த்தகப்படுத்தல் தளத்தினூடாக அரச பிணையங்களில் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தலை அறிமுகப்படுத்துதற்கும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கும் அரச பிணையங்களில் உடனடி வர்த்தகங்களுக்காகப் பின்பற்றப்பட்ட நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாளாந்த வர்த்தகத் தொகுப்பினை வெளியிடுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களும் 2017 ஏப்பிறல் 26ஆம் நாள் தொடர்பில் அரச பிணையங்களின் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

I. இலங்கைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள புளும்போக் வர்த்தகப்படுத்தல் தளத்தினை (நிலையான வருமானக் குறியீட்டினைப்) பயன்படுத்தல்:

அ) குறியீட்டு மீள்கொள்வனவு வீதங்களும் ஓரிரவு, ஒரு கிழமை (1 கிழமை) இரண்டு கிழமை (2 கிழமை), ஒரு மாதம் (1 மாதம்), இரண்டு மாதம் (2 மாதம்), மூன்று மாதம் (3 மாதம்), நான்கு மாதம் (4 மாதம்), ஐந்து மாதம் (5 மாதம்), ஆறு மாதம் (6 மாதம்) மற்றும் பன்னிரண்டு மாதம் (12 மாதம்) எனக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான அளவுகள் அல்லது மேற்குறிப்பிட்ட நியமப்படுத்தப்பட்ட காலப்பகுதியின் கீழ் வராத காலப்பகுதிகளைப் பொறுத்தவரையில் மற்றைய காலப்பகுதிகளுக்கும்; அத்துடன்

ஆ) கருமபீடத்தில் மேற்கொள்ளப்படும் ரூ.100 மில்லியனுக்கும் அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் விளைவு வீதங்கள், காலம் மற்றும் அளவுகள் 30 நிமிடங்களுக்குள் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

II. இடையீட்டாளரொருவரினூடாக மேற்கொள்ளப்படுகின்ற மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை, பணத்தின் கடன் வழங்குநர் குரல் உறுதிப்படுத்தல் சீட்டினைப் பயன்படுத்தி மேலே 1(ஆ) இன் கீழ் அறிவித்தல் வேண்டும்.

III. வாடிக்கையாளர் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் ஒற்றைப்பக்க அறிக்கையிடல்களைப் பொறுத்தவரை, வணிகர் மேலேயுள்ள 1 (ஆ) இனைப் பயன்படுத்தி குரல் உறுதிப்படுத்தல் சீட்டினைப் பயன்படுத்தலாம் (pdebt@cbsl.lk) வணிகர் குறிப்புத் தளத்தில் வாடிக்கையாளர் பெயரைக் குறிப்பிடலாம்.

**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்** **வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 08/21/005/012/001** 2017 யூலை 24

## திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல் மீதான பணிப்புரைகள்

1937இன் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட 2009 யூன் 20ஆம் திகதிய 2009இன் 1ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்கு விதிகளின் 11(1) ஆம் ஒழுங்கு விதியின் கீழ் இப்பணிப்புரைகள் வெளியிடப்படுவதுடன் 2017 யூலை 27ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

கொழும்பு ரி.எச்.பீ. சரத்சந்திர
திகதி: 2017 யூலை 24 **பொதுபடுகடன் கண்காணிப்பாளர்**

1. 2017 யூலை 27 தொடக்கம் ஆரம்பிக்கின்ற திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கலானது இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையின் வழிகாட்டலுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து முதனிலை வணிகர்களும் இவ்வழிகாட்டல்களின் ஏற்புடைய ஏற்பாடுகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
3. தொடர்பு எண் 08/24/002/0005/003 இனைக் கொண்ட 2003 ஓகத்து 15ஆம் திகதிய திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் ஏலங்களுக்கான ஆக்குறைந்த உதவு மட்டங்கள் மீதான பணிப்புரையானது 2017 யூலை 27ஆம் திகதி முதல் திறைசேரி முறிகளை வழங்குவதற்கு ஏற்புடைத்தாக இருக்காது.

**அட்டவணை**

## திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல்கள் மீதான வழிகாட்டல்கள்

### பகுதி I. பொதுவான ஏற்பாடுகள்

**1. அறிமுகம்**

1.1 இவ்வழிகாட்டல்கள் பொதுபடுகடனை முகாமை செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் முகவர் ஒருவராக செயற்படுகின்ற (இதனகத்துப் பின்னர் "வழங்குபவர்" என அழைக்கப்படுகின்ற அத்துடன் குறிப்பீடு செய்யப்படுகின்ற) இலங்கை மத்திய வங்கியினால் (இதனகத்துப் பின்னர் "மத்திய வங்கி" என அழைக்கப்படுகின்ற மற்றும் குறிப்பீடு செய்யப்படுகின்ற) திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல்களுக்கானதாகும்.

1.2 இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களமானது திறைசேரி முறிகளின் வழங்கலுடன் தொடர்புபட்ட இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்தவேண்டும் என்பதுடன் திறைசேரி முறிகளின் வழங்கலுடன் தொடர்புபடுகின்ற விசாரணைக்கான தொடர்பு மையமாகவும் இருத்தல்வேண்டும்.

1.3 இவ்வழிகாட்டல்களில் எடுத்துரைக்கப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியின் கடப்பாடுகளும் கடமைகளும் அத்துடன் திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கலில் பங்குபற்றுவதற்கு தகைமையுடைய பங்கேற்பாளர்களின் (இதனகத்துப் பின்னர் "வழங்கல்" என அழைக்கப்படுகின்ற அத்துடன் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கடப்பாடுகள் மற்றும் கடமைகள் அத்தகைய வழங்குதலின் முறையான நடத்தைக்கான வெளிப்படையான மற்றும் வினைத்திறன்மிக்க கட்டமைப்பு ஒன்றினை வழங்குவதனை இலக்காகக் கொண்டுள்ளன.

1.4 நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 62 அ இன் கீழ் ஆக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கு அமைவாக திறைசேரி முறிகள் உருவளிக்கப்படாத (பத்திரங்களற்ற) வடிவில் வழங்கப்படுவதுடன் மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்டு பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினூடாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

### பகுதி II. இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாண்மைகளும் கடமைகளும்

**2. பொதுவான பொறுப்பாண்மைகளும் கடமைகளும்**

2.1 இலங்கை மத்திய வங்கியானது:

i. வழங்கல் சுமுகமாக நடைபெறுவதற்கு ஒழுங்குகளையும் வசதிகளையும் செய்யும்

ii. அத்தகைய வழங்கல்களும் அனைத்து தகைமையுடைய பங்கேற்பாளர்களுக்கும் சமமான அணுகுவழியினை வழங்கும்

iii. வழங்கல் நாட்காட்டியினை நிர்ணயிக்கும்

iv. திறைசேரி முறிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற போது ஏலங்களில் அனைத்து விலைக்குறிப்பீடுகளும் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையொன்றில் கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிசெய்யும் அத்துடன்

v. வெளிநிற்கும் தொகைகள், வழங்கல் மற்றும் முதிர்வுத் திகதிகள் கூப்பன் வீதங்கள் மற்றும் அரசாங்க படுகடன் சந்தைக்கு தொடர்புள்ளதாக இருக்கக்கூடிய எவையேனும் வேறு தகவல்களை காண்பிக்கின்ற வழங்கப்பட்ட அனைத்து திறைசேரி முறிகளினதும் பட்டியல் உள்ளடங்கலாக சந்தைத் தொழிற்பாடுகள், விளைவுகள்/ விலைகள், அளவுகள் பற்றிய புள்ளிவிபரத் தரவுகளைப் பேணுதல், வெளியிடுதல் மற்றும் கிரமமாக இற்றைப்படுத்தல்.

**3. ஆரம்ப வழங்கலை ஒழுங்கமைத்தல்**

3.1 இவ்வழிகாட்டல்களில் விபரிக்கப்பட்டவாறு, திறைசேரி முறிகள் முதலாந்தரச் சந்தைகளில் இலங்கையில் வழங்கப்படுதல் வேண்டும்.

3.2 இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள் மற்றும் ஆரம்ப வழங்கல்களில் பங்கேற்பதற்கு நாணயச் சபையினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய பங்கேற்பாளர்கள் (ஏலப் பங்கேற்பாளர்கள்) வழங்கலின் போது தமது விலைக்குறிப்பீடுகளை முன்வைத்தல் வேண்டும்.

3.3 இலங்கையில் சட்டபூர்வமாக அல்லது இயற்கையாக வதிகின்ற ஆட்கள் அல்லது வதியாத தகைமையுடையோர் யாராக இருப்பினும் ஏனைய ஆர்வமுடைய தரப்பினர் முதனிலை வணிகர்களூடாக அரசாங்க பிணையங்களுக்கான முதனிலைச் சந்தையில் நேரடியற்ற முறையில் பங்கேற்கக்கூடியதாக இருக்கின்றவிடத்து, முதனிலை வணிகர் ஒருவர் அத்தகைய வாடிக்கையாளரின் கோரிக்கைகளை அதன் விலைக்குறிப்பீட்டில் உள்ளடக்கலாம்.

3.4 இவ்வழிகாட்டல்களின் விடயம் 7இற்கு அமைவாக, ஏதேனும் அத்தகைய திருத்தங்கள் பற்றி குறைந்தது ஒரு (01) நாள் முன்கூட்டிய அறிவித்தலொன்று அனைத்து ஏலப் பங்கேற்பாளர்களுக்கும் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும் என்ற நியதிக்குட்பட்டு, இலங்கை மத்திய வங்கியானது வழங்குநரின் அனுமதியுடன் முன்வைத்தல் மீது வழங்கல் தொகையினைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் குறித்த வழங்கலொன்று தொடர்பில் அத்தகைய தொகையினை மாற்றலாம் அல்லது திருத்தலாம்.

3.5 திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல்கள் ரி+2 அடிப்படையில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வழங்கல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

**4. வழங்கலை குறிப்பீடு செய்தல்**

4.1 பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கமும் தொடர்களும் அரசாங்க பிணையங்களின் தனித்துவமான அடையாளக் குறிகளாக இருத்தல் வேண்டும்.

## பகுதி III. ஏலப் பங்கேற்பாளர்களின் பொறுப்பாண்மைகளும் கடமைகளும்

**5. ஏலப் பங்கேற்பாளர்களின் பொறுப்பாண்மைகள்**

5.1 இவ்வழிகாட்டல்களின் விடயம் 9இல் குறித்துரைக்கப்பட்டவாறு ஒவ்வொரு முதனிலை வணிகரும் ஏலங்களில் ஆகக்குறைந்த விலைக்குறிப்பீட்டு தேவைப்பாட்டினையும் ஆகக்குறைந்த காத்திரமான பங்கேற்பினையும் பேணுதல் வேண்டும்.

5.2 ஏலப் பங்கேற்பாளரொருவர் ஏற்புடைத்தான விதத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இவ்வழிகாட்டல்களையும் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அல்லது அறிவிக்கப்படக்கூடியவாறான வழங்கல்களுக்கான ஏதேனும் வேறு நியதிகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

5.3 திறைசேரி முறிகளுக்காக இற்றைப்படுத்தப்பட்ட அதிகார மாதிரி கையொப்பங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதனை ஏலப் பங்கேற்பாளர் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மாதிரி கையொப்பங்களில் பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் மாத்திரம் ஏல விலைக்குறிப்பீடுகளை இலத்திரனியல் ரீதியாகவோ அல்லது கைகளின் மூலமோ சமாப்பிப்பதற்கு அல்லது கையொப்பமிடுவதற்கு உரித்துடையவர்களாக இருப்பர்.

5.4 ஏலப் பங்கேற்பாளர்கள் வழங்கலின் போது தமது விலைக்குறிப்பீடுகளை வேறு ஏலப் பங்கேற்பாளர்களூடாக அனுப்பாது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும்

## பகுதி IV. வழங்கல் செயன்முறை

**6. வழங்கல் நாட்காட்டி**

6.1 இலங்கை மத்திய வங்கியானது எதிர்வருகின்ற காலாண்டிற்கான வழங்கலுக்கான அதன் திட்டங்களை காலாண்டு அடிப்படையில் அக்காலாண்டு ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அறிவிக்கும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடும்.

6.2 வழங்கல் நாட்காட்டியானது, வழங்கல் திகதிகள், முன்வைத்திலின் மீது இருக்கவேண்டிய காலம் மற்றும் முன்வைக்கப்பட்ட தொகைகள் என்பன பற்றிய தகவல்களை உள்ளடக்கும்.

**7. அறிவித்தல்**

7.1 இலங்கை மத்திய வங்கியானது வழங்கல் அறிவித்தலொன்றினை திறைசேரி முறிகள் வழங்குவதற்கு முன்னர் மூன்று வேலை நாட்களுக்கு குறையாமல் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தின் வெளியிடும். வழங்கல் அறிவித்தலானது அறிவித்தல் திகதியன்று 1530 மணியளவில் வெளியிடப்படும். அதன்பின்னர் இலங்கை மத்திய வங்கி, அங்கீகரிக்கப்பட்ட ஊடகங்களில் முடிந்தவரை விரைவாக அறிவித்தல்களை வெளியிடும். எனினும், தொழில்நுட்ப அல்லது அத்துடன் இயற்கையான தடங்கல்களின் காரணமாக விதிவிலக்கான சூழ்நிலைகளின் போது அத்தகைய அறிவித்தல்களினை எந்நேரத்திலும் வெளியிடுவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு உரிமையுள்ளது.

7.2 வழங்கல் அறிவித்தலானது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது

i. பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் (இலக்கங்கள்) மற்றும் வழங்கப்படும் திறைசேரி முறிகளின் தொடர்
ii. கூப்பன் வீதம்
iii. கூப்பன் கால இடைவெளி
iv. ஆரம்ப வழங்கல் திகதி
v. தீர்ப்பனவு திகதி
vi. முதிர்வுத் திகதி
vii. ஒன்றுதிரண்ட வட்டித்தொகை
viii. முகப்பெறுமதி அடிப்படையில் முன்வைக்கப்பட்ட மொத்த அளவு அத்துடன்
ix. இவ்வழிகாட்டல்களின் விடயம் 9 மற்றும் விடயம் 10இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு விலைக்குறிப்பீடுகளைச் சமா்ப்பிப்பதற்கான வழங்கல் திறத்தல் மற்றும் மூடுதல் நேரங்கள்

7.3 முன்னா் வழங்கப்பட்ட பிணையங்களை (மீளத்திறத்தல்) ஒன்று அல்லது பல வழங்கல்களில் வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி உரித்தினைக் கொண்டுள்ளது. அத்தகைய வழங்கலானது ஆரம்ப வழங்கலில் குறிப்பிடப்பட்ட அதே பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம், முதிா்வுத் திகதிகள் மற்றும் கூப்பன் வீதங்களைக் கொண்டிருக்கும்.

7.4 வழங்கலொன்றினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு உரிமையுள்ளது. எவ்வாறாயினும் அது இக்கட்டான சூழ்நிலையொன்றில் மாத்திரமே கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். வழங்குநா் அல்லது ஏலப் பங்கேற்பாளா்களின் முழுமையான எண்ணிக்கையானோா் அல்லது பகுதியளவானோா் ஏதேனும் காரணத்திற்காக செயற்பட இயலாதவாறு இருக்கும் சந்தா்ப்பமொன்றில், வழங்கலானது ஆரம்பத்தில் வழங்கலானது வெளியிடப்பட்டவாறு அதேநாளில் தீா்ப்பனவு செய்யப்பட வேண்டிய விதத்தில் அதே நாளில் பிந்திய நேரம்வரை அல்லது கிடைக்கப்பெறும் அடுத்த வியாபார நாள் வரை பிற்போடலாம். இலங்கை மத்திய வங்கியானது, கிடைக்கப்பெற்ற விலைக்கூறுகள் வழமைக்கு மாறான அல்லது உயா்வாக திரிவுபடுத்தப்பட்ட விலைகளை வெளிக்காட்டுகின்றது என்ற அடிப்படையில் வழங்கலொன்றினை செயலற்றது என பிரகடனப்படுத்துவதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

## 8. முறையியல்

8.1 ஒவ்வொரு மாதாந்த வழங்கலிலும் 2 திறைசேரி முறி தொடா்கள் வழங்கப்படுகின்றன.

8.2 இலங்கை மத்திய வங்கியானது விலைக்குறிப்பீடொன்றின் ஏதேனும் பாகத்தினை அல்லது முழுவதையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையினை இயல்பாகவே கொண்டுள்ளதுடன் ஏதேனும் காரணங்களை குறித்தொதுக்காது ஏதேனும் அல்லது அனைத்து விலைக்குறிப்பீடுகளையும் நிராகரிப்பதற்கான உரிமையினை கொண்டிருக்கும்.

8.3 திறைசேரி முறிகளின் தொடரொன்றின் ஒவ்வொரு வழங்கலுக்காகவும் தொடரொன்றுக்கென வழங்கல் திகதி குறிக்கப்படும் பொதுவாக தொடரொன்றுக்கான வழங்கல் திகதியானது மாதத்தில் முதலாம் திகதியாகவோ அல்லது மாதத்தின் 15ஆம் திகதியாகவோ இருக்கும்.

8.4 விளம்பரப்படுத்தப்படும் ஒவ்வொரு தொடருக்குமான திறைசேரி முறி வழங்கலானது மூன்று கட்டங்களை உள்ளடக்குகின்றது. முதல் இரண்டு கட்டங்களிலும் போட்டி அடிப்படையிலான விலைக்குறிப்பீடுகள் முன்வைத்தல் ஏலப் பங்கேற்பாளா்களுக்காக திறக்கப்படுவதுடன் கட்டம் III இன் கீழ் முதனிலை வணிகா்களுக்கான வழங்கல்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

8.5 கட்டம் I, கட்டம் III, கட்டம் III கீழ் வழங்கப்படும் திறைசேரி முறிகளின் தீா்ப்பனவானது, விடயம் 7இன் கீழ் வழங்கல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு உரிய தீா்ப்பனவு திகதியன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8.6 ஒவ்வொரு கட்டத்தின் கீழும் வழங்கல் முறைபற்றிய விபரிப்பு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. (ஒவ்வொரு கட்டத்தின் கீழும் விபரிக்கப்பட்ட படிமுறைகள் இவ்வழிகாட்டலின் விடயம் 9-11 கீழ் ஆராயப்படுகின்றன).

கட்டம் I: (i) பல விலைப்போட்டி ஏலத்தினை நடாத்துதல். இவ்வேலத்தில் இலங்கை மத்திய வங்கியானது ஒவ்வொரு தொடரின் கீழும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய தொகை, வெட்டுப்புள்ளி வீதம் மற்றும் விளைவு ஏல நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் ஆகியவற்றினை தீா்மானிக்கும். இச்சுற்றில் நியாயமான சந்தை விலைக்குறிப்பீடுகளின் பெறுகைக்குட்பட்டு கட்டம் I கீழ் முழுமையாக முன்வைக்கப்பட்ட தொகையினை ஏற்றுக்கொள்வதற்கு அனைத்து நியாயமான முயற்சிகளையும் எடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி கேட்டுக் கொள்ளப்படுகின்றது. இக்கட்டத்தில் ஏலப் பங்கேற்பாளா்கள் விலைக்குறிப்பீட்டினை சமா்ப்பிப்பதற்கு தகைமையுடையவராவா்.

(ii) கட்டம் I கீழ், அதன் ஏலப் பெறுபேறுகளைப் பற்றி நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் சோ்த்து அதன் ஏலவிற்பனை பெறுபேறுகளையும் கட்டம் II கீழ் விலைக்குறிப்பீடு சமா்ப்பிப்பதற்காக கிடைக்கப்பெறும் தொகையினையும் வழங்கல் முறைமையினூடாக ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளா்களுக்கும் அறிவித்தல்.

கட்டம் II: மேலே கட்டம் I இனைத் தொடா்ந்து, எவையேனும் குறைவான ஒதுக்கீட்டிற்கான தன்னாா்வ, அளவினை அடிப்படையாகக் கொண்ட விலைக்குறிப்பீட்டினை சமா்ப்பித்தலினை திறத்தல். இக்கட்டத்தில், கட்டம் I இன் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னா் இவ்வழிகாட்டல்களின் விடயம் 10இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட கால அளவினுள் விலைக்குறிப்பீட்டினை ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளரும் சமா்ப்பிக்கலாம். இக்கட்டத்தில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் மேற்கொள்ளப்பட்ட வழங்கலானது கட்டம் I கீழ் ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளா்களினதும் செயலாற்றம் மற்றும் கட்டம் II இல் அளவு விலைக்குறிப்பீடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இருக்கும். இக்கட்டத்தில் விலைக்குறிப்பீட்டினை சமா்ப்பிப்பதற்கு ஏலப் பங்கேற்பாளா்கள் தகைமை பெற்றிருப்பா்.

கட்டம் III: எஞ்சியுள்ள அளவு ஏதும் இருப்பின் (ஒவ்வொரு தொடரிலும் அறிவிக்கப்பட்ட தொகை மற்றும் கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட திரண்ட தொகை என்பவற்றிக்கிடையிலான வேறுபாடு) கட்டம் I மற்றும் கட்டம் II இல் ஒவ்வொரு அத்தகைய முதனிலை வணிகா்களின் வெற்றிகரமான பங்கேற்பினை அடிப்படையாகக் கொண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் முதனிலை வணிகா்கள் மத்தியில் கட்டாய அடிப்படையொன்றில் வழங்குதல். எனினும், கட்டம் I இல் முன்வைக்கப்பட்ட தொகையில் ஆகக்குறைந்தது 60 சதவீதத்தினை இலங்கை

மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளவில்லையாயின் இக்கட்டம் நிறைவேற்றப்படாது. இக்கட்டத்தின் கீழான வழங்கல் முதனிலை வணிகர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

8.7 இதற்கமைய, கட்டம் I இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகளின் மொத்த அளவு முன்வைக்கப்பட்ட தொகைக்கு கீழ் குறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் வழங்கல் செயன்முறையின் கட்டம் II திறக்கப்படும். ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு எதிராக கட்டம் I மற்றும் கட்டம் II இனைத் தொடர்ந்து குறைவான ஒதுக்கீடு உள்ள சந்தர்ப்பத்தில் வழங்கல் செயன்முறை கட்டம் III வரை மேலும் நீடிக்கப்படலாம்.

8.8 கட்டம் II மற்றும் கட்டம் III இன் கீழ் ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளருக்குமான மொத்த வழங்கல்கள், வழங்கல் முறைமையினூடாக விடுவிக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டம் III நிறைவுபெற்ற பின்னர் இலங்கை மத்திய வங்கியானது அனைத்து 3 கட்டங்களிலும் கீழும் வழங்கல்களின் ஒன்றுதிரட்டிய பெறுபேறுகளை அறிவிக்கின்ற பத்திரிகை வெளியீடு ஒன்றினை வெளியிடும்.

8.9 வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் தொடர்பிலான அனைத்து கொடுப்பனவுகளும் விடயம் 7 இன் கீழான வழங்கல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தீர்ப்பனவு திகதியன்று முழுமையாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8.10 தீர்ப்பனவு திகதியன்று இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச்சட்டத்தின் 62 (அ) பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் லங்கா செக்யூ முறைமையூடாக இலத்திரனியல் படிவத்தில் திறைசேரி உண்டியல்களை வழங்கும்.

**9. கட்டம் I இன் கீழ் விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பித்தலும் ஏற்றுக்கொள்ளலும்**

9.1 ஏலப் பங்கேற்பாளர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநர்கள் தமது விலைக்குறிப்பீடுகளை இலத்திரனியல் விலைக்குறிப்பீடுகள் சமர்ப்பித்தல் தளத்தினூடாக ஏலத் தினமன்று 8.30 மணி தொடக்கம் 11 மணி வரை சமர்ப்பித்தல் வேண்டும்.

9.2 விலைக்குறிப்பீட்டாளர்கள், கட்டுப்பண அல்லது கழிவீட்டுப் பெறுமதி யில் விலைக்குறிப்பீட்டிற்கான நெகிழ்ச்சித்தன்மையினைக் கொண்டிருப்பர்.

9.3 விலைக்குறிப்பீடுகள் ரூபா ஐந்து (05) மில்லியன் கொண்ட ஆகக்குறைந்த விலைக்குறிப்பீட்டளவுடனும் ரூபா ஒரு மில்லியன் (01) கொண்ட பெருக்கங்களிலும் இருத்தல் வேண்டும்.

9.4 விலைக்குறிப்பீட்டாளர் ஒரு விலைக்குறிப்பீட்டிற்கும் கூடுதலாக விலைக்குறிப்பீட்டினை மேற்கொள்ள விரும்புவாராயின் தனித்தனியான விலைக்குறிப்பீடுகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விலைக்குறிப்பீட்டு விலைகள் ஒவ்வொரு ரூ.100 இற்றும் ஐந்து தசம தானங்கள் ரூபாவில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9.5 இக்கட்டத்தின் கீழ் பல் விலைக்குறிப்பீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

9.6 எந்தவொரு ஏலத்தினதும் கட்டம் I இன் கீழும் முதனிலை வணிகரொருவருக்கான அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்ச மொத்த விலைக்குறிப்பீட்டு அளவு பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

$$\text{ஒவ்வொரு முதனிலை வணிகரினாலும் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட குறைந்தபட்ச அளவு (ஒவ்வொரு பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கத்தின் கீழும்)} = \frac{\text{முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை}}{\text{தொடர்பான முதலாந்தர ஏலத்தில் விலைக்குறிப்பீடுகளைச் செய்ய தகைமையுடைய முதனிலை வணிகர்களின் எண்ணிக்கை}}$$

9.7 ஒவ்வொரு காலாண்டிற்குள்ளும் கட்டம் I இன் கீழ் முதனிலை வணிகரல்லாத விலைக்குறிப்பீட்டாளரினால் செய்யப்பட்ட வழங்கல்கள் நீங்கலாக, முதனிலை வணிரொருவருக்குச் செய்யப்பட்ட சராசரி வழங்கலில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு ஒவ்வொரு முதனிலை வணிகரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். முதனிலை வணிகரொருவருக்கான A1 பின்வருமாறு கணிக்கப்படுகிறது:

$$\text{முதனிலை வணிகரொருவருக்கான சராசரி வழங்கல்} = \frac{\text{கட்டம் I இன் கீழ் மொத்த வழங்கல் - கட்டம் I இன் கீழ் முதனிலை வணிகரல்லாத ஏல பங்கேற்பாளர்களுக்குச் செய்யப்பட்ட வழங்கல்கள்}}{\text{முதனிலை வணிகர்களின் எண்ணிக்கை*}}$$

* தொடர்பான காலாண்டுப் பகுதியில் முதலாந்தர ஏலங்களில் விலைக்குறிப்பீடுகளைச் செய்ய தகுதியுடையவர்களாக இருந்த முதனிலை வணிகரின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை

9.8 ஏலப் பங்கேற்பாளர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநர்கள் விலைக்குறிப்பீடுகளை மேற்கொள்ளலாம் அத்துடன்/ அல்லது மேலே விடயம் 9.1 இல் வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் தமது விலைக்குறிப்பீட்டினை மாற்றிக் கொள்ளலாம். அத்தகைய கால அவகாசம் முடிவடைந்த பின்னர் விலைக்குறிப்பீடுகளில் எந்தவொரு மாற்றத்தினையும் எந்தவொரு தரப்பினரும் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9.9 மேலேயுள்ள விடயம் 9.1 இற்கிணங்க, விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு தொழில்நுட்ப விடயங்கள் கிடைக்காமலிருப்பது முட்டுக்கட்டையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஏலப் பங்கேற்பாளர்கள் சாத்தியமானளவிற்கு விரைவாக தொலைபேசி மூலம் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகலூடாக அத்தகைய பிரச்சனையினை பொதுப்படுகடன் திணைக்களத்தின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். அப்பிரச்சனை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இவ்விலைக்குறிப்பீடுகளை மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலமாக பொதுப்படுகடன் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும், அல்லது அதனை பொதுப்படுகடன் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம். விலைக்குறிப்பீடுகள் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படுவதாக இருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநரின் குறித்துரைக்கப்பட்ட மின்னஞ்சல் அடையாள அட்டையினூடாக அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். அதேவேளை தொலைநகல் மூலம் அனுப்பப்பட்ட விலைக்குறிப்பீடாக இருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். ஏலங்களின் பங்கேற்பாளர்கள் குறித்துரைக்கப்பட்ட தொடர்பு தொலைபேசி இலக்கம்/ இலக்கங்களைப் பயன்படுத்தி மின்னஞ்சல் அல்லது தொலைநகல்வாயிலாக விலைக்குறிப்பீடு

வழங்கப்பட்டமையினை சரிபார்த்துக் கொள்ளலாம். இத்தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாவிடின் தொடர்பான விலைக்குறிப்பீடுகள் ஏலங்களுக்குள் உள்ளடக்கப்படாமல் போவதற்கு அது வழிவகுக்கும்.

9.10 குறிப்பிட்ட விலையில் அனைத்து விலைக்குறிப்பீடுகளையும் ஏற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் ஏலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள் கட்டம் I இன் கீழ் வழங்கப்பட வேண்டிய மொத்த அளவினை விஞ்சுவதற்கு வழிவகுப்பதனால் அத்தகைய விலைகளின் கீழ் வழங்கப்படவுள்ள அளவு விகிதாசார அடிப்படையில் வழங்கப்படும்.

9.11 கட்டம் I இன் முடிவில், ஏல நாளின்று ஏறத்தாழ 1330 மணியளவில், தொடர்பான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் மற்றும் கட்டம் II இன் கீழ் விலைக்குறிப்பீட்டிற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை என்பனவற்றுடன் ஒவ்வொரு பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கத்தின் கீழான கட்டம் I இல் இதன் விலைக்குறிப்பீட்டுப் பெறுபேறுகளின் ஏல முறைமைகளினூடாக ஒவ்வொரு ஏலப் பங்காளர்களுக்கும் அறிவிக்கப்பட்டன.

## 10. கட்டம் IIஇன் கீழ் விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்

10.1 குறிப்பிட்ட திறைசேரி முறி தொடர்களுக்காக, வழங்கலின் போது முன்வைக்கப்பட்ட முழுத்தொகையும் கட்டம் I இன் கீழ் வழங்கப்படாவிடின் வழங்கல் செயன்முறையின் கட்டம் II பெறுபேறுகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து ஏல நாளன்று ஏறத்தாழ 1330 மணிக்கு வழங்கல் முறைமையினூடாக ஆரம்பித்து ஒரு மணித்தியாலத்திற்குத் திறந்து வைக்கப்படும்.

10.2 கட்டம் II இன் கீழ், கட்டம் I பெறுபேறுகளின் கீழ் அறிவிக்கப்பட்டவாறு, நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் உதவுதொகைக்காக கட்டம் II இன் கீழ் வழங்கப்படவிருக்கும் மொத்த அளவு வரை வழங்கல் முறைமையினூடாக ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளர்களுக்கும் தனி விலைக்குறிப்பீடுகள் வழங்கப்படலாம்.

10.3 ஏலப் பங்கேற்பாளர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநர் ஏலங்களைக் கோரலாம் அத்துடன்/ அல்லது மேலே 10.1 விடயத்தின் கீழ் வழங்கப்பட்ட கால இடைவெளியில் தமது விலைக்குறிப்பீடுகளை மாற்றலாம். குறித்துரைக்கப்பட்ட கால அளவு காலாவதியாகிய பின்னர் எந்தவொரு தரப்பினரும் விலைக்குறிப்பீட்டில் மாற்றங்களைச் செய்ய முடியாது.

10.4 மேலேயுள்ள விடயம் 10.1 இற்கிணங்க, விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு தொழில்நுட்ப விடயங்கள் கிடைக்காமலிருப்பது முட்டுக்கட்டையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஏலப் பங்கேற்பாளர்கள் சாத்தியமானளவிற்கு விரைவாக தொலைபேசி மூலம் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகலூடாக அத்தகைய பிரச்சனையினை பொதுப்படுகடன் திணைக்களத்தின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். அப்பிரச்சனை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இவ்விலைக்குறிப்பீடுகளை மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலமாக பொதுப்படுகடன் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும், அல்லது அதனை பொதுப்படுகடன் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம். விலைக்குறிப்பீடுகள் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படுவதாக இருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநரின் குறித்துரைக்கப்பட்ட மின்னஞ்சல் அடையாள அட்டையினூடாக அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். அதேவேளை தொலைநகல் மூலம் அனுப்பப்பட்ட விலைக்குறிப்பீடாக இருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். ஏலங்களின் பங்கேற்பாளர்கள் குறித்துரைக்கப்பட்ட தொடர்பு தொலைபேசி இலக்கம்/ இலக்கங்களைப் பயன்படுத்தி மின்னஞ்சல் அல்லது தொலைநகல்வாயிலாக விலைக்குறிப்பீடு வழங்கப்பட்டமையின் சரிபார்த்துக் கொள்ளலாம். இத்தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாவிடின் அது தொடர்பான விலைக்குறிப்பீடுகள் ஏலங்களுக்குள் உள்ளடக்கப்படாமல் போவதற்கும் வழிவகுக்கும்.

10.5 ஏலத்தில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் கட்டம் IIஇன் கீழ் வழங்கப்படவுள்ள குறைந்தபட்ச தகுதிவாய்ந்த தொகை பின்வருமாறு தீர்மானிக்கப்படும்:

கட்டம் II இன் கீழ் ஏலப் பங்கேற்பாளர்களின் குறைந்தபட்ச தகைமையுடைய (Ei) தொகை i =

$$\frac{\text{கட்டம் } I \text{ இல் ஏல பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகை } i}{\text{கட்டம் } I \text{ இல் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகை}} \times \text{ கட்டம் } II \text{ இன் கீழ் வழங்கப்பட்ட அளவு}$$

மொத்தத் தொகை ஏலப் பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகையாக இருக்குமிடத்து

i கட்டம் I இல் = $\sum_{j=1}^{n} P_{ij} V_{ij}$

n = ஏலப் பங்கேற்பாளர்களின் வெற்றிகரமான விலைக்குறிப்பீடுகளின் எண்ணிக்கை i கட்டம் I இல் i

$P_{ij}$ = $j^{th}$ இன் விலைக்குறிப்பீட்டு விழலை, கட்டம் I இல் ஏலப் பங்கேற்பாளர்களின் வெற்றிகரமான விலைக்குறிப்பீடு i

மற்றும்

$V_{ij}$ = $j^{th}$ இன் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீட்டு அளவு, கட்டம் I இல் ஏலப் பங்கேற்பாளர்களின் வெற்றிகரமான விலைக்குறிப்பீடு

10.6 எனினும், ஏலப் பங்கேற்பாளரொருவருக்கு வழங்கப்படக்கூடிய உண்மையான தொகை கட்டம் II இன் கீழ் முன்வைக்கப்பட்ட இதன் அளவின் மீதும் கட்டம் II இன் கீழ் மற்றைய ஏலப் பங்கேற்பாளர்களினால் உதவுதொகைக்காக முன்வைக்கப்பட்ட அளவின் மீதும் வேறுபாட்டை ஏற்படுத்தலாம்.

i. கட்டம் II இன் கீழ் விலைக்குறிப்பீடுகளின் கூட்டுத்தொகை வழங்கப்பட வேண்டிய தொகையினை விஞ்சுமாயின், ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளர்களுக்குமான ஒதுக்குகள் கட்டம் I இல் போட்டி ரீதியான ஏலங்களில் பங்கேற்பாளர்களின் செயலாற்றத்தின் அத்தகைய ஏலங்களினை அடிப்படையாகக் கொண்டிருக்கும் (கட்டம் I இல் ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளர்களினாலும் மொத்தக் கொடுப்பனவுத் தொகையினாலும் நிறையேற்றப்பட்டது).

**தோற்றம் 1** - தீவிரமான ஏலப் பங்கேற்பாளர்களின் துணைத் தொகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீட்டின் மொத்த அளவு (தீவிரமான ஏலப் பங்கேற்பாளர் என்பது கட்டம் I இல் போட்டி ரீதியான ஏலங்களில் ஏதேனும் தொகையொன்று வழங்கப்பட்டிருக்கின்ற எவரேனும் ஏலப் பங்கேற்பாளர் கட்டம் II இன் கீழ் வழங்கப்படுவதற்கான கிடைக்கத்தக்க தொகையிலும் பார்க்கக் கூடுதலானதாகக் காணப்படுவதுடன், கட்டம் II இன் கீழான வழங்கல்கள் தீவிரமான ஏலப் பங்கேற்பாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். கட்டம் II இன் மூலமாக அத்தகைய தீவிரமான ஏலப் பங்கேற்பாளர் ஒவ்வொருவருக்குமான வழங்கல்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற செயன்முறையொன்றின் சுற்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். சுற்று 1 இல் ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளருக்கான ஒதுக்கு மேலே விடயம் 10.5 இன் கீழ் கணிக்கப்பட்ட குறைந்தபட்சம் Ei ஆகவும், தொடர்பான ஏலப் பங்கேற்பாளர்களின் கட்டம் II இன் கீழான குறைந்தபட்ச தொகையினையும் கொண்டிருக்கும். சுற்று 1 இன் கீழ் ஒதுக்கு முடிவின் இறுதியில் வழங்கப்படவிருக்கின்ற ஏதேனும் நினைவூட்டல் சுற்று 1இல் மேற்கொள்ளப்பட்ட ஒரே மாதிரியான மீண்டும் மீண்டும் ஏற்படும் செயன்முறையின் கீழான மேலும் ஒதுக்கிற்காக சுற்று 2இல் பரிசீலிக்கப்படவுள்ளது. விடயம் 10.5 இன் கீழ் காணப்பட்ட Ei பரிசீலனையில் கொள்ளப்படுவதுடன் கட்டம் II இன் கீழ், சுற்று 1இன் கீழான ஒதுக்குகளைத் தொடர்ந்து கட்டம் II இன் கீழான விலைக்குறிப்பீட்டாளர்களின் ஒதுக்கப்பட்ட அளவின் கீழான எஞ்சிய ஏதேனும் பகுதி/ இச்செயன்முறையானது கட்டம் II இன் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள முழுத்தொகையும் தீவிரமான பங்கேற்பாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். கட்டம் II இன் கீழ் ஒவ்வொரு தீவிரமான ஏலப் பங்கேற்பாளர்களுக்குமான மொத்த ஒதுக்கு மேலே விளக்கப்பட்ட ஒவ்வொரு சுற்றிலும் செய்யப்பட்ட வழங்கலின் மொத்தமாக இருக்கும். தோற்றம் 1 இன் உதாரணமொன்று இணைப்பு அ இல் காட்டப்பட்டுள்ளது.

**தோற்றம் 2** - தீவிரமான ஏலப் பங்கேற்பாளர்களின் துணைத் தொகுதியினரின் விலைக்குறிப்பீடுகளினது மொத்த அளவுகள் மேலேயுள்ள பதிவுகளின் கட்டம் II இன் கீழ் வழங்குவதற்காக கிடைக்கத்தக்கதாகவுள்ளதிலும் பார்க்கக் குறைவாக இருக்குமிடத்து தீவிரமான ஏலப் பங்கேற்பாளர்களின் துணைத் தொகுதியினருக்கு ஒவ்வொரு தீவிரமான ஏலப் பங்கேற்பாளர்களினாலும் மொத்த அளவு விலைக்குறிப்பீடு ஒதுக்கப்படும். ஒதுக்கப்படாத மீதித் தொகை கட்டம் II இன் கீழ் விலைக்குறிப்பீடு செய்த எஞ்சிய ஏலப் பங்கேற்பாளர்களிடையே கட்டம் II இல் அத்தகைய ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளர்களினாலும் செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டின் விகிதாசாரத்திற்கேற்ப வழங்கப்படும். தோற்றம் 2 இன் உதாரணமொன்று இணைப்பு ஆ இல் காட்டப்பட்டுள்ளது.

ii. கட்டம் II இன் கீழான விலைக்குறிப்பீட்டின் கூட்டுத்தொகை ஒதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவாக இருக்குமிடத்து அனைத்து விலைக்குறிப்பீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**11. கட்டம் III இன் கீழ் கட்டாய ஒதுக்கு**

11.1 குறிப்பிட்ட திறைசேரி முறி தொடர்களுக்காக வழங்கலில் கொடுப்பனவு செய்யப்பட்ட முழுத்தொகையும் கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் முழுமையாக வழங்கப்படாதிருக்குமாயின் முன்வைக்கப்பட்ட தொகையில் குறைந்தபட்சம் 60 சதவீதம் கட்டம் I இல் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு கட்டம் III, கட்டம் முடிவடைந்ததன் பின்னர் ஏல நாளன்று ஏறத்தாழ 1430 மணியளவில் இலத்திரனியல் ரீதியில் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

11.2 கட்டம் I இன் கீழான வழங்கல்கள் முதனிலை வணிகர்களுக்கு மட்டுமே கிடைக்கச் செய்யப்படுகிறது.

11.3 ஒவ்வொரு முதனிலை வணிகர்களுக்குமாக கட்டம் III இன் கீழ் வழங்கப்படவுள்ள தொகை பின்வருமாறு தீர்மானிக்கப்படுகிறது.

$K^{th}$ PD, $PD_k$ இற்கான கட்டாய வழங்கல் பின்வருவன மூலம் வழங்கப்படுகிறது:

$$PDK = \frac{M-Ak}{\sum_{i=1}^{n} M-A_i} \text{ X \{வழங்கலுக்காக அறிவிக்கப்பட்ட மொத்த அளவு - கட்டம் I மற்றும் II இன் கீழ் வழங்கப்பட்ட மொத்த அளவு\}}$$

இங்கு,

$$M = \frac{\text{ஏலத்தில் முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை - கட்டம் I மற்றும் கட்டம் II இல் ஏலத்தில் பங்கேற்ற முதனிலை வணிகரல்லாதவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை}}{\text{குறிப்பிட்ட முதலாந்தர ஏலங்களில் விலைக்குறிப்பீட்டிற்கு தகைமையுடைய முதனிலை வணிகர்களின் மொத்தத் தொகை}}$$

Ak = மேலேயுள்ள கட்டம் I மற்றும் II இன் கீழான ஏலங்களில் PDk இற்கு தொகை வழங்கப்படுகிறது,

n = மேலேயுள்ள கட்டம் I மற்றும் II இல் போட்டித்தன்மை வாய்ந்த ஏலங்களில் முதனிலை வணிகர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முதனிலை வணிகர்களின் மொத்த எண்ணிக்கை M குறைவாகவே காணப்பட்டது.

அத்துடன் $1 \leq k \leq n$

இதன்படி, மேலே கட்டம் III இன் கட்டாய வழங்கலுக்குட்பட்டு மேலே குறிப்பிடப்பட்ட கட்டங்கள் I மற்றும் II இலுள்ள முதனிலை வணிகரொருவருக்கான (உ-ம் M) சராசரி வழங்கல் அளவினைப் பெறுவதனைத் தவறவிட்ட முதனிலை வணிகர்கள் மாத்திரம்.

**12. வழங்கல் பெறுபேறுகளை அறிவித்தல்**

12.1 இலங்கை மத்திய வங்கி கூட்டு வழங்கல்களின் பெறுபேறுகள் தொடர்பான தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் ஏல நாளன்று ஏறத்தாழ 1445 மணிக்கு வெளியிடுதல் வேண்டும்.

12.2 வெளியிடப்படுகின்ற வழங்கல் பெறுபேறுகள் குறிப்பாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. முன்வைக்கப்பட்ட மொத்த அளவு

ii. கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் விலைக்குறிப்பீட்டில் மொத்த அளவு

iii. ஒதுக்கப்படட மொத்த அளவு; அத்துடன்

iv. நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்

**13. பொதுவான நிருவாக ஒழுங்குகள்**

13.1 ஏலப் பங்கேற்பாளர்களின் அலுவலர்களது அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநர்களின் பெயர்கள் மற்றும் மாதிரிக் கையொப்பங்கள், அவர்களைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் தொலைநகல் இலக்கங்கள் என்பன இலங்கை மத்திய வங்கிக்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

13.2 பொதுப்படுகடன் திணைக்களத்தின் அலுவலர்களின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் பெயர்கள், அவர்களைத் தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் தொலைநகல் இலக்கங்கள் என்பன ஒவ்வொரு ஏலப் பங்கேற்பாளர்களுக்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

13.3 ஏலப் பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரும் விலைக்குறிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் துல்லியமான தன்மைக்கு பொறுப்பாவர்.

13.4 வழங்கல் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டலான்றி எந்தவொரு விலைக்குறிப்பீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனக் கருதப்படுகிறது.

## பகுதி V. கோரல்கள்

**14. கோரல்கள்**

14.1 வழங்கல் பெறுபேறுகளில் ஏதேனும் தவறுகள் காணப்படக்கூடும் என ஏலப் பங்கேற்பாளரொருவர் நம்புகின்றவிடத்து அல்லது வழங்கல் தொடர்பில் வேறு ஏதேனும் தவறுகள் தோன்றலாம் என நம்பப்படுமிடத்து, ஏலப் பங்கேற்பாளர் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

14.2 மேலேயுள்ள விடயம் 14.1 இன் கீழ் தகவல்கள் பெறப்பட்டு மூன்று வேலை நாட்களுக்குள் இலங்கை மத்திய வங்கி அறிவிக்கப்பட்ட விடயம் தொடர்பில் ஏலப் பங்கேற்பாளர்களுக்குப் பதிலிறுத்தல் வேண்டும்.

14.3 ஏலப் பங்கேற்பாளர் இவ்விடயம் கையாளப்பட்ட விதம் பற்றி திருப்தியடையாவிடின் முறைசார்ந்த எழுத்து மூலமான முறைப்பாடாக அதனை ஆளுநருக்கு அனுப்பி வைக்கலாம். இலங்கை மத்திய வங்கி முறைப்பாட்டினை விசாரித்து முறைப்பாடு பெறப்பட்டு ஐந்து (5) வேலைநாட்களுக்குள் விசாரணையின் பெறுபேறுகளையும் முடிவினையும் ஏலப் பங்கேற்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

14.4 எவரேனும் ஏலப் பங்கேற்பாளர் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தீர்வு பற்றி திருப்தியடையாவிடின் மேலே விடயம் 14.3இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குப் பின்னர் அவற்றை முறைசார்ந்த எழுத்து மூலமான முறைப்பாட்டினை வழங்குநருக்கு (நிதியின் குறிப்பிட்ட விடயத்திற்கும் பொறுப்பான அமைச்சரிடம்) சமர்ப்பிக்கலாம். அவர் நிதி அமைச்சின் செயலாளரைப் பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நிவாரணத்திற்குப் பொருத்தமான விதந்துரைப்புக்களைச் செய்யுமாறு கேட்டுக் கொள்வார்.

## பகுதி VI. வரைவிலக்கணங்கள்

**15. வரைவிலக்கணங்கள்**

| | | |
|---|---|---|
| பல்விலை போட்டி ஏலம் | : | ஏலமொன்று பங்கேற்பாளர்களை போட்டித்தன்மை வாய்ந்த விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுமிடத்து குறைந்த விளைவினைக் கொண்ட அல்லது உயர்ந்த விலைகளைக் கொண்ட விலைக்குறிப்பீடுகள் முதலில் ஒதுக்குகளைப் பெறுவதுடன் செயன்முறை ஏலம் முடிவடையும் வரை தொடரும் |
| ஏலப் பங்கேற்பாளர்கள் | : | நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள் மற்றும் ஆரம்ப வழங்கலில் பங்கேற்பதற்காக விசேடமாக நாணயச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய பங்கேற்பாளர்கள் |
| ஏலப் பங்கேற்பாளரின் அதிகாரமளிக்கப்படட பயன்படுத்துநர் | : | ஆரம்ப வழங்கல்களில் விலைக்குறிப்பீடுகளை இலத்திரனியல் ரீதியாக அல்லது வேறுவிதத்தில் சமர்ப்பிப்பதற்காக ஏலப் பங்கேற்பாளர்ரொருவரினால் நியமிக்கப்பட்டிருக்கின்ற ஒரு பயன்படுத்துநர் |
| பொதுப்படுகடன் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் | : | ஏல விலைக்குறிப்பீடுகளின் பெறுகை தொடர்பில் ஏலப் பங்கேற்பாளர்களுடன் தொடர்பு கொள்வதற்காக பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலக உறுப்பினரொருவர் |

**இணைப்பு அ**

**கட்டம் II**

**ஒதுக்கு மாதிரி வடிவமைப்பு - தோற்றம் 1**

| | | | |
|---|---|---|---|
| | 20% | சுற்று 3 இல் மொத்த ஒதுக்கு | 169 |
| ஒதுக்கிற்கான மொத்தக் கிடைப்பனவு | 18000 | சுற்று 4 இல் ஒதுக்கப்படவுள்ள மீதி | 4513 |
| சுற்று 1 இல் மொத்த ஒதுக்கு | 12438 | சுற்று 4 இல் மொத்த ஒதுக்கு | 162 |
| சுற்று 2 இல் ஒதுக்கப்படவுள்ள மீதி | 5562 | சுற்று 5 இல் ஒதுக்கப்படவுள்ள மீதி | 4351 |
| சுற்று 2 இல் மொத்த ஒதுக்கு | 880 | சுற்று 5 இல் மொத்த ஒதுக்கு | 157 |
| சுற்று 3 இல் ஒதுக்கப்படவுள்ள மீதி | 4682 | சுற்று 6 இல் ஒதுக்கப்படவுள்ள மீதி | 4194 |

**தோற்றம் 1: தீவிரமான முதனிலை வணிகர்களின் துணைத் தொகுதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீட்டின் மொத்த அளவு, இரண்டாவது சுற்றில் ஒதுக்குவதற்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த தொகையிலும் பார்க்க கூடுதலானதாகும்**

| முதனிலை வணிகர் | கட்டம் II இற்கான குறைந்த பட்ச தகைமை | விலைக் குறிப்பீட்டின் அளவு (ரூ.மில்) | தகைமைத் தொகை 1 | ஒதுக்கு 1 (தற்காலிகம்) | ஒதுக்கு 1 | மீதி விலைக் குறிப்பீட்டு அளவு 2 | தகைமைத் தொகை 2 | ஒதுக்கு 2 (தற்காலிகம்) | ஒதுக்கு 2 | மீதி விலைக் குறிப்பீட்டு அளவு 3 | தகைமைத் தொகை 3 | ஒதுக்கு 3 (தற்காலிகம்) | ஒதுக்கு 3 | மீதி விலைக் குறிப்பீட்டு அளவு 4 | தகைமைத் தொகை 4 | ஒதுக்கு 4 (தற்காலிகம்) | ஒதுக்கு 4 | மீதி விலைக் குறிப்பீட்டு அளவு 5 | தகைமைத் தொகை 5 | ஒதுக்கு 5 | மீதி விலைக் குறிப்பீட்டு அளவு 6 | தகைமைத் தொகை 6 | ஒதுக்கு 6 மற்றும் அதற்கு மேல் | மொத்த ஒதுக்கு (ரூ.மில்.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | 30.00% | 6,000 | 5,400.00 | 5,400 | 5,400 | 600 | 1,669 | 600 | 600 | - | 1,405 | - | - | - | 1,354 | - | - | - | 1,305 | - | - | 1,258 | | 6,000 |
| ஆ | 25.00% | 3,200 | 4,500.00 | 3,200 | 3,200 | - | 1,391 | - | - | - | 1,170 | - | - | - | 1,128 | - | - | - | 1,088 | - | - | 1,049 | | 3,200 |
| இ | 15.00% | 1,600 | 2,700.00 | 1,600 | 1,600 | - | 834 | - | - | - | 702 | - | - | - | 677 | - | - | - | 653 | - | - | 629 | | 1,600 |
| ஈ | 10.00% | 400 | 1,800.00 | 400 | 400 | - | 556 | - | - | - | 468 | - | - | - | 451 | - | - | - | 435 | - | - | 419 | | 400 |
| உ | 5.00% | 350 | 899.98 | 350 | 350 | - | 278 | - | - | - | 234 | - | - | - | 226 | - | - | - | 218 | - | - | 210 | | 350 |
| ஊ | 4.00% | 800 | 720.02 | 720 | 720 | 80 | 222 | 80 | 80 | - | 187 | - | - | - | 181 | - | - | - | 174 | - | - | 168 | | 800 |
| எ | 3.00% | 6,000 | 540.00 | 540 | 540 | 5,460 | 167 | 167 | 167 | 5,293 | 140 | 140 | 140 | 5,153 | 135 | 135 | 135 | 5,017 | 131 | 131 | 4,887 | 126 | 3,495 | 4,608 |
| ஏ | 3.00% | - | 540.00 | - | - | - | 167 | - | - | - | 140 | - | - | - | 135 | - | - | - | 131 | - | - | 126 | | - |
| ஐ | 2.40% | 80 | 432.00 | 80 | 80 | - | 133 | - | - | - | 112 | - | - | - | 108 | - | - | - | 104 | - | - | 101 | | 80 |
| ஒ | 0.80% | - | 144.00 | - | - | - | 44 | - | - | - | 37 | - | - | - | 36 | - | - | - | 35 | - | - | 34 | | - |
| ஓ | 1.20% | 40 | 216.00 | 40 | 40 | - | 67 | - | - | - | 56 | - | - | - | 54 | - | - | - | 52 | - | - | 50 | | 40 |
| ஔ | 0.60% | 2,400 | 108.00 | 108 | 108 | 2,292 | 33 | 33 | 33 | 2,259 | 28 | 28 | 28 | 2,231 | 27 | 27 | 27 | 2,203 | 26 | 26 | 2,177 | 25 | 699 | 922 |
| க | 0.00% | 150 | - | - | - | 150 | - | - | - | 150 | - | - | - | 150 | - | - | - | 150 | - | - | 150 | - | | - |
| ங | 0.00% | 400 | - | - | - | 400 | - | - | - | 400 | - | - | - | 400 | - | - | - | 400 | - | - | 400 | - | | - |
| ச | 0.00% | 500 | - | - | - | 500 | - | - | - | 500 | - | - | - | 500 | - | - | - | 500 | - | - | 500 | - | | - |
| ஞ | 0.00% | 50 | - | - | - | 50 | - | - | - | 50 | - | - | - | 50 | - | - | - | 50 | - | - | 50 | - | | - |
| ட | 0.00% | 50 | - | - | - | 50 | - | - | - | 50 | - | - | - | 50 | - | - | - | 50 | - | - | 50 | - | | - |
| மொத்தம் | 100.00% | 22,020 | 18,000 | 12,438 | 12,438 | 9,582 | 5,562 | 880 | 880 | 8,702 | 4,682 | 169 | 169 | 8,533 | 4,513 | 162 | 162 | 8,371 | | 157 | 8,214 | | 4,194 | 18,000 |
| ஒதுக்கின் கீழ் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

* கட்டம் II இற்கான ஏலப் பங்கேற்பாளரொருவரின் குறைந்தபட்சத் தகைமை பின்வருமாறு கணிக்கப்படுகிறது: கட்டம் I இல் ஏலப் பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகை/ கட்டம் I இல் அனைத்து ஏலப் பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகை.

**இணைப்பு ஆ**

**ஒதுக்கு மாதிரி வடிவமைப்பு - தோற்றம் 2**

| | | |
|---|---|---|
| அறிவிக்கப்பட்ட தொகை (ரூ.மில்) | 90,000 | |
| ஏலங்களில் உதவப்படாத அளவு | 20% | (= ரூ.18,000 மில்லியன்) |

**தோற்றம் 2: தீவிரமான முதனிலை வணிகர்களின் துணைத் தொகுதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீட்டின் மொத்த அளவு இரண்டாவது சுற்றில் ஒதுக்குவதற்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த தொகையிலும் பார்க்கக் குறைவானதாகும்**

| முதனிலை வணிகர் | கட்டம் II இற்கான குறைந்தபட்சத் தகைமை (*) | விலைக்குறிப்பீட்டு அளவு (ரூ. மில்.) | மொத்த ஒதுக்கு (ரூ. மில்.) |
|---|---|---|---|
| அ | 30% | 4,670 | 4,670 |
| ஆ | 25% | 3,200 | 3,200 |
| இ | 15% | 1,500 | 1,500 |
| ஈ | 10% | 400 | 400 |
| உ | 5% | 300 | 300 |
| ஊ | 4% | 750 | 750 |
| எ | 3% | 200 | 200 |
| ஏ | 3% | - | - |
| ஐ | 2% | 100 | 100 |
| ஒ | 1% | - | - |
| ஓ | 1% | 30 | 30 |
| ஔ | 1% | 2,300 | 2,300 |
| க | 0% | 6,750 | 3,413 |
| ங | 0% | 900 | 455 |
| ச | 0% | 1,125 | 569 |
| ஞ | 0% | 113 | 57 |
| ட | 0% | 113 | 57 |
| மொத்தம் | 100% | 22,450 | 18,000 |
| ஒதுக்கின் கீழ் | | | |

* கட்டம் II இற்கான ஏலப் பங்கேற்பாளரொருவரின் குறைந்தபட்சத் தகைமை பின்வருமாறு கணிக்கப்படுகிறது: கட்டம் I இல் ஏலப் பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகை/ கட்டம் I இல் அனைத்து ஏலப் பங்கேற்பாளர்களினால் செலுத்தப்படத்தக்க மொத்தத் தொகை.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண். ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01 (ஏ-04)**

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

2017 பெப்புருவரி 6

**வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம்**

வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் 2014 யூலை 17ஆம் திகதியும் 2014 திசெம்பர் 03ஆம் திகதியும் 2016 சனவரி 14ஆம் திகதியும் திருத்தப்பட்டவாறான 2013 மே 10ஆம் திகதியிடப்பட்ட இல.ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திருத்தங்கள் **2017 பெப்புருவரி 6ஆம்** திகதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

8. **கடன் மீள்கொடுப்பனவுக் காலம்:** கடன் மீள்கொடுப்பனவிற்கான உயர்ந்தபட்சக் காலம், செயற்றிட்டத்தின் தன்மையினைப் பொறுத்து உயர்ந்தபட்சம் 1 ஆண்டு சலுகைக் காலத்தினை உள்ளடக்கி 6 ஆண்டுகளாக இருக்கும்.

9. **சலுகைக் காலமும் மீள்அட்டவணைப்படுத்தலும்:** சலுகைக்காலம் தேவைப்படுமாயின், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செயற்றிட்டத்தின் தன்மையைப் பொறுத்து கடன்பாட்டாளருடன் ஆலோசனை நடத்திய பின் அவர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். எனினும், கடன் மீள்கொடுப்பனவுக் காலம் 6 ஆண்டுகளை விஞ்சக்கூடாது. 6 ஆண்டுகளை விஞ்சுகின்ற காலப்பகுதிக்காக கடன்களை மீளஅட்டவணைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகள் ஏதும் தோன்றுமாயின் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து முன்னொப்புதலைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

முன்னர் விடுக்கப்பட்ட வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்ட மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றிக் காணப்படுகின்றன.

தயவுசெய்து இத்திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தினை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும்.

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/சுவசக்தி/2017/01

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2017 பெப்புருவரி 09

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்
கனம் ஐயா/ அம்மணி

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: "சுவசக்தி - பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நோக்கி" நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் உருவாக்கத்திற்கான கடன் திட்டம்

1. அறிமுகம்

இலங்கை மத்திய வங்கியும் தேசிய கொள்கைகள் மற்றம் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் இணைந்து, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் உருவாக்கத்திற்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் "சுவசக்தி" என்ற பெயரில் கடன் திட்டமொன்றினை வடிவமைத்து அறிமுகப்படுத்தியிருக்கின்றன. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையில் புதிதாக நுழைவோர்க்கும் ஏற்கனவே வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கும் நிதியியல் ஆதரவினை வழங்குவனூடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதேயாகும். இத்திட்டத்தின் கீழ் இளைஞர்கள், இளம் பட்டதாரிகள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

2. திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

இத்திட்டம் 100 சதவீதம் மீள்நிதியிடல் கடன் திட்டமாகும். இது கடன் கூறுகள் மற்றும் சிறப்புக் கொடை மூலம் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியதொன்றாகும். கொடையானது புதிதாக நுழைபவர்களும்/ புதிய தொழில்முயற்சியாளர்களும் ஆரம்ப செலவுகளை ஈடுசெய்வதற்காக வழங்கப்படுகிறது. இத்திட்டமானது 20 ஆண்டுகள் வரை சுழலும். இத்திட்டமானது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி, இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினாலும் நடைமுறைக்கிடப்படும். மொத்த நிதி ஒதுக்கம் ரூ.4,000 மில்லியனாக இருக்கும். தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு ஆரம்பத்தில் ரூ.1,000 மில்லியனை மாற்றல் செய்யும். மீதியை முன்னேற்றத்தினைப் பொறுத்துக் கட்டம் கட்டமாக விடுவிக்கும். திட்டத்தின் கீழான கடன்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களான இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றினூடாக தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

3. திட்டத்தின் குறிக்கோள்கள்

சுவசக்தி கடன் திட்டத்தின் குறிக்கோள்கள் வருமாறு:

3.1 நாடு முழுவதும் 25,000 நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் கூடுதலானவற்றை உருவாக்குவதன் மூலமாக பத்து இலட்சம், தொழில்வாய்ப்பினை உருவாக்குவதனூடாக அரசாங்கத்தின் குறிக்கோளுக்குப் பங்களித்தல்.

3.2 புதியதும் பொருத்தமானதுமான தொழில்நுட்ப ஏற்பாடுகளினூடாக கிராமியப் பொருளாதாரத்தின் வினைத்திறனையும் போட்டித்தன்மையினையும் மேம்படுத்தல்.

3.3 கிராமங்களிலுள்ள தேர்ச்சியும் திறனும் நிறைந்த ஏற்கனவேயுள்ள இளைஞர்களையும் மூலவளங்களையும் பயன்படுத்தல்.

3.4 புதிய சந்தைத் தளம்களையும் இணைப்புக்களையும் அபிவிருத்தி செய்தல்.

3.5 பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும்.

4. திட்டம்

4.1 நிதி ஒதுக்கம்: ரூ.4,000 மில்லியன்

4.2 நன்மைபெறுநர்களைத் தெரிவுசெய்தல்: ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் 75 நன்மைபெறுநர்கள்

4.3 கடன் வரையறை: கடன்கள் தனிப்பட்டவர்களுக்கு அல்லது உயர்ந்தபட்சம் மூன்று பங்குடமையாளர்களைக் கொண்ட பங்குடமையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட முடியும்.

4.3.1 அ) புதிதாக நுழைபவர்களுக்கு தொழில்முயற்சிகளுக்கு

ரூ.200,000/- கொண்ட உயர்ந்தபட்சக் கடன்

ரூ.50,000/- கொண்ட உயர்ந்தபட்சக் கொடை

ஆ) ஏற்கனவேயுள்ள தொழில்முயற்சியாரொருவருக்கு

ரூ.250,000/- கொண்ட உயர்ந்தபட்சக் கடன்

4.3.2 இரண்டாவது கடன் மற்றும் தொடர்ச்சியான கடன்: இரண்டாவது கடன் மற்றும் தொடர்ச்சியான கடன்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதிகளைப் பயன்படுத்தி வழங்குதல் வேண்டும். துணைக் கடன்பாட்டாளர் முதலாவது கடனை அல்லது/ அத்துடன் தொடர்ச்சியான கடனை வெற்றிகரமாகத் தீர்ப்பனவு செய்து வருபவராயின் முதலாவது கடன் அல்லது/ அத்துடன் இரண்டாவது கடன் முழுமையாக மீள்கொடுப்பனவு செய்யப்பட முன்பே இரண்டாவது கடனையும் தொடர்ச்சியான கடனையும் வழங்கமுடியும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நிலவுகின்ற சந்தை வீதங்களின் அடிப்படையில் மிதமான வட்டி வீதத்தில் கடன்களை வழங்க முடியும். இரண்டாவது கடன் மற்றும் தொடர்ச்சியான கடன்களின் ஒன்றுசேர்ந்த தொகை, துணைக் கடன்பாட்டாளரின் நிதியத்தின் தேவை மற்றும் வியாபாரம்/ செயற்றிட்டத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மை என்பனவற்றிற்குட்பட்டு குறைந்தபட்சம் முதல் கடனின் 03 மடங்காக இருக்கலாம்.

4.4 புதிதாக நுழைபவர்களுக்கான/ புதிய தொழில்முயற்சியாளர்களுக்கான கொடை

4.4.1 புதிதாக நுழைபவர்கள், உயர்ந்தபட்சம் ரூ.50,000 என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, செயற்றிட்டத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றினை கொடையாகப் பெறுவதற்கு தகைமையுடையவர்களாக இருப்பர்.

அ. ஆரம்பிப்பதற்கான கொடை: செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் உயர்ந்தபட்சம் ரூ.10,000 என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு கடனின் 5 சதவீதத்திற்குச் சமமானதொரு தொகையொன்று (அதாவது: உயர்ந்தபட்சக் கடன் தொகை ரூ.200,000) செயற்றிட்டத்தின் பூர்வாங்கச் செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படவுள்ளது. இத்தொகையானத ஆரம்பத்தில் பங்கேற்கும் நிறுவனங்களினால் துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும். இலங்கை மத்திய வங்கி இந்நிதியத்தினைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு திருப்பிச் செலுத்தும்.

ஆ. கொடையின் இரண்டாவது பிரிவு: உயர்ந்தபட்சம் ரூ.40,000 என்ற நிபந்தனைக்குட்படு கடனின் 20 சதவீதத்திற்குச் சமமான தொகை (அதாவது உயர்ந்தபட்சக் கடன் தொகையான ரூ.200,000 இல்) செயற்றிட்டத்தின் குறைந்தபட்சம் 6 மாத காலம் திருப்திகரமான செயலாற்றம் நிறைவடைகையில் வழங்கப்படும்.

4.5 பங்குரிமை மூலதனத்திற்கான பங்களிப்பு: புதிதாக நுழைபவர்கள், பங்குரிமை மூலதனத்திற்கு, குறைந்தபட்சம், தொடக்க கொடைக்குச் சமமானதொரு தொகையினை காசாகவோ அல்லது பண்டமாகவோ பங்களிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4.6 கொடையின் இரண்டாவது பிரிவினை வழங்குவதற்கான பிரமாணம்

4.6.1 கொடையின் இரண்டாவது பிரிவிற்குத் தகைமை பெறுவதற்கு புதிதாக நிறுவப்பட்டுள்ள தொழில்முயற்சிகள் பின்வரும் இலக்குகளில் குறைந்தபட்சம் ஒன்றையேனும் எய்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

அ. ஆண்டிற்குக் குறைந்தபட்சம் 20 சதவீதம் கொண்ட புரள்வு வளர்ச்சி.

ஆ. குறைந்தபட்சம் ஒரு மேலதிகத் தொழில்வாய்ப்பு உருவாக்கம்.

இ. முதல் ஆறு மாதங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வியாபாரத் திட்டத்தின் இலக்குகளில் 80 சதவீதத்தினை எய்துதல்.

4.6.2 தகைமை துணைக் கடன்பாட்டாளர்கள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவிலிருந்து அல்லது தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பந்தி 4.6.1 இல் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளில் ஏதேனும் ஒன்றினை எய்திய பின்னர், கொடையின் இரண்டாவது பிரிவிற்குப் விண்ணப்பிப்பது அவசியமாகும்.

4.6.3 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு கொடையின் இரண்டாவது பிரிவிற்காக அதனால் பெறப்பட்ட விண்ணப்பங்களின் இணங்குவிப்புக்களை மதிப்பீடு செய்து ஒப்புதலுடன் விண்ணப்பங்களைத் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கும்.

4.6.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றினால் பெறப்பட்ட விண்ணப்பங்களின் இணங்குவிப்புக்களை மதிப்பீடு செய்து, கொடையின் இரண்டாவது பிரிவிற்கான ஒப்புதலைப் பெறுவதற்கான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில்முயற்சிகள் பிரிவிற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.6.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில்முயற்சிகள் பிரிவின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் புதிதாக நுழைந்தவர்களுக்குக் கொடையின் இரண்டாவது பிரிவினை ஆரம்பத்தில் வழங்கும். இதனைத் தொடர்ந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் மத்திய வங்கியிலிருந்து இதனை மீளப்பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இந்நிதியினைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீளச்செலுத்தும்.

4.7 இலக்கிடல் குழுவினர்

4.7.1 புதிய நுண்பாக சிறிய தொழில்முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் சவால்களையும் இடர்நேர்வுகளையும் எதிர்நோக்குவதற்கான ஆற்றலும், விருப்பமும் கொண்ட புதிய நுழைவோருக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

4.7.2 தமது சொந்தப் புதிய தொழில்முயற்சிகளில் அவர்களிடமுள்ள தேர்ச்சியையும் திறனையும் பயன்படுத்த விருப்பும் இளைஞர்கள்.

4.7.3 ஏற்கனவே நுண்பாக தொழில்முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற, தற்பொழுது அவர்களின் வியாபாரத்தினை விரிவுபடுத்த விரும்பும் தொழில்முயற்சியாண்மையாளர்கள்.

4.7.4 கிராமங்களிலுள்ள மூலவளங்களை அடிப்படையாக்க கொண்டு தமது புதிய வியாபாரங்களை விருத்தி செய்வதற்கான யோசனைகளைக் கொண்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள்.

4.7.5 இளைஞர்கள், இளம் பட்டதாரிகள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

4.8 செயற்றிட்டத் தெரிவுப் பிரமாணம்

4.8.1 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில்முயற்சிகள் பிரிவும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் இத்திட்டத்தின் கீழ் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களை அடையாளம் காண்பதற்குப் பின்வரும் பிரமாணங்களைப் பரிசீலனையில் கொள்ளும்.

அ) வியாபார யோசனைகளின் புதுமைத்தன்மை

ஆ) துணைக் கடன்பாட்டாளரின் தொழில்முயற்சியாண்மை மற்றும் தொழில்நுட்பத் தேர்ச்சி

இ) வெளியீடுகளுக்கான சந்தையின் கிடைப்பனவு

ஈ) சந்தைப்படுத்தல் மற்றும் பொதியிடல் உபாயங்கள்

உ) தொழில்முயற்சியின் தொழில் உருவாக்க இயலாற்றல்

ஊ) தொழில்நுட்பத்தின் பொருத்தமான தன்மை

எ) செயற்றிட்டத்தின் தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் சாத்தியத்தன்மை

ஏ) பசுமை சூழல் சிநேகபூர்வச் செயற்றிட்டம்

4.8.2 தகைமையுடைய நன்மைபெறுநர்கள் வியாபாரத்திட்டத்தினது பலத்தின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்.

4.8.3 பொருளாதாரத்திலுள்ள வேளாண்மை, கைத்தொழில்கள் மற்றும் பணிகளிலுள்ள அனைத்து வருமான உருவாக்க நடவடிக்கைகளும்

தகைமையுடையனவாகும். இணைப்பு Iஇல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள/ வியாபாரங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

4.9 பிணை/ பிணையுறுதிகள்:

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செயற்றிட்ட முன்மொழிவுகளின் ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் பலத்தினை அடிப்படையாகக் கொண்டு கடன்களை வழங்க ஊக்குவிக்கப்படுகின்றன.

ஆ) ஏற்கனவேயுள்ள நிலையான சொத்துக்கள் மற்றும் தனியாள் உத்தரவாதங்களையும் பரிசீலனையில் கொள்ளமுடியும்.

4.10 வட்டி வீதங்கள்

அ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்கு - வட்டி எதுவும் விதிக்கப்படமாட்டாது.

ஆ) இலங்கை மத்திய வங்கியிலிருந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு - ஆண்டிற்கு 0.5 சதவீதம்

இ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து துணைக் கடன்பாட்டாளருக்கு - ஆண்டிற்கு 5.5 சதவீதம் (பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 5 சதவீத வீச்சினை அனுமதித்தல்)

4.11 மீள்நிதியிடல்: மேலே குறிப்பிடப்பட்ட கடன் வரையறைகளுக்குட்பட்டு பங்கேற்கும் நிதி நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொகையின் 100 சதவீதத்தினையும் மத்திய வங்கி மீள்நிதியிடும்.

4.12 கடன் அறவிடல்: பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களின் அறவிடலுக்குப் பொறுப்பாகும்.

4.13 கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலமும் சலுகைக் காலமும்: செயற்றிட்டத்தின் தன்மையைப் பொறுத்து உயர்ந்தபட்சம் 1 ஆண்டு கால சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் 5 ஆண்டுகால மீள்கொடுப்பனவு.

4.14 பின்னரான மேற்பார்வை, சந்தைப்படுத்தல் ஆதரவு மற்றும் கண்காணிப்பு: இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள், சிறுதொழில்முயற்சிகள் பிரிவு மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்.

4.15 தேர்ச்சி அபிவிருத்திகள் மற்றும் சந்தை இணைப்புக்கள்: இலங்கை வர்த்தக சம்மேளனம், பிரதேச கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம், தொழில்நுட்பக் கல்வித் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவகம், இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவகம், தொழில்நுட்பம் தொழில் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம், தொழில் பயிற்சி அதிகாரசபை போன்ற ஏனைய பங்குடமையாளர்களின் ஆதரவுடன் சிறுதொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு.

4.16 நிதி அறிவு மற்றும் விழிப்புணர்வு மீதான பயிற்சி: இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக ஏனைய தொடர்பான பங்குடமையாளர்களுடன் இலங்கை மத்திய வங்கி.

4.17 தொழிற்பாட்டுப் பிரதேசம்: தீவு முழுவதும்

5. **தொழிற்பாட்டுச் செயன்முறை :** இத்திட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கான தொழிற்பாட்டுச் செயன்முறையும் இதில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் பொறுப்புக்களும் இணைப்பு IIஇல் தரப்பட்டுள்ளன.

6. **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
- கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
- சம்பத் வங்கி பிஎல்சி
- செலான் வங்கி பிஎல்சி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
- தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
- பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் வங்கி பிஎல்சி
- யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
- டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
- வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
- கார்கில்ஸ் வங்கி பிஎல்சி
- சிறிலங்கா சேமிப்பு வங்கி
- அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி
- நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி

7. **துணைக் கடன்பாட்டாளர்களுக்கான பொதுவான தகைமைப் பிரமாணம்**

தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் இருத்தல் வேண்டும்,

7.1 இலங்கையில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல்;

7.2 ஏதேனும் மற்றைய நிதியியல் நிறுவனங்களில் கடனைச் செலுத்தத் தவறாதவராக இருத்தல்;

7.3 உத்தேச செயற்றிட்டம் ஆற்றல்வாய்ந்த காசுப்பாய்ச்சலையும் சிறந்த மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் கொண்டதாக இருக்கின்றதென பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தக்கூடியதாக இருத்தல்;

7.4 ஆற்றல்வாய்ந்த வியாபாரத் திட்டம் பிணையுறுதி, ஏதேனுமிருப்பின் அதனை வழங்கக்கூடியதாக அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தனிப்பட்ட உத்தரவாதங்களை வழங்கக்கூடியவராக இருத்தல்.

8. கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்

இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் முக்கிய கடமைகளும் பொறுப்புக்களும் வருமாறு:

| நிறுவனத்தின் பெயர் | தொழிற்பாடு |
|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு | (அ) பிரதேச செயலகங்களின் ஒத்துழைப்புடன் மாவட்ட அடிப்படையில் கடன்களுக்கான விண்ணப்பங்களை வழங்குதல் மற்றும் சேகரித்தல்.<br>(ஆ) விண்ணப்பதாரிகளுக்காக கூட்டமொன்றினை ஒழுங்குசெய்து செயற்றிட்டம் மற்றும் வியாபாரத் திட்டங்களை தயாரிப்பதற்கான அடிப்படைய வடிவமைப்புக்கள் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தல்.<br>(இ) வியாபாரத் திட்டங்களைச் சேகரித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>(ஈ) விடயங்களைப் பொறுத்து கொடைகள் மற்றும் விதந்துரைப்புக்களுக்கான ஒப்புதலுடன் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் பெறப்பட்ட தகைமையுடைய நன்மைபெறுநர்களின் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.<br>(உ) செயற்றிட்டங்களின் முன்னேற்றங்களை உறுதிப்படுத்துவதற்காக அவற்றின் செயலாற்றங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்.<br>(ஊ) சந்தை இணைப்புக்களுக்கான வசதிகள்.<br>(எ) ஏனைய பங்குடமையாளர்களின் உதவியுடன் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.<br>(ஏ) கொடையின் இரண்டாவது பிரிவிற்காக துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்தும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்தும் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் நேரடியாகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பிடுதல் மற்றும் கொடைகளை வழங்குவதற்கான ஒப்புதலுடன் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அவ்விண்ணப்பங்களை அனுப்புதல்.<br>(ஐ) செயற்றிட்டத்தை ஒட்டுமொத்தமாகக் கண்காணிப்பதற்கும் செயற்றிட்டத்தின் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்காகவும் தேவையின் அடிப்படையில் கூட்டங்களைக் கூட்டுவதற்குமாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு சிறிய தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் இலங்கை மத்திய வங்கியிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கிய செயற்றிட்ட வழிகாட்டல் குழுவொன்றினை நியமித்தல்.<br>(ஒ) அறவிடல் செயன்முறையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உதவுதல்.<br>(ஓ) நன்மைபெறுநர்களுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய தரவுத் தளமொன்றினைப் பேணுதல். |
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் | (அ) கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை உறுதிப்படுத்தல்.<br>(ஆ) இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட ஊடக சாதனங்களைப் பயன்படுத்தி கடன் திட்டங்கள் தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியங்களின் மூலம் ஊடகச் சாதனங்களை அபிவிருத்தி செய்தல்.<br>(இ) கிளை மட்டத்தில் கடன்களுக்கான விண்ணப்பங்களை வழங்குதல் மற்றும் சேகரித்தல்.<br>(ஈ) சிறிய தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவுகளிலிருந்து தகைமையுடை நன்மைபெறுநர்களின் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.<br>(உ) பதிவிற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புவதற்கு முன்னர் வியாபாரத் திட்டத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையை மதிப்பிடவும். கொடைகளுக்காக புதிதாக இணைந்தவர்களின் விண்ணப்பங்கள் ஒப்புதலுக்காக சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும்.<br>(ஊ) பதிவுசெய்தல் விண்ணப்பங்களைத் தயாரித்தல்.<br>(i) இணைப்பு V(அ) இல் உள்ளவாறு ஒவ்வொரு தகைமையுடைய விண்ணப்பதாரர் தொடர்பிலும் துணைக் கடன்கள் மற்றும் கொடைகளுக்கான (தொடங்குவதற்கான கொடைகள் மற்றும் கொடைகளின் இரண்டாவது பிரிவிற்கானவை)<br>(ii) இணைப்பு V(ஆ) இல் உள்ளவாறு ஒவ்வொரு தகைமையுடைய விண்ணப்பதாரர் (புதிதாக நுழைந்தவர்கள் தவிர்ந்த) தொடர்பில் துணைக் கடன்களுக்கானவை இரட்டைப் பிரதிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் வியாபாரத் திட்டத்தின் பிரதியொன்று ஒவ்வொரு பிரதியுடனும் இணைக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் ஒப்புதலுடன் சேர்த்து பதிவுசெய்தலுக்காகப் பின்வரும் முகவரிக்கு தலைமை அலுவலகத்தினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.<br>பணிப்பாளர்<br>பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்<br>இலங்கை மத்திய வங்கி<br>இல. 30, சனாதிபதி மாவத்தை<br>கொழும்பு 1<br>(தரவுத் தளத்தினைப் பேணுவதற்காக இணைப்பு V(அ) மற்றும் இணைப்பு V(ஆ) என்பனவற்றின் ஒரு பிரதி இலங்கை மத்திய வங்கியினால் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படும்.) |

(எ) பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கடன் பதிவினை அல்லது கொடையினை உறுதிப்படுத்தியதன் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு துணைக் கடன்களையும் அத்துடன்/ அல்லது ஆரம்பக் கொடைகளையும் பகிர்ந்தளித்தல்.

(ஏ) கடன்களை அடையாளம் காணும் நோக்கத்திற்காக மீள்நிதியிடல்/ திரும்பச் செலுத்துதல் தொடர்பில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தும் பொழுது ஒவ்வொரு கடன் விண்ணப்பதாரி தொடர்பிலும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விசாரணை இலக்கத்தினை பேரேட்டுத் தாளின் மீது குறிப்பிடவும்.

(ஐ) ஆரம்பக் கொடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் ஒப்புதலுடன் சேர்த்து ஆரம்பக் கொடைகளின் கோரலுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மீள்செலுத்தல் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல். ஆரம்பக் கொடைகளுக்கான மீள்செலுத்தல் விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அ. ஆரம்பக் கொடைகளுக்கான விண்ணப்பம் [இணைப்பு VI(அ)]

ஆ. ஆரம்பக் கொடைகளுக்கான விண்ணப்பம் - தொடக்கக் கொடைப் பகிர்ந்தளிப்புக்களின் கூற்று [இணைப்பு VI(அஅ)]

(ஒ) கடன் பகிர்ந்தளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாக துணைக் கடன்களுக்கான மீள்நிதியிடல் விண்ணப்பங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல். துணைக் கடன்களுக்கான மீள்நிதியிடல் விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அ. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (அ): துணைக் கடன்கள் (இணைப்பு VII)

ஆ. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (ஆ): துணைக் கடன்கள் - கடன் பகிர்ந்தளிப்புக்களின் கூற்று (இணைப்பு VIII)

இ. கோரலின் பெயரிலான வாக்குறுதிச் சான்றிதழ் (இணைப்பு IX)(தொடர்பான முத்திரைத் தீர்வையுடன்)

ஈ. வழங்கல் கடிதம் (இணைப்பு X)

உ. சாட்டுதல் படிவம் (இணைப்பு XI)

ஊ. பகிர்ந்தளிப்புக் கடிதம் (இணைப்பு XII)

(ஓ) புதிதாக நுழைந்தோரின் செயற்றிட்டத்திற்கான ஆரம்பக் கொடைக் கோரல்களுக்காக மீள்செலுத்தல் விண்ணப்பங்களையும் அதே காரணங்களுக்கான துணைக் கடன்களுக்கான மீள்நிதியிடல் விண்ணப்பங்களை ஒரு தொகுதி விண்ணப்பமாகச் சேர்த்துச் சமர்ப்பித்தல்.

(ஔ) மற்றைய ஆர்வலர்களின் உதவியுடன் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

(க) துணைக் கடன்பாட்டாளர்கள் கடன் வழங்கப்பட்ட அதே நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்களா என்பதனைக் கண்டறிவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளைகளினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் பரீட்சிப்புக்களை காலத்திற்குக் காலம் மேற்கொள்ளுதல்.

(ங) கொடைகளின் இரண்டாவது பிரிவிற்காக துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்தும் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவிடமிருந்தும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

(ச) கொடைகளின் இரண்டாவது பிரிவு பகிர்ந்தளிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் ஒப்புதலுடன் சேர்த்து கொடைகளின் இரண்டாவது பிரிவின் கோரலுக்கான மீள்செலுத்தல் விண்ணப்பங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல். கொடைகளின் இரண்டாவது பிரிவிற்கான மீள்செலுத்தல் விண்ணப்பங்கள் பின்வரும் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஞ) அ. கொடைகளின் இரண்டாவது பிரிவிற்கான விண்ணப்பம் [இணைப்பு VI (ஆ)]

(ட) ஆ. ஆரம்பக் கொடைகளுக்கான விண்ணப்பம் - கொடைப் பகிர்ந்தளிப்புக்களின் இரண்டாவது பிரிவின் கூற்று [இணைப்பு VI (ஆஆ)]

(ண) செயற்றிட்டத்தின் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்காக அவற்றின் செயலாற்றத்தினை தொடர்ச்சியாகக் கண்காணித்தல்.

(த) கடன்களை அறவிடுவதற்காக துணைக் கடன்பாட்டாளர்களிடம் அடிக்கடி விஜயம் செய்வது நினைவூட்டல்களை அனுப்புதல் உட்பட சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல்.

(ந) சந்தை இணைப்புக்களுக்கான வசதி.

(ப) இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் ஒவ்வொரு கிளைகளினாலும் தனியான பேரேடுகள் பேணப்படுதல்.

(ம) மீள்நிதியிடல் தொழிற்பாடுகள் மற்றும் கொடைகளின் பகிர்ந்தளிப்பு என்பனவற்றிற்கான பதிவேடுகளையும் தனியான தரவுத் தளத்தினையும் பேணுதல்.

(ய) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் முதல் தொகையினையும் இலங்கை மத்திய வங்கிக்கான ஆண்டுக் கட்டணமான 0.5 சதவீத இலாபத்தினை அரையாண்டிற்கு ஒரு தடவை மீளச்செலுத்துதல் அதாவது ஒவ்வொரு ஆண்டும் யூன் 30 மற்றும் திசெம்பர் 31.

| | |
|---|---|
| **இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்** | (அ) கடன் திட்டத்தை மேற்கொள்வது தொடர்பாக ஊடக பிரச்சாரங்களை மேற்கொள்ளல்.<br>(ஆ) தேவையானவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் திருத்தங்களையும் விடுத்தல்.<br>(இ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் விபரங்களைப் பதிவுசெய்தல்.<br>(ஈ) ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட கடன் விண்ணப்பதாரிக்கும் குறித்துரைக்கப்பட்ட விசாரணை இலக்கமொன்றினை ஒதுக்குதல் மற்றும் இதனைத் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு அறிவித்தல்.<br>(உ) மீள்நிதியிடல் விண்ணப்பம்/ மீளச்செலுத்தல் விண்ணப்பம் என்பன கிடைக்கப்பெற்றதும் முதல் வந்தது முதல் என்ற அடிப்படையில் கடன்களுக்கான மீள்நிதியிடலை/ கொடைகளுக்கான மீள்செலுத்தல்களை விடுவித்ததுடன் கொடைகளின் மீள்நிதியிடல், மீள்செலுத்தலின் விடுவிப்பு தொடர்பான விபரங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தொடர்பான தலைமை அலுவலகத்திற்கு அறிவித்தல்.<br>(ஊ) பூரணப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பங்கள்/ மீள்செலுத்தல் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் மீள்நிதியிடல் கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன/ கொடைகள் மீளச்செலுத்தப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தல்.<br>(எ) பதிவுசெய்தல் விண்ணப்பங்களின் பிரதியினை மாதாந்த அடிப்படையில் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவிற்குச் சமர்ப்பித்தல்.<br>(ஏ) கடன் திட்டத்தின் செயலாற்றம் தொடர்பான அறிக்கையினைத் தேவையான பொழுது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு அறிவித்தல்.<br>(ஐ) ஒவ்வொரு ஆண்டும் யூன் 30 மற்றும் திசெம்பர் 31ஆம் திகதிகள் அளவில் மீள்நிதியிடல் கடன்களின் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் 0.5 சதவீத இலாபத்தினையும் முதல் தொகையின் அறவிடல்களையும் சேகரித்தல்.<br>(ஒ) ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் செயலாற்றத்தின் அடிப்படையில் அவற்றின் மாதாந்த கொடுகடன் இலக்குகளை நிர்ணயித்தல்.<br>(ஓ) நிதியங்களை முகாமைப்படுத்தல், கணக்குகளைப் பேணுதல்.<br>(ஔ) கடன் திட்டத்தின் வருடாந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அத்தகைய நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.<br>(க) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையினது உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்குச் சமர்ப்பித்தல். |

கடன் திட்டம் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் தேவையான பொழுது தேவையான விதத்தில் திருத்துவதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

கடன் திட்டமானது 08.02.2017 இலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**இணைப்பு I**

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : ஆர்டிடி/சுவசக்தி/2017/01

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நோக்கி" நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

பின்வரும் துறைகளிலுள்ள வியாபாரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| குறியீடு | வேளாண்மைத் துறை | குறியீடு | கைத்தொழில் துறை | குறியீடு | பணிகள் துறை |
|---|---|---|---|---|---|
| 101 | பழங்கள் மற்றும் மரக்கறி வகை பதனிடல் | 201 | ஒட்டு வேலை | 301 | வேளாண்மைப் பொருட்களைச் சேகரிக்கும் மத்திய நிலையம் |
| 102 | செடி மற்றும் நாற்றுமேடை அபிவிருத்தி | 202 | ஆடைக் கைத்தொழில் | 302 | சுற்றுலாப் பணி, சிற்றுண்டிச்சாலை மற்றும் பொழுதுபோக்குப் பணி |
| 103 | சேதன வேளாண்மை மற்றும் உரம் | 203 | கொன்கிறீட் தயாரிப்பு, தள வேலைகள் மற்றும் கற்கள் பதித்தல் | 303 | தோட்டச்செய்கை மற்றும் தரைமட்டப்படுத்தல் |
| 104 | பாற்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை | 204 | தோல் உற்பத்திகள் | 304 | அழகுநிலையங்கள், பாலர் பாடசாலை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிலையம் |
| 105 | மீன் வளர்ப்புத் தொழில் | 205 | கட்டட வேலை, நிறம் பூசுதல் மற்றும் தச்சு வேலை | 305 | தகவல் தொழில்நுட்பம், அச்சிடல், இணையம், தொலைபேசி மற்றும் கணனி திருத்த வேலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 106 | அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் | 206 | பிளாஸ்திக் மற்றும் இறப்பர் பதனிடுதல | 306 | குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டி ஆகியன தொடர்பான பணி |
| 107 | ஏனையவை | 207 | இரத்தினக் கல் வெட்டல் மற்றும் பட்டை தீட்டுதல் | 307 | உந்து ஈருளி திருத்தவேலை |
| | | 208 | உருவமைக்கப்பட்ட உலோகம் | 308 | கணனி மென்பொருள் பிரயோக அபிவிருத்தி |
| | | 209 | ஆபரணங்கள் மற்றும் இலகு கைத்தொழில்கள் | 309 | மின் மற்றும் இலக்ரோனிக் உபகரணங்களைத் திருத்துதல் |
| | | 210 | சூரிய வலு | 310 | சில்லறை வர்த்தகம் |
| | | 211 | உணவு மற்றும் குடிபானம் | 311 | ஏனையவை |
| | | 212 | குடிசைக் கைத்தொழில் மற்றும் கைவினைப்பொருட்கள் | | |
| | | 213 | ஏனையவை | | |

213 - நார் அடிப்படையிலான உற்பத்தி

நார் பதனம் செய்தல்

அரைக்கும் ஆலை / அரிசியாலை / வாசனைத்திரவியங்கள் பொதியிடல் மற்றும் வினையோகித்தல்

புகைப்படக்கலை

மண்பாண்ட உற்பத்தி

தங்கம் மற்றும் வெள்ளி பிரித்தெடுப்பு

குசன்

செங்கல் உற்பத்தி

ஊதுபத்தி தயாரித்தல்

உப்பு விநியோகம்

பை உற்பத்தி

ஆயுள் வேத மருந்துகள் உற்பத்தி

பூக்கூடை தயாரித்தல்

விடுதி இல்லங்கள்

மென் விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி

திண்மக்கழிவு முகாமைத்துவம்

311

சேவை நிலையம்

விழா உபகரணங்கள் வாடகை

முதியோர் பராமரிப்பு நிலையம்

புத்தக நிலையம்

விடுதி வசதிகள்

உடற்பயிற்சி நிலையம்

கருவிகள் வாடகை

சலவை சேவை

107

பழங்கள் விற்பனை

தேங்காய் எண்ணெய் உற்பத்தி

இணைப்பு II

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : ஆர்டிடி/சுவசக்தி/2017/01

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நோக்கி"**

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

**தொழிற்பாட்டுச் செயன்முறை மற்றும் ஆர்வலர்களின் பொறுப்புக்கள்**




இணைப்பு V (அ)

பதிவு இலக்கம் ..............................................

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

**துணைக் கடன் மற்றும் கொடைக்கான பதிவு விண்ணப்பம் - புதிதாக நுழைவோரின் செயற்றிட்டங்களுக்காக**

| | | |
|---|---|---|
| 1. | பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் கிளை | |
| 2. | கிளையின் முகவரி | |
| 3. | தொலைபேசி/ தொலைநகல் இல. | |
| 4. | வங்கிக் கிளையினால்/ சிறு தொழில்முயற்சிகள் பிரிவினால் விண்ணப்பம் பெறப்பட்ட திகதி | |

5. விண்ணப்பதாரிகளின் அந்தஸ்து : தனிப்பட்டவர் ☐ பங்குடமை ☐

6. விண்ணப்பதாரி/ பங்காளியின் பெயர் மற்றும் முகவரி:

| பெயர் | முகவரி | தே.அ.அ. இலக்கம் | பால் | உயர்கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

7. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

8. மாவட்டம்: ................................. 9. உதவி அரசாங்க அதிபர் பிரிவு: .............................. 10: தேர்தல் தொகுதி: ........................

11. "சுவசக்தி" கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்பட வேண்டிய வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகளின் சுருக்கமான விபரணம்:
(தயவுசெய்து வியாபாரத் திட்டத்தின் பிரதியொன்றை இணைக்கவும்) குறியீடு ☐ (இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளவாறு)

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | | | |
| 13. | கடன்பாட்டாளரின் பங்குரிமைக்கான பங்களிப்பு | | | |
| 14. | மேலும் தேவைப்படும் நிதியம் | | | |
| 15. | சிறிய தொழில்முயற்சிகள் பிரிவினாலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை | | | |
| 16. | சிறிய தொழில்முயற்சிகள் பிரிவினாலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கொடை | (i) | ஆரம்பிப்பதற்கான கொடை | |
| | | (ii) | கொடையின் 2ஆவது பிரிவு | |

மேலே 11இல் விபரிக்கப்பட்டுள்ள உத்தேச செயற்றிட்டம் என்னால்/ கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அது போதுமானளவு காசுப்பாய்ச்சலையும் நிதியியல் ரீதியான ஆற்றலையும் கொண்டிருக்கிறதெனவும் நான் உறுதிப்படுத்துவதுடன், இதன் காரணமாக "சுவசக்தி" கடன் திட்டத்தின் கீழான நிதிக்கும் ஒப்புதலளிக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிட்ட நன்மைபெறுநர் சுவசக்தியின் கீழ் கொடைகளையும் கடன்களையும் பெறுவதற்கு தகைமையுடையவர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் ஒப்புதல் இணைக்கப்பட்டுள்ளது.

கிளை முகாமையாளரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை

திகதி:

முகாமையாளரின் கையொப்பம்
பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தின்
...................... திணைக்களம்
இறப்பர் முத்திரை
திகதி:

**இணைப்பு V (ஆ)**

பதிவு இலக்கம் ..............................................

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது**

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம் துணைக் கடன் மற்றும் கொடைக்கான பதிவு விண்ணப்பம் - புதிதாக நுழைவோர் தவிர்ந்த செயற்றிட்ட விண்ணப்பதாரிகளுக்கான செயற்றிட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் கிளை | |
| 2. | கிளையின் முகவரி | |
| 3. | தொலைபேசி/ தொலைநகல் இல. | |
| 4. | வங்கிக் கிளையினால்/ சிறு தொழில்முயற்சிகள் பிரிவினால் விண்ணப்பம் பெறப்பட்ட திகதி | |

5. விண்ணப்பதாரிகளின் அந்தஸ்து : தனிப்பட்டவர் ☐ பங்குடமை ☐

6. விண்ணப்பதாரி/ பங்காளியின் பெயர் மற்றும் முகவரி:

| பெயர் | முகவரி | தே.அ.அ. இலக்கம் | பால் | உயர்கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

7. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

..................................................................................................................................................

..................................................................................................................................................

8. மாவட்டம்: .............................. 9. உதவி அரசாங்க அதிபர் பிரிவு: .............................. 10: தேர்தல் தொகுதி: ........................

11. “சுவசக்தி” கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்பட வேண்டிய வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகளின் சுருக்கமான விபரணம்:
(தயவுசெய்து வியாபாரத் திட்டத்தின் பிரதியொன்றை இணைக்கவும்) குறியீடு [ ] (அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளவாறு)

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

| | | | |
|---|---|---|---|
| 12. | செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | | |
| 13. | கடன்பாட்டாளரின் பங்குரிமைக்கான பங்களிப்பு | | |
| 14. | மேலும் தேவைப்படும் நிதியம் | | |
| 15. | சிறிய தொழில்முயற்சிகள் பிரிவினாலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை | | |

மேலே 11இல் விபரிக்கப்பட்டுள்ள உத்தேச செயற்றிட்டம் என்னால்/ கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அது போதுமானளவு காசுப்பாய்ச்சலையும் நிதியியல் ரீதியான ஆற்றலையும் கொண்டிருக்கிறதெனவும் நான் உறுதிப்படுத்துவதுடன், இதன் காரணமாக “சுவசக்தி” கடன் திட்டத்தின் கீழான நிதிக்கும் ஒப்புதலளிக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிட்ட நன்மைபெறுநர் சுவசக்தியின் கீழ் கொடைகளையும் கடன்களையும் பெறுவதற்கு தகைமையுடையவர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் ஒப்புதல் இணைக்கப்பட்டுள்ளது.

கிளை முகாமையாளரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை
தலைமை

திகதி:

முகாமையாளரின் கையொப்பம்
பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின்

அலுவலகத்தின் ...................... திணைக்களம்
இறப்பர் முத்திரை
திகதி:

**இணைப்பு VI (அ)**

**ஆரம்பிப்பதற்கான கொடைக்கான விண்ணப்பம்**

ஆரம்பிப்பதற்கான கொடைக்கான விண்ணப்ப இலக்கம்: ...................................
(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

முகவரி:

திகதி:

**“சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி”**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

கனவான்களே

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எமது யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ............................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்)

மேற்குறிப்பிட்ட கடன் திட்டத்தின் கீழ் ரூபா............................................................. (ரூ...............) கொண்ட தொடங்குவதற்கான கொடையினைப் பெறுவதற்காக

இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01 இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கடன் திட்டத்தின் கீழ் 2017 ........... ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான "சுவசக்தி" இன் கீழான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட தொடங்குவதற்கான கொடைகளின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொடங்குவதற்கான கொடைக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. (i) பந்தி (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடங்குவதற்கான கொடைகள் மேலேயுள்ள திட்டத்தின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காக புதிதாக நுழைந்தவர்களுக்கு வழங்கப்பட்டன என்பதனையிட்டும் (ii) அத்தகைய தொடங்குவதற்கான கொடைகள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான தொகைகளாக இருக்கின்றனவென்பதனையும் நாம் இத்தல் உறுதிப்படுத்துகின்றோம்.

5. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில்முயற்சிகள் பிரிவின் ஒப்புதல் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலர்/(கள்) இன் கையொப்பம், பெயர் மற்றும் பதவி
முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு

**இணைப்பு VI (அ)**

**மீளச்செலுத்தலுக்கான விண்ணப்பம்: ஆரம்பிப்பதற்கான கொடைகள்**

ஆரம்பிப்பதற்கான கொடை மீளச்செலுத்தல் விண்ணப்ப இல.:- ........................................................

(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

**ஆரம்பிப்பதற்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கொடைகளின் கூற்று**

சேரல் : இலங்கை மத்திய வங்கி
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : ............................................. கிளை: ........................... மாவட்டம்: ......................

| பதிவு செய்யும் விபரங்கள் | | | | | | ஆரம்பிப்பதற்கான கொடை விபரம் | | | | கடன் விபரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விசாரணை இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தேசிய அடையாள அட்டை இல. | கடன் தொகை (ரூ.) | கொடையின் தொகை (ரூ.) | | ஆரம்பிப்பதற்கான கொடையின் நோக்கம்* | செலுத்தப்பட்ட ஆரம்பிப்பதற்கான கொடையின் தொகை (ரூ.) | பகிர்ந்தளிப்புத் திகதி | மீளச்செலுத்த எதிர்பார்க்கும் தொகை (ரூ.) | கடனின் நோக்கம் | பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி | பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி தொகை (ரூ.) | மீள்நிதியிடல் கோரப்பட்ட திகதி | மீள்நிதியிடல் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி |
| | | | | ஆரம்பிப்பதற்கான கொடை | கொடையின் இரண்டாவது பிரிவு | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
திகதி: .......................................

* தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு I இல் குறிப்பிடப்படுகின்ற குறியீட்டினை எடுத்துக்காட்டுக.

**இணைப்பு VI (ஆ)**

**கொடைகளின் இரண்டாவது பிரிவிற்கான விண்ணப்பம்**

கொடைகளின் இரண்டாவது பிரிவிற்கான விண்ணப்ப இலக்கம்: ...................................
(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

முகவரி:

திகதி:

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

கனவான்களே

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எமது யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ..........................................................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்)
மேற்குறிப்பிட்ட கடன் திட்டத்தின் கீழ் ரூபா................................................ (ரூ.................) கொண்ட ஆரம்பிப்பதற்கான கொடையினைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01 இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கடன் திட்டத்தின் கீழ் 2017 ........... ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான "சுவசக்தி" இன் கீழான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கொடையின் இரண்டாவது பிரிவிற்கான கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கொடையின் இரண்டாவது பிரிவின் விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. (i) பந்தி (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடையின் இரண்டாவது பிரிவு மேலேயுள்ள திட்டத்தின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காக புதிதாக நுழைந்தவர்களுக்கு வழங்கப்பட்டன என்பதனையிட்டும் (ii) அத்தகைய கொடையின் இரண்டாவது பிரிவிற்கான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான தொகைகளாக இருக்கின்றனவென்பதனையும் நாம் இத்தல் உறுதிப்படுத்துகின்றோம்.

5. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில்முயற்சிகள் பிரிவின் ஒப்புதல் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலர்/(கள்) இன் கையொப்பம், பெயர் மற்றும் பதவி
முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு

**இணைப்பு VI (ஆஆ)**

**மீளச்செலுத்தலுக்கான விண்ணப்பம்: ஆரம்பிப்பதற்கான கொடைகள்**

ஆரம்பிப்பதற்கான கொடை மீளச்செலுத்தல் விண்ணப்ப இல.:- .........................................................
(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

**ஆரம்பிப்பதற்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கொடைகளின் கூற்று**

சேரல் : இலங்கை மத்திய வங்கி
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு
பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : ............................................ கிளை: ........................... மாவட்டம்: ......................

| பதிவு செய்யும் விபரங்கள் | | | | | | ஆரம்பிப்பதற்கான கொடை விபரம் | | | | கடன் விபரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விசாரணை இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தேசிய அடையாள அட்டை இல. | கடன் தொகை (ரூ.) | கொடையின் தொகை (ரூ.) | | ஆரம்பிப்பதற்கான கொடையின் நோக்கம்* | செலுத்தப்பட்ட ஆரம்பிப்பதற்கான கொடையின் தொகை (ரூ.) | பகிர்ந்தளிப்புத் திகதி | மீளச்செலுத்த எதிர்பார்க்கும் தொகை (ரூ.) | கடனின் நோக்கம் | பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி | பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி தொகை (ரூ.) | மீள்நிதியிடல் கோரப்பட்ட திகதி | மீள்நிதியிடல் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி |
| | | | | ஆரம்பிப்பதற்கான கொடை | கொடையின் இரண்டாவது பிரிவு | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
திகதி: .......................................

* தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு I இல் குறிப்பிடப்படுகின்ற குறியீட்டினை எடுத்துக்காட்டுக.

இணைப்பு VII

**கொடைகளின் இரண்டாவது பிரிவின் மீளச்செலுத்தலுக்கான விண்ணப்பம்:**

கொடைகளின் இரண்டாவது பிரிவின் மீளச்செலுத்தல் விண்ணப்ப இல.:- .........................................................

(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

முகவரி:

திகதி:

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

கனவான்களே

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எமது யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ............................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்)

மேற்குறிப்பிட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா...................................................... (ரூ.........................) கொண்ட கடன் கொடையினைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01 இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கடன் திட்டத்தின் கீழ் 2017 ........... ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான "சுவசக்தி" இன் கீழான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட தொடங்குவதற்கான கொடைகளின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொடங்குவதற்கான கொடைக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. (i) பந்தி (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடங்குவதற்கான கொடைகள் மேலேயுள்ள திட்டத்தின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காக புதிதாக நுழைந்தவர்களுக்கு வழங்கப்பட்டன என்பதனையிட்டும் (ii) அத்தகைய தொடங்குவதற்கான கொடைகள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான தொகைகளாக இருக்கின்றனவென்பதனையும் நாம் இத்தல் உறுதிப்படுத்துகின்றோம்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலர்/(கள்) இன் கையொப்பம், பெயர் மற்றும் பதவி
முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு

இணைப்பு VIII

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (அ): துணைக் கடன்கள்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ...................................

(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

**பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று:**

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

**தொடங்குவதற்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கொடைகளின் கூற்று**

சேரல் : இலங்கை மத்திய வங்கி
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : .............................................. கிளை: ........................... மாவட்டம்: .......................

| விசாரணை இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தேசிய அடையாள அட்டை இல. | கடனின் நோக்கம்* | கடனின் தொகை | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படும் தொகை | | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவ அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை எண்ணிக்கை | தொகை (ரூ.) | | தவணைகள் | | முதல் தவணைப் பணம் வரவேண்டிய திகதி | இறுதித் தவணைப் பணம் வரவேண்டிய திகதீ |
| | | | | | | | | | எண்ணிக்கை | பெறுமதி | | |
| | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | |

நாங்கள் இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு மேற்குறிப்பிட்ட மீள்கொடுப்பனவு அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள அரையாண்டுத் தவணைகளில் மேற்குறிப்பிட்ட கடனை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வாக்குறுதி வழங்குகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
திகதி: .......................................

* தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு I இல் குறிப்பிடப்படுகின்ற குறியீட்டினை எடுத்துக்காட்டுக.

**இணைப்பு** IX

**வாக்குறுதிச் சான்றிதழ்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................
**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)**
திகதி:

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

ரூ. .................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ..........................................................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அல்லது கட்டளையின்படி கொழும்பில், பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ............................................................................ ............. (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

.................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

............................
(முத்திரை)

1. .......................................................
2. ...............................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்

சாட்சிகள்
1. ..........................................
2. ..........................................

**இணைப்பு** X

**வழங்கல் குறிப்பு**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................
**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)**

திகதி:

**வழங்கல் குறிப்பு**

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி"**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

தங்களின் ................. திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01 இல் குறிப்பிடப்பட்டுள்ள **"சுவசக்தி"** என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு ரூபா............................................ (ரூ..............) இனை வழங்க உடன்பட்டுள்ளீர்கள். இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ..............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

.......................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

1. ...............................................
2. ................................................
(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

**இணைப்பு XI**

**சாட்டுதல் படிவம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................
**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)**
திகதி:

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் ............................................................................................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு ................... வட்டியுடன் ரூபா......................................... (ரூ..........) கொண்ட கடனை மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |
| | | | |

...............................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

---

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

**இணைப்பு XII**

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**
(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01இன் கீழானது)

வங்கியின் பெயர்:
வங்கியின் குறியீட்டு இல:
கிளையின் பெயர்:
கிளையின் குறியீட்டு இல:
கடனின் தொடர் இல:
திகதி:
பகிர்ந்தளிப்பு:

**“சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி”**

**நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான கடன் திட்டம்**

**பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

விசாரணை இலக்கம்:

1. **கடன்பாட்டாளரின் விபரங்கள் :**
   - 1.1 கடன்பாட்டாளரின் பெயர் :
   - 1.2 கடன்பாட்டாளரின் முகவரி :
2. **கடனின் விபரங்கள்**
   - 2.1 கடனின் நோக்கம் :
   - 2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :
   - 2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.
     அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ.
     மொத்தம் ரூ.
   - 2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி:
     கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி:

2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:

திகதி: தொகை (ரூ.):

2.6 வட்டி வீதம்

**3. கடனின் நிலை**

3.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை

மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் ரூ.

3.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை

மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியும் ரூ.

மொத்தம் ரூ.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம்

கிளை முகாமையாளரின் பெயர்

பொருத்தமான கூட்டிற்குள் புள்ளடி இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது 3ஆவது தவணைகளாக என்பதனைத் தயவுசெய்து குறிப்பிடவும்.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/எஸ்ஈபீஐ/2016/01 (திருத்தம்)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2017 மாச்சு 01

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி

**சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம் கட்டம் II இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

2016 ஏப்பிறல் 27ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஈபிஐ/2016/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 01, பிரிவு 06, பிரிவு 10 என்பன கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளன என்பது பற்றி தங்களுக்கு அறியத் தரப்படுகிறது;

கடன் தொகையினை ரூ.390 மில்லியனுக்கு அதிகரிக்கப்படுகிறது:

அறிமுகத்தின் கீழ் பிரிவு 1: பந்தி I, இரண்டாவது வசனம்:

“ரூபா எழுபத்தைந்து மில்லியன் (ரூ.75,000,000)” என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக “ரூபா முந்நூற்று தொன்னூறு மில்லியன் (ரூ.390,000,000)” புகுத்தப்படுகின்றன.

கடன்களின் வழங்கலுக்காக தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களை மாற்றுதல்:

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடன் வழங்கலுக்கான தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களின் கீழான 6ஆம் பிரிவு, பந்தி 1, முதலாவது வசனம்:

“அல்லது வேறு ஏதேனும் தொழிற்பயிற்சி பாடநெறி” என்ற சொற்கள் நீக்கப்படுகின்றன. இதன்படி, வசனமானது பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும். “பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கடன்கள் வழங்கப்படுவதற்கு தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்கள் தேர்ச்சி அபிவிருத்தி தொழில்பயிற்சி அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில்பயிற்சி நிறுவகத்தின் கீழ் தேசிய தொழிற்பயிற்சி தகைமையுடைய நிகழ்ச்சித்திட்டத்தினையும் தொழில்முயற்சியாண்மை தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்”.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள்கொடுப்பனவுக் காலம்:

கடன் நிபந்தனைகளின் கீழான 10ஆம் பிரிவு: பங்கேற்கும் நிறுவனங்களுக்கான மீள்கொடுப்பனவுக் காலம்:

“உயர்ந்தபட்சம் நான்கு (4) ஆண்டுகள்” என்ற சொற்கள் நீக்கப்பட்டு “உயர்ந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள்” என்ற சொற்கள் புகுத்தப்படுகின்றன.

கடன் திட்டத்தின் குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

தயவுசெய்து இத்திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தினைத் தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/பிசிஜி/2017 2017 ஏப்பிறல் 26

## வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்

1. **பின்னணி**

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் ('செயற்றிட்டம்') ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2016.05.20 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஒப்புதலளித்தது.

இலங்கையில் வேளாண்மைத் துறையினை நவீனமயப்படுத்தும் நோக்குடன், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்படவுள்ள 'செயற்றிட்டத்தின்' கீழ் புதுமையான இடர்நேர்வு பகிர்வுக் கருவியொன்றாக ஓரளவு கொடுகடன் உத்தரவாத திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இச்செயற்றிட்டத்தின் அபிவிருத்திக் குறிக்கோள் யாதெனில் வேளாண்மை உற்பத்தியாக்கத்தினையும் வினைத்திறனையும் அதிகரித்தல், சந்தையை அணுகும் தன்மையினை மேம்படுத்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் வேளாண் வியாபார சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் என்பனவற்றின் பெறுமதிகூட்டல்களை அதிகரிப்பதேயாகும்.

இக்குறிக்கோளினை எய்துவதற்காக, உயர் பெறுமதி கொண்ட வேளாண்மை உற்பத்தி மற்றும் பெறுமதிகூட்டல்களுக்காக, செயற்றிட்டம் முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுவினர், சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் வேளாண் வியாபார சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களிடமிருந்தான முதலீடுகளை உயர்த்தும் செயற்றிட்டத்திற்கு கொடைகளைப் பொருத்தம் செய்தல்[1], தொழில்நுட்ப உதவி ஆதரவு, வர்த்தக வங்கித்தொழிலுடன் இணைக்கப்படுதல் மற்றும் புதிய இடர்நேர்வு பகிர்வு ஒழுங்குகள் என்பனவற்றின் மூலம் அத்தகைய முதலீடுகளுக்கான நிதியினைப் பெறுவதனூடாக உதவியளிக்கப்படும்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு இச்செயற்றிட்டத்திற்கான மையமாக விளங்குகிறது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலுள்ள மத்திய செயற்றிட்ட இணைப்புக் குழுவானது ஒட்டுமொத்தக் கொள்கை மேற்பார்வையினையும் வழிகாட்டல்களையும் செயற்றிட்டக் கண்காணிப்பினையும் வழங்கும். ஒட்டுமொத்த செயற்றிட்டத்திற்கான நடைமுறைப்படுத்தல் முகவர்களாக ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சும் வேளாண்மை அமைச்சும் விளங்கும். ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினைத் தொழிற்படுத்துவதற்கான நிருவாகத்தராக அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

இச்செயற்றிட்டத்தின் நன்மைபெறுநர்களாக, தொடர்பான அரசாங்க துறைவாரியான திணைக்களங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுவினர் மற்றும் சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள், கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முகவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கம்பனிகள், தொடர்பான அரச துறைவாரியான திணைக்களங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேளாண்மையாளர் உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் முகவர்கள் மற்றும் வேளாண் வியாபார சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள்[2], கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பாரிய கம்பனிகள் மற்றும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி ஊக்குவிப்பு வர்த்தக ரீதியான மற்றும் ஏற்றுமதி சார்ந்த வேளாண் வியாபாரம் மற்றும் பெறுமதிகூட்டல்களில் உருவாக்க/ புதிய வியாபார சிந்தனைகளைக் கொண்ட தனிப்பட்டவர்கள் ஆகியோர் விளங்குகின்றனர்.

2. **வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் சுருக்கமான அறிமுகம்**

2.1 செயற்றிட்டமானது பின்வரும் மூன்று கூறுகளை உள்ளடக்கியுள்ளது:

- கூறு 1: வேளாண்மை பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி
- கூறு 2: உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் பன்முகப்படுத்தல்
- கூறு 3: செயற்றிட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

கூறு 1, ஊக்குவிப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த வேளாண்மை என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும். கூறு 2, அரசாங்கத்தின் உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் வேளாண்மை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும். கூறு 3, முதல் இரண்டு கூறுகளினதும் நடைமுறைப்படுத்தலுக்கு உதவும்.

2.2 கூறு 1இன் குறிக்கோள் யாதெனில், "சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் உயர் பெறுமதி கொண்ட வேளாண்மை உற்பத்தி மற்றும் பெறுமதிகூட்டல் என்பனவற்றிலிருந்தான முதலீடுகளை அதிகரித்தல் மற்றும் கவர்வதனூடாக "வர்த்தக மற்றும் ஏற்றுமதி சார்ந்த வேளாண்மையினை ஊக்குவித்தல்." ஆகும். கொடைகளைப் பொருத்தம் செய்தல் தொழில்நுட்ப உதவி ஆதரவு, வர்த்தக வங்கித்தொழில் துணை இணைப்புக்கள் மற்றும் புதிய இடர்நேர்வு பகிர்வு ஒழுங்குகள் என்பனவற்றினூடாக அத்தகைய முதலீடுகளை இயலுமைப்படுத்தும் சூழ்நிலையும் ஊக்குவிப்புக்களையும் நிதியைப் பெறுவதற்கான வழிவகைகளையும் வழங்கும்.

1 வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தினொரு பகுதியாக, கொடைகளைப் பொருத்தம் செய்தல், முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மை குழுவினர், சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண் வியாபார சிறிய மற்றும் தொழில்முயற்சியாளர் ஆகியோரை இலக்காகக் கொண்டு வேளாண்மை உற்பத்தியாளர்களிடமிருந்தான முதலீடுகளைக் கவர்வதனையும் உயர்த்துவதனையும் கருத்திற் கொண்டு வழங்கப்படும். இக்கொடைகள், செயற்றிட்டத்தின் நியதிகளின்படி செலவினைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் கூட்டு நிதியிடல் முதலீடாக இருக்கும். கொடைகளைப் பொருத்தம் செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்கு உற்பத்தியாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட தொடர்பான தொழிற்பாட்டுக் கைநூலில் உள்ளவாறானதாக இருக்கும்.

2 கொடைகளைப் பொருத்தம் செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்கு வேளாண்மையாளர் உற்பத்தியாளர் அமைப்பிற்கான தகைமைப் பிரமாணம் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: விண்ணப்பிக்கும் நேரத்தில் கம்பனிச் சட்டத்தின் கீழான முறையான பதிவு, கணக்காளரொருவரின் நியமனம், காசு அல்லது பண்டம் மூலமான குறைந்தபட்ச பங்குரிமை மூலதனப் பங்களிப்பு (எனினும் நிலம் நீங்கலாக); மற்றும் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த முதலீட்டில் 40 சதவீதம் வரையிலான வர்த்தக நிதியிடலின் கிடைப்பனவு.

2.3 கூறு 1 பின்வரும் துணைக் கூறுகளை உள்ளடக்குகிறது:

- துணைக் கூறு 1.1: முதலீடுகளைத் தயாரிப்பதற்கான ஆதரவு
- துணைக் கூறு 1.2: உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண் வியாபாரத்திற்கு நிதியினைப் பொருத்தம் செய்தல்
- துணைக் கூறு 1.3: வேளாண் வியாபார நிதியிடலுக்கான ஓரளவு கொடுகடன் உத்தரவாதங்கள்

**3. ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் குறிக்கோள்கள்**

3.1 வேளாண்மையாளர்களும் வேளாண் வியாபார தொழில்முயற்சியாளர்களும் வியாபாரம் அல்லது வேளாண் செய்கைக்கான நிதியிடல்களைப் பெற முயற்சிக்கும் பொழுது வங்கிகளின் பிணையுறுதித் தேவைப்பாடுகள் அவர்களுக்குக் கடுமையான சவால்களைத் தோற்றுவிக்கின்றன. முன்மொழியப்பட்டுள்ள ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது வேளாண்மைத் துறைக்கான கடன்வழங்கல் இடர்நேர்வுகளுக்கெதிரான பாதுகாப்பாக சொத்துப்பட்டியல் குவிவு இடர்நேர்வு மற்றும் மூலதனத் தேவைப்பாடுகள் போன்ற துறைகளிலுள்ள இடையீட்டு நிதியியல் பணி வழங்குபவர்களின் புதிய மற்றும் மாற்றமடைந்து வருகின்ற தேவைகளை வலியுறுத்துவதனை இலக்காக் கொண்டிருக்கிறது. இதன்படி, ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் பின்வருவனவற்றின் மீது கவனம் செலுத்தும்;

3.1.1 நாட்டிலுள்ள முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுவினர் சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் வேளாண் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியின் கிடைப்பனவினை அதிகரித்தல்;

3.12 வேளாண்மைத் துறைக்கு கடன் வழங்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் தூண்டுவதன் மூலமாக வேளாண்மைச் சமூகத்தினரிடையே நிதியியல் வசதிகள் கிடைப்பதனை ஊக்குவித்தல்;

3.13 செலுத்தத் தவறும் இடர்நேர்வின் ஒரு பகுதிக்கு பாதுகாப்பளித்தல் - கடன்களை செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் கடனின் ஒரு பகுதியின் மீள்கொடுப்பனவிற்கு உத்தரவாதப் பாதுகாப்பு வழங்கப்படுவதன் மூலம் கடன் வழங்குநரின் இடர்நேர்வு குறைக்கப்படுகிறது; அத்துடன்

3.1.4 சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான நீண்ட காலக் கடன்வழங்கல் ஊக்குவிக்கப்படுவதன் மூலம் தற்பொழுது கிடைக்கத்தக்கதாகவுள்ள உத்தரவாதத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் கடன் காலம் பல ஆண்டுகளாக விளங்கும்.

**4. ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் தகைமைத் தேவைப்பாடுகள்**

4.1 செயற்றிட்டத்தின் கீழ் கொடைகளைப் பொருத்தம் செய்கின்ற திட்டத்திலிருந்து நன்மைபெறுகின்ற செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பதிவுசெய்து கொள்ளுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டன;

4.2 இச்செயற்றிட்டத்தின் கீழ் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் கட்டாயமான தேவைப்பாடாகும்.

**5. ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் ஆரம்பம்**

5.1 ஓரளவ கொடுடன் உத்தரவாதத் திட்டமானது ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொடைகளைப் பொருத்தம் செய்கின்ற திட்டம் ஆரம்பமாகின்ற திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

**6. பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள்**

6.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று செயற்றிட்டத்தின் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தில் பங்கேற்க விரும்புமிடத்து எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். வங்கியானது நெருங்கிய கண்காணிப்பு நியமனத்திற்குட்பட்டு ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனமாக பதிவுசெய்யப்படும்.

6.2 திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பட்டியல் இணைப்பு V இல் தரப்பட்டுள்ளது.

**7. நன்மைபெறுநர்களின் தகைமைப் பிரமாணமும் நோக்கங்களும்**

7.1 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகைமையுடைய கடன்கள் ஆரம்ப கைத்தொழில் அமைச்சினால் விடுக்கப்பட்ட கொடைகளைப் பொருத்தம் செய்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு வேளாண்மைக் கைத்தொழில்களிலுள்ள பொருளாதார ரீதியான உற்பத்தித்திறன் நோக்கங்களுக்கான கடன்களாக இருத்தல் வேண்டும். இக்கடன்கள், செயற்றிட்டத்தின்[3] கொடைகளைப் பொருத்தம் செய்யும் திட்டத்தினூடாக பகுதியளவில் நிதியிடப்பட்ட கடன்களாக இருத்தல் வேண்டும். இச்செயற்றிட்டத்தின் இறுதி நன்மைபெறுநர்களாக தொடர்பாக அரச துறை திணைக்களங்கள் மற்றும் முகவர்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள் மற்றும் அமைப்புக்கள் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கம்பனிகள் தொடர்பான அரசாங்க துறைத் திணைக்களங்கள் மற்றும் முகவர்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வேளாண்மை உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வேளாண் வியாபார சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பாரிய கம்பனிகள் (பதனிடல், வர்த்தகப்படுத்தல் போன்றவற்றிலுள்ளவை) என்பனவே விளங்கும் என்பதனை மனதில் கொள்ள வேண்டும்.

7.2 செயற்றிட்டத்தின் கீழ் வாய்ப்புக்களைக் கொண்ட வேளாண் வியாபார தொனிப்பொருள்கள் மற்றும் முன்னுரிமைகள்

மேம்பட்ட உற்பத்தித்தரம், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் பெறுமதிகூட்டப்பட்ட வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தி, உணவுப்

3 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களினால் ஆதரவளிக்கப்பட்ட கடன்களை, கொடைகளைப் பொருத்தம் செய்யும் திட்டங்களினால் நிதியிடப்படாத கடன்களுக்கும் விரிவுபடுத்த முடியும். அத்தகைய கடன்களை உள்ளடக்குவதற்கான தீர்மானம் நடுத்தர கால மீளாய்வின் போது (காத்திரமான 2 ஆண்டு முடிவிற்குப் பின்னர்) மேற்கொள்ளப்படுமென்பதுடன், இக்கட்டத்தில் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் அதேபோன்று கொடைகளைப் பொருத்தம் செய்யும் திட்டம் என்பனவற்றின் செயலாற்றம் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். இம்மீளாய்வு ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு, வேளாண்மை அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றின் கூட்டு முயற்சியாக இருக்கும்.

பாதுகாப்பு ஊக்குவிப்பு மற்றும் மேம்பாடுகள், வியாபார முகாமைத்துவம் வருமான உருவாக்க நடவடிக்கைகள், புதிய உற்பத்தி அபிவிருத்திகள் மற்றும் பணிகளை வழங்கல் என்பனவற்றிலுள்ள புதிய மற்றும் புத்தாக்க தொழில்நுட்பங்களின் பரந்தளவிலான வீச்சு நிறுவன ரீதியான ஒழுங்குகள் தகைமைபெறும். இதன்படி, வேளாண் வியாபாரத்திற்கான செயற்றிட்ட முன்மொழிவுகளும் செயன்முறை விளக்க நடவடிக்கைகளும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட கொடைகளை பொருத்தம் செய்யும் கைநூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள வாய்ப்புக்களைக் கொண்ட செயற்றிட்ட தொனிப்பொருட்களின் பரந்த வீச்சினைப் பின்வரும் விதத்தில் உள்ளடக்க முடியும்.

7.2.1 வேளாண்மை உற்பத்திகளின் சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல் மற்றும் பதனிடல்களினை மேம்படுத்தல்;

7.2.2 உற்பத்திகளை தரமிடல்/ பிரித்தல், பொதியிடல், சுட்டுத்துண்டிடல், வர்த்தக நாமமிடல் மற்றும் காட்சிக்கு வைத்தல் மற்றும் மேம்படுத்தல்;

7.2.3 உற்பத்தி மற்றும் பதனிடல் தொழில்நுட்பங்களின் அறிமுகம், சிறந்த தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ நடைமுறைகள்/ முறைமைகள் மற்றும் உற்பத்தி சான்றுபடுத்தல் என்பன உள்ளிட்ட உற்பத்திகளின் தரம் மற்றும் நியமங்களை மேம்படுத்தல்;

7.2.4 உயர் பெறுமதிகூட்டல் மற்றும் உயர் பெறுமதி கொண்ட சிறு சந்தைகளுக்கான உற்பத்திகளின் அறிமுகம் உட்பட வேளாண்மை உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல்;

7.2.5 அறுவடைக்குப் பின்னரான கையாளல் நடைமுறைகள்/ தொழில்நுட்பங்ளை முன்னேற்றுதல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல்;

7.2.6 மாற்று வருமான உருவாக்க வாய்ப்புக்கள் மற்றும் பணிகளின் (வேளாண்சுற்றுலா, தேன், கைவினைப்பொருட்கள், விலங்கு உற்பத்திகள், சேதன வேளாண்மை போன்றவை உட்பட) அபிவிருத்தி;

7.2.7 வேளாண்மையாளர்/ உற்பத்தியாளர்கள், பதனிடுவோர் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோருக்கிடையிலான ஒப்பந்த ரீதியான ஒழுங்குகளின் அபிவிருத்தி உட்பட மிகச் சிறந்த வேளாண் வியாபார முகாமைத்துவ நடைமுறைகளின் அறிமுகம்;

7.2.8 குறிப்பிட்ட உற்பத்திகளுக்கான திடமான நடவடிக்கைகளுடன் இணையும் பொழுது, பரீட்சிப்பு சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வுகள் உள்ளிட்ட சந்தைப்படுத்தல் புலனாய்வுகள்;

7.2.9 உள்ளீடுகளின் நிரம்பல், விலங்கு மருத்துவம், செயற்கை முறையில் சினைப்படுத்தல் பணிகள் போன்ற பல்வேறு பணிகளை சிறுவேளாண்மையாளர்கள் பெறுவதனை மேம்படுத்தல்;

7.2.10 கொடைகளைப் பொருத்தம் செய்யும் தொழிற்பாடுகளின் கைநூலின் நியதிகளில் பரிசீலிக்கப்பட்ட வேறு ஏதேனும் நடவடிக்கைகள். வாய்ப்புக்களைக் கொண்ட செயற்றிட்ட தொனிப்பொருட்கள் மற்றும் யோசனைகள், கொடைகளைப் பொருத்தம் செய்யும் தொழிற்பாட்டுக் கைநூலின் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

7.3 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்திற்குள்ளடக்குவதற்கு தகைமை பெறாத முதலீடுகளுக்கான கொடைகள் அல்லது கடன்கள் வருமாறு:

7.3.1 உற்பத்தித்திறன்மிக்க முதலீடுகளுடன் நேரடியாக இணைந்திராத முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், சிறுஉடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் வேளாண் வியாபார சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர், பாரிய கம்பனிகள் என்பனவற்றின் கிரமமான தொழிற்பாட்டுச் செலவுகள்;

7.3.2 நிலக் கொள்வனவுகள்;

7.3.3 உற்பத்தியாக்கச் சொத்துக்களாக இல்லாத புதிய கட்டடங்களின் நிருமாணம் போன்ற பாரிய குடிசார் வேலைகள்;

7.3.4 நிறுவனங்களின் பங்குரிமை மூலதனத்திலுள்ள நிதியியல் பங்கேற்பு.

**8. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பொறுப்பாண்மைகள்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாகவுள்ளன:

8.1 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்திற்கான கோரிக்கை, மேலேயுள்ள 7ஆவது பிரிவின் கீழான நன்மைபெறுநர்களின் தகைமைப் பிரமாணங்களைக் கொண்டவையென பரிசீலிக்கப்பட்ட கடன்களுக்கு மாத்திரமேயாகும்.

8.2 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் பிரிவு 13.4இல் விபரிக்கப்பட்டவாறு நிருவாகத்தருக்கு கட்டுப்பணத்தினைச் செலுத்துதல்.

8.3 கொடுகடன் உத்தரவாதம் மற்றும் கோரலுக்குப் பின்னரான தொடர்பான தேவையான தரவுகளையும் தகவல்களையும் நிருவாகத்தருக்குச் சமர்ப்பித்தல்.

8.4 பிரிவு 16இல் குறித்துரைக்கப்பட்டவாறு, முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, தொடர்பான தலைமை அலுவலகங்களினூடாகத் தொடர்பான படிவங்களில் கோரலுக்குப் பின்னரான அறவிடல்களை அனுப்புதல்.

8.5 நிருவாகத்தரின் பரீட்சிப்பு அல்லது கணக்காய்வுகளுக்குச் சாத்தியமானளவிற்குப் போதுமான பதிவேடுகளை வைத்திருத்தல்.

8.6 நிருவாகத்தர் ஒவ்வொரு கொடுகடன் உத்தரவாத விண்ணப்பங்கள் மீதான தீர்மானங்கள் அத்தகைய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் அது பற்றி தெரிவித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுதல்.

8.7 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக முன் மற்றும் பின் மேற்பார்வைகளை மேற்கொள்ளுதல். கடன்பாட்டாளர்களுக்கு

கடன்களை வழங்கும் பொழுது வழமையான கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் அவதானிப்பில் கொள்வது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடப்பாடாகக் காணப்படுவதுடன் கடன்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

8.8 பிரிவு 11இல் குறித்துரைக்கப்பட்டவாறு, வரவேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்கு அனைத்துச் சாத்தியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**9. நிருவகிப்பவரின் பொறுப்புக்கள்**[4]

ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுவத்துவதற்காக, நிருவகிப்பவர், நடைமுறைப்படுத்துகின்ற முகவர் என்ற அதன் ஆற்றலுக்கேற்ப பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்வார்.

9.1 நிருவகிப்பவர் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் பொறுப்பாக இருக்கின்றார். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தேவையின் அடிப்படையில் செய்யப்படும் திருத்தங்களுக்குட்பட்டதாகும்.

9.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கடன் உத்தரவாதங்களுக்காகப் பெறப்படுகின்ற விண்ணப்பங்கள் (இணைப்பு I) கடன்பாட்டாளர்களின் தகைமையையும் முதலீடுகளையும் உறுதிப்படுத்துவதற்காக உத்தரவாத விண்ணப்பங்களை மதிப்பிடுதல், இடர்நேர்வுகள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுகளில் இருப்பதனை உறுதிப்படுத்தல்.

9.3 செயற்றிட்டத்தின் கீழ், இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற நிதிக்குட்பட்டு, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்கல்.

9.4 திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் விபரிக்கப்பட்டவாறு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கட்டணங்களைச் சேகரித்தல்

9.5 திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் விபரிக்கப்பட்டவாறு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான கோரல்களைத் தீர்ப்பனவு செய்தல்.

9.6 திட்டத்தின் கண்காணிப்பினையும் மதிப்பீட்டுச் செயன்முறைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தேவையான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

9.7 களப் பரீட்சிப்புக்கள், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்தல், பேரேடுகளையும் ஏடுகளையும் பரீட்சித்தல் என்பனவற்றினை மேற்கொள்வதுடன் தேவையானது எனக் கருதப்படுகின்றவிடத்து ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்துடன் தொடர்பான வேறு ஏதேனும் மேற்பார்வை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான உரிமையினைக் கொண்டிருக்கிறது.

9.8 தனியொரு கடன்பாட்டாளருக்குப் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டிருக்குமிடத்து, நிருவகிப்பவர் உயர்ந்தபட்ச தகுதியுடைய உத்தரவாதத் தொகையினைத் தீர்மானிப்பதற்கான உரிமையினைக் கொண்டிருப்பார்.

9.9 இழப்புக்கள்/ கோரல்கள் குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் பெறுமதியில் 20 சதவீதத்தினை விஞ்சுமிடத்து, நிருவகிப்பவர் குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கான புதிய உத்தரவாதங்கள் வழங்குவதனை இடைநிறுத்தலாம்.

9.10 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் அல்லது வேறு ஏதேனும் தகவல்களில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து நிருவகிப்பவர் அத்தகைய மாற்றங்களில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அறிவிப்பார்.

9.11 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன் வழங்குகையில் பொருத்தமான மேற்பார்வை, கவனிப்பு மற்றும் முன்மதியுடைய தன்மையில் போதுமான நடவடிக்கைகள் எடுப்பதனை வேண்டுமென்றே புறக்கணித்தமையின் விளைவாக அது போலியான கடன்களை உருவாக்கியிருப்பதற்குச் சான்றுகள் காணப்படுமிடத்து, கடன்பாட்டாளர்களினால் கடன்களைத் தவறாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு அல்லது கடன்களை வழங்குகையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் குற்றமிழைக்கப்பட்டிருக்குமிடத்து, நிருவகிப்பவர் பொறுப்பினை மறுப்பார் என்பதுடன், கோரல் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகையினை மீளப்பெற்றுக் கொள்வதற்கான உரிமையினையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றார்.

9.12 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழுள்ள நியதிகளைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்பற்றாத சந்தர்ப்பத்தில், நிருவகிப்பவர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்திலிருந்து நீக்கி விடுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றார்.

9.13 பெறப்படுகின்ற அனைத்துக் காசுக் கூறுகளையும் முன்மதியுடைய விதத்தில் முதலீடு செய்வதற்கான உரிமையினைக் கொண்டிருக்கின்றார்.

9.14 நிருவகிப்பவரும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சும், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் செய்யப்பட்ட முன்மொழிவுகளுக்கு ஆட்சேபனையற்ற தன்மையினை வழங்குவதற்குட்பட்டு ஓரளவு கொடுகடனுக்கான உத்தரவாதத் திட்டத்தினை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துவதற்கான தற்றுணிபினைக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கொடைகளைப் பொருத்தம் செய்யும் திட்டம் இணங்கிக் கொள்ளாத அத்தகைய கடன்களும் திட்டத்தினை அணுகுவதற்கும் அனுமதி வழங்கலாம். அத்தகைய தீர்மானத்தினை நிருவகிப்பவரூடாக அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

9.15 ஆரம்பத்தில், (அதாவது நிதியிடல் உடன்படிக்கை நடைமுறைக்குவரும் நாள்) ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காலம் செயற்றிட்டத்தின் அத்தகைய காலத்தடன் இணைந்ததாக இருக்கும். நிருவகிப்பவர், ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றுடன் சேர்ந்து காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யலாம் என்பதுடன் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் செல்லுபடியாகும் காலத்தினையும் நீடிக்கலாம்.

**10. செலுத்தத் தவறிய கடன்கள்**

10.1 கிளை முகாமையாளர்கள், முறைசார்ந்த வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழு, சிறு உடமை உற்பத்தியாளர் அமைப்புக்கள்,

4 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் வேளாண் வியாபார சிறு தொழில்முயற்சியாளர் ஆகியோரிடமிருந்து ஏதேனும் செலுத்தத் தவறிய கடன்கள் இருக்குமாயின் அவற்றை இரண்டு வகைகளாக: வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்கள் மற்றும் நியாயமான காரணங்களுக்காகச் செலுத்தத் தவறியவர்கள் என பிரித்தல் வேண்டும். இவ்வகைப்படுத்தலை கள அலுவலர்களூடாக முகாமையாளர்களுக்குக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

10.1.1 வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்கள்

கிடைக்கின்ற தகவல்கள் கடன்பாட்டாளர்கள் மீளச்செலுத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிருந்தும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான தமது கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்யத் தவறியிருப்பதனை எடுத்துக்காட்டுமாயின் அவர்கள் வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களாக வகைப்படுத்தப்படல் வேண்டும்.

10.1.2 நியாயமான காரணங்களாக செலுத்தத் தவறியவர்கள்

வெள்ளம், வரட்சி அல்லது பூச்சிகளின் தாக்கம் அல்லது கடன்பாட்டாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்கள் போன்ற மோசமான சம்பவங்களின் காரணமாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான அவர்களின் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் இடர்ப்பாடுகளை கடன்பாட்டாளர்கள் அனுபவிக்கின்றவிடத்து அக்காரணத்தினை நிருவகிப்பவர் என்றும் கொள்ளுமிடத்து அவர்கள் நியாயமான காரணங்களுக்காக கடனைச் செலுத்தத் தவறியவர்கள் என வகைப்படுத்தப்படல் வேண்டும்.

## 11. கடன் அறவிடல்கள்

11.1 இவ்விரு வகைகளைப் பொறுத்தவரையிலும் அறவிடல் நடவடிக்கைகளுக்கான நடைமுறைகள் வருமாறு:

11.1.1 வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினை சட்ட நடவடிக்கை மூலமாக அறவிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். சட்ட நடவடிக்கை மூலமாக வரவேண்டிய தொகைகளை அறவிடுகின்ற விபரமான நடவடிக்கைகள் பிரிவு 12இல் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

11.1.2 நியாயமான காரணங்களுக்காக செலுத்தத் தவறியவர்களைப் பொறுத்தவரையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரிவு 15இல் குறிப்பிடப்பட்டவாறு கடன்பாட்டாளர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் மீள் அட்டவணைப்படுத்தல் வசதிகளையும் வழங்குதல் வேண்டும்.

11.2 செலுத்ததப்படாதிருக்கும் எந்தவொரு தொகையினையும் அறவிடுவதற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சாத்தியமான அனைத்து வழிகளிலும் பொருத்தமானதும் காத்திரமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. கோரல்களைச் சமர்ப்பித்த பின்னரும் கூட நிருவாகத்தரிடமிருந்து ஓரளவு கொடுகடன் உத்தரவாதப் பெறுகைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னரும் கூடப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை அறவிடுவதில் தீவிரமாக இருக்குமென நிருவகிப்பவர் எதிர்பார்க்கிறார். எனவே, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், நிருவகத்தினரால் தெரிவிக்கப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு கடமைப்பட்டனவாகும்.

11.3 இது தொடர்பில் நிருவகிப்பவரிடமிருந்தான குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் வருமாறு: கடனொன்று நிலுவையிலிருக்கும் பொழுது, பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை முகாமையாளர், இக்கடன்களை கடன்பாட்டாளர் சரியான முறையில் செலுத்தச்செய்யும் விதத்தில் அறவிடல் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும். நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

11.3.1 கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக கடன்பாட்டாளரிடம் (குறைந்தபட்சம் 2 தடவைகள்) விஜயம் செய்தல் வேண்டுமென்பதுடன் வரவேண்டிய தொகையினை மீளச்செலுத்தக் கடன்பாட்டாளரைத் தூண்டுதல் வேண்டும்.

11.3.2 கடன்பாட்டாளரினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளைக் கண்டறிதல் மற்றும் பரிசோதித்தல் மற்றும் அத்தகைய இடர்ப்பாடுகளை வெற்றி கொள்வதற்குக் கடன்பாட்டாளர்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் கடன்பாட்டாளர்களுக்கு விதந்துரைத்தல்.

11.3.3 இடர்ப்பாடுகள் நம்பகத்தன்மை கொண்டனவாகவும் கடன்பாட்டாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவும் இருக்குமிடத்து, கடன்களை மீள்அட்டவணைப்படுத்துவதுடன் கடன்பாட்டாளரின் வருமானத்தின் மாதிரிக்கேற்ப புதிய தவணைத் திட்டமொன்றினையும் வடிவமைத்தல்.

11.3.4 வேண்டுமென்றே செலுத்தப்படாத கடன்பாட்டாளராக இருக்குமிடத்து கடன்பாட்டாளர் மீதும் உத்தரவாதி மீதும் கோரிக்கை அறிவித்தலை விடுத்தல்.

11.3.5 கடன் தொகை துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது எனக் கண்டறியப்படுமிடத்து கோரிக்கை அறிவித்தல் உடனடியாக விடுவிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்; அத்துடன்

11.3.6 வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களின் அறிக்கையினைக் கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

## 12. சட்ட நடவடிக்கை

12.1 பங்கேற்கும் நிறுவனமொன்று பிரிவு 11.3இல் குறிப்பிடப்பட்டவாறு, அறவிடல் நடவடிக்கையினை மேற்கொண்ட பின்னரும் கூட செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினைச் சேகரிக்கத் தவறுமிடத்து, அத்தகைய விடயங்களை வரைபடம் 1இல் அடையாளம் காணப்பட்டவாறு முதலாவது தவணைப் பணம் நிலுவையிலிருந்த திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளுக்குப் பாரப்படுத்தப்படல் வேண்டும்.

## 13. கொடுகடன் உத்தரவாதத் தீர்ப்பனவு

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சட்ட விதியின் (அத்தியாயம் 422) 108(அ)இன் பிரிவு கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதற்கு மத்திய வங்கிக்கு வலுவளிக்கின்றது. இதன்படி, இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கப்பட்ட கடன் மீள்கொடுப்பனவு தவணைகளின் கொடுப்பனவு

பெறப்படாமையின் காரணமாக தோன்றக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறைகளுக்கு வசதியளிக்குமொன்றாக இலங்கை மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குகிறது. எனவே, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடனைச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து நிலுவைகளை அறவிட்டதும் மத்திய வங்கிக்கு அத்தகைய கொடுகடன் உத்தரவாதத் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

13.1 பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்குக் கட்டுப்பணங்களைச் சேகரிப்பதற்கும்; உத்தரவாத நிதிகளைப் பெறுவதற்கும்; உத்தரவாத நிதியங்களின் முதலீடுகளுக்காக ஏற்கனவேயுள்ள நியம வழிகாட்டல்களின் கீழ் ஏற்புடைத்தானதாக இருப்பின் உத்தரவாத நிதிகளை முதலீடு செய்வதற்கும்; உத்தரவாதக் கோரல்களைக் கொடுப்பனவு செய்வதற்கும் கோரல்கள் போன்றன தீர்ப்பனவு செய்யப்பட்டதன் பின்னரான அறவிடல்களுக்கும் அதிகாரத்துடன் கூடிய வலுவூட்டல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

13.2 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத கடன்கள்

13.2.1 ஏதேனும் கடன்களுக்காகப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் பெற்றுள்ள அரச அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்களின் உத்தரவாதம், ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பிற்குத் தகைமையுடையனவாகா.

13.2.2 தேவைப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் நிருவகிப்பவருக்குக் கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிராத கடன்கள் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வசதிகளைப் பெறுவதற்குத் தகைமையுடையனவாகா.

13.3 உத்தரவாதங்களின் அளவு

13.3.1 திட்டமானது இழப்பு ஏற்பட்ட வெளிநின்ற முதல் தொகையில் 50 சதவீதத்திற்கு அல்லது உத்தரவாதத் தொகைக்கு இதில் எது குறைவானதோ அத்தொகைக்கு உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்கும். கொடுகடன் உத்தரவாதக் கோரல்கள், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் விடுவித்தல் புள்ளியை (வரைபடத்தில் T என அடையாளம் காணப்பட்டது) அடைகின்றது என்ற சான்றினை வழங்கியதும் ஒரே தவணையில் செலுத்தப்படும்.

13.3.2 ஆரம்ப உயர்ந்தபட்ச உத்தரவாதப் பாதுகாப்பு ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் நடைமுறைத் திகதியிலிருந்து 5 ஆண்டு காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்படும். எனினும், நிருவகிப்பவர் திட்டத்தின் செயலாற்றத்தின் அடிப்படையில் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவர்களின் ஆலோசனையுடன் உத்தரவாதத் திட்டத்தின் செல்லுபடியாகும் காலத்தினை ஆரம்பத்தில் 5 ஆண்டு காலப்பகுதிக்கு அப்பால் நீடிப்பதற்கான உரிமையினைக் கொண்டிருக்கின்றனர்.

13.4 கட்டுப்பணம்

13.4.1 நிருவகிப்பவருக்கு செலுத்தப்படத்தக்க கட்டுப்பணம், வழங்கப்படும் நேரத்தில் தகைமையுடைய கடன்களின் மீது ஆண்டிற்கு 0.5 சதவீதமாக இருக்குமென்பதுடன் இது திட்டத்தின் கீழான தகைமையுடை மொத்த கடன் தொகையின் மீது கணிக்கப்படுதலும் வேண்டும். இது கடன் உத்தரவாதம் வழங்கப்படுகின்ற தொடக்க நேரத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்.

13.4.2 உத்தரவாதக் கட்டணத்தினைச் செலுத்தத் தவறுவது உத்தரவாதத்தினை எதிர்மறையானதாக்கும்.

13.4.3 ஒவ்வொரு கடனும் தனித்தனியான உத்தரவாத விண்ணப்பங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13.4.4 உத்த ரவாதங்களின் கீழான கடன்கள் காலக் (பல ஆண்டுகள்) கடன்களைக் கவனத்திற் கொண்டு ஒவ்வொரு வருடாந்த புதுப்பித்தலிலும் கடனின் வெளிநின்ற முதல் தொகையின் மீது ஆண்டிற்கு 0.5 சதவீதம் கொண்ட கட்டுப்பணம் பிரயோகிக்கப்படும்.

13.4.5 கடன் உத்தரவாதங்கள் வழங்கப்படுகின்ற ஆரம்ப காலத்தினைத் தொடர்ந்து பல - ஆண்டு கால கடன்களுக்கான உத்தரவாதங்களின் கொடுப்பனவுகள் ஒவ்வொரு 12 மாதங்களாக இருக்கும்.

13.4.6 கட்டணத்தினை (அல்லது கட்டுப் பணத்தினை), உத்தரவாதத் திட்டத்தினை நீண்ட காலத்தில் நிதியியல் ரீதியாக ஆற்றல்வாய்ந்ததாகச் செய்யும் இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் இடர்நேர்வுச் செலவினையும் நிருவாகச் செலவினையம் பிரதிபலிக்கும் விதத்தில் தொடர்பான ஆர்வலர்களின் ஆலோசனையுடன் நிருவகிப்பவரினால் சீராக்கம் செய்ய முடியும்.

13.4.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தனிப்பட்ட கடன் உத்தரவாதங்கள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து ஆரம்பமாகும் விதத்தில் காப்புறுதிக் கட்டணத்தினை ஆண்டுதோறும் தொடர்பான தலைமை அலுவலர்களினூடாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

13.4.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தத்தக்க காப்புறுதிக் கட்டணத்திற்கான கொடுப்பனவினை காசோலையாகவோ அல்லது இலத்திரனியல் முறையிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

13.4.9 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்புடைத்தான வட்டி வீதத்தினை நிர்ணயிக்கும் பொழுது உத்தரவாதங்களின் கிடைப்பனவின் தாக்கத்தினைப் பரிசீலனையில் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தனிப்பட்ட உத்தரவாதங்களும் காசோலை அல்லது இலத்திரனியல் கொடுப்பனவு தேறல் செய்யப்பட்டதும் வலிதுடையதாக மாறும். நிருவகிப்பவர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்குவார்.

13.5 கோரல்களின் நடைமுறை

13.5.1 இவ்வுத்தரவாதத்தின் நோக்கத்திற்காக வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, ஏதேனும் தொகைக்கு இழப்பு ஏற்படும் பொழுது பங்கேற்கும் நிதியியல் நிறுவனம், இந்நோக்கத்திற்காக விபரிக்கப்பட்டுள்ள படிவத்தில் (இணைப்பு II) பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு கோரல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் திட்டத்தின் தொடக்கத்தில் அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகங்களுக்கு இப்படிவத்தினை அனுப்பி வைக்கும்.

13.5.2 பின்வரும் நடவடிக்கைகளை நிறைவுசெய்த பின்னர் இத்திட்டத்தின் கீழான கடனொன்று இழப்பிலுள்ளதாகக் கருதப்படும்

13.5.2.1 பங்கேற்கும் நிறுவனமொன்று கடனை அறவிடுவதற்காக, கடனை மீளச் செலுத்துவதற்கு கடன்பாட்டாளரைத் தூண்டுவது, அத்தகைய உத்தரவாதங்கள் எங்கு எடுக்கப்பட்டதோ அவ்வுத்தரவாதிகளின் உதவியைக் கோருதல் மற்றும் கடன்பாட்டாளருக்கான கோரிக்கை அறிவித்தலை வழங்குதல் போன்ற கிடைக்கத்தக்க அனைத்து வழிமுறைகளையும் மேற்கொண்ட பின்னர் கடனொன்று இழக்கப்பட்டதாகக் கருதப்படும். நிருவகிப்பவருக்குக் கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கடன்பாட்டாளரிடம் இரண்டு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பரீட்சிப்பின் போது அல்லது நிருவகிப்பவர்களின் கோரிக்கை/ அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுவதன் மீது அத்தகைய விஜயங்களின் பதிவேடுகள் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

13.5.2.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளர் மற்றும் உத்தரவாதியின் மீது ஏற்புடைத்தானவிடத்து கோரிக்கை அறிவித்தலை விடுத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் கடன்பாட்டாளர் பற்றி கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் கடனைச் செலுத்தத் தவறிய கடனாக வகைப்படுத்தலும் வேண்டும்.

13.5.2.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேலேயுள்ள துணைப் பிரிவுகள் 13.5.2.1 மற்றும் 13.5.2.2 என்பனவற்றில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளிலிருந்து கணிசமான முன்னேற்றங்களை அடையவில்லையாயின் பங்கேற்கும் நிறுவனங்கள் வரைபடம் ஐ இல் அடையாளம் காணப்பட்டவாறு தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

13.5.2.4 இதன்படி, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும். இதன் மூலம் கொடுகடன் உத்தரவாதக் கோரலை அனுப்புகின்ற திகதியில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் நிலுவையிலுள்ள தொகையினை அறவிடுவதற்குப் பொருத்தமான நடவடிக்கை முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு நிருவகிப்பவர் செல்லுபடியாகக்கூடிய கோரல் கோரிக்கையினைப் பெற்ற பின்னர் 45 நாளட்களுக்குப் பிந்தாமல் மேற்கொள்ளப்பட்ட கோரல்களின் அடிப்படையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உத்தரவாதக் கொடுப்பனவுகள் பகிர்ந்தளிக்கப்படும்.

13.5.2.5 கொடுகடன் உத்தரவாதங்கள் செலுத்தப்பட்டுள்ள கடன்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிருவகிப்பவரின் முன்னொப்புதல் இல்லாமல் பதிவழிக்கக்கூடாது எனப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடுமையாக அறிவுறுத்தப்பட்டுள்ளன. கொடுகடன் உத்தரவாதங்கள் செலுத்தப்பட்ட பின்னரும் கூட கடன்களை அறவிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நியாயமான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

13.5.2.6 கடன்கள் மீள்அட்டவணைப்படுத்தப்பட்டு, கடன்பாட்டாளர் மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பில் அவர்களது கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறுமிடத்து பிரிவு 15இல் தரப்பட்டுள்ள நடவடிக்கைகளை கடன்கள் இழப்பிற்குள்ளாகிவிட்டன என்று கருதப்படுவதற்கு முன்னதாகப் பின்பற்றுதல் வேண்டுமென்பதுடன் கோரல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

13.5.2.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு தேவையான மேற்பார்வைகளை அல்லது நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருக்கின்றன என்பது பின்னாளில் கண்டுபிடிக்குமிடத்து அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வரவேண்டிய மீதியை அறவிட்டிருக்குமிடத்து அவற்றை இரத்துச் செய்வதற்கான உரிமைக்குட்பட்டு கோரல் படிவம் கிடைக்கப்பெற்றதும், நிருவகிப்பவர், அதனை மீண்டும் அழைக்கும் உரிமைக்குட்பட்டு 100 சதவீதம் கொண்ட நிருவகிப்பவர் பொறுப்பினைச் செலுத்துவார்.

**14. இழப்புக்கள் மற்றும் கோரல்களைக் கணித்தல்**

இழப்புக்களிலுள்ள தொகையினைக் கணிக்கும் நோக்கத்திற்காக மேலேயுள்ள துணைத் துறை 13.3.1இல் விபரிக்கப்பட்டவாறு வெளிநின்ற முதல் தொகைப் பரிசீலனையில் கொள்ளப்படுகிறது.

**15. நியாயமான காரணங்களுக்கான செலுத்தத் தவறியவர்களின் கடன்களை மீளஅட்டவணைப்படுத்தல்**

15.1 கடன்பாட்டாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களின் காரணமாக செலுத்தத் தவறிய கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளஅட்டவணைப்படுத்துவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீர்மானித்து, அத்தகைய தீர்மானங்கள் நியமிக்கப்பட்ட மீள்அட்டவணைப்படுத்தல் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய தீர்மானத்தினை நிருவகிப்பவருக்கு அறிவித்தல் வேண்டும். குறிப்பிட்ட செலுத்தத் தவறிய கடன் சிறப்பியல்பு வாய்ந்த மீள்அட்டவணைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்அட்டவணைப்படுத்தப்படுவதற்கு தகைமை பெற்றிருப்பின் அது நிருவகிப்பவருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

15.2 மீள்அட்டவணைப்படுத்தல் வசதிக்குப் பின்வருவன பிரயோகிக்கப்படும்:

15.2.1 மீள்அட்டவணைப்படுத்தலைத் தீர்மானிப்பதற்குப் பொறுப்பான குழுவில் பின்வரும் அலுவலர்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அ) செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு/ ஆரம்பக் கைத்தொழில் அமைச்சிலிருந்தான பிரதிநிதிகள்

ஆ) மாகாண வேளாண்மை அமைச்சிலிருந்தான பிரதிநிதி

இ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்/ நிறுவனங்களிலிருந்தான பிரதிநிதிகள்

15.2.2 மேலே குறிப்பிடப்பட்ட தொடர்பான குழு, குழுவிற்கு மீள்அட்டவணைப்படுத்தல் கோரிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து உயர்ந்தபட்சம் இரண்டு கிழமைக்குள் மீள்அட்டவணைப்படுத்தல் விதந்துரைப்பினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

15.2.3 குழு, குறிப்பிட்ட கடன் வேறு ஏதேனும் சிறப்பு மீள்அட்டவணைப்படுத்தல் திட்டத்தின் கீழ் தகைமைபெறுகின்றதா என்பதனையும் தீர்மானித்தல் வேண்டும். அவ்வாறாயின் உத்தரவாதத்தினை மேலும் தொடர வேண்டுமா என்பதனையும் தீர்மானித்தல் வேண்டும்.

15.3 ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை மேலும் விரிவாக்குவதனைத் தேவைப்படுத்தும் மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்களைப்

பொறுத்தவரை சரியாக நிரப்பப்பட்ட தனித்தனியான விண்ணப்பங்களை தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் தலைமை அலுவலகத்தினூடாகப் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 1 இற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் (இணைப்பு III) இவ்விண்ணப்பங்களின் பிரதியைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தம்முடன் வைத்திருக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றன.

15.4 கடன்களை மீள்அட்டவணைப்படுத்தும் பொழுது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நியம கடமையினையும் அக்கறையினையும் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் தேவையானவிடத்து, கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலைப் பரிசீலனையில் கொண்டு இனிவரும் நடவடிக்கைகளுக்காக உடன் கடனைப் பெற்றுக் கொள்வதற்கும் கடன்பாட்டாளருக்கு உதவலாம்.

15.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், தொடர்பான கடன்பாட்டாளர்களிடமிருந்து கடனில் எஞ்சியுள்ள ஆயுள் காலத்தினை உள்ளடக்கிய மீள்அட்டவணையிட்ட கடனுக்காகக் கோரப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

15.6 மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பில் இக்காலப்பகுதியில் செய்யப்பட்ட அறவிடல்களை நிருவகிப்பவருக்கு அறிவித்தல் வேண்டும். 36 மாத காலம் முடிவடைவதற்கு முன்னதாக மீள்அட்டவணையிடப்பட்ட கடனை கடன்பாட்டாளர்கள் மீளச்செலுத்தியிருக்குமிடத்து அத்தகைய அறவிடல்கள் நிருவகிப்பவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

15.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை மீள்அட்டவணைப்படுத்தும் கடன்களின் நன்மைகளைக் கடன்பாட்டாளருக்கு வழங்காமல், மீள்அட்டவணைப்படுத்தல் வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நன்மைகளுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டாமெனக் கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

15.8 நிருவகிப்பவர், ஒவ்வொரு காலாண்டினதும் இறுதி இரு கிழமைகளிலும் கடன்களை மீள்அட்டவணைப்படுத்துவதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வார். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் செலுத்தத் தவறிய கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீள்அட்டவணைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில், ஏதேனும் சிறப்பு அட்டவணைப்படுத்தல் திட்டத்திற்கான கடன்களின் தகைமைபெறுவதற்கான நிபந்தனைகள் தவிர்ந்த அனைத்தும் ஏற்புடைத்தானவையாக இருக்கும். எனினும், நிருவகிப்பவரின் ஆலோசனையுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன் காலத்தினை 36 மாதங்களுக்கு அப்பாலும் நீடிக்கலாம். எனினும், 60 மாதத்திற்கும் கூடுதலாக இருக்கக்கூடாது.

16. கோரலக்குப் பின்னரான தீர்ப்பனவு

16.1 நிருவகிப்பவரால் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர், கடன்பாட்டாளரிடமிருந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அறவிடப்பட்ட அனைத்துத் தொகையும் 50:50 என்ற விகிதாசாரத்தில் நிருவகிப்பவருக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையே பகிரப்படல் வேண்டும். கோரல் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் செய்யப்படும் ஏதேனும் அறவிடல்களிலும் 50 சதவீதத்தினைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நிருவகிப்பவருக்கு வழங்குதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக நிருவகிப்பவரால் விபரிக்கப்பட்ட படிவம் பயன்படுத்தப்படல் வேண்டும் (இணைப்பு IV).

16.2 மேற்குறிப்பிட்ட படிவத்தினை அரையாண்டுக்கொரு தடவை சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதிக்கும் யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதிக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அறவிடல் பெறுகைகள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாக முறையே யூன் 30 இலிருந்தும் திசெம்பர் 31 இலிருந்தும் 30 நாட்களுக்குள் நிருவகிப்பவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

16.3 கடன்பாட்டாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியினை அறிவிடல் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியான யூன் 30 அல்லது திசெம்பர் 31 இலிருந்து 30 நாட்களுக்கு அப்பால் நிருவகிப்பவருக்கு அனுப்புவதில் தாமதம் காணப்படுமிடத்து நிருவகிப்பவரால் நிர்ணயிக்கப்படும் தண்ட வீதமொன்று தாமதமான காலப்பகுதிக்குப் பிரயோகிக்கப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பணவனுப்பல்களை மேற்கொள்ளும் பொழுது நிருவகிப்பவரால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தண்ட வட்டித் தொகையினையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

16.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நிருவகிப்பவரிடமிருந்து பெறப்பட்ட மொத்த உத்தரவாதங்கள், விதிக்கப்பட்ட வட்டி மற்றும் செய்யப்பட்ட அறவிடல்கள் போன்றவற்றைக் காட்டும் பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் பதிவேட்டினைப் பரீட்சிப்பின் போது மத்திய வங்கி அலுவலர்களுக்குக் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

16.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் ஒவ்வொரு கிளையினாலும் செலுத்தப்படத்தக்கத் தொகையின் மொத்தத்தினை ஒரு காசோலையாக அல்லது இலத்திரனியல் கொடுப்பனவாக, அறவிடல் படிவங்களுடன் சேர்த்து ஒவ்வொரு ஆண்டும் யூன் 30 மற்றும் திசெம்பர் 31 இலிருந்து 30 நாட் காலப்பகுதிக்குள் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் தாமதம் ஏற்படும் பொழுது, தலைமை அலுவலகம் காசோலை அல்லது இலத்திரனியல் கொடுப்பனவுப் படிவமும் சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியிலிருந்து ஆரம்பமாகின்ற தாமத காலப்பகுதிக்காக நிருவகிப்பவரால் தீர்மானிக்கப்படுகின்ற வீதத்தில் தண்ட வீதத்தினையும் கூட்டுதல் வேண்டும்.

17. பரீட்சிப்புக்கள்

17.1 நிருவகிப்பவர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகளையும் பரீட்சிக்கின்ற உரிமையினையும் திட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட ஏதேனும் கடன்களுடன் தொடர்பான களவிஜயங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும். நிருவகிப்பவர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கோரல் வழங்கப்பட்டதிலிருந்து மூன்று (3) ஆண்டுகள் வரை அத்தகைய கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கான உரிமையினைக் கொண்டிருப்பவர்.

18. அறிக்கையிடல்

18.1 நிருவகிப்பவர் உத்தரவாதங்கள் (வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் எண்ணிக்கை, உத்தரவாதத்தின் கீழான கடன்பெறுமதி) சேகரிக்கப்பட்ட கட்டணம் (கட்டுப்பணம்) கிடைக்கத்தக்கதாக இருப்பின் முதலீட்டு வருமானம், கோரல் கொடுப்பனவுகள் (கடன் ஒன்றுக்கான அளவு) மற்றும் உத்தரவாதத் திட்டங்களின் தொழிற்பாடுகளுக்கான மற்றைய ஏதேனும் பொருத்தமான தரவுகள் மற்றும் தகவல்களை ஆரம்பக் கைத்தொழில் அமைச்சிற்கு வழங்குவார்.

**19. திருத்தியமைத்தல்கள் மற்றும் துணைநிரப்பு ஏற்பாடுகள்**

19.1 இலங்கை அரசாங்கம் மற்றும் நிருவகிப்பவர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற உரிமைகள் அல்லது கடப்பாடுகளைப் பாதிக்காமல் அத்தகைய அறிவித்தல் திகதிக்கு முன்னதாகவே திட்டத்தினை திருத்தியமைப்பதற்கான அல்லது புறக்கீடு செய்வதற்கான உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். இது தொடர்பில் இத்திட்டத்தில் குறிப்பாக ஏதேனும் விடயம் குறிப்பிடப்படாது விடப்பட்டிருக்குமாயின் நிருவகிப்பவர் இத்திட்டத்தின் நோக்கத்திற்காகத் தேவையான மேலதிக ஏற்பாடுகளை துணை நிரப்புச் செய்யலாம்.

இத்தொழிற்பாடுகள் கொடைகளைப் பொருத்தம் செய்யும் திட்டத்தின் நடைமுறைக்குவரும் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

திருமதி டி வி எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**வரைபடம் 1 - கோரல்களுக்கான நடைமுறைகள்**



இணைப்பு I

ஆர்டிடி/பிசிஜி/ஏஆர்

**பதிவு செய்வதற்கான விண்ணப்பம்**

**ஒரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் - வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பெயர்: ..................................................... கிளை: ..................................................

1. கடன்பாட்டாளர்/ கம்பனியின் பெயர் : ..................................................................................................................................
..................................................................................................................................
2. கடன்பாட்டாளர்/ கம்பனியின் முகவரி : ..................................................................................................................................
3. கடன்பாட்டாளரின் தே.அ.அ இல./ கம்பனியின் பதிவு இல. : ..................................................................................................
4. செயற்றிட்டத்தின் தன்மை (சுருக்கமாக) : ..................................................................................................................................
5. மொத்தக் கடன் தொகை (ரூ.) : ..................................................................................................................................
6. தொகை விடுவிக்கப்பட்ட திகதி (திதி/மாமா/ஆஆ) : ..................................................................................................
7. 0.5 சதவீதத்தில் கொடுகடன் உத்தரவாதக் கட்டணம் (ரூ.) : ..................................................................................................

முகாமையாளரின் பெயர் : ................................................................. கையொப்பம்: .....................................................................

திகதி :........................................................................................ கிளையின் முத்திரை: .......................................................

இணைப்பு II

ஆர்டிடி/பிசிஜி/ஏசி

**கொடுகடன் உத்தரவாதத்திற்கான விண்ணப்பம்**

**ஒரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் - வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பெயர்: ..................................................... கிளை: ..................................................

1. கடன்பாட்டாளர்/ கம்பனியின் பெயர் : ..................................................................................................................................
..................................................................................................................................
2. வழங்கப்பட்ட தொகை (ரூ.) : ..................................................................................................................................
3. அறவிடப்பட்ட தொகை (ரூ.) : ..................................................................................................................................
4. வெளிநிற்கும் கடன் தொகை (ரூ.) (அறிக்கையிடும் நாளன்றில் உள்ளவாறு வெளிநின்ற மூலதனத் தொகையிலிருந்து) : ..................................................................................................
5. நீதிமன்றத்தின் பெயர் : ..................................................................................................................................
6. சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதி (திதி/மாமா/ஆஆ) : ..................................................................................................
7. நீதிமன்ற வழக்கு இலக்கம் : ..................................................................................................................................
8. தேறிய இழப்பு : ..................................................................................................................................

முகாமையாளரின் பெயர் : .............................................................. கையொப்பம்: .....................................................................

திகதி:........................................................................................ கிளையின் முத்திரை: .......................................................

இணைப்பு III

ஆர்டிடி/பிசிஜி/ஏஆர்

**மீள் அட்டவணைப்படுத்தலுக்கான விண்ணப்பம்**

**ஒரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் - வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பெயர்: ................................................................................. கிளை: ..................................................

1. கடன்பாட்டாளர்/ கம்பனியின் பெயர் : ..................................................................................................................................
..................................................................................................................................
2. கடன்பாட்டாளர்/ கம்பனியின் முகவரி : ..................................................................................................................................
3. வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) : ..................................................................................................................................
4. மீள்அட்டவணையிடப்பட்ட கடன் தொகை (ரூ.) : ..................................................................................................

5. மீள்அட்டவணையிடப்பட்ட திகதி (திதி/மாமா/ஆஆ) : ..........

6. கடன் மீள்அட்டவணையிடப்பட்ட காலம் (மாதங்களின் எண்ணிக்கை) : ..........

முகாமையாளரின் பெயர் : .......... கையொப்பம்: ..........

திகதி: .......... கிளையின் முத்திரை: ..........

**இணைப்பு IV**

**ஆர்டிடி/பிசிஜி/ஏபிசிஆர்**

**கோரலுக்குப் பின்னரான அறவிடல்களின் விபரங்கள்**

**ஒரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டம் - வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பெயர் : .......... கிளை : ..........

1. கடன்பாட்டாளர்/ கம்பனியின் பெயர் : ..........

..........

..

2. வழங்கப்பட்ட கடனின் தொகை (ரூ.) : ..........

3. கொடுகடன் உத்தரவாதங்களாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.) : ..........

4. கடன்பாட்டாளரிடமிருந்து அறவிடப்பட்ட தொகை (ரூ.) : ..........

5. மத்திய வங்கிக்கு அனுப்பப்பட வேண்டிய தொகை (ரூ.) : ..........

முகாமையாளரின் பெயர் : .......... கையொப்பம்: ..........

திகதி:.......... கிளையின் முத்திரை: ..........

**இணைப்பு V**

**ஆர்டிடி/பிசிஜி/ஏஆர்**

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பட்டியல்**

01. இலங்கை வங்கி
02. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
03. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
04. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
05. ஹற்றன் நஷனல் பாங்க் பிஎல்சி
06. எச்டிஎவ்சி பாங்க் பிஎல்சி
07. லங்காபுத்ர டெவலப்மென்ட் பாங்க்
08. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி
09. மக்கள் வங்கி
10. பிரதேசிய சங்க்வர்த்தன பாங்க்
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. செலான் பாங்க் பிஎல்சி
13. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/என்ஏடிஈபி/யுத்2016/01 (திருத்தம்)**

2017 யூலை 11

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற “தருண திரிய” இளைஞர் வலுவூட்டல் மற்றும் தொழில்வாய்ப்புச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய வழிகாட்டல் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, “தருண திரிய” இளைஞர் வலுவூட்டல் மற்றும் தொழில்வாய்ப்பு செயற்றிட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கான உயர்ந்தபட்ச கடன்பாட்டுத் தொகை ரூ.1 மில்லியனுக்கு அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி, 2016 ஒகத்து 03ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/என்ஏடிஈபி/யுத்2016/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 7ஆம் பிரிவு இணைப்பு Iஇல் உள்ளவாறு திருத்தப்பட்டிருக்கிறது என்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ரூ150,000 - ரூ.1,000,000 வகையின் கீழ்வரும் துணைக் கடன்பாட்டாளர்களுக்கான தெரிவுப் பிரமாணம் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ அலகினால் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

கடன் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

திருத்தப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் நடைமுறைக்குவரும் திகதி 11/07/2017 ஆக இருக்கும்.

இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை உங்கள் வங்கிக் கிளைகளின் தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச,
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : ஆர்டிடி/என்ஏடிஈபி/பேர்ள்/2017/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2017 யூலை 21

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மனி

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - "தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்படுத்தப்படும் அனர்த்தத்திற்குப் பின்னைய பொருளாதார மீட்புக் கடன் திட்டம்"**

1. அறிமுகம்

அண்மைய வெள்ளம் மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள்/ சிறு தொழில்முயற்சிகளின் அனர்த்தத்திற்குப் பின்னரான மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் தேசிய வேளாண் வியாபார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (இதனகத்துப் பின்னர் "நிகழ்ச்சித்திட்டம்" என அழைக்கப்படுகிறது) அனர்த்தத்திற்குப் பின்னரான **"பொருளாதார மீட்புக் கடன் திட்டம்"** (இதனகத்துப் பின்னர் "கடன் திட்டம்" என அழைக்கப்படுகிறது) அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது சனாதிபதி செயலகத்தின் கீழ் தொழிற்படுத்தப்படும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கடன் திட்டத்தின் நிறைவேற்று முகவராகச் செயற்படுகிறது.

2. நிதி ஒதுக்கீடு

2.1 கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான முதலாவது தொகுதியாக, நிகழ்ச்சித்திட்டம் ஐ.அ.டொலர் 3.4 மில்லியனை ஒதுக்கீடு செய்தது. செயற்றிட்டத்தின் முகாமைத்துவப் பிரிவு நிதியத்தின் பகிர்ந்தளிப்பு 2017 ஓகத்து இறுதியளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கடன் திட்டத்திற்கான இரண்டாவது தொகுதி நிதியம் நிகழ்ச்சித்திட்டத்தினால் 2017 செத்தெம்பர் இறுதியளவில் கிடைக்கச் செய்யப்படும்.

2.2 இக்கடன் திட்டமானது, நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னைய கடன் திட்டங்களில் பங்கேற்ற அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக நடைமுறைப்படுத்தப்படும்.

2.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக, 2017 ஒத்தோபர் இறுதியளவில் கடன் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையினையும் பகிர்ந்தளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

2.4 மேலே பிரிவு 2.3இல் நிர்ணயிக்கப்பட்டவாறான பகிர்ந்தளிப்பு இலக்குகளை எய்தும் பொருட்டு, கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் ஆரம்பத்தில் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடனும் கலந்துரையாடல்களை நடத்திக் கொடுகடன் இலக்குகளை நிர்ணயிக்க இருப்பதுடன் இத்திட்டத்தின் கீழ் கடன்களைப் பகிர்ந்தளிப்பதற்காக ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியத்தினையும் ஒதுக்கீடு செய்யும்.

3. திட்டத்தின் குறிக்கோள்கள்

3.1 கடன் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் கடன்பாட்டாளர்களுக்கு (தனிப்பட்ட அல்லது தனிப்பட்டவர்களைக் கொண்ட குழு) அவர்களது அண்மைய வெள்ளம் மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட வியாபாரம்/ சிறிய தொழில்முயற்சிகளின் அனர்த்தத்திற்குப் பின்னரான மீட்பு முயற்சிகள் தொடர்பில் அவர்களது வியாபாரம் அல்லது வருமான உருவாக்க நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான நிதியினை வழங்குவதன் மூலம் ஆதரவளிப்பதேயாகும்.

4. தொழிற்பாட்டுப் பிரதேசம்

கடன் திட்டத்தின் தொழிற்பாட்டுப் பிரதேசம் கீழே பிரிவு 4.1 மற்றும் 4.2இல் தரப்பட்டுள்ளன.

மேலும், வெள்ளம் மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட தேயிலை சிறுஉடமையாளர் மற்றும் இறப்பர் புனரமைப்புச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பிரதேசம் என்பன பெருந்தோட்ட அமைச்சின் கீழ் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பரின் புனரமைப்புச் செயற்றிட்டத்தினால் அறிவிக்கப்படவுள்ளதுடன் இவை இக்கடன் திட்டத்தின் கீழ் பரிசீலனையில் கொள்ளப்படும்.

4.1 வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களும் ஏனைய பிரதேசங்களும் வருமாறு:

1. கேகாலை
2. இரத்தினபுரி
3. காலி
4. அம்பாந்தோட்டை
5. மாத்தளை
6. நுவரெலியா
7. களுத்துறை
8. கம்பஹா
9. கொழும்பு

4.2 வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசம்

தீவு முழுவதும்

**5. கடன் திட்டத்தின் அடிப்படைப் பண்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 5.1 | துணைக் கடனின் உயர்ந்தபட்ச வரையறை | : | ரூ.150,000/= |
| 5.2 | தகைமை | : | மேலே பிரிவு 4இல் குறித்துரைக்கப்பட்ட அண்மைய வெள்ளத்தினால்/ வரட்சியினால் பாதிக்கப்பட்டு தொழிற்பாடுகளை மீளத் தொடங்குவதற்கு நிதி தேவைப்படுகின்ற ஏதேனும் வியாபாரங்கள்/ சிறிய தொழில்முயற்சிகள் |
| 5.3 | மீள்நிதியிடல் | : | இலங்கை மத்திய வங்கி துணைக் கடன்களுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையில் 100 சதவீதம் வரையிலான தொகையினை மீள்நிதியாக வழங்கும். |
| 5.4 | வட்டி வீதம் | : | |
| | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு | : | ஆண்டிற்கு 3.25 சதவீதம் |
| | இறுதிக் கடன்பாட்டாளர்களுக்கு | : | ஆண்டிற்கு 6.50 சதவீதம் |
| 5.5 | பிணை உறுதி | : | ஆற்றல்வாய்ந்த வியாபாரம்/ சிறிய தொழில்முயற்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க இரண்டு உத்தரவாதிகள் ஏனைய கடன்பாட்டாளர்களிடையேயான உத்தரவாதம் அல்லது இரண்டு தனிப்பட்ட உத்தரவாதிகள் போன்ற ஏதேனும் பதிலீட்டுப் பிணை உறுதிகளை இத்திட்டத்தின் கீழ் பிணை உறுதிகளாகப் பரிசீலனையில் கொள்ள முடியும். |
| 5.6 | துணைக் கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலமும் சலுகைக் காலமும் | : | வியாபாரம்/ சிறுதொழில்முயற்சியின் தன்மையினைப் பொறுத்து 04 மாத சலுகைக் காலத்தினை உள்ளடக்கி உயர்ந்தபட்சம் 12 மாதங்கள |

**6. தகைமையுடைய நன்மைபெறுநர்கள்**

6.1 கடன் திட்டமானது மேலே பிரிவு 04இல் தரப்பட்டுள்ள அண்மைய வெள்ளம்/ மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள எவரேனும் தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுவினர் தமது வியாபாரங்களை/ சிறுதொழில்முயற்சிகளை மீளெழுச்சிப்படுத்துவதற்குத் தேவையான நிதிகளைப் பூர்த்திசெய்வதற்கு கடன் பெறவிரும்புகின்ற அத்தகைய தனிப்பட்டவர்களுக்கும் தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுவினருக்கும் திறந்திருக்கும்.

6.2 துணைக் கடன் விண்ணப்பதாரி பின்வருவனவற்றை ஊர்ஜிதப்படுத்தும் சான்றாகப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் கிராம அலுவலர், மதகுருமார் போன்றவர்களிடமிருந்து கடிதமொன்றினை வழங்குதல் வேண்டும்.

**7. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் தீவிரமான பங்கொன்றினையாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்;

7.1 கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.2 கொடுகடன் வழங்கலுக்கும் அறவிடல்களுக்குமான முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளல்.

7.3 இக்கடன் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் எந்தவொரு சூழ்நிலையிலும் இறுதிக் கடன்பாட்டாளர்களுக்கு 5.4இல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்க உயர்ந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.4 மேலேயுள்ள பிரிவு 6 இற்கிணைங்க, துணைக் கடன் விண்ணப்பதாரிகளிடமிருந்து சேதம் தொடர்பான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுதல். இது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினைத் திருப்திப்படுத்துவதனைப் பொறுத்திருக்கும்.

7.5 ஒவ்வொரு வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகளும் நிதியியல் ரீதியில் ஆற்றல்வாய்ந்தெனவும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கக்கூடியனவா என்பதனையும் சந்தைப்படுத்தல் நியதிகளில் சாத்தியத்தன்மை கொண்டனவென்பதனையும் பற்றி அதுவாகவே திருப்திப்படல் வேண்டும்.

7.6 கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்.

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைக் கடன் மதிப்பீடு, ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்பு மற்றும் அறவிடல் போன்ற மற்றைய விடயங்களை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான விதத்தில் பேரேட்டுக் கணக்குகளையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

ஆ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பெறுகைகளின் பயன்பாட்டிற்கும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்குமான தனித்தனியான கணக்குகளைப் பேண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்) என்பனவற்றின் பரிசோதனை மற்றும் மீளாய்விற்காகக் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், கேட்டுக் கொள்ளப்படும் வேளைகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.7 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட பதிவுசெய்தல் செயன்முறைகளையும் மீள்நிதியிடல் நடவடிக்கை முறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**8. கடன் பதிவுசெய்தல் செயன்முறை**

கடன் பதிவுசெய்தல் செயன்முறையினைப் பின்வருமாறு மேற்கொள்ளுதல் வேண்டும்.

8.1 கொடுகடனை மதிப்பீடு செய்த பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் திட்டத்தின் கீழ் கடன்பெற விரும்புகின்ற ஒவ்வொரு கடன் விண்ணப்பதாரியிடமிருந்தும் பூர்த்திசெய்யப்பட்ட பதிவுப்படிவத்தினை (இணைப்பு I) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இணைப்பு II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தின்படி விண்ணப்பதாரியின் சாராம்சப்படுத்தப்பட்ட விபரங்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாகப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தேவைப்படும் பொழுது பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கடன் விண்ணப்பங்கள் தொடர்பான மூல ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைக் கேட்டுக்கொள்ளும்.

8.2 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் விபரங்களைப் பதிவுசெய்வதுடன் பதிவுசெய்யப்பட்ட கடன் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் குறித்துரைக்கப்பட்ட விசாரணை இலக்கத்தினை ஒதுக்குவதுடன் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தும்.

8.3 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மேலும் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பதிவுசெய்யப்பட்ட விண்ணப் படிவங்களை பார்வையிடுகின்ற உரிமையினைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவுகளின் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அலுவலர்கள் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் முகாமையாளர் அதிகாரமளிப்பதனைத் தொடர்ந்து, தேவையான போது கிளைகளுக்கும் தலைமை அலுவலகத்திற்கும் விஜயம் செய்து உடன் பரீட்சிப்புக்களை மேற்கொள்வர்.

**9. மீள்நிதியிடல் நடைமுறை**

9.1 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் விதிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதியத்தினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கி இக்கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களுக்கும் 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

9.2 மீள்நிதியிடலுக்காகச் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் அவற்றின் கிளைகளின் மூலம் கடன்களை வழங்கியதன் பின்னர் நிதியினை மீளப்பெற்றுக் கொள்வதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், இத்திட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்புக்கள் 2017 ஒத்தோபர் இறுதியில் முடிவடைய வேண்டும் என்பதனால் இக்கடன் திட்டத்தின் கீழான மீள்நிதியிடல் கோரல்கள் அனைத்தும் 2017 நவெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9.3 ஒவ்வொரு மீள்நிதியிடல் விண்ணப்பமும் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

அ) பின்னிணைப்பு I மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (அ)
ஆ) பின்னிணைப்பு II மீள்நிதியிடலுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களின் கூற்று (ஆ)
இ) பின்னிணைப்பு III கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்
ஈ) பின்னிணைப்பு IV வழங்கல் கூற்று
உ) பின்னிணைப்பு V இலங்கை மத்திய வங்கிக்கான உத்தரவாதமொன்றாகச் சாட்டுதல் பத்திரம்
ஊ) பின்னிணைப்பு VI பகிர்ந்தளிப்புக் கடிதம்

9.4 மேலே பிரிவு 9.2இல் தரப்பட்டுள்ள இறுதித் திகதிக்குட்பட்டு, மீள்நிதியிடல் கோரல்கள், கடன் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாகப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9.5 மீள்நிதியிடல் விண்ணப்பத்தின் ஒப்புதல் கிடைத்ததும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடல் விண்ணப்பத்திற்கு ஒப்புதலளித்து அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்கில் மீள்நிதியிடலை விடுவிக்கும். பூரணமாக நிரப்பப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் கிடைத்த 02 கிழமைகளுக்குள் மீள்நிதியிடலை கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. கடன்களின் அறவிடல்**

10.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனமும் வட்டியும் ஆண்டிற்கு இரு தடவை அதாவது யூன் 30ஆம் திகதியும் திசெம்பர் 31ஆம் திகதியும் அறவிடப்படும்.

10.2 பிரதேச அபிவிருத் திணைக்களத்தினால் கிடைக்கச் செய்யப்பட்ட மீள்நிதியிடலுக்கான மீள்நிதியிடல் கடன்களின் மீதான மூலதனமும் வட்டிக் கொடுப்பனவுகளும் மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

10.3 இக்கடன் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உயர்ந்தபட்சம் 12 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துதல் வேண்டும்.

**11. கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்**

11.1 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கடன் திட்டம் தொடர்பான ஆண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படும். கணக்காய்வாளரின் அறிக்கை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குக் கிடைத்ததும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

11.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் இக்கடன் திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அவர்களின் நிதியியல் கணக்குகளை/ கூற்றுக்களைப் பெற்றுக்கொள்வது வேளாண்மை அபிவிருத்திகான பன்னாட்டு நாணய நிதியத்தின் தேவைப்பாடாக இருப்பதனால் அவை இந்நிதியியல் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**12. பொதுவான நிபந்தனைகள்**

இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றிற்கான உரிமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

12.1 தேவையேற்படுமிடத்து மீள்நிதியிடல் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துவதற்கும்

12.2 இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பொருத்தமானது எனக் கருதும் தண்டத்திற்குட்பட்டு, கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்கியொழுகாத சந்தர்ப்பமொன்றில் ஏதேனும் வங்கி கடன் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனமாகத் தொழிற்படுவதற்கான அதன் தகைமையினை இழக்கலாம்.

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**பின்னிணைப்புக்கள்**

**பின்னிணைப்பு I: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (அ)**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ..................................
(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போள்/2017/01இன் கீழானது)

முகவரி:

திகதி:

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

கனவான்களே

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ...................................................................................... மேற்குறிப்பிட்ட

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்)

மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா.................................................................................. (ரூ.......................) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போள்/2017/01 இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டத்தின் கீழ் 2017 ............ ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட மீள்நிதித் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. (i) பந்தி (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மேலேயுள்ள திட்டத்தின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காக தகைமையுடை துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன என்பதனையிட்டும் (ii) அத்தகைய கடன்கள் தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களின் கடன்பாட்டு ஆற்றலுக்குள் இருக்கின்றது என்பது பற்றியும் (iii) அத்தகைய கடன்களின் மீள்கொடுப்பனவிற்காக உத்தரவாதங்கள் பெறப்பட்டிருப்பின் அதன் உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்க வல்லமையுடையவர்களாக இருக்கின்றனர் என்பது பற்றியும் நாம் திருப்திப்பட்டுள்ளோம் என்பது பற்றி இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலர்/(கள்) கையொப்பம், பெயர் மற்றும் பதவி
முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு

**பின்னிணைப்பு II: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (ஆ)**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ..........................................................

**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போர்ள்/2017/01இன் கீழானது)**

**தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

சேரல் : இலங்கை மத்திய வங்கி
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : .............................................. கிளை: ........................... மாவட்டம்: .......................

| விசாரணை இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தேசிய அடையாள அட்டை இல. | கடனின் நோக்கம்* | துணைக் கடன் தொகை | | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | தவணைகள் | | முதல் தவணைக் குரிய திகதி | இறுதித் தவணைக் கான திகதி |
| | | | | கடன் சுழற்சி | தொகை (ரூ.) | | தவணை இல. | தொகை (ரூ.) | | இல. | பெறுமதி | | |
| | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரண்டு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
திகதி: .......................................

* தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 4 இல் உள்ள விடயங்களில் குறிப்பிடப்பட்டவாறு வகைகளைக் குறிப்பிடுக.
** 1வது கடன், 2வது கடன், 3வது கடன் எனக் குறிப்பிடவும்.

**பின்னிணைப்பு III: வாக்குறுதிச் சான்றிதழ்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ..........................................................

**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போர்ள்/2017/01இன் கீழானது)**

திகதி:

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

ரூ. .................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ........................................................................................................................................
........................................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அல்லது கட்டளையின்படி **கொழும்பில்,** பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ........................................................................... ............. (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

.................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

............................
(முத்திரை)

1. ........................................................
2. ...............................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/(கள்) கையொப்பம்

சாட்சிகள் :

1. ..........................................
2. ..........................................

**பின்னிணைப்பு IV: வழங்கல் குறிப்பு**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................

**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போள்/2017/01இன் கீழானது)**

திகதி:

**வழங்கல் குறிப்பு**

**சேரல்: இலங்கை மத்திய வங்கி**

தங்களின் ................. திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போள்/2017/01 இல் குறிப்பிடப்பட்டுள்ள "தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டம்" என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு ரூபா............................................ (ரூ.............) இனை வழங்க உடன்பட்டுள்ளீர்கள். இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா............................................... இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

1. ..............................................
2. ...............................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/(கள்) கையொப்பம்

**பின்னிணைப்பு V: சாட்டுதல் படிவம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................

**(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/என்ஏடிஈபி/போள்/2017/01இன் கீழானது)**

**திகதி:**

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் ........................................................................................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு .................. வட்டியுடன் ரூபா........................................ (ரூ..........) கொண்ட கடனை மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |
| | | | |

..............................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்)
இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

---

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/என்ஏடிஈபி/யுத்2016/01 (திருத்தம்)** 2017 ஓகத்து 2

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற "தருண திரிய" இளைஞர் வலுவூட்டல் மற்றும் தொழில்வாய்ப்புச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம்**

இது 03.08.2016 திகதியிடப்பட்ட இல.ஆர்டிடி/என்ஏடிஈபி/யுத்/2016/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் மற்றும் அதன் பின்னரான 2017.07.11 திகதியிடப்பட்ட திருத்தம் என்பன தொடர்பானது.

மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் பிரிவு 7.2(இ) பின்வருமாறு திருத்தப்படுவது பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**7.2 உயர்ந்தபட்சக் கடன் வரையறையான ரூ.1,000,000 வரையில் வழங்கப்படவுள்ள கடனின் முக்கிய பண்பு**

இ. உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் 6 மாதச் சலுகைக் காலத்துடன் 48 மாதங்களாக இருக்கும்.

**கடன் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.**

திருத்தப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் நடைமுறைத் திகதி 2017.07.21 ஆக இருக்கும்.

இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை உங்கள் வங்கிக் கிளைகளிலுள்ள தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/ஆர்ஈஏடி/2017/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2017 செத்தெம்பர் 07

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: "அத்வெல்ல" அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான கடன் திட்டம்

1. **அறிமுகம்**

இலங்கையில் நிகழ்ந்த அனர்த்தங்களின் நாசம் விளைக்கும் தாக்கங்களையும் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களைக் குறைக்கின்ற அவசியத்தினையும் பரிசீலனையில் கொண்டு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி "அத்வெல்ல" கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு, ஏதேனும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையினை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு நிதியியல் வசதிகளை வழங்குவதேயாகும். இந்நோக்கத்திற்காக, இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆரம்ப நிதியுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் நிதியமொன்றினை உருவாக்கும். இது மீள்நிதியிடல் கடன் திட்டமாகத் தொழிற்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழான கடன்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக அதாவது இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு விரும்புகின்ற, இலங்கை மத்திய வங்கியுடன் துணைக் கடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் முற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினூடாக தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

இதன்படி, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், இத்திட்டத்தின் கீழ் நிதியியல் வசதிகளை வழங்குவதற்காக, இலங்கை அரசாங்கத்தினால் இலங்கை மத்திய வங்கிக்கு அங்கீகரித்து அறிவிக்கப்பட்ட அனர்த்தம் பற்றி அறிவிக்கின்ற வழிகாட்டல்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுத்தார்.

2. **கடன் திட்டத்தின் நோக்கம்**

கடன் திட்டத்தின் முக்கிய நோக்கம் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு சலுகை ரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கொடுகடன் வசதிகளை வழங்குவதேயாகும்.

3. **தகைமையுடைய அனர்த்தங்கள் மற்றும் துணைக் கடன் பாட்டாளர்கள்**

இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டிருக்கும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கைகளை, சுயவேலை வாய்ப்பினையும் சிறு அளவில் வியாபாரம் செய்வோரையும் முக்கிய கவனத்தில் கொண்டு அவற்றை மீண்டும் தொடங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும்.

4. **நிதியிடல்**

இக்கடன் திட்டத்தின் கீழ், மீள்நிதியிடல் பகிர்ந்தளிப்பிற்கான நிதிகள் ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும்.

5. **கடன் திட்டத்தின் ஒட்டுமொத்த முகாமைத்துவம்**

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக இருக்கும்.

6. **கடன் திட்டத்தின் அடிப்படைப் பண்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 6.1 | மொத்த நிதி ஒதுக்கம் | : | இலங்கை அரசாங்கத்தின் ரூ.2,000 மில்லியன்.<br><br>கடனின் அறவிடல்கள் 20 ஆண்டுகள் சுழலக்கூடியதாக இருக்கும். |
| 6.2 | துணைக் கடன் வரையறை | : | பொருளாதார நடவடிக்கைகளை மீளத்தொடங்குகின்ற அல்லது திருத்தியமைக்கின்றமை தொடர்பான மதிப்பிடப்பட்ட மீள ஆரம்பிக்கின்ற செலவு, பெறப்பட்ட அல்லது பெறத்தக்க காப்புறுதிக் கோரல்கள் நீங்கலாக, உயர்ந்தபட்சம் ரூ.500,000 கொண்ட தொகை |

| | | | |
|---|---|---|---|
| 6.3 | மீள்நிதியிடல் | : | பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட துணைக் கடன் தொகையில் 100 சதவீதத்திற்கு இலங்கை மத்திய வங்கி மீள்நிதியிடும் |
| 6.4 | தகைமையுடைய பொருளாதார நடவடிக்கைகள் | : | கடன் திட்டத்தின் நோக்கத்திற்காக, வேளாண்மை; பெருந்தோட்டம்; கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி; வர்த்தகம், வியாபாரம் தொழில்சார் நிபுணத்துவம் அல்லது தொழிற்பயிற்சி என்பனவற்றின் கீழ்வரும் ஏதேனும் பொருளாதார நடவடிக்கைகளும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தகைமையுடையதெனக் கருதப்படும் பொருளாதார நடவடிக்கைகளும் சுயவேலைவாய்ப்பு மற்றும் சிறுஅறிவு வியாபாரங்களை மேற்கொள்பவர்களை முக்கிய கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும். |
| 6.5 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள்நிதியிடல் மீதான வட்டி வீதம் | : | மீள்நிதியிடல் வட்டி விதிக்கப்படமாட்டாது. |
| 6.6 | இறுதிப் பயன்பாட்டாளர்களுக்கான வட்டி வீதம் | : | ஆண்டிற்கு 2 சதவீதம். |
| 6.7 | பிணையுறுதி | : | பொருளாதார நடவடிக்கையின் ஆற்றல்வாய்ந்த தன்மைக்கு முன்னுரிமையளித்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பிணையுறுதி ஏற்றுக்கொள்ளப்படுவது பொருளாதார நடவடிக்கையின் தன்மையினைப் பொறுத்ததாக இருக்கும். |
| 6.8 | சலுகைக் காலம் | : | பொருளாதார நடவடிக்கையின் தன்மையினைப் பொறுத்து, கடனின் இறுதித் தவணை பகிர்ந்தளிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகின்ற உயர்ந்தபட்சம் 6 மாதங்கள். |
| 6.9 | துணைக் கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலம் | : | பொருளாதார நடவடிக்கையின் தன்மையினைப் பொறுத்து சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் 3 ஆண்டுகள். |
| 6.10 | தொழிற்பாட்டுப் பிரதேசங்கள் | : | இலங்கை அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவையென அறிவிக்கப்பட்ட பிரதேசங்கள். |

**7. துணைக் கடன்பாட்டாளர்களுக்கான பொதுவான தகைமை நிபந்தனைகள்**

தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் இருத்தல் வேண்டும்;

7.1 இலங்கையில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல்;

7.2 ஏதேனும் மற்றைய நிதியியல் நிறுவனங்களில் கடனைச் செலுத்தத் தவறாதவராக இருத்தல்;

7.3 உத்தேச செயற்றிட்டம் ஆற்றல்வாய்ந்த காசுப்பாய்ச்சலையும் சிறந்த மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் கொண்டதாக இருக்கின்றதென பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தக்கூடியதாக இருத்தல்;

7.4 ஆற்றல்வாய்ந்த வியாபாரத் திட்டம் பிணையுறுதி, ஏதேனுமிருப்பின் அதனை வழங்கக்கூடியவராக அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தனிப்பட்ட உத்தரவாதங்களை வழங்கக்கூடியவராக இருத்தல்;

7.5 கீழேயுள்ள பந்தி 8இல் குறிப்பிடப்பட்டவாறு அனர்த்தங்களின் காரணமாகவே சேதம் ஏற்பட்டது என்பதற்கான ஊர்ஜிதமான சான்றுகளை வழங்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

**8. துணைக் கடன்பாட்டாளர்களினால் ஊர்ஜிதமான சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்**

துணைக் கடன் விண்ணப்பதாரி பின்வருவனவற்றின் பொருட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊர்ஜிதமான சான்றுகளைக் கிராம அலுவலரிடமிருந்தும் பிரதேச செயலாளர் போன்றவர்களிடமிருந்தும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.1 குறிப்பிட்ட அனர்த்தத்தினால் அவரின்/ அவளின் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன; அத்துடன்

8.2 குறிப்பிட்ட அனர்த்தத்தின் போது தொழில்முயற்சி மற்றும் வியாபாரம் தொழிற்பாட்டிலிருந்தது.

**9. இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வகிபாகம்**

9.1 தேவையான வேளையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் திருத்தங்களையும் விடுத்தல்.

9.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விதந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரியின் கடன்களைப் பதிவுசெய்தல்.

9.3 பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கடனுக்கும் குறித்துரைக்கப்படட விசாரணை இலக்கமொன்றினை ஒதுக்குதல் மற்றும் இதனைத் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தல்.

9.4 சரியாக நிரப்பப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும் கிடைக்கப்பெற்றதன் ஒழுங்கில் முதலில் வந்தவர்களுக்கு முதலில் என்ற அடிப்படையில துணைக் கடன்கள் விடுவிக்கப்படுவதுடன் விடுவிக்கப்பட்ட கடன் தொடர்பான விபரங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு அறிவித்தல். சரியாக நிரப்பப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 03 கிழமைகளுக்குள் மீள்நிதியிடலை வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல்.

9.5 தேவையான பொழுது கடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கப்படுதல்.

9.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொன்றிற்கும் தேவையின் அடிப்படையில் அவற்றின் செயலாற்றத்தினைப் பொறுத்துக் கொடுகடன் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அறிவித்தல்.

9.7 அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட நிதியையும் கடன் திட்டத்தின் சுழலும் நிதியையும் முகாமைப்படுத்தல் மற்றும் கணக்குகளைப் பேணுதல்.

9.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல்.

9.9 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்டுள்ள கிளைகளின் அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்காகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

**10. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் தீவிரமான பங்கினை ஆற்றுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்:

10.1 கிளை அலுவலகங்களின் கடன் தொழிற்பாடுகளைக் கண்காணித்து மேற்பார்வை செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைப்புக்களை ஏற்படுத்துவதற்காகவும் தலைமை அலுவலகத்திற்குள் மூத்த அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

10.2 துணைக் கடன்களை வழங்குவதற்காக மத்திய வங்கியின் ஆலோசனையுடன் கிளைகளின் பொருத்தமான எண்ணிக்கையினைக் குறித்துரைத்தல் மற்றும் கிளை வலையமைப்பினூடாகக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தல்.

10.3 சேதங்களைப் பரீட்சிப்பதற்காகவும் கடன் பயன்பாடு தொடர்பில் முன்னேற்றங்களை மேற்பார்வை செய்வதற்காகவும் துணைக் கடன்களின் அறவிடலுக்காவும் குறித்துரைக்கப்பட்ட கிளைகளில் போதுமான கிளை அலுவலர்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்தல்.

10.4 கடன்பாட்டாளர்களை அடையாளம் காணுதல், கடன் செயன்முறைப்படுத்தல், கடன்களின் பகிர்ந்தளிப்பு, மேற்பார்வை மற்றும் பின்தொடர்தல் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கடன்களை கடன் அறவிடல் என்பன தொடர்பில் கிளை முகாமையாளர்களுக்காக விபரமான வழிகாட்டல்களைத் தயாரித்தல்.

10.5 கடன் திட்டங்களை நடைமுறைக்கிடுவது பற்றி கிளை அலுவலர்களுக்கு அறிவூட்டுதல்.

10.6 ஒவ்வொரு கடன் தவணைகளிலும் அதனைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் பொருளாதார நடவடிக்கையின் பௌதீக முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக தலத்திலான பரீட்சிப்புக்கள் கிரமமாக மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல்.

10.7 குறித்துரைக்கப்பட்ட கிளைகள் நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் மற்றும் அறவிடல் செயலாற்றம் தொடர்பில் கிரமமான அறிக்கைகளை தலைமை அலுவலகமூடாக மத்திய வங்கிக்கு வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் அத்தகைய தரவுகளைத் திரட்டி, காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.8 துணைக் கடன்பாட்டாளராக வரக்கூடியவர்களுடன் கூட்டங்களை அல்லது கலந்துரையாடல்களை அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான வழிகளினூடாகக் கடன் திட்டங்களை ஊக்குவித்தல் வேண்டும்.

10.9 கடன் வழங்குதல் மற்றும் அறவிடல் தொடர்பில் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

10.10 கிளை மட்டத்தில் கடன்களுக்கான விண்ணப்பங்களை வழங்குதல் மற்றும் சேகரித்தல்.

10.11 மேலேயுள்ள பந்தி 8இற்கிணங்க சேதங்கள் தொடர்பிலான உறுதிப்படுத்தல்களை துணைக் கடன் விண்ணப்பதாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

மேலும், பங்கேற்கும் நிதியியல் கிளையின் முகாமையாளர் அல்லது கிளையின் மூத்த அலுவலர் பொருளாதார நடவடிக்கைகளின் தகைமையினைப் பற்றி திருப்திப்படுத்துவதற்காக சேதமடைந்த வியாபாரத் தலத்திற்கு விஜயம் செய்தல் வேண்டும்.

10.12 இணைப்பு I இல் உள்ளவாறு ஒவ்வொரு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தொடர்பிலும் துணைக் கடன்களுக்கான பதிவுசெய்தல் விண்ணப்பங்களைத் தயாரித்து, மேலேயுள்ள பந்தி 8இற்கிணங்க துணைக் கடன் விண்ணப்பதாரிகளிடமிருந்து சேதங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல் பிரதியொன்றினையும் இணைத்துச் சரியாக நிரப்பப்பட்ட பதிவுசெய்தல் விண்ணப்பத்தினைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக பதிவுசெய்தலுக்காகப் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஏதேனும் மேலதிகத் தகவல்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பதிவுசெய்தல் விண்ணப்பம் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை உசாவுவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கிறது.

10.13 தொடர்பான கடன்களை மத்திய வங்கியில் பதிவுசெய்த பின்னர், கடன்பாட்டாளரின் வங்கிக் கணக்கினூடாக தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு துணைக் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

10.14 இக்கடன்திட்டத்தின் கீழ், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் எந்தவொரு சூழ்நிலையிலும் இறுதிக் கடன்பாட்டாளர்களுக்கு ஆண்டிற்கு 2 சதவீதத்திற்கும் கூடுதலான வட்டி வீதத்தில் கடன்களை வழங்காமல் இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

10.15 கடனினை அடையாளம் காணும் நோக்கத்திற்காக, மீள்நிதியிடல் தொடர்பாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினைத் தொடர்பு கொள்ளும் பொழுது ஒவ்வொரு கடன்கள் தொடர்பிலும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விசாரணை இலக்கத்தினைப் பேரேட்டுப் பத்திரத்தின் மீது குறிப்பிடல் வேண்டும்.

10.16 கடன் பகிர்ந்தளிக்கப்பட்டு 30 நாட்களுக்கிடையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாகத் துணைக் கடன்களுக்கான மீள்நிதியிடல் விண்ணப்பங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். துணைக் கடன்களுக்கான மீள்நிதியிடல் விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அ. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (இணைப்பு IV)
ஆ. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - கடன் பகிர்ந்தளிப்புக்களின் கூற்று (இணைப்பு III)
இ. கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் (இணைப்பு IV)
ஈ. வழங்கல் கடிதம் (இணைப்பு V)
உ. சாட்டுதல் படிவம் (இணைப்பு VI)
ஊ. பகிர்ந்தளித்தல் கடிதம் (இணைப்பு VII)

10.17 கிளைகள் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன என்பதனை உறுதிப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் தொடர்பில் முன்னேற்ற அறிக்கைகளையும் கடன் அறவிடல் போன்றவற்றையம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களி தலைமை அலுவலகங்களுக்குக் கிரமமாக சமர்ப்பித்தல்.

10.18 கடனை அறவிடுவதற்காக அடிக்கடி விஜயம் செய்தல், துணைக் கடன்பாட்டாளருக்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல் உட்பட சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல்.

10.19 துணைக் கடன் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கண்டறிவதற்கு வசதிப்படுத்தும் விதத்தில் கடன் திட்டம் தொடர்பில் மற்றைய விடயங்களுடன் துணைக் கடன் மதிப்பீடு, ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்பு மற்றும் அறவிடல் மற்றும் தனியார் தரவுத்தளம் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பதிவுகளையும் பேரேடுகளையும் பேணுதல்.

10.20 கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்.

அ. கடன் பெறுகைகளின் பயன்பாடு மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காகத் தனியான ஏடுகளையும் கணக்குகளையும் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

ஆ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பரீட்சிப்புக்காகவும் மீளாய்விற்காகவும் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. **பொதுவான நிபந்தனைகள்**

தேவையானவிடத்து தேவையானவாறு கடன் திட்டங்கள் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துகின்ற உரிமையினை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I**
**பதிவு இலக்கம்: ..........................................................**

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான "அத்வெல்ல" கடன் திட்டம்**
**கடன் பதிவு விண்ணப்பம்**

1. பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர் : ..........................................................................................
2. கிளையின் பெயர் : ..........................................................................................
3. கிளையின் முகவரி : ..........................................................................................
4. தொலைபேசி/ தொலைநகல் இல. : ..........................................................................................
5. விண்ணப்பதாரியின் அந்தஸ்து : தனிப்பட்டவர் பங்குடமை
6. விண்ணப்பதாரி/ பங்காளி/ பணிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி:

| பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் | தே.அ.அ. இலக்கம் |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |

7. அனர்த்தத்தின் வகை: ........................................

8. அனர்த்தம் நிகழ்ந்த திகதி (திகதிகள்) .......................... இலிருந்து ................. வரை

(துணைக் கடன் விண்ணப்பதாரியின் வியாபாரம்/ சிறிய தொழில்முயற்சி வெள்ளம்/ வரட்சி நிகழ்ந்த நேரத்தில் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன என்பதனையும் குறிப்பிட்ட அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டன என்பதனையும் நிரூபிக்கும் விதத்தில் பங்கேற்கும் நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்க உறுதிப்படுத்தல் கடிதத்தின் மூலப்பிரதியினை கிராம அலுவலர், மதகுருமார் போன்றவர்களிடமிருந்து தயவுசெய்து வழங்கவும்.)

9. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

.............................................................................................................................................................................................

10. மாவட்டம்: ..............................................................

11. பொருளாதா நடவடிக்கையின் வகை:

(1) வேளாண்மை ☐

(2) பெருந்தோட்டம் ☐

(3) விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி ☐

(4) பணிகள் (வர்த்தகம், வியாபாரம், தொழில்சார் அல்லது தொழில் உள்ளடங்கலாக) ☐

(5) ஏனையவை ☐

12 அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைக் கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்பட வேண்டிய செயற்றிட்டங்களின் சுருக்கமான விபரணம் (கடனின் நோக்கம்):

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

13. செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. ...........................................................................................................

14 கடன்பாட்டாளரின் பங்குரிமை மூலதனப் பங்களிப்பு : ரூ. ...........................................................................................................

15. தேவைப்பட்ட கடன் தொகை : ரூ. ...........................................................................................................

16. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை: ரூ. ....................................................

மேலே 12இல் விபரிக்கப்பட்டுள்ள உத்தேசச் செயற்றிட்டம் என்னால்/ கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டதெனினும் அது போதுமானளவு காசுப்பாய்ச்சலையும் நிதியியல் ரீதியான ஆற்றலையும் கொண்டிருக்கின்றதெனவும் நான் உறுதிப்படுத்துவதுடன் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கை கடன் திட்டத்தின் கீழான நிதிக்கும் ஒப்புதளிக்கின்றேன்.

............................... ..........................................................................

திகதி கிளை முகாமையாளரின் கையொப்பம்

**இணைப்பு** II

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ...................................

**(07/09/2017 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/றீட்/2017/01)**

முகவரி:

திகதி:

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான “அத்வெல்ல” கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

கனவான்களே

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ..........................................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) மேற்குறிப்பிட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா................................ (ரூ........................) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணபத்தினைத் தயாரிக்கையில், தங்களின் 2017.08.08 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/றீட்/2017/01 இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டத்தின் கீழ் 2017 ........... ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட றீட் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

(i) மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காகத் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

(ii) அத்தகைய கடன்கள் தொடர்பான கடன்பாட்டாளர்களின் கடன்பாட்டு அதிகாரங்களுக்குள் காணப்படுகின்றன.

(iii) அத்தகைய கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்தவரை உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலர்/(கள்) இன் பெயர் மற்றும் விபரம்
முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு

**இணைப்பு** III

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ................................

**(07/09/2017 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/றீட்/2017/01)**

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான "அத்வெல்ல" கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

சேரல் : இலங்கை மத்திய வங்கி
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு
பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : .............................................. கிளை: ........................... மாவட்டம்: .......................

| விசாரணை இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி தே.அ.அ இல. | செயற் றிட்ட விபரம் மற்றும் கடனின் நோக்கம் | துணைக் கடன் தொகை (ரூ.) | பகிர்ந் தளிப்புத் தொகை (ரூ.) | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | தவணைகள் | | முதல் தவணைக் குரிய திகதி | இறுதித் தவணைக் கான திகதி |
| | | | | | | | | தவணை களின் எண். | தவணை களில் பெறுமதி | | |
| | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு, மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரண்டு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
திகதி: .......................................

**இணைப்பு** IV

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

**(07/09/2017 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/றீட்/2017/01)**

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான "அத்வெல்ல" கடன் திட்டம்**

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

கொழும்பு: ...............................
திகதி: ......................................
ரூ. .................................................
கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ..........................................................................................................................................
..........................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அல்லது கட்டளையின்படி கொழும்பில், பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா .......................................................................... ............. (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

............................
(முத்திரை)

1. .......................................................
2. ................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

சாட்சிகள்

1. ..........................................
2. ..........................................

**இணைப்பு** V

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

**(07/09/2017 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/றீட்/2017/01)**

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான "அத்வெல்ல" கடன் திட்டம் வழங்கல் கடிதம்**

கொழும்பு

திகதி:

சேரல்: இலங்கை மத்திய வங்கி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 88அ இன் ஏற்பாடுகளின் கீழ் எமக்கு வழங்கப்பட்ட கடன் தொகையான ரூ. ....................................................................... (ரூ. ...............) இனைப் பரிசீலனையில் கொண்டு தங்களின் .................. 08.08.2017திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/றீட்/2017/01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான கடன் திட்டத்திற்கு (றீட் கடன் திட்டம்) என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு ரூபா....................... ...................... (ரூ..............) இனை வழங்க உடன்பட்டுள்ளீர்கள். இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

.................................................................
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

1. .......................................................
2. ...............................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

**இணைப்பு** VI

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

**(07/09/2017 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/றீட்/2017/01)**

திகதி:

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான "அத்வெல்ல" கடன் திட்டம் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 67ஆம் பிரிவினாலும் 1968ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினாலும் (திருத்தம்) திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் .......................................................................................................... ........................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு ................... வட்டியுடன் ரூபா......................................... (ரூ..........) கொண்ட கடனை மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர், தேசிய அடையாள அட்டை இல. மற்றும் முகவரி | திகதி | அடகு வகை மற்றும் விபரம், தேவையெனின் | நொத்தாரிசு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

.............................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

------------------------------------------------------------

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

இணைப்பு VII

### பகிர்ந்தளிப்பு கடிதம்

(08/08/2017 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/நீட்/2017/01)
வங்கியின் பெயர்:
வங்கியின் குறியீட்டு இல:
கிளையின் பெயர்:
கிளையின் குறியீட்டு இல:
கடனின் தொடர் இல:
திகதி:
பகிர்ந்தளிப்பு*:

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

### தேசிய வேளாண் வியாபார மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டம்

**விசாரணை இலக்கம்:**

1. **கடன்பாட்டாளரின் விபரங்கள் :**
   1.1 கடன்பாட்டாளரின் பெயர் :
   1.2 கடன்பாட்டாளரின் முகவரி :

2. **கடனின் விபரங்கள்**
   2.1 கடனின் நோக்கம் :
   2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :
   2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.
   அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ.
   **மொத்தம் ரூ.** ...............................................
   2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி:
   கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி:
   2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:
   திகதி: தொகை (ரூ.):
   2.6 வட்டி வீதம்

3. **கடனின் நிலை**
   3.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை
   மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் ரூ.
   3.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை
   மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல் ரூ.
   **மொத்தம் ரூ.** ................................

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

கிளை முகாமையாளரின் கையொப்பம்
திகதி: கிளை முகாமையாளரின் பெயர்

* பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/எஸ்ஈபிஜ/2016/01 (திருத்தம்)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2017 ஒத்தோபர் 09

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் "சுவசக்தி - பத்து இலட்சம் வேலை வாய்ப்புக்களை நோக்கி": கடன் திட்டத்திற்கான திருத்தங்கள்

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுவசக்தி கடன் திட்டம் தொடர்பில் 2017.02.09

திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/சுவசக்தி/2017/01 (இதனகத்துப் பின்னர் முதன்மை விடயம் 01 எனக் குறிப்பிடப்படும்) இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

1. முதன்மை விடயம் 01இன் கிளை வாசகம் 1 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலீடாகப் பின்வரும் வாசகம் சேர்க்கப்படுகிறது.

"இலங்கை மத்திய வங்கியும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் இணைந்து, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்திக்கும் தொழில் உருவாக்கத்திற்குமாக "சுவசக்தி" என்ற பெயரில் கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வதிகின்றவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குமான புதிதாக நுழைபவர்களுக்கு நிதியியல் உதவிகளை வழங்குவதனூடாகத் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதேயாகும்".

2. கிளைவாசகம் 4.3.1(ஆ) இத்தால் நீக்கப்படுகிறது.

3. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கிளை வாசகம் 4.7 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் கிளைவாசகம் புகுத்தப்படுகின்றது.

**4.7 இலக்கிடப்படும் தொகுதியினர்:**

"முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், பொலநறுவை, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, மொனராகலை, யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் அம்பாறை மாவட்டங்களில் புதிதாக நுழைவோருக்குக் கடன் வழங்குவதற்குப் பரிசீலித்தல் வேண்டும்"

4. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கிளைவாசகம் 4.17 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் கிளைவாசகம் புகுத்தப்படுகிறது.

**4.17 தொழிற்படும் பிரதேசம்:**

"முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், பொலநறுவை, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, மொனராகலை, யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் அம்பாறை மாவட்டங்கள்"

5. முதன்மை தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கிளைவாசகம் 7.1 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் கிளைவாசகம் புகுத்தப்படுகிறது.

7.1 "முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், பொலநறுவை, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, மொனராகலை, யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் அம்பாறையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல்"

6. கிளைவாசகம் 8 - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

பந்தி ஊ (ii) இலுள்ள "இணைப்பு V (ஆ) இலுள்ளவாறு ஒவ்வொரு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் (புதிதாக நுழைபவர்கள் தவிர்ந்த விண்ணப்பதாரிகள்) தொடர்பிலான துணைக் கடன்களுக்காக" என்ற சொற்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

இத்திருத்தங்கள் 2017.09.19 அன்று தொழிற்பாட்டிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றன.

தயவுசெய்து தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இத்திருத்தங்களின் உள்ளடக்கத்தினைத் தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும்.

திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர் / பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**2017இன் 01ஆம் இலக்க நுண்பாகநிதிச் சட்ட பணிப்புரைகள்** **2017 மாச்சு 03**

## வியாபாரத் தலங்களைத் திறத்தல், மூடிவிடுதல் மற்றும் இடம்மாற்றுதல்

2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்பாக நிதியளிப்புச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 1. | பணிப்பாளருக்கு அறிவித்தல் | 1.1 | உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியொன்று, இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் வியாபாரத் தலங்களைத் திறப்பதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள ஏதேனும் வியாபாரத் தலத்தினை மூடிவிடுவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள ஏதேனும் வியாபாரத் தலத்தின் அமைவிடத்தினை மாற்றுவதற்கு முன்னதாக பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். |
| 2. | புதிய வியாபாரத் தலங்களைத் திறத்தல் | 2.1 | உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி வியாபார விரிவாக்கம் தொடர்பில் முன்மதியுடைய கொள்கையொன்றை உருவாக்க வேண்டியதுடன் வருடாந்த வியாபார விரிவாக்கத் திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டு சனவரி 31ஆம் நாளுக்கு முன்னதாகப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| | | 2.2 | மேலே பணிப்புரை 2.1இல் குறிப்பிடப்பட்டவாறு, வருடாந்த வியாபார விரிவாக்கத் திட்டம் தொடர்பான கொள்கைகளை உருவாக்குகையில் ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் புதிய வியாபாரத் தலங்களில் வியாபாரத்திற்கான வாய்ப்புக்கள், இலாபத்தன்மை, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறன், மேலதிக அலுவலர்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் அலுவலர்களை மீளப்பரவலாக்குதல், துரிதமானதும் செலவுச் சிக்கனமானதுமான விதத்தில் வாடிக்கையாளர்களுக்கு பணிகளை விரிவாக்குதல் போன்ற விடயங்களைப் பெருமளவிற்குக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். |

2.3 உரிமம் பெற்ற நிதிக் கம்பனி புதிய வியாபாரத் தலத்தை/ தலங்களைத் திறப்பதற்கு முன்னர் அத்தகைய திறத்தல் பற்றிய தகவல்களை பின்னிணைப்பு I (பக்கம் இல. 4 - 6)இல் தரப்பட்டுள்ள படிவங்களுக்கிணங்கப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.4 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி அது வியாபாரத் தலத்தினைத் திறப்பதற்கென விண்ணப்பக்கின்ற ஒவ்வொரு பிரதேசத்தினதும் நிதியியல் பணிகளின் தேவைகளைக் காட்டும் பொருளாதார சாத்தியவள ஆய்வொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய ஆய்வு குறைந்தபட்சம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

i. நிதியியல் நிறுவனங்களின் அடர்த்தியை (பிரதேச செயலகத்திலுள்ள குடித்தொகையினை பிரதேச செயலகத்திலுள்ள நிதியியல் நிறுவனங்களினது கிளைகளின் எண்ணிக்கையால் வகுக்கப்பட்ட) அடிப்படையாகக் கொண்ட உத்தேச பிரதேசத்திலுள்ள நிதியியல் பணிகளுக்கான தேவை.

ii. அப்பிரதேசத்தில் நிதியியல் பணிகளுக்கான கேள்வியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு மற்றும் வியாபாரத் தலங்களின் நடவடிக்கைகள் இலாபம் தரக்கூடியனவாக மாறக்கூடிய காலப்பகுதி.

iii. வியாபாரத் தலத்தின் எதிர்பார்க்கப்படும் வியாபார அளவு, வியாபார அபிவிருத்தி நிறுவகச் செலவு, தொழிற்பாட்டுச் செலவு மற்றும் மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஒரு போதுமான காலப்பகுதியில் அதன் பெறுபேறு என்பனவற்றின் அடிப்படையில் விண்ணப்பித்த வியாபாரத் தலத்தின் நிதியியல் அநுமானங்கள்.

2.5 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், புதிய வியாபாரத் தலத்தினை/ தலங்களைத் திறப்பதற்கு முன்னதாக பணிப்பாளர் சபையின் முன்னொப்புதல் பெறப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.6 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி தொடர்பான அரச அதிகாரிகளிடமிருந்து பொருத்தமான விதத்தில் ஒப்புதலைப் பெற்றுள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.7 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி உத்தேச புதிய வியாபாரத் தலத்திற்காக பொலிஸ் இசைவுச் சான்றிதழைப் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.8 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி புதிய வியாபாரத் தலமொன்றினை உருவாக்கி நிறுவும் காலப்பகுதியில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பத்தில் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள், சமர்ப்பிப்புக்கள் அல்லது எறிவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவற்றையேனும் செய்திருப்பின் அது பற்றி பணிப்பாளருக்கு அறிவிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.9 புதிய வியாபாரத் தலம் திறக்கப்பட்டதன் பின்னர் பத்து வேலை நாட்களுக்குள் புதிய வியாபாரத் தலம் திறக்கப்பட்ட திகதி பற்றி பணிப்பாளருக்கு அறிவித்தமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3. வியாபாரத் தலங்களை மூடிவிடுதல்

3.1 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி ஏற்கனவேயுள்ள வியாபாரத் தலத்தினை மூடிவிடுவதற்கான விண்ணப்பத்தினை, இணைப்பு II (பக்கம் இல. 7)இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க தயாரித்து, மூடிவிடுவதற்கு முன்னதாக பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

3.2 வியாபாரத் தலத்தினை மூடுவிடுவதற்கு முன்னதாக உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி அதன் பணிப்பாளர் சபையின் முன்னொப்புதலைப் பெற்றிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3.3 மூடப்பட்ட திகதிக்குப் பின்னர், வியாபாரத் தலம் அமைந்திருந்த இடத்தில் மேலும் நுண்பாக வியாபார நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதனை உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3.4 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி வியாபாரத் தலம் மூடப்பட்டமை பற்றி பத்து வேலை நாட்களுக்குள் அத்தகைய மூடல் திகதி பற்றி பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டமையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4. வியாபாரத் தலத்தினை வேறோரிடத்தில் அமைத்தல்

4.1 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி, ஏற்பனவேயுள்ள வியாபாரத் தலத்தினை மூடிவிடுவதற்கு முன்னதாக, இணைப்பு III (பக்கம் இல. 8)இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க, பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

4.2 உத்தேச புதிய வியாபாரத் தலங்களின் பொருட்டு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி பொலிஸ் இசைவுச் சான்றிதழைப் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 ஏற்கனவேயுள்ள ஏதேனும் வியாபாரத் தலத்தின் அமைவிடத்தினை மாற்றுவதற்காக பணிப்பாளர் சபையின் முன்னொப்புதலைப் பெற்றுக் கொள்வதனை உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.4 வியாபாரத் தலம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் ஆரம்ப அமைவிடத்தில் கம்பனியினால் நுண்பாக நிதி வியாபாரம் மேலும் இடம்பெறவில்லை என்பதனை உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. விளக்கங்கள் இப்பணிப்புரையில்,

i. “வியாபாரத் தலங்கள்” என்பது உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியினால் நடத்தப்படும் நுண்பாக நிதி வியாபாரங்கள் நடைபெறும் ஏதேனும் இடம் எனப் பொருள்படும்.

ii. “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**பின்னைப்பு I**

**புதிய வியாபாரத் தலமொன்றினைத் திறத்தல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | **பொது** | | | |
| 1.1. | உரிமம் பெற்ற நுண்பாகநிதிக் கம்பனியின் பெயர் | | | |
| 1.2. | உத்தேச திறத்தலுக்காக பணிப்பாளர் சபையின் ஒப்புதல் திகதி: | | | |
| 1.3. | தொடர்பு கொள்ளும் ஆள் | | | |
| அ. | அலுவலரின் பெயர் | | | |
| ஆ. | பதவி | | | |
| இ. | தொலைபேசி | | | |
| ஈ. | மின்னஞ்சல் | | | |
| 2 | **எறிவுசெய்யப்பட்ட நிதியியல் தகவல்கள்: உத்தேச வியாபாரத் தலம்/ தலங்கள் உட்பட கம்பனியினது தொழிற்பாடுகளின் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான நிதியியல் எதிர்பார்ப்புக்களை தயவுசெய்து தருக.** | | | |
| | விடயம் | **ஆண்டு 1** | **ஆண்டு 2** | **ஆண்டு 3** |
| 2.1 | செயற்படாக் கடன்வழங்கல்கள் விகிதம், % | | | |
| 2.2 | மொத்த வைப்புக்கள், ரூ. மில்லியன் | | | |
| 2.3 | மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள், ரூ. மில்லியன் | | | |
| 2.4 | மைய மூலதனம், ரூ. மில்லியன் | | | |
| 2.5 | இலாபம்/ (இழப்பு), ரூ. மில்லியன் | | | |
| 3 | **புதிய வியாபாரத் தலங்களைத் திறத்தல்** | | | |
| 3.1 | **உத்தேச புதிய வியாபாரத் தலங்களின் எண்ணிக்கை** | | | |
| | | | மொத்தம் | |
| 3.2 | **புதிய வியாபாரத் தலங்களின் விபரங்கள்,** பின்னிணைப்பு I (அ) இன்படி உத்தேச வியாபாரத் தலங்களின் விபரங்களை தனித்தனியாகத் தருக. | | | |
| | | | | |
| 4 | **உறுதிப்படுத்தல்** | | | |
| | கீழே கையொப்பமிட்டவர் கம்பனியின் சார்பில் இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரத்தினைக் கொண்டிருப்பதுடன் இங்கே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும். | | | |
| | பெயர்: | | | |
| | பதவி: | | | |
| | கையொப்பம்: | | | |
| | திகதி: | திதி/மாமா/ஆஆஆஆ | | |

பின்னைப்பு I (அ)

## புதிய வியாபாரத் தலத்தின் விபரங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொது | | | | |
| 1.1. | கிளையினால் பயன்படுவதற்குரிய அலுவல்சார் பெயரினை தயவுசெய்து தருக | | | | |
| 1.2. | அமைவிடம் | | | | |
| அ. | நிருவாக மாவட்டம் | | | | |
| ஆ. | நகரத்தின் பெயர் | | | | |
| இ. | பிரதேச செயலகம் | | | | |
| ஈ. | இது, மாநகரசபை/ நகரசபைக்கு உள்ளே அல்லது வெளியே இருக்கின்றது என்பதனைக் குறிப்பிடவும் | | | | |
| உ. | அஞ்சல் முகவரி, கிடைக்கத்தக்கதாக இருப்பின் | | | | |
| 2 | அலுவலர் தேவைப்பாடுகள் | | | | |
| 2.1 | அலுவலர் தரம் | எழுதுவினைஞர் | சிற்றூழியர் | பாதுகாப்பு அலுவலர் | மொத்தம் |
| 2.2 | உத்தேச வியாபாரத் தலத்தின் அலுவலர்களினது தகைமைகள், அனுபவம் மற்றும் தொழில் விபரணங்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டும் அலுவலர்களினது தோற்றப்பாட்டினைத் தருக (தனியான இணைப்பொன்றில் விபரங்களைச் சமர்ப்பிக்குக) | | | | |
| 3 | நிதியியல் தகவல்கள்: தொழிற்பாடுகளின் முதல் மூன்று ஆண்டுகளுக்குமான ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கிளைகளின் நிதியியல் எதிர்பார்ப்புக்களைத் தயவுசெய்து தருக. | | | | |
| | விடயம் (ரூ. மில்லியன்) | ஆண்டு 1 | ஆண்டு 2 | ஆண்டு 3 | |
| 3.1 | வைப்புக்கள் | | | | |
| 3.2 | கடன்கள் மற்றும் முற்பணங்ள் | | | | |
| 3.3 | வட்டி வருமானம் | | | | |
| 3.4 | வட்டிச் செலவுகள் | | | | |
| 3.5 | ஊழியர்களின் செலவினங்கள் | | | | |
| 3.6 | இலாபம்/ (இழப்பு) | | | | |
| 4 | உத்தேச வியாபாரத் தலங்கள் அமையவுள்ள பிரதேச செயலகங்களுக்குள் தொழிற்படுகின்ற ஏனைய நிதியியல் நிறுவனங்களின் தகவல்கள் | | | | |
| | விடயம் | எண். | | | |
| 4.1 | உரிமம் பெற்ற வங்கிகள்/ கிளைகள் | | | | |
| 4.2 | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ கிளைகள் | | | | |
| 4.3 | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்/ கிளைகள் | | | | |
| 4.4 | உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்/ வியாபாரத் தலங்கள் | | | | |
| | பதிவுசெய்யப்பட்ட அரசுசாரா நுண்பாகநிதி நிறுவனங்கள்/ வியாபாரத் தலங்கள் | | | | |
| 4.5 | திவி நெகும சமூகம் சார்ந்த வங்கிகள் | | | | |
| 5 | உத்தேச வியாபாரத் தலத்தின் பிரதேச செயலகத்தின் குடித்தொகை | | | | |
| 6 | பொருளாதாரச் சாத்தியவள அறிக்கை | | | | |
| | பெயர்:<br>பதவி:<br>கையொப்பம்:<br>திகதி: | | | | |

குறிப்பு: உத்தேசக் கிளைகளின் எண்ணிக்கை ஒன்றிற்கும் மேற்பட்டதாக இருப்பின் விபரங்களைத் தனியான தாளில் தருக.

**இணைப்பு II**

| வியாபாரத் தலத்தினை மூடிவிடுதல் | | | |
|---|---|---|---|
| 1 | பொது | | |
| 1.1. | நுண்பாகநிதிக் கம்பனியின் பெயர் | | |
| 1.2. | உத்தேச மூடிவிடுதலுக்காக பணிப்பாளர் சபையின் ஒப்புதல் திகதி: | | |
| 1.3 | வியாபாரத் தலத்தினை மூடிவிடுவதற்கான காரணங்கள் | | |
| 2 | அமைவிடம் | | |
| 2.1 | நிருவாக மாவட்டம் | | |
| 2.2 | பிரதேச செயலகம் | | |
| 2.3 | அஞ்சல் முகவரி | | |
| 3 | உத்தேச வியாபாரத் தலத்தினை மூடிவிடுவது தொடர்பில் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளை விபரிக்குக: | | |
| | | | |
| 4 | உறுதிப்படுத்தல் | | |
| | கீழே கையொப்பமிட்டவர் கம்பனியின் சார்பில் இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரத்தினைக் கொண்டிருப்பதுடன் இங்கே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும். | | |
| | பெயர்: | | |
| | பதவி: | | |
| | கையொப்பம்: | | |
| | திகதி: | | |

**இணைப்பு III**

**வியாபாரத் தலத்தினை வேறோர் இடத்தில் அமைத்தல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பொது | | |
| 1.1. | நுண்பாநிதிக் கம்பனியின் பெயர் | | |
| 1.2 | உத்தேச வேறு இடத்தில் அமைப்பதற்கான பணிப்பாளர் சபையின் ஒப்புதல் திகதி: | | |
| 1.3 | வியாபாரத் தலங்களை வேறு இடத்தில் அமைப்பதற்கான காரணங்கள் | | |
| 2 | அமைவிடம் | | |
| 2.1 | ஏற்கனவேயுள்ளவை | | |
| | அ. | நிருவாக மாவட்டம் | |
| | ஆ. | நகரத்தின் பெயர் | |
| | இ. | பிரதேச செயலகம் | |
| | ஈ. | அஞ்சல் முகவரி | |
| 2.2 | புதிய (முன்மொழியப்பட்டது) | | |
| | அ. | நிருவாக மாவட்டம் | |
| | ஆ. | நகரத்தின் பெயர் | |
| | இ. | பிரதேச செயலகம் | |
| | ஈ. | அஞ்சல் முகவரி | |

| 3 | உத்தேச வேறோர் இடத்தில் அமைப்பதற்கான முக்கிய தகவல்கள் (ரூ. மில்.) | |
|---|---|---|
| 3.1 | மொத்தச் சொத்துக்கள் | |
| 3.2 | கடன்கள் மற்றும் முற்பணங்கள் | |
| 3.3 | ஏனைய சொத்துக்கள் | |
| 3.4 | வைப்புக்கள் | |
| 3.5 | மொத்தக் கடன்பாடுகள் | |
| 3.6 | ஏனைய பொறுப்புக்கள் | |
| 3.7 | ஊழியர்களின் எண்ணிக்கை | |
| 4 | உறுதிப்படுத்தல் | |
| | கீழே கையொப்பமிட்டவர் கம்பனியின் சார்பில் இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரத்தினைக் கொண்டிருப்பதுடன் இங்கே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும். | |
| | பெயர்: | |
| | பதவி: | |
| | கையொப்பம்: | |
| | திகதி: | |

**2017இன் 02ஆம் இலக்க நுண்பாகநிதிச் சட்ட பணிப்புரைகள்** **2017 மாச்சு 03**

**அமைப்பியல் மாற்றங்கள்**

2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்பாகநிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

1. நாணயச் சபையின் ஒப்புதல் தேவைப்படும் அமைப்பியல் மாற்றங்கள்

1.1 இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதல் இல்லாமல் எந்தவொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை மேற்கொள்ளக்கூடாது:

அ) ஏதேனும் துணைக் கம்பனியை, ஒப்புதலளிக்கப்பட்ட துணை அல்லது இணைக் கம்பனியொன்றின் துணை அல்லது இணைக் கம்பனியினை அமைத்தல்;

ஆ) வியாபாரத்தினை முழுமையாக அல்லது பகுதியாக விற்றல்;

இ) வேறு ஏதேனும் நிறுவனம் அல்லது கம்பனியின் வியாபாரத்தினை முழுமையாக அல்லது பகுதியாக கையேற்றல்;

ஈ) வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது கம்பனியுடன் ஒன்றுசேர்த்தல், திரட்சிப்படுத்தல் அல்லது இணைத்தல்;

உ) கம்பனியின் பெயரை மாற்றுதல்.

2. பணிப்பாளரின் ஒப்புதலைத் தேவைப்படுத்தும் அமைப்பியல் மாற்றங்கள்

2.1 பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்னொப்புதல் இல்லாமல் எந்தவொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை மேற்கொள்ளக்கூடாது.

அ) அஞ்சல், கூரியர் பணிகள், உணவுப் பரிமாற்றல் பணிகள், பேணல் மற்றும் சுகாதாரப் பணிகள், வளாகப் பாதுகாப்பு, சம்பளப்பட்டியல் மற்றும் செயலாளர் தொழிற்பாடுகள் தவிர்ந்த அதன் ஏனைய ஏதேனும் ஓர் தொழிற்பாட்டை வெளிநபரிடம் ஒப்படைத்தல்;

ஆ) அதன் பங்கு மூலதனத்தை அதிகரித்தல் அல்லது குறைத்தல்;

இ) ஒப்புதலளிக்கப்பட்ட ஓர் துணைக் கம்பனியின் அல்லது இணைக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் இதன் முதலீட்டினை அதிகரித்தல்;

ஈ) ஒப்புதலளிக்கப்பட்ட ஓர் துணைக் கம்பனியின் அல்லது இணைக் கம்பனியின் வியாபாரத்தினை முழுமையாக அல்லது பகுதியளவில் விற்றல்;

உ) நிறுவனத்தின் அகவிதிகளை மாற்றுதல்;

ஊ) ரூபா ஒரு மில்லியனைவிட (ரூ.1,000,000/-) உயர்வான புத்தகப் பெறுமதியினைக் கொண்ட சொத்துக்களை தற்போது நிலவும் சந்தைப் பெறுமதியிலும் குறைவான விலையில் விற்றல் அல்லது மாற்றல் செய்தல்;

எ) பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் எவரேனும் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலரின் பதவியில் மாற்றம் செய்தல்.

ஏ) நாணய ரீதியான கொடுக்கல்வாங்கல் தவிர வேறு எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களுக்காகவும் அதன் சொத்துக்களை மாற்றல் செய்தல் அல்லது விற்றல்.

3. பணிப்பாளர் சபையின் ஏதேனும் அங்கத்தவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்களின் இராஜினாமா

3.1 பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர் ஆகியோர் பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் கம்பனியிலிருந்து பதவி விலக முடியாது.

4. வரைவிலக்கணங்கள்

4.1 இப்பணிப்புரையில்,

அ) இலங்கை கணக்கீட்டு நியமத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு “துணை” மற்றும் “இணை”

ஆ) “தற்போது நிலவும் சந்தைப் பெறுமதி” எனப்படுவது ஆர்வமுடைய வாங்குபவருக்கும் ஆர்வமுடைய விற்பனையாளருக்குமிடையேயான இயலக்கூடிய ஆற்றல்வாய்ந்த கொடுக்கல்வாங்கலில் பரிமாற்றப்படும் ஓர் சொத்திற்கு உரிமம் பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டு விலையாகும்.

இ) “பணிப்பாளர்” எனப்படுபவர் இலங்கை மத்திய வங்கியின் நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

**2017இன் 1ஆம் இலக்கம் நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2017 சனவரி 13**

## உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கு வழங்கப்படும் பெறுமதிக்கான கடன் விகிதம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 12இன் கீழ் விடுக்கப்பட்டது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. நிதித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரம்

1.1 நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளில் சபையானது, நிதிக் கம்பனிகளுக்கு அல்லது ஏதேனும் குழுமத்திற்கு அல்லது நிதிக் கம்பனிகளின் வகைக்கு அத்தகைய நிதிக் கம்பனிகளின் தொழில் தொடர்பான எந்தவொரு விடயத்திலும் மற்றும் கம்பனி அலுவல்களிலும் அவை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி பணிப்புரைகளை விடுக்க முடியும்.

2. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம்

2.1 2017 சனவரி 16ஆம் திகதி தொடக்கம், ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக வழங்குகின்ற கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(i) பதிவு செய்யப்படாத மற்றும் முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவு செய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரையில்;

(அ) வர்த்தக ஊர்திகளுக்கு 90 சதவீதம் (சரக்கு மற்றும் பார ஊர்திகள்);

(ஆ) உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்தி (எஸ்யுவிகள்) மற்றும் வான்களுக்கு 50 சதவீதம்;

(இ) முச்சில்லு வண்டிகளுக்கு 25 சதவீதம்; மற்றும்

(ஈ) வேறு ஏதேனும் ஊர்திகளுக்கு 70 சதவீதம்.

(ii) முதல் பதிவின் பின்னர் ஒரு ஆண்டிற்கும் மேலாக இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

| | | |
|---|---|---|
| 3. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விதிவிலக்கல்கள் | 3.1 | மேலே பணிப்புரை 2இன் வரையறைகள், தமது மையத்தொழில் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்காக சுற்றுலாத் துறையில் அத்துடன்/ அல்லது போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது. எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது. |
| | 3.2 | இவ்வகை ஊர்திகளுக்கு கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் உள்ளக வரையறைகளையும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும். |
| 4. ஊர்திகளுக்கான ஏனைய கொடுகடன் வசதிகள் | 4.1 | உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்று மேலேயுள்ள பணிப்புரைகள் 2 மற்றும் 3 இற்கமைய வழங்கப்பட்ட கொடுகடன்களைத் தவிர, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக கொடுகடன் வசதிகளை வழங்கக்கூடாது. |
| 5. விளக்கங்கள் | 5.1 | இப்பணிப்புரைகளில்<br>(i) கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணை முறைக் கொள்வனவு, அத்துடன் ஊர்திகளின் கொள்வனவு செய்தல் அல்லது பயன்படுத்தல் நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற அனைத்து ஏனைய கொடுகடன் வசதிகள் எனப் பொருள்பட வேண்டும்.<br>(ii) ஊர்தியின் பெறுமதியானது கொடுகடன் வசதிகளை வழங்குகின்ற நேரத்தில் நிலவுகின்ற நடைமுறைக்கமைவாக தொழில்சார் விலை மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற சந்தைப் பெறுமதியாக இருத்தல்வேண்டும். |
| 6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல் | 6.1 | பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.<br>(i) 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (உந்து ஊர்திகள் தொடர்பில் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிகளின் கடன் விகிதம்) பணிப்புரை.<br>(ii) 2015ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க (உந்து ஊர்திகள் தொடர்பில் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிகளின் கடன் விகிதம்) பணிப்புரை |

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**2017இன் 2ஆம் இலக்கம் நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2017 பெப்புருவரி 23**

## குறைந்தபட்ச மைய மூலதனம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபை, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் பாதுகாப்பினதும் ஆற்றல்வாய்ந்த தன்மையினதும் நலவுரித்துக்களை கருத்திற் கொண்டு அக்கம்பனிகளின் திரட்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் வைத்திருக்கப்படும் மைய மூலதனத்தின் குறைந்தபட்ச தொகையின் மீது பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. குறைந்தபட்ச மைய மூலதனம் | 1.1 | ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனியும் 2017.12.31 வரை ரூ.400 மில்லியனுக்குக் குறையாத மட்டமொன்றில் பழுதுறா மைய மூலதனமொன்றினை எல்லா நேரத்திலும் பேணுதல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் கீழே குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு குறையாத மட்டமொன்றில் பழுதுறாத மைய மூலதனத்தினைப் பேணுதல் வேண்டும்.<br>(i) 2018.01.01இல் ரூ.1.0 பில்லியன்<br>(ii) 2019.01.01இல் ரூ.1.5 பில்லியன்<br>(iii) 2020.01.01இல் ரூ.2.0 பில்லியன்<br>(iv) 2021.01.01இல் ரூ.2.5 பில்லியன் |
| 2. இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் | 2.1 | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் பின்வருவனவொன்றின் மீது அல்லது கூடுதலானவற்றின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.<br>(i) அத்தகைய உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புப் பொறுப்புக்களின் மீதும் கடன்பாடுகள் மீதும் உயர்ந்தபட்ச வரையறைகளை விதிக்கலாம்;<br>(ii) அத்தகைய உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் பங்கிலாபங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதனை அல்லது இலாபங்களை வெளியே அனுப்புவதனை முடக்கலாம்;<br>(iii) அத்தகைய உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தலாம். |

2.2 அத்தகைய இணங்குவிக்காத விடயங்கள் சரிசெய்யப்படுமிடத்து பணிப்பாளர் மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை நீக்கிவிடுதல் வேண்டும்.

3. விளக்கங்கள்

3.1 இப்பணிப்புரைகளில்

(i) "மைய மூலதனம்" என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே வரைவிலக்கணத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரைக் குறிக்கும்.

4. முன்னைய பணிப்புரையினை இரத்துச் செய்தல்

4.1 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (குறைந்தபட்ச மைய மூலதனம்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**நிதித்தொழில் சட்ட பணிப்புரைகள் 2017இன் 03ஆம் இலக்கம்** **2017 பெப்புருவரி 17**

**உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் பணிப்புரைகளின் பணிப்புரை 5இன் விளக்கங்கள் பின்வருவனவற்றை பதிலிடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

5. விளக்கங்கள்

5.1. கொடுகடன் வசதிகள் என்பது ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவுகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகளும் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.2 ஊர்தியின் பெறுமதி என்பது சந்தைப் பெறுமதியாக இருத்தல் வேண்டும். உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஊர்திகளை மதிப்பிடும் நோக்கத்திற்காக பின்வருவனவற்றைப் பயன்படுத்தலாம்:

(i) புத்தம் புதிய ஊர்திகள் - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட பெறுமதி

(ii) புதுப்பிக்கப்பட்ட ஊர்திகள் - சுங்கத்தினால் பரிசீலிக்கப்பட்ட பெறுமதியாக அல்லது வணிகர்களினால் வழங்கப்பட்ட பொருள் அனுப்பப்பட்டியலிலுள்ள பெறுமதியாக இருக்கலாம்

(iii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் - தொழில்சார் மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட பெறுமதி

5.3 ஊர்திகளின் பெறுமதிகள், கொடுகடன் வசதிகள் வழங்கப்பட்ட நேரத்தில் பெறப்பட்டவை என்பதனையும் அவை உண்மையானதும் நியாயமானதுமான பெறுமதிகள் என்பதனையும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.4 உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகள் தொடர்பான வகுப்புக்கள், பணிப்புரையின் நோக்கத்திற்காக கீழேயுள்ள அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்படலாம்.

**அட்டவணை 1 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்திகள் வகுப்பின் வகைப்படுத்தல்கள்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | பெறுமதி விகிதத்திற்கான கடன்கள் |
|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் (சரக்கு வண்டிகள் மற்றும் பார ஊர்திகள்) | சி1, சி, சிஈ, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% |
| உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ, டி1, டி | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ | 70% |

5.5 பணிப்புரை 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்தித் தொகுதி என்பது இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான ஊர்திகள் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.6 பணிப்புரை 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது சுற்றுலாவிற்குப் பணிகளை வழங்கும் வேறு ஏதேனும் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்று எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.7 பணிப்புரை 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்று என்பது பொருட்கள் அல்லது பயணிகளைக் கொண்டு செல்லும் வியாபார நோக்கங்களுக்காக ஏதேனும் அரச அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் வியாபாரம் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.8 கொடுகடனுக்கான விண்ணப்பங்கள் 2017 சனவரி 16 அன்றோ அல்லது அதற்கு முன்போ பெறப்பட்டதாக அல்லது கொடுகடன் வசதிகள் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் அத்திகதியன்றோ அல்லது முன்னதாகவோ வழங்கப்பட்டதாக இருக்குமிடத்து அனைத்து ஊர்திகள் தொடர்பிலுமான கொடுகடனுக்கு 70 சதவீதமான பெறுமதிக்கான கடன் விகிதம் வழங்கப்படலாம்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
நாணயச் சபையின் தலைவரும்
மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**2017இன் 4ஆம் இலக்கம் நிதித்தொழில் சட்ட பணிப்புரைகள் 2017 யூன் 02**

## உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்

உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5.1 மற்றும் 5.4 என்பன பின்வருவனவற்றைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றன.

5. விளக்கங்கள்

5.1. கொடுகடன் வசதிகள் என்பது ஊர்திகளின் கொள்வனவு அல்லது இறுதிப் பயன்படுத்துநரின் பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவுகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகளும் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.2. உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகள் தொடர்பான வகுப்புக்கள், பணிப்புரையின் நோக்கத்திற்காக கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்படலாம்.

**அட்டவணை 1 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்திகள் வகுப்பின் வகைப்படுத்தல்கள்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | பெறுமதி விகிதத்திற்கான கடன்கள் |
|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% |
| உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ (இலகு பார ஊர்திகள் மற்றும் தனியொரு வாடகை ஊர்திகள் நீங்கலாக) | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீஇன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகுபார ஊர்திகள் மற்றும் தனியொரு வாடகை ஊர்திகள் | 70% |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
நாணயச் சபையின் தலைவரும்
மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 2017இன் 1ஆம் இலக்கம் சுற்றறிக்கை** **2017 மே 30**

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பான சலுகைகள்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அண்மைய வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் இணைந்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட அவற்றின் கடன்பெறுநர்களுக்கு, தேசிய நலனைக் கருத்திற்கொண்டு, அத்தகைய கடன்பெறுநர்களின் வியாபாரம் மற்றும் வழமையான நடவடிக்கைகளை மீளமைப்பதை வசதிப்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட்ட தேசிய கொள்கையின் நியதிகளில், ஒவ்வொரு விடயத்தையும் பொறுத்து, பின்வரும் சலுகைகளை வழங்கலாம்.

1. கால அவகாசம்

1.1 வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் இணைந்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களின் 2017 மே 25இல் உள்ளவாறான அனைத்துச் செயற்படும் கொடுகடன் வசதிகள் தொடர்பிலும், இன்றிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 3 மாதங்களை விஞ்சாத கால அவகாசத்தை வழங்கவும்.

2. தண்ட வட்டி

2.1 மேலுள்ள கால அவகாசத்தின் கீழுள்ள கடன்பெறுநர்களினதும் மேலுள்ள விடயங்களினால் பாதிக்கப்பட்டு அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும்/ மீள்சீரமைக்கும் பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுடன் உடன்பட்டவாறு மீள்அட்டவணையிடப்பட்ட நியதிகளில் அவர்களின் கடன்களைத் தீர்ப்பதற்கு விரும்புகின்ற செயற்படாக் கடன்பெறுநர்களினதும் காலங்கடந்த கடன்கள் மீதான தண்ட வட்டியை விலக்கவும்.

3. அறிக்கையிடல்

3.1 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அத்தகைய சலுகைகள் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆவணங்களைப் பேண வேண்டும்.

3.2 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அத்தகைய கடன்பெறுநர்களின் விபரத்தை இங்கு இணைக்கப்பட்டுள்ள வடிவத்தில் 2017 யூன் 30ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையிட வேண்டும்.

யு பி அலவத்தகே
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு**

**2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சுற்றறிக்கை**

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான சலுகைகள்
## அண்மைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் விபரங்கள்

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெயர்:

| தொடர் இலக்கம் | கடன்பாட்டாளரின் பெயர் | கிளையின் பெயர் | பிரதேச செயலகம் | கடனின் நோக்கம் | வெளிநின்ற தொகை ரூ.000' (2017.05.25இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மேலேயுள்ள கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்குமெட்டிய வரை சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயரும் பதவியும்

**2017இன் 01ஆம் இலக்கம் நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரை** 2017 சனவரி 16

## உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) உந்து ஊர்திகளை கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தல் நோக்கங்களுக்காக உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்படும் கடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காகப் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றார்.

1. நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்

1.1 நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் பிரிவு 3இன் பந்தி 'இ'இல் பகிரங்கக் கம்பனிகளாகக் குறிப்பிடப்படும் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடல் கம்பனிகளுக்கு (இதனகத்துப் பின்னர் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொதுவான பணிப்புரைகளை விடுவிப்பதற்கு, பணிப்பாளர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்.

2. பெறுமதிக்கான கடன் கடனின் அதிககூடிய விகிதம்

2.1 2017 சனவரி 16ஆம் திகதி தொடக்கம், ஊர்திகளை கொள்வனவு செய்தல் அல்லது பயன்படுத்தல் நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியினாலும் வழங்கப்படுகின்ற கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதத்தினை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(i) பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் முதற்பதிவின் பின்னர் ஒரு வருடத்தினைவிடவும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரை;

(அ) வர்த்தக ரீதியான ஊர்திகளுக்கு 90 சதவீதம் (சரக்கு மற்றும் பார ஊர்திகள்);

(ஆ) உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்களுக்கு 50 சதவீதம்;

(இ) முச்சில்லு வண்டிகளுக்கு 25 சதவீதம்;

(ஈ) வேறு ஏதேனும் ஊர்திகளுக்கு 70 சதவீதம்.

(ii) முதற்பதிவின் பின்னர் ஒரு வருடத்திற்கும் மேலாக இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்

3. உயர்ந்தபட்சப் பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்களிப்புக்கள்

3.1 மேலே பணிப்புரை 2இன் வரையறைகள், தமது மையத்தொழில் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்காக சுற்றுலாத் துறையில் அத்துடன்/ அல்லது போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது. எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது.

3.2 இவ்வகை ஊர்திகளுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குகையில் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் போதிய இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

4. ஊர்திகளுக்கான ஏனைய கொடுகடன் வசதிகள்

4.1 மேலே 2ஆம் மற்றும் 3ஆம் பணிப்புரைகளுக்கு அமைவாக வழங்கப்படும் கொடுகடன் வசதிகள் தவிர, உந்து ஊர்திகள் கொள்வனவு அல்லது பயன்படுத்தல் நோக்கத்திற்காக உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று கொடுகடன் வசதிகளை வழங்கலாகாது.

5. விளக்கங்கள்

5.1 இப்பணிப்புரைகளில்:

(i) கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணை முறைக் கொள்வனவு, அத்துடன் ஊர்திகளின் கொள்வனவு செய்தல் அல்லது பயன்படுத்தல் நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற அனைத்து ஏனைய கொடுகடன் வசதிகள் எனப் பொருள்பட வேண்டும்.

(ii) ஊர்தியின் பெறுமதியானது கொடுகடன் வசதிகளை வழங்குகின்ற நேரத்தில் நிலவுகின்ற நடைமுறைக்கமைவாக தொழில்சார் விலை மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற சந்தைப் பெறுமதியாக இருத்தல்வேண்டும்.

6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச்செய்தல்

6.1 பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

(i) 2015இன் 01ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடல் (உந்து ஊர்திகள் தொடர்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதிக்கான கடன் விகிதம்) பணிப்புரை.

(ii) 2015இன் 02ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடல் (உந்து ஊர்திகள் தொடர்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதிக்கான கடன் விகிதம்) பணிப்புரை.

**யு. பி. அலவத்தகே**
பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல்
நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

**2017இன் 02ஆம் இலக்கம் நிதி குத்தகைக்குவிடல் சட்ட பணிப்புரைகள்** 2017 பெப்புருவரி 17

**உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 5இன் விளக்கங்கள் பின்வருவனவற்றை பதிலிடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

5. விளக்கங்கள்

5.1. கொடுகடன் வசதிகள் என்பது ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவுகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகளும் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.2 ஊர்தியின் பெறுமதி என்பது சந்தைப் பெறுமதியாக இருத்தல் வேண்டும். உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் ஊர்திகளை மதிப்பிடும் நோக்கத்திற்காக பின்வருவனவற்றைப் பயன்படுத்தலாம்:

(i) புத்தம் புதிய ஊர்திகள் - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட பெறுமதி

(ii) புதுப்பிக்கப்பட்ட ஊர்திகள் - சுங்கத்தினால் பரிசீலிக்கப்பட்ட பெறுமதியாக அல்லது வணிகர்களினால் வழங்கப்பட்ட பொருள் அனுப்புப்பட்டியலிலுள்ள பெறுமதியாக இருக்கலாம்

(iii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் - தொழில்சார் மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட பெறுமதி

5.3 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், ஊர்திகளின் பெறுமதிகள், கொடுகடன் வசதிகள் வழங்கப்பட்ட நேரத்தில் பெறப்பட்டவை என்பதனையும் அவை உண்மையானதும் நியாயமானதுமான பெறுமதிகள் என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.4 உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகள் தொடர்பான வகுப்புக்கள் பணிப்புரையின் நோக்கத்திற்காக கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்படலாம்.

**அட்டவணை 1 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்திகள் வகுப்பின் வகைப்படுத்தல்கள்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | பெறுமதிக்கான கடன் விகிதம் |
|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் (சரக்கு வண்டிகள் மற்றும் பார ஊர்திகள்) | சி1, சி, சிஈ, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% |
| உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ, டி1, டி | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ | 70% |

5.5 பணிப்புரை 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊர்தித் தொகுதி என்பது இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான ஊர்திகள் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.6 பணிப்புரை 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது சுற்றுலாவிற்குப் பணிகளை வழங்கும் வேறு ஏதேனும் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்று எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.7 பணிப்புரை 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்று என்பது பொருட்கள் அல்லது பயணிகளைக் கொண்டு செல்லும், வியாபார நோக்கங்களுக்காக ஏதேனும் அரச அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் வியாபார நிறுவனம் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.8 கொடுகடனுக்கான விண்ணப்பங்கள் 2017 சனவரி 16 அன்றோ அல்லது அதற்கு முன்போ பெறப்பட்டதாக அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல் வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் கொடுகடன் வசதிகள் அத்திகதியன்றோ அல்லது முன்னதாகவோ ஒப்புதலளிக்கப்பட்டதாக இருக்குமிடத்து அனைத்து ஊர்திகள் தொடர்பிலுமான கொடுகடனுக்கு 70 சதவீதமான பெறுமதிக்கான கடன் விகிதம் வழங்கப்படலாம்.

யு. பி. அலவத்தகே
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

**2017இன் 3ஆம் இலக்கம் நிதி குத்தகைக்குவிடல் சட்ட பணிப்புரைகள்** **2017 யூன் 02**

## உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்

உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகளின் 5.1 மற்றும் 5.4 என்பன பின்வருவனவற்றைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றன.

5. விளக்கங்கள்

5.1. கொடுகடன் வசதிகள் என்பது ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படுகின்ற நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவுகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகளும் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

5.4 உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகள் தொடர்பான வகுப்புக்கள் பணிப்புரையின் நோக்கத்திற்காக கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்படலாம்.

**அட்டவணை 1 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்திகள் வகுப்பின் வகைப்படுத்தல்கள்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | பெறுமதி விகிதத்திற் கான கடன்கள் |
|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% |
| உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ (இலகு பார ஊர்திகள் மற்றும் தனியொரு வாடகை ஊர்திகள் நீங்கலாக) | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீஇன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகுபார ஊர்திகள் மற்றும் தனியொரு வாடகை ஊர்திகள் | 70% |

யு. பி. அலவத்தகே
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**